# அன்பளிப்பு

அறிஞர்

சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

காசி நிலையம்

மதுரை.

முதற் பதிப்பு ஜூன், 1958.
பதிப்புரிமை பெற்றது.

75920

மதுரையில் விலை ரூ. 1—25.
வெளியூர்களில் விலை ரூ. 1—30.
வெளிநாடுகளில் விலை ரூ. 1—50.

# முன்னுரை:-

நமது நிலையத்தின் முதல் மலிவுப்பதிப்பு வெளியீடாக வெளிவந்த அறிஞர் அண்ணு அவர்களின் ஏடான "பரிசு" நாட்டு மக்களின் உள்ளங்களிலே புதியதொரு தமிழ்மணத்தை எழுப்பிவிட்டது. அந்த மணம் நுகர்ந்து தென்னகம் போற்றியதும் — அதில் வாழ் மக்கள் போற்றுவதும் எமக்கு புத்துணர்ச்சியை ஊட்டியது—ஊட்டுகிறது!

அதே நேரத்தில் புராண கதைகளை (போதைகளை) பல பதிப்பாளர்கள் வித விதமான பாத்திரங்களில் வடித்தெடுத்து வைத்துக்கொண்டு போட்டிபோட்டு விலை கூறி வரும்போது நமது "பரிசு" நூல் கண்டு வியப்புமேலிட கண்களை அகலவிரித்து நம்மை நோக்கி பார்வையைச் செலுத்துவதும் தெரிகிறது.

கண்டால் கனிவோடு உறவாடியும்— காணுவிட்டால் பொருமைப் பெரும் நெருப்பின் மேல் அமர்ந்து உடல் வெந்து உயிர் ஊசலாடிக்கொண்டிருப்பவர்களின் ஓலமும் எமக்கு கேட்கிறது. அவர்களைப்பார்த்து பரிதாபப்படுவதைத் தவிர வேறென்ன செய்வது? வாழ்க (அவர்கள்!)

"சந்தோஷத்தை தாங்கிக்கொள்ளும் இதயம் சங்கடத்தை ஏன் சந்திக்க மறுக்கிறது" என்று நமது தளபதி கலைஞர் கருணு அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்! நாமும் அதைத்தான் கூறிக்கொண்டோம். எதையும் தாங்கும் இதயம் படைத்த பரம்பரையல்லவா நாம்.

"பரிசு" வெளிவந்ததற்குப் பிறகு ஏன் அடுத்த வெளியீடு எதுவும் வரவில்லை என்று எமக்கு உற்சாகமூட்டி விஞ விடுத்த தோழர்

கள் எண்ணற்றோர். விரைவில் வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகிறதென்று கூறி பதிலுரைத்தோம்.

எப்படியேனும் இன்னுமொரு நூல், அறிவு நூல்—மக்களுக்குப் பயன்பெறக்கூடிய மதிப்பு மிக்க நூல் ஒன்று வெளியிட வேண்டுமென திட்டமிட்டோம். அதுவும் அறிஞர் அண்ணா அவர்களின் நூலாகவே இருந்தால் இன்னுமொரு பொன்னேடு மக்கள் மன்றத்திற்கு அன்பளிப்பாக அளித்தது போலாகுமென எண்ணி முடிவு செய்தோம். அந்த முடிவின் வெற்றிச் சங்கநாதமே உங்கள் கரங்களில் திகழும் "அன்பளிப்பு!"

இந்நூலிலே—

அறிஞர் அண்ணா அவர்கள், தனக்கே உரித்தான தமிழ்நடையிலே-இலக்கிய விருந்துகள் பல-சில கல்லூரிகளின் வாயிலாக வழங்கியுள்ளதை அப்படியே புத்தக உருவில் மலிவுப் பதிப்பாக வெளியிடுகிறோம். இதில் வெளிவந்திருக்கின்ற சொல்லாரங்கள் சிறு சிறு ஏடுகளாக அவ்வப்போது பல பதிப்பாளர்கள் வெளியிட்டார்களென்றாலும் அது மக்கள் மன்றத்தில் இன்றைய தினம் காணக்கிடைப்பது மிக மிக அரிது. அவைகளை அவ்வப்போது திரட்டி வைத்து "வைர மோதிரத்தை வெல்வெட்டுப் பெட்டியிலும்,வரகரிசியை வாசலிலும் போட்டு வைப்பார்கள் என்ற அறிஞர் அண்ணா அவர்களின்உவமைக்குஎடுத்துக்காட்டாக இதுவரை வைரப்பேழையில் வைத்து பாதுகாத்துவந்த நாம் இப்போது உங்கள் முன் படைக்கின்றோம்—"அன்பளிப்பு" என்ற அழகான பெயர் சூட்டி!

நாம் திராவிட கழகமாக ஒரே வீட்டில் ஒரே குடும்பமாக இருந்தபொழுது, தளபதி

யாக பணியாற்றி மக்கள் மனத்திலே நீங்காத இடம்பெற்ற நமது அண்ணு அவர்கள் திருச்சி திராவிட மாணவர் கழகத் திறப்புவிழாவின் போது நிகழ்த்திய அற்புதச் சொற்பொழிவு தான் இங்கு "அன்பளிப்பு" என்ற தலைப்பின் கீழ் அணிவகுத்து நிற்கின்றது.

உரைநடை இயற்றுவதிலும், சொற் பெருக்காற்றுவதிலும் சிறந்து விளங்கி இரு மொழிப்புலவர், செந்நாப்புலவர், புலவர் திலகம் என்ற பல பெயர்களுக்கெல்லாம் ஏக போக உரிமையாளராகத் திகழ்கின்ற நமது அண்ணு அவர்கள் 19—2—45ல் தோழர் செ. கோவிந்தராவ் அவர்கள் தலைமையில் செலையூர் மண்டபத்தில் தாம்பரம் கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் ஆண்டுவிழாவின் போது ஆற்றிய சொற்பொழிவு "நல்ல தீர்ப்பு" நாட்டுக்கே ஒரு நல்ல தீர்ப்பாக விளங்கவேண்டுமென்று அடுத்து வருகிறது.

திராவிடநாடு விரைவில் விடுதலைபெற்று தனிநாடாக திகழவேண்டுமென்ருல் நமது சூழ்நிலைகளை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற தனது கருத்தை—சென்னை தொண்டைமண்டலம் துளுவவேளாளர் பள்ளியில் 9—2—52ல் நடந்த முத்தமிழ் விழாவில் வெளியிட்டார் நமது அண்ணு அவர்கள். அதுவே "சூழ்நிலை" என்ற தலைப்பில் திகழ்கிறது.

அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மன்றத்தில் 20–9–45ல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்து ஆற்றிய சொற் பெருக்கு இங்கு "ஏ தாழ்ந்த தமிழகமே" என்ற தலைப்பின் கீழ் வருகிறது.

சென்னை கொத்தவால் சாவடி வள்ளுவர் கழகத்தின் ஆதரவில் இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதாவை ஆதரித்து திரு. ஏ. எஸ். துரைசாமி அவர்களின் தலைமையில் 24—3—49ல் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொல்லாரம் இங்கு "அற நிலையங்கள்" என்ற பெயரோடு வெளியாகியுள்ளது.

சென்னை தியாகராயர் கல்லூரி மாணவர்கள் மத்தியிலே திரு. எஸ். ஏ. பி. பாண்டியனார் அவர்கள் தலைமையின் கீழ் 8–8–51ல் தென்னகத்தின் பொன்னுட்ஷாவாம் நமது அண்ணா அவர்கள் முழக்கிய சங்கநாதம்தான் "சொல்லும் பயனும்" என்ற தலைப்பில் ஒலிக்கின்றன.

தாம்பரம் கிறித்துவக்கல்லூரியின் தமிழ்ச் சங்க ஆண்டுவிழா 19–2–48ல் நடைபெற்ற போது புலவர் உயர்திரு. அ. கி. பரந்தாமனார் அவர்கள் தலைமையில் நமது அண்ணா அவர்கள் நிகழ்த்திய அற்புதக் கருத்துக்களடங்கிய அரிய சொற்பொழிவு "பொருள்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

இவைகளனைத்தும் நாட்டுக்கு நாட்டு மக்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் அளித்த அன்பளிப்புகள்! அவைகளை அனைத்தையும் ஒன்றுதிரட்டி ஒரே நூலாக உருவாக்கி உங்களுக்கு நமது நிலையத்தின் சார்பாக அளிக்கும் அன்பளிப்பு. இதோ உங்கள் கரங்களில் "அன்பளிப்பு." உங்களுடைய ஆதரவை என்றும் விரும்பும்

**நிலையத்தார்,**

# அன்பளிப்பு

தோழர்களே! அன்பர்களே!

மாணவப் பருவத்தைக் கடந்த என்னை இங்கு அழைத்துப்பேச இடமளித்ததற்கு இக் கழகத்தாருக்கு என் நன்றியைச் செலுத்துகின்றேன். இன்றைய கூட்டம் நடக்க இருப்பது எனக்குத் தெரியாது. வேதாச்சலம் அவர்கள் வீட்டில் நண்பர்கள் கூறின உடனே நான் இசைந்தேன். இங்கு வேறு கூட்டமொன்று நடப்பது எனக்குத்தெரியாது. நான் காலையில் தான் அதை அறிந்தேன். வருகின்ற வழியிலேதான் அதையும் விளம்பரங்களின் மூலம் தெரிந்து கொண்டேன். மாணவர்களிடையே அபிப்பிராய பேதம் இருப்பது வருந்தத்தக்கதே. நேற்று பெரியவர்களுக்குத் தான் அபிப்பிராயபேதம் இருந்தது. இன்று மாணவர்களுக்குள் இருக்கிறது. மேனுடுகளிலே மாணவர்களிடையே ஒற்றுமையைத்தான் காணலாம். இங்கு, மாணவர்களுக்குள் பேதம் என்றில்லாது மாணவர்கள் கல்வி, அறிவு என்ற பாசத்தால் ஒன்றுபடுவது அழகு.

இன்று கல்லூரிகளில் கட்சிகளைப்பற்றிய வித்தே மாணவர்கள் மனதில் ஊன்றப்படுகின்றது. மாணவர்களுக்கான விஷயங்கள் ஓரளவு பேசப்பட்டாலும், உபாத்தியாயர்கள் பாடத்திற்குப் புறம்பான விஷயங்களையே பெரிதும் பேசுகின்றனர்.

பத்திரிகைகளிலே 'ஹோட்டல் தொழிலாளர்கள் மாநாடு' என்று வந்தது. அதில் செய்யப்பட்ட தீர்மானம் என்ன? தேசீய சர்க்கார் வேண்டும் என்பது. தொழிலாளிக்கு வேலை நேர விகித ஒப்பந்தம் தரவேண்டுமென்று

அதில் பொருளுண்டு. மேலும் ஹோட்டல் முதலாளிகள் தாங்கள் அடையும் லாபத்தில் ஓரளவை தொழிலாளருக்கென்று நிதியாக ஒதுக்கி வைத்தால் அதில் தீவிரவாதமுண்டு. இவையன்றி மாநாட்டில் கொண்டுவரப்படும் தீர்மானம் தேசிய சர்க்கார் வேண்டுமென்பதை வற்புறுத்தினால், ஹோட்டல்களிலே அடுப்பிலிருக்கும் இட்டிலிப்பானையின் சூடு ஆறிவிடுமா? அல்லது ஒரு ரூபாய்க்கு பதினாறு அணுக்கள் என்பது பதினேழு என்றாய்விடுமா?

மாணவர் மாநாட்டில்கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றுகின்றார்கள் தேசிய சர்க்கார் வேண்டுமென்று. இதை நான் பிரியத்துடன் அறிவுடன் வரவேற்கின்றேன், குறை கூறாது. ஆனால் இது எதனை அடிப்படையாகக்கொண்டது? ஜெர்மன் நாட்டிலே அந்நாட்டுத்தலைவர் ஜெர்மன் தேசியம் வேண்டுமென்று கூறி அதை எடுத்துச் சொன்னால், அப்படிக் கூறுவது அவர்களின் பிறப்புரிமையின் பாற்பட்டது. இங்கிலாந்து தேசத்து மாணவர்களுக்கு, அந்நாட்டுத் தேசியம் வேண்டுமென்று கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதே. ஏன்? அவர்கள் கல்வி, அவர்களின் வாலிபம் அத்தனையும் அதற்காகத்தானே பயன்படுகிறது, செலவழிக்கப்படுகின்றது. நம்நாட்டு மாணவர்களின் நிலை என்ன?

நம் நாட்டு மாணவர்கள் அறிவார்களா, எது தேசியம், எது தேசியப்பற்று என்பதனை? இன்றைய நாட்களிலே நம் நாட்டு மாணவர்களுக்கு எடுத்தோதப்படும் தேசியமானது எவ்வாறு இருக்கின்றதென்றால் ஜெர்மன் நாட்டுத் தலைவராயிருந்த ஹிட்லர் எவ்வாறு ஐரோப்பா தேசியம் கூறிவந்தது பொருந்தா நிலையிலிருந்ததோ, அதை ஒக்கின்றது, உபகண்டமான இந்திய தேசியம் வேண்டுமென்று நம்நாட்டுத் தலைவர்கள் மாணவர்களுக்கு கூறுவது

ஆனால் இந்த தேசிய மனப்பான்மையை—இவ்வாறு தேசியத் தலைவர்களால் புகுத்தப்பட்டு, பேசப்பட்டுவரும் இந்த இந்திய தேசியத்தை, விரிந்த மனப்பான்மையோடு நோக்கு என்று கூறுகின்றார்கள். ஏற்றுக்கொள்ளுகிறேன், ஆனால் நிபந்தனையின் பேரில். தேசிய அகராதி புதுப்பிக் கப்படவேண்டும். இந்நாட்டு மாணவர்கள் தேசியத்தை எந்த நிலையில் அறிந்துள்ளார்கள். வரலாற்றை உள்ளபடி அறிவதுதானே தேசிய மனப்பான்மையின் ஆரம்பமாகும்.

இங்குள்ள மாணவர்களில் பெரும்பாலோர் அறிந்திருக் கலாம் எலிஸபெத் ராணியாரின் விசிரியின் அழகைப்பற்றி. ஆனால் யாருக்காவது தெரியுமா இந்த மங்கம்மாள் மண்ட பத்திற்கு மூலதாரியான இராணி மங்கம்மாளின் வரலாற் றைப்பற்றியும், அவர், அவரது தம்பி ஒரு பெண்ணைக் கற்பழிக்க முயன்றதற்காக தம்பியை மலையின் மீதிருந்து உருட்டிய நீதியைப்பற்றியும்? அசோகன் நர்மதை நதிக் கரையில் கல்நாட்டினதை அறிவீர்கள். ஆனால், நம் நாட்டி லே இமயத்திலே பொறி பொறித்து, வடவரை வென்ற சேரன் செங்குட்டுவனைப்பற்றி உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? அக்பரின் அரசியல் முறையும் அவரி டம் தோடர்மால் என்ற மந்திரி இருந்ததையும் அறிவீர்கள், ஆனால் மீனாட்சி என்ற ராணியின் காலத்தில் நாராயணய் யர் என்ற அமைச்சன் இருந்துஅவள் அரசியலைக்கவிழ்த்திய கதையை அறிவீர்களா?

மாணவர்கள் நிச்சயமாக நாட்டுப்பற்றுக்கொள்ள வேண்டும். நான் அவர்களைக் கேட்கிறேன்; நீங்கள் எந்நாட்டு மக்கள்? எந்த சந்ததியாரின் வழிவந்தவர்கள் என்பதை? அதை எண்ணி மாநாடு கூட்டுங்கள். இன்று

வருகின்றவழியில் அம்மாணவர்கள் தேசியக்கொடியைப் பறக்கவிட்டிருப்பதைக் கண்டேன். அதிலிருந்து அரசியல் பிரிவுதனைக்கொண்ட மாணவர்கள் கும்பல் என்று அறிந்து கொண்டேன். நாங்கள் தாராளமாக, வெளிப்படையாகச் சொல்லுகின்றோம் திராவிட மாணவர் கழகம் என்று. நாங்கள் திராவிடன் என்ற உணர்ச்சியோடு கூடுகின்றோம். நீங்கள் இது வரையில் கூட்டிவந்த மாநாடுகள் முன் கூறியதைஒத்தபிரச்சினையில் காங்கிரஸ் கூட்டுவது கல்விமாணவர் மாநாடு, ஆனால் மறைமுகமாக அது காங்கிரஸ் மாநாடு. உங்களைப்போல் நாங்கள் உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசாமல்—இரட்டை நாவுடன் பேசாமல்—இருக்கிறோம்.

கல்விமாணவர் மாநாட்டில் பேசப்படுவது என்ன? ஒரு ஐயர் காப்பி குடிப்பது கெடுதல் என்று பேசுவார். மற்றொருவர் சமஸ்கிருத கிரந்தங்களை படியுங்கள் என்று கூறுவார். இதுதான் மாணவர் கல்வி மாநாடா? அதில் பள்ளியிலுள்ள குறைபாடுகள், உபாத்தியாயர்களின் குறைகள் முதலியவற்றைக் கண்டித்தார்களானால் அதை மாணவர் கல்வி மாநாடு எனக்கொள்ளலாம்.

காங்கிரஸ் கொடி மாணவர் மாநாட்டில். ஆனால் இங்கிலாந்திலே ஒரு மாணவர் மாநாடு கூட்டுவதாக வைத்துக் கொள்வோம். அவர்கள் எக்கட்சியினராயிருப்பினும், அதாவது லேபர், லிபரல், கன்சர்வேடிவ், கட்சிக்காரர்களாகயிருப்பினும் அதை ஆதரிப்போராயிருப்பினும், அவர்கள் மாநாட்டில் இருக்கும் கொடி "யூனியன் ஜாக்" காய்த்தானிருக்கும்.

இருபதாண்டுகளுக்கு முன்னதாக திராவிடர்கள் ஆரியரிடம் வேண்டினார்கள் நீதியை. உதறித்தள்ளப்பட்டார்கள். பார்த்தோம், பதறினோம். சிந்தித்தோம் அதன் விளைவே இது.

இப்பொழுது நீதியை வழங்குகின்ற காலம், வேதாச்சலம் அவர்கள் கூறினார்கள் "நாங்கள் படிக்கின்ற காலத்தில் நான்கைந்து திராவிட மாணவர்களே இருந்தார்கள்" என்று ஆனால் அந்த திராவிடர்களும் திராவிட உணர்ச்சியின்றியே இருந்தார்கள்.

நான் இரண்டாம் பாரம் ஒரு பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். அவ்வகுப்பில் நானும், மற்ற ஒரு நண்பரும் தான் பிராமணரல்லாதார். ஏனையோர் பிராமணர்கள் எனக்கு அப்பொழுது ஆங்கில ஆசிரியராயிருந்தவர் வெங்கட்ராமய்யர், அவர் எங்களுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும்போது Ram, Goat என்ற பதங்களுக்குப் பொருள் சொல்லுவார். Ram என்றால் செம்மறியாடு Goat என்றால் வெள்ளாடு என்பதோடு நிற்கமாட்டார்; Ram என்றதும் என்னை ஒரு முறை பார்ப்பார், மாணவர்களும் இதைக்கண்டு எங்களைத் திரும்பிப்பார்ப்பார்கள். நாங்கள் பேசாதுதான் இருப்போம். நான் இதைக்கூற வந்ததிலிருந்து அவரைக்குற்றம் கூறும் நோக்கமுடையவன் என்று நினைக்கவேண்டாம். சீடன் ஆசானுக்கு அளிக்க வேண்டிய மதிப்பு மரியாதை முதலியவற்றினின்றும் தவறி விட்டதாக நினைக்கவேண்டாம். இதைச்சொல்வதின் கருத்து அந்த நிலையில் கூட அந்த ஆசிரியர் மனதில் ஜாதியின் உயர்வுதாழ்வு உணர்ச்சி எவ்வளவு தூரம் ஊறியிருந்தது என்பதைக் குறிக்கவே. நிற்க, Ram என்று என்னைப்பார்ப்பார், நாங்கள் செம்மறியாடுபோல் இருக்கிறோம் என்பதற்காக வல்ல. "Ram, Goat சாப்பிடுபவர்கள் இந்தக் கிளாசில் யாராவது இருக்கிறார்களா" என்று கேட்பார். நானும் எனது நண்பரும் எழுந்து நிற்போம். பையன்கள் எங்களை நோக்கிச்சிரிப்பார்கள். ஆட்டுக்கறி சாப்பிடுவது நமக்குத்தான் வழக்கம்! அவ்வளவு ஆபாசமானது

என்று அவர்கள் கருதினார்கள் என்றுதானே தெரிகிறது. நானும் 3-ம் பாரம் வந்தபோது இனி மாமிசமே உண்பதில்லை என்று என் ஆசிரியரிடம் சத்தியம் செய்து கொடுத்தேன். அதன்படி 21 ஆண்டுகளாக நான் மாமிசம் உண்ணாமலிருந்தேன். ஆனால் மூன்று வருடங்களுக்கு முன்பு நான் டில்லிக்குச் சென்றுகொண்டிருந்த வழியில் ஒரு ஊரில் சாயி நிலையத்தில் உள்ள Buffet ல் மாமிச உணவைத்தவிர வேறு நல்ல உணவு இல்லையென்பதைக் கண்டு அதை சாப்பிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் கண்டு அதையே தின்றேன். அதிலிருந்து 21 ஆண்டுகள் சாப்பிடாமலிருந்ததை வட்டியும் முதலுமாகச் சேர்த்துத் தின்று விட்டேன்.

நாங்கள் பள்ளிகளில் படித்துவந்த நேரங்களில் பார்ப்பன மாணவர்கள் திறமையில் மிகுந்தவர்கள் என்பதை அறிந்திருந்தோம், நாங்கள் பார்ப்பனர்களைத் தீண்டுதல் கூடாது என்பதற்கல்ல நாங்கள் அவர்களைத் தொடாதிருந்தது. நாங்கள் அவர்களைத் தொட்டால் பாபம் என்று கருதியிருந்தோம். நாங்கள் தொட்டால் பார்ப்பனர்கள் கோபப்படமாட்டார்கள். நாங்கள் ஒரு பார்ப்பனன் தோளில் கை போட்டுக்கொண்டு சென்றால், எதிரில் வருகின்ற ஒரு திராவிடத்தோழன் எங்களைக் கண்டிப்பான். நாங்கள் படித்த பள்ளியில் டிராயிங் உபாத்தியாயர், தமிழாசிரியரைத்தவிர, ஏனையோரெல்லாம் ஆரியர்கள்.

கல்லூரியில் மட்டுமென்ன? ஆங்கிலத்திற்கு விரிவுரையாளராக இருந்த திருவேங்கிடசாமி என்பவரும், எனக்கு அரசியல் உலகிற்கு வழிகாட்டியாயும், அரசியல் அறிவு புகட்டிய தந்தையுமாகிய வரதராஜலு என்பவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பார்ப்பனர். கிரேக்க சரித்திரத்திற்கு T. R. சேஷ அய்யங்கார்; தர்க்க சாஸ்திரத்திற்கு

ராமச்சந்திரராவும் இப்படி எப்பக்கம் பார்த்தாலும் அய்யர்களே நிறைந்திருந்தார்கள். பல தோழர்கள் என்னை வினவியதோடுமட்டும் நில்லாது விளுவும் கேட்டார்கள். என்ன அய்யர்களிடம் கற்றதை அவர்களுக்கு எதிராக உள்ள கட்சியில் சேர்ந்து பிரசாரம் செய்து வருகின்றீரே என்று, ''ஆம்'' என்று பதிலளித்தேன். ஏன் இம்முறையில் செய்கிறேன் என்ருல் இனி நாளை வரும் மாணவர்கள் என் போன்றே எதிர்ப்பளிக்காமலிருந்து ஆற்றும் வகையில் அதற்கேற்ப உபாத்தியாயர்களும், சர்க்காரும் நடந்துகொள்ளுவார்கள் என்பதற்காகத்தான்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னே, ஏன் பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இல்லாத உணர்ச்சி இன்று மூளக்காரணம் என்ன, என்று கேட்டால் அதற்கு முழுப் பொறுப்பாளி காங்கிரஸே என்று கூறுவேன். வெள்ளைக்காரன் இங்கு வராததற்கு முன்பே, நமது நாட்டில் இருந்த சீமான்கள், மேதைகள் வெள்ளைக்காரர்களை தேவர்கள் என்று நினைத்தார்கள். பிளாசியில் வெற்றிபெற்ற கிளைவ் விஷ்ணுவின் அவதாரம் என நினைத்தனர். கிளைவ் வெற்றி பெற்றதன் காரணம் என்ன? எதற்கு என்ருல் மலிந்து கிடக்கும் பாவத்தைப் போக்கவே கிளைவ் அமரில் வெற்றி அடைந்தான் என்று எல்லோருமே எண்ணினர். அவர்களின் ஆட்சியின் காரணமாக நன்மை வரும் என்று எண்ணினர்; நீதியின் உறைவிடம் அவர்கள் ஆட்சி என்று நினைத்தனர்; நேர்மையின் பிறப்பிடம் என்றெண்ணினர்.

இந்த நாட்டிலே காந்திய இயக்கம் தோன்றியது. அது என்ன கூறிற்று மக்களைப் பார்த்து? இந்த நாடு உங்களுடையது என்று நமது தேசியத் தலைவர்கள் சுதந்திரப்பண் பாடினர். ''நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், இது நமக்கே உரிமையாம் என்பதும் இனி மறவோம்'' எனக்

கவிகள் கிளம்பின. எல்லோருமே, மக்கள் அனைவருக்கும் சொந்த ஆட்சியே வேண்டும், சுய ஆட்சிக்கு எதுவுமே ஈடாகாது என்றெண்ணினர். "இந்த நிலைமையில் நாம் சிந்திக்க ஆரம்பித்தோம். நமது நாடு நமக்கேயுரியது என்பதை எடுத்துக் கூறினோம் எதற்கும் அஞ்சவில்லை. அவனிடம் துப்பாக்கியுள்ளதே என்ற பயம் கிடையாது. நம்மிடம் துப்பாக்கியில்லை யென்று துளியும் கவலையில்லை" என்று கூறிக்கொண்டுவந்த தேசீயத்தின் எதிரொலியே இன்று தோன்றியுள்ள திராவிடர் கழகம்.

5000 மைல்களுக்கு அப்பால் உள்ள வெள்ளையனை; தன் சாம்ராஜ்ஜியத்தில் சூரியனே மறைவதில்லை என்று அகந்தை கொள்ளும் வெள்ளையனை தூர நில் என்று கூற இந்தியரின் மனம் பண்பட்டதென்றால், தர்ப்பையை வைத்துக்கொண்டு, அதிலும் காய்ந்த தர்ப்பையை வைத்துக் கொண்டு, அதிலும் பஞ்சகச்சத்தில் மறைத்து வைத்துக் கொண்டு வரும்படி கிடைக்கும் நேரங்களில் தவிர மற்றைய நேரங்களில் வெள்ளையனை வெளியே போகச்சொல்லும் ஆரியக்கூட்டத்தை நாம் ஏன் "தூர நில்" என்று சொல்லக் கூடாது.

கதையிலே, கதாநாயகனும் கதாநாயகியும் சந்திக்கிறார்கள். கதாநாயகன் சிரிக்கிறான். கதாநாயகியும் சிரிக்கிறாள். அதற்கு அடுத்த கட்டம் முத்தப்போட்டி தானே!

அதைப்போலவே "ஆங்கிலேயனே வெளியே போ" என்று ஆரியம் கூறினது. அதற்கடுத்த கட்டமாக, ஆங்கிலேயனை நாம் எதிர்ப்போம், நம்மால் அது முடியும் என நிச்சயித்து தனித்தனி கட்சிகள் நடத்தும் அம்பேத்கார், ஜின்னா, பெரியார் முதலியோர்கள் கிளம்பியுள்ளார்கள்.

உன் நாட்டில், உன் சொந்த நாட்டில், நீ இன்னல் அனுபவிக்கும் இந்நாட்டில் அன்று வந்த வேளையில்,

உள்ளே நுழைந்த வேளையில் உடலிலே வலுவின்றி உள்ளத்திலே துப்பாக்கி வைத்துக்கொண்டும் கத்தியை வீசாமல் கபடத்தை வீசியும், காட்டி வந்த நேரத்திலே நாம் அழைத்தும், அப்படி வந்தவர்கள் தோளோடு தோள் சேர்க்காது "தூர நில் தூர்த்தா" என்று இயம்பிய இனத்தை—அந்த இனத்தினுல் நடந்த சில சத்தியாகிரகங்கள் நடத்திய பிறகு—சிறையில் சில மாணவர்கள் நிறைந்ததைக்கண்ட பிறகு—குமரன் போன்ருேரை தடியடிக்கு பலியாக்கின பிறகு—வெள்ளேயனே வெளியே போ என்று சொல்லக் கூடிய தைரியம் இந்தியாவில் இடிப்பொடிந்த இனத்திற்கு இருக்கின்றதென்ருல், என்றும் வீரம் மங்காது வாழ்ந்த நாம், சேரன் செங்குட்டுவன் வழிவந்த நம்மால் முடியாதா என்று கேட்கிறேன் "ஆரியனே வெளியே போ" என்றியம்ப.

அக் காலத்தில் கூறுவார்கள் தேசீயத் தலேவர்கள் "சின்னஞ்சிறு இங்கிலாந்து பறந்துவிடும் இந்தியாவில் உள்ள முப்பது கோடி மக்களும் மூச்சுவிட்டால்" என்று. வரதராஜலு நாயுடு அவர்கள் கூட கூறுவார் இங்கிலாந்தில் உள்ளவர்கள் சுண்ணும்பு நிலக்கரி இவை போன்ற மற்றவைகளேத் தேட இங்கிலாந்தையே தோண்டி விட்டதால் இங்கிலாந்து போல் ஆகி இன்னுஞ் சிறிது நாளில் தண்ணீர் உள்ளே சென்றுவிடும் என்று.

அண்மையிலே பத்திரிகைகளிலே பார்த்திருப்பீர்கள் இராஜபுரியிலே உள்ள ஊற்றின் செய்தியைப்பற்றி. இராஜபுரிக்கு அருகில் வருடத்திற்கொருமுறை ஒரு ஊற்று ஊறுமாம் அதில் மூழ்கினுல் பாபம் போகும், புண்ணியம் கிடைக்கும் என்று பிரச்சாரம் செய்தனர். இதை ஏடுகள் ஆதரித்தன. அழகு அழகான முறையிலே இராஜபுரி ஊற்றின் விளம்பரப் படங்கள். அண்மையில் கும்பகோண மகாவைபவத்தைப்பற்றி என்னென்ன விதமாக ஏடுகள் எழுதின!

அதை நடத்தும் காரியதரிசிகளின் செயலாற்றும் திறனைப் பற்றியும், அச் செயலாளர்களின் படத்தையும், அவர்களின் முகத்தில் கனிவு வழிவதாக வரைந்துள்ள சித்திரக்காரர் களின் ஓவியத் திறனையும் கண்டிருப்பீர்கள். அதே முறையி லிருந்தது இராஜபுரி ஊற்றின் பிரபாவமும், வைபமும்.

"குளித்தால் கருமம் நீங்கி குற்றமற்றவர்களாகலாம் என்ற" வைதீகர்களின் பிரச்சாரத்தைக் கேட்டனர் ஆதித் திராவிட மக்கள். தங்கள் பாவம் தொலைய குளிக்கக் கருதி ஞர்கள் போலும். நான் கேட்கிறேன் அந்த ஆதித்திராவிட மக்களுக்கு ஆசை தோன்றி இருக்குமா? இருக்காதா? பாவம் போகும் என்று பறைசாற்றுகிருர்களே நாம் ஏன் இதில் குளித்து புண்ணியம் பெறக்கூடாது என்ற எண்ணம் எழுந் திருக்காதா?

எனக்குத்தாகவிடாய், தண்ணீர்ப்பந்தலைப் பார்க்கி றேன். ஆவலுடன் செல்லுகின்றேன். அங்குள்ள குவளை யைக் கையில் எடுத்து தண்ணீர் கேட்கிறேன். "உனக்கு இல்லை" என்ற சொல் உள்ளிருந்து வந்தால் என்னிலை எவ் வாறிருக்கும்? என் நிலையைப்பற்றி நான் கவலைப்படாவிட் டாலும் அந்தத் தண்ணீர்ப்பந்தல் எவ்வளவு நாட்களுக்குத் தான் அங்கு நிற்கும். எனக்குத் தண்ணீர் இல்லை யென்று சொல்லி அதற்குக்காரணம் கற்பித்தால் என் கோபம் குறைந்துவிடுமா? அன்றித் தாகம் தான் அடங்கிவிடுமா? எனவேதான் பாவத்தைத் தொலைக்கக்கருதி குளித்தார்கள் அங்கு 15 ஆதித்திராவிட மக்கள், இல்லை இன்று கூட்டப் பட்ட மாணவர் மாநாடுகளில் கூடிய தேசியவாதிகளின் அகராதிப்படி 'ஹரிஜனங்கள்' இதன் பலன் என்ன? கைமேல் கண்டனர்.

குளத்தில் குளித்தால் பாவம் தொலையுமென்று யார் பிரசாரம் செய்து வந்தார்களோ, மக்களை புண்ணிய லோகத் திற்கு அழைத்துச்செல்வதாக யார் குறை கூறினுர்களோ—

அதே வைதிகர்கள் தொடுத்தனர் பதினைந்து ஆதித்திரா விட மக்களின் மேல் என்னவென்று? குளத்தில் குளித்த தால் அது தீட்டுஆய்விட்டபடியால் அதைத் திருத்துவதற்கு ஆகும் செலவு, தீட்டின் நஷ்டம் இவைகளுக்கு நஷ்டஈடாக 900 ரூபாய் தரவேண்டுமென்று கோர்ட்டில் நிறுத்தியுள் ளார்கள்.

இன்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள். எதற்காக அந்த ஆதிதிராவிட மக்கள் குளித்தார்கள் என்று? பாவம் போகுமென்று சொன்னதால் தானே! பலன் வரும் என்று பிரசாரம் பண்ணினதால் தானே! இப்படிக் கூறியவர்கள் யார்? கங்கா புத்திரர்கள்! மாதாவைத் தீண்டவேண்டு மென்றால் மகன் உத்திரவு வேண்டுமாம். கங்கையில் ஆதித் திராவிடர்கள் மூழ்கியதால் கங்கையின் செல்வர்களாகிய புத்திரர்கள் கோபித்துவிட்டனர்.

இந்த 1945-ஆம் ஆண்டிலே; அடாமிக் பாம் (Atomic Bomb) போடப்படும் இந்தக்காலத்திய; உலகமெல்லாம் சமாதானம் வேண்டுமென்று கூறி அதற்காக ஒருஸான் பிரான்ஸிஸ்கோ, (San Francisco) மாநாடு கூட்டப்பட்ட இந்த நேரத்திலே, சென்னை கோகலே ஹாலில் சாஸ்திரி கள் ஆப்பிரிக்காவில் "இந்துக்கள் நடத்தப்படுகின்ற கீழ்த் தர நிலையைப்பற்றி பிரலாபிக்கின்ற வேளையிலே, சர்ச்சில் தோற்றார் அவர் மந்திரி சபை கலைந்தது; தொழிற் கட்சி வென்றது இனி அகில உலகத்திற்கும் முக்கியமாக நம் இந்தியாவிற்கும் க்ஷேமம் என்று எண்ணப்படுகின்ற இந்நேரத்திலே ஆதித் திராவிட மக்களின் மேல் சர்க்கார் அபராதத்தொகை விதிக்க வழக்கு நடத்தினார்கள் என்று கேட்டு அதற்காவன செய்ய முயலாது, மாணவர் மாநாடு

கள் கூட்டிப்பயனென்ன? பாரத புத்திரர்களே கங்கா புத்திரர்களை அடக்க நீங்கள் முன்வரவில்லையா? இல்லையென்ருல் வாருங்கள் என்றழைக்கின்றேன்.

இதைவிட்டு தீர்மானம் போடுகின்றீர்கள் தேசீய சர்க்கார் வேண்டுமென்று. தேசீய சர்க்கார் என்ருல் என்ன எனக் கேட்டாராம் ஒருவர் உடனே "இது தெரியாதா காங்கிரஸ் சர்க்கார்" என்ருராம் நண்பர். உண்மை, காங்கிரஸ் சர்க்கார் தான் தேசீய சர்க்கார். எந்த காங்கிரஸ் சர்க்கார்? என்று என்னைக் கேட்டால் கூறுவேன். 1500 பேர்களைச் சிறைக்கு அனுப்பிய சர்க்கார் என்று, லீக்கைப் பார்த்துக் கேட்டால் வந்தேமாதர கீதத்தை ஆட்சியிலும், இந்தியாவிலும் புகுத்தும் சர்க்கார் என்று தான் கூறுவார்கள்.

அந்த காங்கிரஸ் சர்க்காரின் தலைவர்கள் தங்கள் சர்க்கார் சரிவர ஒழுங்கு எனும் கோர்ட்டில் நடக்கவிரும்பினுல் இந்தியாவிற்கு அவர்கள் கூறுவதுபோல் நரம்பு போன்றிருக்கின்ற ஆதித்திராவிட மக்களை ஒரு சில வைதிகர்கள் கோர்ட்டின் கூண்டில் ஏற்றியதற்குக் கண்டனம் கூற வேண்டாமா? இத் தேசீய மாணவத் தோழர்கள் உங்கள் தலைவர்களுக்குத்தான் வேறு பெருவேலைகள் இருக்கின்றதென்ருல் உங்களுக்கு ஏன் இதைக் கவனிக்க தெரியாது என்று கேட்கின்றேன்.

இது மட்டுமென்ன பாலக்காட்டிலே ஈழவர்கள் குளத்தில் குளித்ததால் குளம் கெட்டுவிட்டதென வைதீகர்கள் வழக்குத்தொடுக்க ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யர் அவர்களுக்கு நஷ்ட ஈடு தருவதோடு நில்லாமல் அக்குளத்தில் இனி யாரும் குளிக்கக்கூடாது என்று தீர்ப்பளித்து விட்டாராம். ஜஸ்டிஸ் சந்திரருக்கு இதைப்பற்றித் தெரியாதா என்ன?

அவர் C. P. யின் நண்பர், உடன் பழகியவர்? நான் கேட்கின்றேன் Sri C. P. நாட்டு நன்மைக்காக ஜாதி ஆசாரங்களை விட்டுக்கொடுப்பாரா என்று? இதையெல்லாம் கவனித்து கண்டிக்க வேண்டாமா? மாணவர்கள்!

மாணவர்களாகிய நீங்கள், புத்தகத்தில் சமத்துவம், தேச விடுதலையைப்பற்றி படிக்கும் மாணவராகிய நீங்கள், ஆகஸ்டு கலவரத்திற்கு நாங்கள் உயிரையும் அளிக்கத் தயார் என்று சொன்ன மாணவர்களாகிய நீங்கள் இது போன்று அநீதியாக அக்கிரமமாக தாழ்த்தப்பட்ட ஆதித் திராவிட மக்களின் நிலையை கவனிக்க வேண்டாமா? என்றும் கேட்கின்றேன். நாட்டினர்க்குள் நாட்டினரைப்பழிக்க நீங்கள் ஏன் பார்த்திருக்கின்றீர்கள்.

வெள்ளைக்காரன் மோட்டாரில் செல்வதைக் கண்டு நானும் உங்களைப் போன்றே சினம் கொள்கின்றேன்; அத்துடன் மட்டுமில்லாது பக்கத்தில், குச்சு நாய் ஒன்றை வைத்துக்கொண்டு தடவிக்கொண்டு செல்வதையும்கண்டு என் நெஞ்சம் வேகத்தான் செய்கின்றது. அதே சமயம் திரும்பியதாக வைத்துக்கொள்ளுங்கள் எதிரே குப்புசாமி அய்யர் வருகிறார் தலையில் சுமக்கமுடியாத காய்கறியுடன், மற்றோர் புறம் நமது நண்பர், வழுக்கி விழுந்த மானத்தை விட்ட குப்புசாமி பிள்ளை வருகின்றார். பிள்ளையவர்கள் அய்யர் அவர்களைக் கும்பிடுகின்றார். அவரோ இடது கையால் ஆசிர்வதிக்கின்றார். இதைக்கண்ட எனக்கு வெள்ளையன் மேல் வந்த கோபத்தை விட இருமடங்கு கோபம் வராதா என்று கேட்கிறேன்? பதிலளியுங்கள்.

வெள்ளையன் கூடாது! என்பது சிறந்த அரசியல் தத்துவம் தான் இல்லையென்று நான் மறுக்கவில்லை; ஆனால்

இவ்வளவு பெரிய நோக்கமுடைய மாணவர்கள் இந்த நாட்டிலே திராவிட மக்களுக்கு மேலாய் ஜாதியில் உயர்ந்தவர்களையும், சமயத்தில் நெறிகண்டவர்களையும், இதுமட்டுமல்லாமல் தரகர்களாயும் இருந்து வருகின்ற ஆரியர்களையும் நோக்கி இந்தக் கேள்வியை அவர்களுக்கு நான் விட்டுவிடுகின்றேன்.

மாநாடு கூடும் மாணவர்களை நான் கேட்கிறேன்! மாநாடு கூட்டும், அரசியல் முறை வகுக்கும் நீங்கள் நாளை உங்கள் கல்யாண காலத்தில் நடப்பனவற்றைப் பற்றி ஏதேனும் ஆராய்கின்றீர்களா? மணவறையில் புரோகிதனைப் பார்க்கின்றீர் அது மட்டுமல்ல அவன் மூட்டும் நெருப்பையும் காண்கின்றீர்கள்! உங்களில் யாராவது ஒருவர் புரோகிதன் மணக்காலத்தில் எதற்கு அந்த நெருப்புத்தான் எதற்கு என்று கேட்டார்களா? கேட்பார்களா?

என்னென்ன செயல்கள் கல்யாணத்தில் நடைபெறுகின்றன? நெருப்பை மூட்டுகின்ருன்—தாம்பூலத்தைக் கையில் கொடுத்துக் காலின் கீழ் விட்டு வாங்கச் சொல்கின்ருன்—சாதாரண ஜலத்தை கங்கா தீர்த்தம் என்கின்ருன்—இவற்றையெல்லாம் எவ்வாறு ஒப்புக்கொள்கின்ருய் மாணவத் தோழனே! உனக்குத் தெரியும் அமெரிக்காவில் இருக்கும் பணம் எவ்வளவு என்று? நீ அறிவாய் இந்தியாவின் ஸ்டர்லிங் நிதியின் கதையைப்பற்றி? இது மட்டுமா? ஜூலியஸ் ஸீஸரின் இங்கிலாந்து நாட்டின் படையெடுப்பை அறிவாய்! அலெக்ஸாந்தர் கிரேக்க நாட்டிலிருந்து பாஞ்சால நாடுவரை வந்ததை உணர்ந்துள்ளாய்! ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவில் அடிமைத்தனம் கூடாது என்று கர்ஜித்தததையும் படித்திருப்பாய் இது மட்டுமல்ல மேலாக கல்யாணத்தில் புரோகிதன் எப்படி வந்தானென்பதை,

நுழைந்தானென்பதை உணர்வாய்! ஆனால் நான் கேட்கின்றேன், காங்கிரஸ் மாணவனுகிய நீ புரோகிதனைப் பார்த்து நீ இல்லாவிட்டால் இந்நாடு நடவாதா? என்ற கேள்வியைக் கேட்பாயா என்று.

இந்த மாதிரி செயல்களை நீங்கள் தேசியக் கட்சியில் இருந்து கொண்டே செய்யுங்கள் பெரியார் இராமசாமி கட்சியில் சேர்ந்து செய்யவேண்டாமென்று நான் கூறுகின்றேன்.

நான் கேட்கின்றேன், உயர்ஜாதி மாணவர்களில் இருவர் ஏன் தங்களின் விடுமுறை நாட்களில் சேரியில் சென்று கழித்தல் கூடாது என்று? அங்கு சென்று சோம்பேரியாக இருத்தல் கூடாது.

அவர்களுடன் சேர்ந்து அவர்களின் வேலையைப் பங்கிட்டுச் செய்யவேண்டும்! அவர்களின் கீழ் நிலையைப் பற்றியும், அவர்களுக்கும் உங்களுக்கும் உள்ள பேதமையைப் பற்றியும் எடுத்துக் கூறட்டும் பின் அவர்கள் அக்கிரகாரத்திற்கு வரட்டும்! வருவார்களா? அல்லது நான் கூறிய படி சேரியில் விடுமுறையில் கழிப்பார்களா? என்று தான் கேட்கின்றேன். அண்ணன் ஆத்திரம் கொள்வானு? அத்திம்பேர் அலறுவரா? என்ற பயமும், தன்னைத் திரும்பவும் இனத்தில் சேர்த்துக்கொள்வார்களா? என்ற பயமும் அவர்கள் மனதில் தாண்டவமாடுகின்றது. காரணம் ஜாதி வேற்றுமை என்ற அந்தச் சொல்லே!

இங்குள்ள யாருக்காவது அண்ணுத்துரை என்ன ஜாதி என்று தெரியுமா? ஜனர்தனம் என்ன ஜாதி என்று தெரியுமா? எனக்கே தெரியாது அவர் என்ன ஜாதி என்று. நன்ருக ஒரு கதையை உங்கள் நினைவிற்குக் கொண்டு வருகின்றேன். அது புத்தரின் சீடராகிய ஆநந்தர் ஒரு காட்டுவழி

சென்றுகொண்டிருக்கின்றார். தாக விடாய் தாங்கமுடிய வில்லை. எதிரே பார்த்தார், ஒரு மங்கை கையில் குடத்துடன் வருகின்றாள். பார்த்தார் ஆனந்தர், அம்மே தண்ணீர் என்றார். ஆனால் அப்பெண்மணியோ? தீண்டப்படாத தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவள் தயங்கி தலைகுனிந்தவாறு சற்று ஒதுங்கி நின்றாள். இளம் வயது அதனால் வெட்கப்படுகிறாள், பயப்படுகிறாள் என எண்ணிய ஆனந்தர் அவளருகே சென்று "அம்மே நான் முற்றிலும் துறந்த முனிவன், பயப்படாதே" என்றார். அம்மங்கையோ சற்று தெளிந்து "நான் தீண்டப்படாதவள்" என்று கூறினாள். உடனே புத்தர் தடையின்றி "நான் ஜலத்தைக் கேட்டேன் ஜாதியைக் கேட்கவில்லை" என்று கூறினார். இதைக் கேட்டும் இன்னும் ஜாதி வேற்றுமையை வேண்டுகின்றீர்கள்.

**இலக்கியமும் அரசியலும்:—** இலக்கியம் என்பது என்ன? இலக்கியம் மனதிற்கு நெகிழ்வு தருவது; நெகிழ்வினால் உண்டாவது எண்ணங்கள்; எண்ணங்களில் ஏற்படுவது எழுச்சி, அரசியல் அறிவோடு இயங்கச் செய்யும் இலக்கியந்தான் இக் காலத்திற்குத் தேவை. நம் நாட்டு இலக்கியங்களில் பல அப்படியில்லை. உதாரணமாக கம்பராமாயணத்தை எடுத்துக்கொண்டால்? அதில் ஆரிய திராவிடப் பிரச்சினை இருப்பதற்காக, வேற்றுமை உணர்ச்சியை அது உண்டாக்குவதற்காக, ஒரின வளர்ச்சிக்கு அது உதவுவதற்காக நாங்கள் கம்பராமாயணத்தைக் கண்டிக்கவில்லை. இலக்கியங்களின் உள்ளவற்றைப் படித்தால் வீரம் விளைய வேண்டும். இன்றைய கிரேக்க நாட்டு மக்கள் அலெக்ஸாந்தர் கிரீஸிலிருந்து பாஞ்சாலம் வரை படையெடுத்து வந்தானென்பதை அறியும்போது படிக்கும்போது அவர்களையறி

யாமல் ஒரு வீர உணர்ச்சி கிளம்புகின்றது. தங்களின் பண்டைய பெருமையைக் காண்கின்றனர். அதை அன்று புதுப்பிக்க விரும்புவார்கள்! விரும்பியதைச்செய்ய முயலுவார்கள். ஆங்கில சரித்திரத்தைப் படிக்கும் ஒரு ஆங்கிலேயன் நெப்போலியன் என்ற பிரெஞ்சு வீரனையும் அவன் ஆற்றிய அரும் பெரும் தீரச் செயல்களையும் அறிகின்றான். அவ்வளவு பெரிய ஐரோப்பாக் கண்டத்தையே ஆட்டிவைத்த நெப்போலியன்—அந்த அரசியல் மேதை, தீரன் இணையற்ற, வீரன்—வாட்டர்லூ சண்டையில் அதிலும் கேவலம் ஒரு சிறிய சேனாதிபதியாக நெல்ஸன் என்ற ஆங்கிலேயனால் தோற்கடிக்கப்பட்டதையும் அவ்வாங்கிலேயன் படிக்கின்றான். நெப்போலியனின் வீரத்தினால் அவன் பலன் ஒன்றும் அடையாவிட்டாலும், அவன் மனக்கண்முன் பண்டைய ஆங்கிலேயரின வீரம்தான் உருவெடுத்து நிற்கும். அவன் நெல்ஸனைப் போற்றுகின்றான். இராமனைத்திற்கு வருவோம்.

இராமன் என்ன வீரக்குணமுடையவனா? அவன் உண்மை வீரனா? அதுதான் இல்லை. நீங்கள் அறிவீர்கள் தேவர், அசுரர் இருவரும் கடவுளின் மைந்தர்கள் என்று, அசுரர்கள் அட்டகாசம் செய்யப் பிறந்தார்கள், அவர்களை அழிக்கக் கடவுளால் உண்டாக்கப்பட்டவர்கள் தேவர்கள்! தேவன் அம்சம்தான் இராமன். இராமன் இராவணனைக் கொன்றது வீரமோ? செய்யவேண்டியதைச் செய்தான். கீரிப்பிள்ளை பாம்பினைக் கொன்றதென்றால் கீரியின் ஆண்மையினை அது குறிக்கவில்லை; புலி மானைக்கொன்றதென்றால் அதிலிருந்து புலி ஒரு பயில்வானென்று பொருளல்ல! கீரி பாம்பினைக் கொல்வதும், புலி மானைக்கொள்வதும்; அதனதன் இயல்பே!

இயற்கையாக தங்களுக்கு அமைந்துள்ளவற்றையே அவைகள் ஆற்றுகின்றன. எனவே இராமன் எதற்காக ஏற்பட்டான் என்று நினைக்கப்பட்டானோ, எந்த அசுரர்களை அழிப்பதற்காகவே பிறந்தான் என்று கருதப்பட்டானோ, அன்றே அவன் செய்தது வீரமல்ல—அது இயற்கை என்ற முடிவிற்கு வரவேண்டும். எனவே, இம்மாதிரி உணர்ச்சிகளை உண்டாக்கும் இலக்கியங்கள் இக்கால அரசியல் உலகிற்குத் தேவையில்லையன்றோ! தோழர்களே சிந்தித்துப் பாருங்கள்.

வணக்கம்.

★

# "நல்ல தீர்ப்பு"

தோழர்களே!

நான் பேசப்போகும் "நல்ல தீர்ப்பு" ஆசிரியருக்கும் மாணுக்கருக்கும் உள்ள தொடர்பைப்பற்றியதன்று ஆனுல் அது என்னைப்பற்றிய தீர்ப்பே ஆகும். தலைவரவர்கள் ஏதோ எனக்கு இங்கு பேச 144 போடப்பட்டதாகச் சொன் ஞர்கள். ஆசிரியர்கட்கு என்னிடம் உள்ள அசூயையோ அல்லது ஆத்திரமோ இதற்குக் காரணம் அன்று; ஆனுல் அவர்கள் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளாததே காரண மாகும். மேலும் நான் நாட்டிலே புது யுகப் புரட்சிக் கருத் துக்களைக்கொண்ட ஓர் இயக்கத்தோடு தொடர்பு கொண் டுள்ளேன். என்னைப்பற்றி நீங்கள் தவருக அறிந்தீர்கள்; அறிவிக்கப்பட்டீர்கள்; ஆனுலும், இன்று நாம் ஒன்றுகூடி யுள்ளோம், ஊடலுக்குப்பின் கூடல்போல. ஆகவே, இளந் தோழர்கள் இன்று நான் கொண்டுள்ள கருத்துக்களைக் கேட்டு, செய்துள்ள குற்றங்களைக் கேட்டு, அவைகள் சரியா தவரு என்று ஒரு "நல்ல தீர்ப்பு" வழங்கவேண்டும். அது எனக்காக அல்ல; உங்களுக்கு, உங்கள் நாட்டின் நலனுக்கு, உங்கள் நாட்டுச் சமுதாயத்திற்கு நீங்கள் அளிக்கும் 'நல்ல தீர்ப்பா'கும்.

## எது நல்ல தீர்ப்பு?

தீர்ப்பு என்ருல் பலவிதம் உண்டு. ஆண்டவன் அடி யார்க்கு அளிக்கும் தீர்ப்பு ஒருவிதம்; அரசன் குடிகட்கு அளிக்கும் தீர்ப்பு மற்ருெருவிதம்; சட்டசபை தீர்பபு ஒரு தன்மையது; வலியோர் எளியோருக்கும் முதலாளிகள் தொழிலாளிகளுக்கும் அளிக்கும் தீர்ப்பு பிறிதொரு தன்மை

யது. இவையாவும் நல்ல தீர்ப்பு என்றே அவரவர் நவிலுவர். ஆனால் தீர்ப்பு காலத்திற்குத் தக்கவாறும் நிலைமைக்குத் தக்கவாறும் மாறும். மாறித்தான் தீரும்; மாறித்தான் தீர வேண்டும். ஒரு காலத்திலே நல்ல தீர்ப்பாக விளங்கியது பிறிதொரு காலத்திலே நல்ல தீர்ப்பு அல்ல என்று எள்ளி நகையாடப்படும்.

நம் நாட்டிலே பசுவின் கன்றைக் கொன்ற மகனை தேர்க்காலில் வைத்து மடித்தான் மனுநீதி கண்ட சோழன் இது அவனுக்கு, அவனது கருத்துக்கு, அக்கால நிலைமைக்கு ஏற்றபடி நல்ல தீர்ப்பு ஆனால் அவ்விதம் செய்ய, இக்காலத் தந்தையர்கள், தாய்மார்கள், சகோதர சகோதரிகள் ஒருப் படுவார்களா? அந்தக்காலத்து நல்ல தீர்ப்பு இந்தக் காலத் திற்குப் பொருந்துமா? கிரேக்க நாட்டிலே, பகுத்தறிவாளன் சாக்ரடீஸ் நாட்டிலே பகுத்தறிவை வளர்த்தான்; மக்கள், நாட்டின் சாதாரண மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும், அழகு, சத்தியம், ஆண்டவன் முதலியவைகளைப்பற்றி ஒரு வித உணர்ச்சியை எழுப்பி உண்மையை உள்ளபடி உணர ஊக்கினான். ஆனால் அக்கால உலகம் அவனுக்கு அளித்த தீர்ப்பு, அவனைச் சிறையிலே அடைத்துச் சிந்தனையைச் சிதைக்க முயன்றது. நஞ்சை நாவால் சுவைக்கவைத்து நமனுலகுக்கனுப்பியது. இதுவும் அப்போது "நல்ல தீர்ப்புதான்.

இங்கிலாந்திலே சுதந்திரத்தை நாடி உழைத்த பொய்டீஷியா என்னும் மாதை உரோமானியர் மகா கொடுமைப் படுத்தினர். அது அவர்களுக்கு அப்போது நல்ல தீர்ப்பே.

அரசனின் தெய்வீக உரிமை கொண்டாடிய சார்லஸ் மன்னன் தன் அரண்மனை முன்னிலையிலேயே தூக்கிலிடப் பட்டான். இதுவும் ஒரு 'நல்ல தீர்ப்பே'.

பிரான்சிலோ நாட்டு மக்களை அடைக்க உதவிய (பாஸ்டில்) சிறையை வீழ்த்தி புரட்சியைப் போற்றி நாட்டோர் நன்மையை நாடி, சீமான்களையும் பூமான்களையும் அதே பாஸ்டில் சிறையில் அடைத்தோரை அந்நாடு தூக்கிலிட்டு 'நல்ல தீர்ப்பு' செய்தது அது ஒரு காலம்.

ஆனால் ரஷ்யாவிலோ மன்னன் முதல் மடாதிபதிகள் வரை மக்கள் நலனுக்கு மாருனோரை மட்டந்தட்டிச் சுட்டு வீழ்த்தி நாட்டிலே சமத்துவத்தை நிலை நாட்டின புரட்சி வீரர்களைப் போற்ருதார் யார்? இது இக்காலத்துக் கேற்ற ஒரு 'நல்ல தீர்ப்'பென அவர்கள் கருதுகின்றனர்.

நான் மறுமுறையும் கூறுகின்றேன்; தீர்ப்பானது காலத்தையும் தீர்ப்பளிப்போரின் தன்மையும் தழுவியதாகவே இருக்கும்.

சான்ருக, ஆசிரியர்கள் என்னை அழைக்க அலட்சியம் செய்தது அவர்கள் நிலைக்கு, தன்மைக்கு நல்ல தீர்ப்பாகலாம்! இது மாணவரின் நல்ல தீர்ப்புக்கு மாருக இருந்திருக்கலாம். ஆனால் என்னைச் சரியாக அறியாமல் தீர்ப்பளித்தது 'நல்ல தீர்ப்பு' என நான் கருதமாட்டேன்.

சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் தீர்ப்பு எதுவானுலும் அது தான் நல்ல தீர்ப்பு; நல்ல தீர்ப்பு நல்லவர்கள் செய்யும் தீர்ப்பாக என்றும் இருக்காது. ஏனெனில் நல்லவர்கள் தீர்ப்பு, என்றும் இரக்கமுடையதாகவே இருக்கும்.

**சமுதாயம் ஒரு வழுக்கு நிலம்.**

இன்றைய சமுதாயம் செல்லரித்து, சீர்கெட்டுச் சின்னபின்னப்பட்டுச் சிதறிக் கிடக்கிறது. எனவே இன்று நல்ல தீர்ப்பு, சமுதாயப் புரட்சி புரிந்து சமுதாயத்தையே உருக்கி வேறு அச்சில் வார்ப்பதாகத்தான் இருக்கும் இது புரட்சி வேகத்தால்தான் முடியும். இத்தகைய சமுதாயப் புரட்சியை

இளந் தோழர்கள் ஈவு இரக்கமின்றி, மாறுதலுக்குக் கட்டுப் பட்டு நடத்தவேண்டும். மக்கள் மாறுதலை எதிர்த்து வாழ முடியாது. ஒன்று மாறுதலோடு ஒன்றி வாழ முடியும்; இன் றேல் மாறுதலோடு மோதிமடிய முடியும். இன்றைய சமுதா யம் வழுக்கு நிலம் போன்றது. வழுக்கு நிலத்திலே ஒருவன் எத்துணைக்காலம் விழிப்போடு நடக்க முடியும்? கனத்த காற்றடித்தால் அவன் வழுக்கி விழுவது திண்ணம். ஆகவே அவன் வழுக்கு நிலத்தைச் செம்மைப்படுத்துவதுதான் சிறந்த வழி; மாற்றியமைப்பதுதான் மனதிற்குகந்த மார்க் கம்; அதுதான் என்றும் வழுக்கி விழாதிருக்கும் வழி.

நம் நாட்டுச் சமுதாயம் சாதி வேற்றுமையினுலும் பொருளாதார வேறுபாட்டினுலும் செல்லரித்துக்கிடக்கிறது. மேலும் செல்லரித்துக்கொண்டே வருகிறது. தீண்டாதார் என்போரைச் சகல துறைகளிலும் சாதியின் பேரால் என்றென்றும் தீண்டாதாராக்கியுள்ளோம்; அடிமைப் படுத்தியுள்ளோம் இது நல்ல தீர்ப்பா?

**கவலையை மாற்ற முயலும் தோழருக்கு...**

இதற்குச் 'சில தோழர்கள்' இந்த நிலை நம் நாட்டிலும் இருக்கிறது, எனக் கூறிக் கவலையை மாற்ற முயல்வர். ஆனுல் அந்நாட்டு சமுதாயத்தைவிட இந்நாட்டுச் சமுதா யம் சிறப்பற்றுச் சீர்கேடுற்றிருப்பதேன்? இங்கு ஒரு ஜாதி யான் மற்ெறுரு சாதியானைத் தொட்டால் தீட்டு, தலைமுழுக வேண்டும். ஆனுல், இன்று ஒருவரையொருவர், வெட்டு குத்து, அடி என்று ஆர்ப்பரிக்கும் ஹிட்லரோ, சர்ச்சிலோ, ரூஸ்வெல்ட்டோ அல்லது அந்த நாட்டு மக்களோ சாதா ரணமாக ஒருவரையொருவர் தொட்டால் தீட்டு, தலை முழுக வேண்டும், மதம் மாசுற்றது என மனம் பதைக்கமாட்டார்

கள் அங்கு மக்கள் இனம் எல்லோருக்கும் மரியாதை. இங்கு தில்லைத்திருத்தல ஜோதியிலே கலந்த நந்தன் காலம் முதல் அம்பேத்கார் வைசிராய் ஜோதியிலே கலந்த இன்று வரை ஒரே தீர்ப்பு; தீண்டாதே என்ற தீர்ப்பு. இது நல்ல தீர்ப்பா?

அமெரிக்காவிலே நீக்ரோ இயற்கையிலேயே அழகற்று அமைக்கப்பட்டான். அதை மாற்ற முடியாது ஆனால் நம் நாட்டுச் சகோதரர் யாவரும் நம்மைப் போன்றவர்களே என்பதை எவராலும் மறுக்க முடியுமா? அமெரிக்காவிலே நீக்ரோவரோடு உண்ணல், உறவாடல் உண்டு; கலப்பு மணம் உண்டு; கல்விக்கலை உண்டு. ஆனால் இங்கே?

## அறிவுக்கு அறமாகப்படாதது அடாதது...

நம் நாட்டுத் தலைவர்கள் ஆப்ரிக்காவிலே, ஆப்ரிக்கர் இடத்திலே வாழும் கடல் கடந்த கருப்பர் உரிமைக்காகப் போராடுவர். ஆனால், இந்த நாட்டிலே பிறந்து, இந்த நாட்டிலே உழைத்து, இனப்பற்று, உணவு உடை உறைவிடமற்று வறுமையால் வாடி நலிந்து மெலிந்து நசித்து இந்த நாட்டிலேயே என்றென்றும் தீண்டாதானகவேமதிக்கும் தோழர்களைப்பற்றிக் கவனித்ததுண்டா? மேற்கண்ட அநாகரிகத்தின் அடிப்படையை, அஸ்திவாரத்தை, ஆணி வேரை அறுத்தெறிய முற்பட்டதுண்டா? ஏன் இல்லை? இளந் தோழர்களே! இதுபற்றி நீங்கள் நல்ல தீர்ப்பளிக்க வேண்டுகிறேன். இன்றில்லா விட்டாலும் நாளை, நாளையில்லா விட்டாலும் நாட்பல கடந்தாவது. கல்லூரியை விட்டகன்ற பிறகாவது சிந்தித்து ஒரு நல்ல தீர்ப்பு அளியுங்கள்! ஊருக் குழைப்போராகில் எங்களை வீணே தடுக்காது வாளாவிருப்பதே நீங்கள் நாட்டுக்கு நல்கக் கூடிய நல்லறமாகும்.

நாங்கள் ஒன்றும் எங்களை சகலக்லாவல்லவர்கள் என்றோ, பண்டிதர்கள் என்றோ பறைச்சாற்றவில்லை. அறிவுக்கு அறம் என்று பட்டதை அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறோம். அல்லாததை அக்கணமே அடாதது என்று அறிவுறுத்துகிறோம். உதாரணமாக திருமணக் காலங்களிலே, பட்டப்பகலிலே பகலவன் ஒளியிலே நம்மவர் விளக்கு ஏற்றி வைக்கின்றனர். இந்த விளக்கு ஏன்? எதற்காக என்று கேட்கிறோம்? ஆண்டவன் அளித்த அருணனிருக்கும் போது ஏன் இந்த விளக்கு என்று கேட்கிறோம், சீர் தூக்கிப் பாருங்கள் என்று; சீர்தூக்கிப் பார்த்து உங்கள் சொந்த முடிவுக்கு வாருங்கள்.

### இனப்பற்று மிக்க இலக்கியமுண்டா?

மற்றும் கடவுளே இல்லை என்றோ, கடவுள் இருக்கிறார் என்றோ நான் கூறவில்லை—அறிவோடு ஆற்றலோடு ஆபாசமற்ற கடவுள் இல்லை நமக்கு, இருக்கவில்லை நமக்கு என்றுதான் கூறுகிறேன். மாசுமருவற்ற மதம் இல்லை நமக்கு. இனப்பற்று மிகுந்த இலக்கியம் இல்லை நமக்கு அன்பு தரும் அறிவூட்டும் சமுதாயம் இல்லை நமக்கு, மனிதர் மனிதத்தன்மையோடு வாழச் சுயேச்சை—சுதந்திரம் இல்லை நமக்கு.

நமக்கிருக்கும் இலக்கியமெல்லாம் ஆழ்வார்கள் நாயனமார்கள் முதலியோரின் அற்புத லீலைகளைப்பற்றியவைகளாகவும். ஆண்டவனின் பத்தவதாரங்களை விளக்கி அதிசய அநாகரிகமான அற்புதங்கள் நிறைந்தவைகளாகவும் கலையின் பெயரால் இனக்கொலை செய்பவைகளாகவுமே தான் இருக்கின்றன. அறிவுக்குப் பொருந்தாதவையும், ஆராய்ச்சிக்கு நிற்காததையும், அறிவையே அகற்றி மடமையை மக்கள் மனதில் புகுத்தும் போலிகளாகவே நமக்கிருக்கும் இலக்கியங்கள் உள்ளன

**கயமைத்தனமான கடவுள் தன்மை.**

கிறிஸ்துவனுக்கோ ஒரே ஒரு பிதா பரமண்டலத்திலே உண்டு. இஸ்லாமியனுக்கோ ஒரே கடவுள் அதுவும் உருவ மற்ற அரூபி. ஆனால் நமக்கோ, மூலக்கடவுளர் மூவர், அவ ருக்கு குடும்பங்கள் பல; அதிலும் நிரந்தரக் குடும்பங்கள் சில; தற்காலிகக் குடும்பங்கள் பல உதாரணமாக, சிவனு ருக்கு பார்வதியும் கங்கையும் நிரந்தரக் குடும்பங்களாகும். தற்காலிகக் குடும்பங்களோ தாருகாவன ரிஷி பத்தினி களைப் போல சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு இருக் கும். ஏன் இதைக் கூறுகிறேன்? நமக்கும் கிறித்தவனுக் கும், இஸ்லாமியனுக்கும் கடவுள் உணர்ச்சியில், தன்மை யில் உள்ள வேற்றுமையைக் காட்டத்தான். நம்முடைய கடவுட் தன்மை கயமைத்தனமாக உள்ளது. கபோதித்தன மாக உள்ளது என்பதை உறுத்திக்காட்டத்தான், இவ்விதக் கயமைத்தனத்தையும், கபோதிக்குணத்தையும் விடுத்து கடவுளை 'சர்வ வியாபகன்' உருவமற்ற அரூபி. அருளுடைய வன் என்று மட்டும் ஏன் கூறலாகாது? இதற்குப் புராண மேன்? மதம் ஏன்? மக்களிடை மாற்றம் (சாதி பேதம்) ஏன்? கடவுளைப்பற்றிய இந்தத் தீர்ப்பு "நல்ல தீர்ப்பா" நவிலுங்கள் நாட்டோரே.

**அரன் அருள் அரைக்கணத்தில்...யாருக்கு?**

நமக்குக் கடவுள் வேண்டும்; நல்ல கடவுள் வேண்டும்; அறிவுக்குப் பொருத்தமான, ஆராய்ச்சிக்குட்பட்ட நிகண்டி லே நீசத்தன்மையற்ற கடவுள் உணர்ச்சி வேண்டும் என்று தான் கூறுகிறேன். நல்ல தீர்ப்பு அளிக்கும் கடவுள் வேண் டும். இங்கே ஒன்று கூற ஆசைப்படுகிறேன். சிலர் கூறக் கேட்டிருக்கிறேன் சிவன் பார்ப்பனரல்லாதாருக்கே உரித் தானவர் என்று அவர்களையே அவர் உயர்வாக மதித்தா ரென்று; காரணம், கண்ணப்பரைத்தான்–பார்ப்பனரல்லாத

ஒரு வேடுவரைத்தான்—எம்பெருமான் ‘அப்பா! அம்மா!’ என்று அழைத்து அன்பு கூர்ந்தனராம், மற்றும் செட்டி குல நங்கையாகிய காரைக்கால் அம்மையாரைத் தான் ‘அம்மே! அம்மே!’ என்று தம் அமுத வாக்கால் அழைத் தாட்கொண்டாராம்; மற்றெவருக்கும் இப்பேறு கிடைக்க வில்லையே! என்னே நம் பால் நம் சிவனார் கருணை! என்று எண்ணி எண்ணி இறும்பூதெய்துகின்றனர். சற்று சிந்தித் துப்பாருங்கள் தோழர்களே! கண்ணப்பர், ‘அப்பா’ என்ற அழைப்புப் பெறத் தம் கண்களைப் பெயர்த்து அப்பநேர்ந்த கஷ்டத்தை! காரைக்கால் அம்மையார், ‘அம்மே’ என்ற ஆசீர்வாதம் பெற. பேயாகி, உடலை வருத்தி, நாடி நரம் பற்று, உருக்குலைய நேர்ந்ததை; இப்பேறுபெற இவர்கள் பட்ட துன்பம் எவ்வளவு? ஆனால் அதே சிவனைப் பார்ப்ப னர் எத்துணை எளிதில் அடைகின்றனரென்பதைத் திரு விளையாடல் புராணத்திலே பாருங்கள்! பார்த்துக் கைலாயத் தீர்ப்பு நல்ல தீர்ப்பா என்று கூறுங்கள்.

மதுரையில் சொக்கர் ஆலயத்தில் அம்மையும் அப்ப னும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கின்றனர். திடீ ரென்று அப்பன் எழுந்தார். அம்மை கேட்க ‘ஒரு பக்தன் நம்மை நாடி வருகிறான்; அவனை ஆட்கொள்ளவேண்டும்’ என்று கூறி விடையேறி அம்மையோடு விண்ணிலே சென் றார் அவனது பக்திக்கு மெச்சி பக்தன் செய்த பாபங்களுக் குப் பிராயச்சித்தம் கூறினார். அது என்ன? பொற்றாமறைக் குளத்திலே மூழ்கு! பசுவுக்கு அறுகம் புல்லைப்போடு! ஆலயத் தை மும்முறை வலம் வா! நீ செய்த பாவம் தீர்ந்து எம்மை அடைவாய்’ என்றார். பக்தன் அவ்வாறே செய்து பரமன் அருள் பெற்றான். எப்படிப்பட்ட பக்தன்! பஞ்சமாபாதகஞ் செய்த பக்தன்; தந்தையைக்கொன்று தாயைப் புணர்ந்த

பக்தன்; இப்படிப்பட்ட பக்தனுக்கு அரனின் அருள் அரைக் கணத்திலே கிட்டும்! ஏன்? அவன் பார்ப்பனன். இது கைலாய தீர்ப்பு! இது பக்தியாசாரத் தீர்ப்பா? அல்லது ஜாதியாசாரத் தீர்ப்பா?

**சிறுவயதில் வெண்ணெய் திருடி,**
**பெரிய வயதில் பெண்ணை திருடி!**

கிறிஸ்துவன் ஞாயிற்றுக்கிழமைகளில் கோவிலுக்குப் போவதால் பொருளுண்டு. ஏனெனில், அவனுடைய இயேசு நாதர் அவனுக்காகத் தம் இரத்தத்தைச் சிந்தினார், அதிலே அவனுக்குப் பெருமைக்கூட தனக்காக உயிர் துறந்த உத்தமனைக் காணச் செல்வதிலே.

முஸ்லீம் ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுகிறான் என்றால் அதுவும் அவனுக்குப் பெருமைதான். ஏன்? அவன் கடவுள் உருவம் அற்ற 'அரூபி' அவனுடைய வழிகாட்டி முகம்மது நபி மக்களுக்காக மக்காவிலிருந்து மதீனாவரை ஓடினார்; அஞ்ஞானத்தை நீக்கி அறிவைப் புகட்டினார். ஆனால் நம்முடைய கண்ணன் காட்டிய வழியோ! சிறுவயதிலே வெண்ணெய் திருடி மத்தடி உண்டான்; சற்றுப் பெரியவனான போது கோபிகளுடனே பற்பல லீலைகள் புரிந்தான்; சேலைகள் திருடினான்; பின் ராதை, ருக்மணி முதலியோரை மணந்தான்; கடைசியாகப் பாரதப்போரிலே சிறந்த இராஜ தந்திரத்தைக் கண்டான். நான்கு வருணத்தை நான்தான் படைத்தேன் என்று கீதை செய்தான். இந்த வழி நல்லதா? நமக்குத் தேவையா?

**மட்டையடி படும் மாண்புடைய மாதவன்.**

அழகான கதைகளோடு, அற்புதங்கள் நிறைந்த புராணங்களோடு, இலக்கியங்களோடு கடவுளை ஒட்ட வைத்து, கடவுளுக்குக் கயமைத்தனத்தையும், கபோதி தனத்தையும் கற்பித்து நாட்டிடை நல்குவது நல்லதா?

அதுமட்டுமல்ல; ஆண்டவனுக்கு அழகான மோகினி ரூபம் முதல் அழகற்ற வராகம்வரை படைத்துள்ளோம். ஏன் இவ்விதம் கடவுளை கபோதித்தனமாகக் கயமைத் தன்மைக்கு உட்படுத்தவேண்டும்?

பாருங்கள்—இன்று திருவரங்கத்திலே நடக்கிறது மட்டையடி திருவிழா, அன்று ஆண்டவன் அரங்கநாதன் அகாலத்திலே ஆலயத்திற்கு வருவார். கதவு மகாலட்சுமியினுல் அடைக்கப்பட்டிருக்கும். பகவான் கதவை தட்டுவார். பட்டாச்சாரி ரூபத்திலே அம்மை உள்ளிருந்து சிறிது கதவைத் திறந்து (இன்னொரு பட்டாச்சாரி ரூபத்திலே) பார்த்து கணவன்மேல் சந்தேகப்பட்டுத் திறக்க மறுப்பார். உலகம் உண்ட மாதவன் உத்தமி லட்சுமியைக் கதவைத் திறக்க வேண்டுவார்; தாம் இனிச் சரிவர நடப்பதாகச் சத்தியம் செய்வார்; அம்மை வெளியே வந்து ஆண்டவனை மட்டையால் தட்டி உள்ளே அழைத்துப்போவார். இது எவ்வளவு மடத்தனம் என்று மனதில் சிந்தியுங்கள் மாணவர்களே! இவ்விழா ஒரு முறையல்ல, ஒன்பது முறையல்ல; ஒவ்வோராண்டும் நடைபெறுகிறது.

தூய கடவுளுணர்ச்சி பெற விரும்பும் நாம் இத்தகைய கயமைத்தனமான, காலித்தனமான, கபோதித்தனமான திருவிழாக்களைக் கடவுள் பேரால் கொண்டாட விட்டுவைப்பது நல்லதா? அது கடவுளையே கயவனுக்குகிறதல்லவா? இவ்விதம் நடப்பது நல்ல தீர்ப்பா?

**நிலைமைக்கேற்ற நீதி.**

நமக்கும் கிராமங்களிலே உள்ள மக்களுக்கும் இருக்கும் வித்தியாசங்களைக் கவனியுங்கள். நாம் எல்லோரும் பூமி உருண்டை வடிவம் என்று நன்ருய் அறிவோம். தந்தி, டெலிபோன், வயர்லெஸ் முதலியவைகளைப்பற்றி நன்ருய் அறிவோம். ஆனுல் கிராமத்திலே சென்று கிராம மணியக்

காரனைப் பார்த்து, பூமி உருண்டையா? தட்டையா? என்று கேட்டால், அவன் பூமி என்னமோ தட்டை தான். அது நம்ம பெரியவர்கள் எல்லாம் கூட எழுதிவைத்திருக்கிருர்கள். இரணியன் தம்பி இரண்யாட்சதன் கூடப் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போனுனும். அதை மகாவிஷ்னு பன்றியாகப் போய்த் திரும்பக் கொண்டுவந்தாராம். அது தான் உண்மை என்று நம் அய்யர்; அர்ச்சகர், புராணிகர் எல்லாம்சொல்லுகிருர்கள். ஆனுல். என்னமோ நம்மபையன் பூமி உருண்டை என்று படிக்கிருன். அது கிறிஸ்தவப் படிப்பில்லியோ! என்று பதில் சொல்வான். மேலும் அவனைப் பார்த்து, டெலிபோன், தந்தி, ரயில் ஒடுவது எப்படி என்றெல்லாம் கேட்டால் அவைப்பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது. என்பான். இவைகள் தற்கால வாழ்வுக்கு வேண்டியவை தெரிந்து நன்கு புரிந்து கொள்ள வேண்டியவை ஆனுல் தெரியுமா என்று கேட்டால் தெரியாது என்பான்; இவ்வாறு தெரிந்து கொள்ள வேண்டியவை அவனுக்குத் தெரியாது ஆனுல் அவனைப்பார்த்து உலகம் எத்தனை என்ருலோ, பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம், நரகலோகம் என்று சொல்வான்; நம்ம ராஜா யார் என்ருல் தெரியாது; எங்கோ சீமையில் இருக்கிருராம் என்பான் ஆனுல் தேவலோக ராஜா யார் என்ருல் உடனே தேவேந்திரன் என்றும், எமனுக்கு என்ன வாகனம் என்ருல், எருமைக்கடா என்றும், பூலோகமா இது பரலோகமய்யா! சுவர்க்கலோகந்தான் சுகலோகம், நரகலோகமா அப்பா! பயங்கரம் என்னும் பதில் மிக வேகமாகக் கிடைக்கும். இப்படிப்பட்ட புரிந்து கொள்ளமுடியாத, அறிந்து கொள்ள முடியாத, அவசியமற்ற விஷயங்கள் அவனுக்கு அனுபவித்தவன்போல மனப்பாடம், ஆனுல் அறிவு வளர்ச்சிக்கும்,

அன்றாட வாழ்க்கைக்கும் வேண்டியவற்றில் அவன் அரைக் கால் பங்கு கூட அறிந்திருக்க மாட்டான், ஏன் இவ்விதம் நகரிலே ஒரு நீதியும். நாட்டில் ஒரு நீதியும் வழங்கப்படு கிறது? இந்த நீதி வருணாசிரம கருமம் வானூர வோங்கி வளம்பெற்ற காலத்தில் நல்ல தீர்ப்பாக இருந்திருக்கலாம்; இன்று இருக்க முடியுமா? மேலும், நீதி என்றும் நிலைபெற்ற தா? நீதி நிலைமைக்குத் தக்கபடி மாறும்; நிகண்டுக்குக் கட்டுப்பட்டு நிற்காது. சான்றாக ரயிலுக்குத் தாமதமாகச் செல்பவன் ரயில் தவறினால் ரயில் சீக்கிரம் போய் விட்ட தென்று குறைகூறுகிறான். அது அவன் நிலைமைக்கேற்ற நீதி. ஆனால் அதே ரயிலில் அரை மணி முன்னதாகச் சென்று அமர்ந்திருப்பவன் அதைக் கட்டை வண்டிக்கும் கூட்ஸ் வண்டிக்கும் ஒப்பிடுகிறான். இது இவனது நிலைமைக் கேற்ற நீதி.

கண்ணகி காலத்தில் கோவலன் நடத்தை நீதியாக இருந்திருக்கலாம்; ஆனால் அது இக்காலத்திற்குச் செல் லாது. இக்காலக் கண்ணகி கோவலனை சும்மா விடமாட் டாள், அல்லது அவன் தாய் தகப்பனும் சும்மா விடார். அதுபோலத்தான் ராமன்—சீதை நளாயனி, நளன்—தமயந்தி முதலியோர் காலத்து நீதி அவ்வக்காலத்திற் கேற்றதாக இருந்தது. அது இப்போது செல்லாது. நீதியின் சக்கரம் சதா உருண்டுகொண்டே இருக்கும் அதனை நாம் நம் அறிவைக்கொண்டு நம் நிலைமைக்கேற்பத் திருப்ப வேண்டும்.

## காலத்திற்கும் கருத்திற்கும் ஒத்தேதான் கடவுள் நீதி இருக்கவேண்டும்.

கடவுளைப்பற்றிய நீதியும் காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றபடிதான் இருக்கவேண்டும். முற்காலத்திலேயே கடவுளைப்பற்றிய நீதி அவரவர் நிலைமைக்கு ஏற்றபடிதான்

இருந்திருக்கிறது. சான்ருக; சைவம் தழைத்தோங்கத் தொண்டாற்ற வந்த சமயாச்சாரியார்களுள் ஒருவரான திருநாவுக்கரசரால் உருவம், நிறம் அற்றவனுகக் (இத்திறத் தான் இவ்வண்ணத்தான் எடுத்தியம்ப வொண்ணுதே) காணப்படும் கடவுளை, மற்ருெரு சமயாச்சாரியாராகிய சம்மந்தர், கோடுடைய செவியனுக்கி, விடையேற்றி தூவெண்மதி சூட்டி, காடுடைய கடலைப்பொடிபூசி, உள்ளங் கவர் கள்வனுக்கிக் காண்கிருர். இதில் எவருடைய தீர்ப்பு நல்ல தீர்ப்பு? இதில் எவருடைய தீர்ப்பைப் பின் பற்றுவது, கூறுங்கள்!

துறவறத்தைப் பற்றித் தாயுமானவர் கூறும்போது, "கனியோ, காயோ, உதிர்சரகோ, கந்தமூலமோ, அதுவும் இன்றேல் நீரே அருந்தி உயிர் வாழ்!" என்று கூறுகிருர். அவர் துறவியாயினும் முதலில் நினைப்பது நம்மைப் போல வே கனிவான், இதிலென்ன துறந்த தன்மை உளது துறவறத்தைப்பற்றி பட்டினத்தடிகள், "இருக்குமிடந்தேடி என் பசிக்கு உருக்கமுடன் உணவு தந்தால் உண்பேன் இன்றேல் என் தேகம் இளைத்தாலும் ஏகேன், சிவன் மேல் ஆணை!" என்று மடாதிபதி மனப்பான்மையோடு பாடுகிருர், இதில் எந்தத் துறவறம் துறந்த நிலையில் உள்ளது?

**எல்லாம் வல்ல எம்பிரானுக்கு கூத்திகளேன்**
**குடும்பங்களேன்.**

நமக்குக் கடவுளுணர்ச்சி வேண்டும்; அது மாற்றி அமைக்கப்படல் வேண்டும்; கயமை—கண்மூடித்தனமற்ற தாக இருக்கவேண்டும். எல்லாம் வல்ல எம்பெருமானுக்குக் கோயில் ஏன்? குளம் ஏன்? குடும்பம் ஏன்? கூத்திகள் ஏன்? காணி ஏன்? பூமி ஏன்? மதம் ஏன்? சாஸ்திர சம்பிரதாயச்

75924

சடங்குகள் ஏன்? என்று நான் கேட்கிறேன். இவைகளால் எவ்வளவு பணம் பாழ்! பகுத்தறிவு பாழ்! கருத்துப் பாழ்!

பொருளாதாரத் துறையில் கல்வி கற்கும் மாணவர்களே! உங்களுக்கு ஒரு வேண்டுகோள் உங்கள் வாழ்க்கையில் என்றுவது ஒரு நாள் சிந்தியுங்கள்! இந்தக் கோயில், மதம், சாஸ்திரம், சம்பிரதாயச் சடங்குகளின் பேரால் நாட்டு மக்கள் செய்யும் செலவு எவ்வளவு என்று; அது நாட்டின் சமுதாயத்திற்கு எவ்வித நலனுமின்றி எவ்விதம் நாசமாக்கப்படுகிறது என்று கோயில்களின் பேரால் எத்தனைக் கோடி பணம் முடங்கிக் கிடக்கிறது என்று அதைக்கொண்டு எத்தனை எத்தனை பிர்லாத திட்டம் போட்டு நிறைவேற்றலாமா என்று சிந்தியுங்கள்! சிந்தித்து அவை சரியா என்று ஒரு நல்ல தீர்ப்பு அளியுங்கள்!

## ஆண்டவனுக்கு ஆயிரம் வேலி!

நாட்டிலே நஞ்சை அதிகம். அதனுல் ஆண்டவனுக்கு ஆயிரம் வேலி நிலம். சரி; ஆனுல் ஆண்டவனுக்காக அதே நிலத்தைப் பண்படுத்திப் பாடுபடும் பண்ணையாளுக்கு அந்தப் பரமசிவன் பாதிவயிற்றுக்கஞ்சி அளிக்கிருனு? இல்லை ஏன்? தங்கம் விளையும் நாடு எந்தம் தமிழ் நாடு ஆகவே தில்லைதாண்டவமூர்த்திக்குத் தங்க ஓடு போட்ட சன்னிதானம். சரி; ஆனுல் பாறை வெடிப்புக்கும் மணலின் சரிவுக்கும் அஞ்சாது பூமியிலிருந்து தங்கம் வெட்டி எடுப்பவன் தொழிலாளி. அவன் அறிவானு தங்க நகை? அணிய வசதியுண்டா அவனுக்கு? அல்லது அரைவயிற்றுக் கஞ்சிக்காவது அலைச்சல் இல்லாமல் இருக்கிறதா? அதுதான் இல்லை அவன் தன் குடும்பத்தை அரை வயிருவது நிரப்ப

என்றும் அலைந்தாக வேண்டும். தான் எடுக்கும் தங்கத்தின் தரமும் அவனுக்குத் தெரியாது; மதிப்பை அவன் மனத்தாலும் அறியான். அவன்பாடுபடுவதெல்லாம் சாண்வயிற்றின் அறைவயிற்றுக் கஞ்சிக்குத்தான். அவன் அறிந்ததெல்லாம் கந்தல் ஆடை; பொத்தல் குடிசை, இருண்ட வீடு, சுவையற்ற கஞ்சி, ஒட்டிய வயிறு, குழிவிழுந்த கன்னம் முதலியவைகளே. நாட்டிலே ஏன் இந்த வேற்றுமை? ஏன் இந்த நிலைமை?

சமீபத்திலே நான் ஒரு பேசும்படக்காட்சியை பார்த்தேன். அதிலே ஆங்கில நாட்டு பெவின் திட்டத்திலே ஒரு பகுதியைச் செய்திப்படமாகக் காண்பித்தனர். அதில் ஒரு கையற்றவனுக்கு இரும்பிலே கை செய்து வைத்து மற்றொரு கையில் அரம் கொடுத்து அசைத்துத் தொழிற்சாலைகளிலே தொழில் செய்யக் கற்பிக்கின்றனர்; காலில்லாதவனுக்குச் செயற்கைக் கால்களை ஈடு செய்கின்றனர் தம் அறிவை பயன் படுத்தி.

ஆனால் நம் நாட்டிலே! ஒரு மதவாதி ஹோட்டலுக்குள் சென்று வயிறு புடைக்கத் தின்றுவிட்டு வாயில் வெற்றிலை மென்றுகொண்டே வெளியே வருவார். வெளியே கையற்ற, காலற்ற, கண்ணற்ற பிச்சைக்காரர்கள் அவரிடம் ஒரு காலணா வேண்டுவர். அதற்காக அவரைச் சாமி என்பர்; மஹாராஜா நீ நல்லாயிருக்கணும் என்றும் புகழ்மாலை பாடுவர். ஆனால் அவர்கள் நிலைகண்டு அவர் இரங்கார்; தாங்கள் செய்த கருமத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள் என்று அவர் கருதிக்கொண்டு வறிதே செல்வார்; அவர்கள் அங்கம் பழுதுபட்டிருப்பதைப்பற்றி கவலைப்படமாட்டார். ஆனால்

அதே மதவாதிகந்தகோட்டத்திலே உள்ள குதிரை வாக ணத்தின் வாலோ, காளை மாட்டின் வாலோ, மயில் வாகணத் தின் தோகையோ ஒடிந்துவிட்டதாக தெரிந்தால் அதற் காக மிக்க கவலைப்படுவார்; மனம் பதை பதைப்பார்; உடனே ஒரு திருவோலை ஏந்திக்கொண்டு வீடு வீடாக, ஊர் ஊராக, நகரம் நகரமாகவேனும் சுற்றித் திரிந்து மக்களின் மடமை யைத் துணைக்கொண்டு வாகனத்தைப் புதுப்பிக்கும் திருப் பணிக்காகத் திரவியம் சேர்த்து ஒடிந்த பாகத்தை ஈடு செய்வார். வாகனத்தின் வால் உடைந்தது என்று சொல் வது பிழை; ஆனால் உடைக்கப்பட்டுவிட்டது என்பது தான் உண்மை உரை; உறுதியுங் கூட. இத்தகைய குறைமதி யாளர்கள் மக்கள் கைகாலற்றிருப்பதைக்கண்டு கவலையுறார்; அவர் தம் விதியை இவர் தம் மதியால் மாற்ற முன்வரார். ஆனால் எல்லாம் வல்ல எம்பெருமானின் எருது வாகனம் பழுதுபட்டால் அதைப் புனருத்தாரணம் செய்ய புறப்படு வார் புளகாங்கிதத்தோடு. என்னே இவர் தம் இழி நிலை! இத்தகைய மக்கட் சமுதாயம் முற்போக்கடையுமா? அல் லது பெவின் திட்டப்படி கைகாலற்றோரைக் கருத்துடன் கவனித்து ஆவன செய்யும் நாடு முன்னேறுமா? 'நல்ல தீர்ப்பு' அளியுங்கள் தோழர்களே! மக்களை மக்களாகக் கருதி மகேஸ்வரனுக்கு மண்டபங்கள் கட்டும் மக்கள், மட மையை விட்டு என்றுவது மதியைப் பெறுவார்களா? நம் உழைப்பு, ஊதியம், அறிவு, ஆற்றல், சிந்தனை, சிறப்பு, கருத்து, கல்வி யாவும் இனத்திற்கு இம்மியும் பயன் தராத இழிமுறையிலேயே சென்றால், இத்தாலி நாட்டைக்கண்டு டாண்டன் என்னும் கவி 'எழிலுள்ள நாடே! எடுத்தாள் வோர் நாடானையே!' என்று இரங்கியது போல் நாமும் நாட்டைக்கண்டு இரங்கத்தான் வேண்டும்.

### எவர் கூற்றை நம்பி இலக்கியம் படிப்பது?

மற்றும் நமது இலக்கியங்கள் நமக்குத் தேவையா? அவற்ருல் மதி பெருகுமா? மடமை மறையுமா? என்று ஒரு நல்ல தீர்ப்புக்கு வரவேண்டும்.

புராண இதிகாசங்களைப் பாடும் இலக்கியங்களின் அவசியத்தைப்பற்றிக் கூறி, அவற்றைப் படிக்க வேண்டும் என்று பறை சாற்றினேர் யாவரும் வெவ்வேறு காரணங்கள் கூறினர். அதில் எதை நம்புவது? எதைப்பின்பற்றுவது? அதுதான் முடிவா? முதலாவதாக, "அவைகள் புண்ணிய சரித்திரங்கள். அதனுல் அவற்றை அறியவேண்டும்" என்றனர். இது திரு. மறைமலையடிகள் காலமாகும் பின்னர், "அவற்றிற் உள்ள பாத்திரங்கள் சற்பாத்திரங்கள்; ஆகவே அவற்றைப் படிக்கவேண்டும்" என்றனர். இது திரு. வி. கலியாணசுந்தரனுர் காலம். அடுத்தபடியாக, "அவ்விலக்கியங்களிலே காவிய ரசம், கலை உணர்வு, பண்பாடுகள் சொட்டுகின்றன. அதனுல் அவற்றைப் படிக்கவேண்டும்" என்றனர். இது திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் காலமாகும். இதனை இன்னும் சிலர் வேறு மொழியிலே கூறுவர். அதாவது, "அவைகளிலேயுள்ள பாவத்திற்காகப் படியுங்கள்" என்று இது டி. கே. சிதம்பரநாத முதலியார் காலம். இவையாவற்றையும் கடந்து 'மேலே கூறப்பட்டவைகட்காகப் படிக்காவிட்டாலும் அவைகளிலுள்ள நீதிகட்காகப் படியுங்கள்' என்கின்றனர். இது திரு. சோமசுந்தர பாரதியார் போன்ற புராணமும் பகுத்தறிவும் கலந்தோர் காலமாகும்.

### பத்துத்தலை இராவணன்—தத்துவார்த்தம் பலிக்குமா?

புண்ணிய சரிதம், சற்பாத்திரங்கள் நிறைந்த சரிதம், காவியரசம், கலையுணர்வு, பண்பாடு பொருந்திய காவியம், பாவமுள்ள காவியம் என்ற நிலைகளெல்லாம் கடந்து நீதிக்

காகவாவது இவைகள் நிலைத்திருக்கவேண்டும் என்ற நிலை மைக்கு வந்துள்ளது இன்றைய இலக்கியங்களுடைய நிலை மற்றும் சில பகுத்தறிவாளர் கேட்கும்போது மட்டும் இவர்கள் சில தத்துவார்த்தங்கள் கூறித் தகிடுதத்தம் செய்கின்றனர். இவர்கள் கூறும் தத்துவார்த்தங்கள் நாட்டு மக்களிடைப் பரவியுளதா என்றால், இல்லை என்று தான் சொல்ல வேண்டும். அப்படியிருக்க, இவர்கள் கூறும் தத்துவங்களால் யாருக்கு என்னபயன்? சான்றாக, புலவர்கள், "இராவணனுக்குப் பத்துத் தலைகள் இல்லை. அது கவியின் கற்பனைத் திறன். இராவணன் பத்துப்பேர் ஆற்றலை உடையவன். பத்துவித குணமுள்ளவன். ஆகவே அதனைப் பத்து முகங்கள் என்று பாடியுள்ளார். அதிலுள்ள பண்பாடு. பாவம்தான் என்னே" என்று இறும்பூதெய்துவர். நான் கேட்கிறேன் உங்களை, நீங்கள் கிராமத்திற்குச் சென்று கிராமத்தானிடம் "இராவணனுக்குப் பத்து தலைகள் இல்லை. அது வெறும் கற்பனை. கருத்துக்குக் களிப்பூட்ட கையாளப்பட்ட கைத்திறன்! நாங்கள் இராமாயணத்தை நன்றாகப் படித்தோம்; பட்டம் பெற்றுள்ளோம்" என்று கூறுவீர்களா? பத்துத் தலைகள் என்பது பிழை என்பது குறித்துப் பேசப் புகுந்த உங்களால் அவர்கள் கல்லடிகட்குப் 'பத்துப்'போட முடியுமா என்றுதான் ஏங்குகின்றேன்! ஏன்? எதனால்? அவன் உங்கள் பேச்சை நம்பாததனால். ஏன் நம்பமாட்டான்? அவன் ஏட்டிலே படிப்பது பத்துத் தலைகள் என்று; புராணப் பிரசங்கத்திலே கேட்பது இராவணனுக்கு பத்துத்தலைகள் என்று; நாடகத்திலே, சினிமாவிலே காண்பது பத்துத்தலைகள் என்று, ஆகவே உங்கள் தத்துவார்த்தத்தால் என்ன பயன் என்று கேட்கிறேன். எனவே இவை மாற்றப்பட வேண்டுமென்றால் குற்றமா?

"பார்ப்பானை ஐய்யரென்ற காலம் போச்சு"

"பார்ப்பானை அய்யரென்னும் காலமும் போச்சே, வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே" என்று காலத்திற்கேற்ற கருத்துடன் பாடிச் சென்ருர் பாரதியார் அதைக்கண்டு உங்கட்கு உண்மை தெரியவில்லையா? நம்முடைய இலக்கியங்களிலே உள்ள நீதி நமக்குத் தகுமா? நமக்குத் தேவையா? என்று ஒரு நல்ல தீர்ப்பு அளியுங்கள். எடுத்துக்காட்டாக கம்பராமாயணத்திலே உள்ள நீதியைக் காண்மின், இராமனுக்கு முடிசூட்டு விழா நிச்சயிக்கப்பட்டது. தசரதன் தன் மந்திரி சுமந்திரனை அழைத்து இராமனுக்கு அரச நீதிகளை அறிவுறுத்துமாறு ஆணையிட்டான். சுமந்திரன் இராமனுக்குக் கூறுகிருன்; "அந்தணர் ஏவுகின்ற முறைப்படி நட என்று இது இந்தக் காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றதா என்று சிந்தியுங்கள். இந்த தீர்ப்பு "நல்ல தீர்ப்பா?"

அந்தணரென்போர் யாவர்?

இங்கு நம்புலவர் குழாங்கள் ஒன்று கூற முன்வருவர் மிக ஆவலுடன், அதாவது கம்பன் கண்ட அந்தணர் பார்ப்பனக்குலத்தைக் குறிப்பதல்ல ஆனல் "அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக உள்ள அறிவாளரையே அண்டும் என்பர். அந்தணர் என்னும் சொல் இங்கு அறிவாளரைக் குறிப்பதன்று! குலத்தை குறித்ததேயாகும் என்றே துணிதல் வேண்டும். எடுத்துக்காட்டாக வேண்டுமானல் சுந்தரர் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதிக்கு வாருங்கள். அதிலே, 'தில்லைவாழ் (அந்தணர்) தம் அடியார்க்கும் அடியேன்' என்ற அடியிலே அந்த

ணர் என்பது நம் புலவர் பெருமக்கள் புகழும் புனிதரையே குறிக்கிறதா என்று பாருங்கள். இல்லை! அது குலத்தைத் தான் குறிக்கிறது என்பது முக்காலும் உண்மை. அவ்விதம் குலத்தை குறிக்கவில்லை என்ருல், அறிவாளராகிய தில்லை வால் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று கூறிய அதே வாயால் அடுத்த அடியிலேயே 'திருநீலகண்டக்(குயவ ஞர்க்கும்) அடியேன், என்று கூறி குயவனுர்க்கு என்ற குலத்தைக் குறிக்கும் சொல்லை வைத்திருக்க மாட்டார் ஏன்? அந்தணர் என்பது செந்தண்மை பூண்டொழுகும் செம்மல் களேயே குறிப்பதாஞல், திருநீலகண்டரையும் அந்தணர் என்று குறித்திருத்தல் வேண்டும். அவ்விதம் குறிக்காதது ஏன்? அவர் அந்தணர் என்று அழைக்கப்பட அவ்வளவு அருகதையற்றவரா? சிவநேசச்செல்வர் அல்லவா? அம்மை யப்பனின் அருள் திருவிளையாடல் அவரை அண்டவில்லையா? இல்லை என்று எவரும் மறந்தும் மறுக்க முடியாது. எனவே இங்கு அந்தணர் என்பது குலத்தைக் குறிக்கும் சொல்லே என்று கொள்வதே முறை.

நிற்க சுமந்திரன் இராமனிடம் 'அந்தணர் ஏவுகின்ற முறைப்படி நட; ஏன் எனில், விதியும் அவர் ஏவ நிற்கும். அவரால் அரசை ஆக்கவும் அழிக்கவும் முடியும்' என்று கூறுகிருன். இது நல்ல நீதியா? நடக்குமா? நடக்க விடலாமா? என்று சிந்தியுங்கள் எதிர்கால நீதிபதிகளே!

**கம்பன் காவியத்தில் காண்பது தமிழ்நாடு தாஞ?**

பிறிதொரு புலவர், கம்பன் காவியத்திலே தமிழ்நாட் டைக் கண்டான்' என்று கம்பன்பால் மாருத காதல் மிக கொள்கின்ருர் ஆஞல் தமிழ் நாட்டிலே கம்பன் கண்ட காட்சிகளிருந்தனவா? பாருங்கள்! கம்பன் காவியத்திலே

மாதர் வர்ணனை மிக மோசம் மனத்தாலும் நினைக்கொணுத மாசுடையது. மிதிலை அயோத்தி முதலிய நகரங்களிலே மாதர்கள் மது குடித்து தம் நிலை மறந்து ஆடிக்கொண்டிருந்தனர்; பெண்கள் பந்தயம் வைத்துச் சூதாடினர். பந்தயத்தில் தம்தம் காதணி, தையணி முதலிய யாவற்றையும் தோற்றபின் தம்தம் மேலாடைகளையும் பணயம் வைத்து ஆடுகின்றனராம்! இது தானு கம்பன் கண்ட தமிழ் நாட்டு மகளிர் மாண்பு? இத்தகைய இழி செயல்கள் தமிழ்நாட்டிலே இருந்தனவா? இருந்தது என்று இயம்பப் பண்டை ஏட்டிலே இடம் உண்டா? அல்லது இத்தகைய தமிழ் நாடு நமக்கு வேண்டுமா? வேண்டும் என்று எவரும் விழையார் என்பது திண்ணம்.

## பக்திப்பாடலா? கொக்கோக வைபவமா?

மற்றும் அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ் மகா மோசம்; மற்றெங்கும் காணமுடியாத காமரசக் களஞ்சியம் எல்லாம் பாரிஸ் நிர்வாணப் படங்களைப் பாடும் பாசுரங் களாகவே பரிணமிக்கின்றன. சான்ருக 'அவருக்கு மங்கையர் கழலடி வருடி கருத்தறிந்த பின் அரைதனிலுடைதனை அவிழ்த்து ஆங்குள்ள அரசிலை தடவி' எனப்போகிறது இவைகளை வேண்டாம் என விழைவோர் ஏன் இவைகளை விரித்துப் பாடவேண்டும்? இவைகள் பக்திப் பாடல்களா கொக்கோக வைபவம் என்று கூறினுல் மிகப் பொருத்தமாக இருக்கும். அதற்குத் தனித்தனி இலக்கியங்கள் இருக்கவேண்டும்.

நமக்குக் காமரசம் கலவாத, மதம் கலவாத, மதியை வளர்க்கும் இலக்கியங்கள் தேவை. காலத்துக்கும் கருத்துக்கும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தொடர்புள்ள ஏடுகள் தேவை.

'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்' என்ற மனப் பான்மை தேவை. அருளை மட்டும் கேட்கும் ஆண்டவன் தேவை. கோயில், குருக்கள்; குடும்பம், கூத்தி, மானியம், அதிர்வெடி கேட்கும் ஆண்டவன் வேண்டாம் நமக்கு. கோயிலுக்கு வெளியே வறுமை கொடுமை இல்லாமை, கோயிலிலே மலைபோன்ற செல்வம், இன்பம் என்றிருக்கும் நிலையற்ற நிலைமை வேண்டாம், கடவுளுக்குப் பேசும் சக்தி யிருந்தால் அவர் உங்களைப் பார்த்துக் கேட்பார். 'அடே அறிவற்றவனே! நான் இந்த அண்டசராசரங்களைப் படைத் தேன், நிலத்தைப் படைத்தேன், நெல்லைப் படைத்தேன், நீரைப் படைத்தேன், அதிலே முத்தைப் படைத்தேன், அறி வைப் படைத்தேன், எதையும் எண்ணிச் செய்ய, பகுத்துச் செய்ய உனக்குப் பகுத்தறிவைப் படைத்தேன். ஆனால் இவற்றிற்குப் பதில்லாக நீ எனக்கு அரை வீசை பொங்கல் படைக்கிருயா? நாட்டிலே உள்ள நலிந்தோரைப் பார் என்று தான் கூறுவார், அவர் அறிவுள்ள கடவுளானால்.

**இறைவனை நிந்திக்கும் இரட்டைப் புலவர் நாத்திகரா?**

கடவுளை நாங்கள்தான் குறைகூறுவதாக நினைக்க வேண்டாம். நெடுங் காலத்திற்கு முன்னரே உங்கள் இரட் டைப் புலவர்கள் கூறியுள்ளதை நினைவிற்குக் கொண்டு வாருங்கள். அவர்களில் ஒருவர் பாடுகிருர் பசியால் மிக நொந்து, 'தேங்கு புகழாங்கூர் சிவனேயல்லாளியப்பா தாங் கள் பசித்திருக்க ஞாயமோ' என்று. நாத்திகம் பேசி நாத் தழும்பேறிய நாங்கள் பசித்திருக்கலாம். ஆனால் சிவநேசர் களான இரட்டைப் புலவர்கள் பசித்திருக்கலாமா?

அதற்குச் சிவனே விடையளிப்பது போன்று மற்ருெரு புலவர் பாடுகிருர்.

—போங்காணும்

கூறுசங்கு தோல்முரசு நொட்டோசையல்லாமற்
சோறுகண்ட மூளியார் சொல்—என்று!

மற்றும் அதே இரட்டையர்கள் வறுமையால் வாடி வருந்தின போது பாடுகின்றனர்.

கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்!
கூட்டோட எங்கே குடிபோனீர்—என்று.

அதுவும் கூட்டோடே குடும்பத்தோடே எங்கே போனீர்கள் என்று கேட்கின்றனர் இதற்குத் தெய்வத்தின் விடையாக மற்றவர் பாடுகிறுர்.

—பாட்டாய் கேள்

செல்காலமெல்லாஞ் செலுத்திஞேம் அல்காலங்
கல்லாஞேஞ் செம்பாஞேங்காண்—என்று.

இது எத்துணை உண்மையென்று சிந்தியுங்கள்.

## ஆகாய விமானத்திற்கும் அதர்வண வேதத்திற்கும் முடிச்சு

மற்றும் சிலர், 'நம் நாட்டில் எல்லாம் உளது. நமது அதர்வண வேதத்தில் இருந்துதான் ஜெர்மானியன் பறக்கும் குண்டு, ஆகாய விமானம் முதலியவற்றை தெரிந்து கொண்டான். நம் நாட்டில் இல்லாத விமானமா? என்ன என்ன அஸ்திரங்கள் இருந்தன அக்கினியாஸ்திரம், வாயுவாஸ்திரம், வருணுஸ்திரம் என்று! இன்று என்ன புதுமையாய் வந்துவிட்டது' என்று நாட்டைப்பற்றி பெருமையோடு பேசுகின்றனர். ஆனுல் அந்தப் பழம் பெருமை எங்கே இப்போது? ஏன் அன்னியனுக்கு நாட்டைவிட்டு ஆந்தைபோல விழிப்பது? இதனுல் உண்மையிலேயே நமக்குப் பெருமையா? இல்லை சிறுமைதான்; சுயமரியாதைக்குப் பங்கம் தான். இது அன்னியனுடன் கொஞ்சிக் குலாவும் அழகிய அணங்கைக் கண்டு அருகில் இருப்பவரிடம்,'இவள் யாரோ என்று எண்ணுதேயும்; இவள் நம்முடைய மனைவியாக இருந்தவள் தான்! இப்போது இவளை அவன் ஏமாற்றி அழைத்துச் சென்றுவிட்டான். ஆனுலும் என்ன? என்னிடம் இருந்தவள் தானே! இதனுல் எனக்கு எவ்வளவு பெருமை?' என்று கூறுவதற்குச் சமமாகும் என்பது திண்ணம்.

**இனக்கோலைக்குக் கலைக்கோலைதான் மருந்து.**

மக்கள் சமுதாயத்தைச் சீர்திருத்தப் பலப்பல அறிஞர்கள் அரிய பரிய வேலை செய்தனர். ஆனால் அவர்கள் யாவரும் தோற்றனர், அடிப்படையை ஆராயாததால். எனவே இளந்தோழர்களே! வருங்கால உலகம் உங்களைத்தான் நம்பியிருக்கிறது. ஆகவே நீங்கள் உங்களுக்கு அளித்துக் கொள்ளும் 'நல்ல தீர்ப்பால்' இனத்தை எதிர்காலத்திலே எழுச்சியுறச் செய்வீர்களாக! பெரியோர்களை நம்பின காலம் போய்விட்டது. புதுமை, இளைஞர்களால் தான நிகழவேண்டும்; நிகழ முடியும். சீனாவிலே சன்யாட்சென், இளைஞர்கள் உதவியால் தான் பழைய சீனாவை மடித்துப் புதிய சீனாவை உண்டாக்கினார். ஆண்களின் ஜடையைக் கத்தரித்தார். ஒரே ஆண்டலவை வடடுப்படிச் செய்தார்.

'ஐரோப்பாவின் நோயாளியாகக்' கருதப்பட்ட துருக்கி இன்று தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் கமால்பாஷா இளைஞர்கள் உதவியை பேற்றதாலே தான்.

தோழர்களே! நீங்கள் 'நல்ல தீர்ப்பு' அளியுங்கள், இன்று மக்கள் சமுதாயத்தை மாற்றவல்ல தீர்ப்பு, மனிதனை மனிதனாக வாழவைக்கும் தீர்ப்பு, விதியை விரட்டும் தீர்ப்பு அளியுங்கள் அதை அமுலுக்குக் கொண்டு வாருங்கள்! அதற்குத் தடையாக கடவுளே வரினும் கலங்காதீர்! சிவனே வரினும் சிதறாதீர்! மதமே வரினும் மயங்காதீர்! கலை கலை என்று இனக்கொலை செய்தால் கலைக்கொலை செய்யுங்கள்! அடிமை வாழ்வை அறுத்தெறியுங்கள்! மானமே பெரிதென மதியுங்கள்! சிந்தித்து நல்ல தீர்ப்பு கூறுங்கள்! செயலில் காட்டுங்கள்!!

❋

# சூழ் நிலை

முத்தமிழ் விழா! முத்தமிழ் விழாவின் முதல் நாள் இன்று! முக்கிய நிகழ்ச்சி, முத்தமிழின் வளர்ச்சியைக் குறித்திடும் நிகழ்ச்சி!

இந்த விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பை எனக்களித்த உங்களுக்கு, தொண்டை மண்டலம் பள்ளி மாணவருக்கும், ஆசிரியருக்கும், அதன் நிர்வாகி கட்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கசாலை வீதியிலே, தடியடி தர்பாரின் இடையிலே, தமிழுக்காகப் போராடி, இந்திப் போர்க்களத்தில் புகுந்து, இந்தி எதிர்ப்புப் போர் நடத்தி, "இந்திபடியாதீர் மாணவரே, கட்டாய பாடமாக இந்தி போதனை கூடாது, அது தமிழுக்குக் கேடு, தமிழருக்கு இடர்" என்று வீதியிலே, உங்கள் பள்ளி வாயிலில், தமிழ் காத்திடத் துணிந்த தன்மானத் தொண்டர், தமிழ்த் தொண்டர்கள் அணிவகுத்து நின்ற காட்சி, என் மனக் கண்முன் நின்று, அதிலே மாணவர் காட்டிய ஆர்வத்தையும், அடக்கத்தையும், துணிவையும் தோழமையையும் எண்ணியெண்ணி மீண்டும் இறும்பூதெய்துகிறேன். அந்தப்பள்ளியில், இன்று முத்தமிழ் விழா! முத்தமிழ் வளர்ச்சி குறித்தபேச்சு! அதிலே எனக்குப் பங்கு கொள்ளும் வாய்ப்பு, பெறற்கரிய வாய்ப்பு, கிடைத்ததைக் குறித்து, உண்மையிலேயே, எனது உள்ளம் பேருவகை பூண்டு, பெருமையும் பூரிப்பு மடைகிறது!

இத்தகைய முத்தமிழ் விழாக்கள், இன்று, தனித்திரு விழாபோல, நாடெங்கும் நடைபெறுகின்றன!

மறுமலர்ச்சி, புத்துணர்ச்சி தமிழுணர்ச்சி, தமிழின உணர்ச்சி பெருகியுள்ளது, என்பதன் அறிகுறி, அறிவிப்பு, எடுத்துக் காட்டுகள் இவை, என்பதன்றி, வேறென்ன காரணம், வேறெந்தச் சூழ்நிலையைத் தெரிவிக்கின்றன, இவையெல்லாம்!

தமிழ்; தமிழ்மொழி, தமிழ்ப் பாடம், தமிழ் வகுப்பு, தமிழாசிரியர், தமிழாசிரியர் வகுப்பு என்றால், எனது பள்ளி வாழ்க்கையிலே, எனது மாணவப்பருவத்திலே, மாணவருக்கு ஒரு வேடிக்கை நேரமாக, கேளிக்கைக் கூடமாக, பொழுது போக்கும் விளையாட்டுக் மண்டபமாக எண்ணினர்; எண்ணி நடந்தும் வந்தனர்.

தமிழறிவுபெற்று, தமிழில் புலமை பெற்றவன் என்றால், அவனைப் புகழ்பவர், போற்றிடுபவர், இல்லை, அன்று.

ஆங்கிலம் படித்தால் நல்லது; நன்மதிப்பு, நல்ல படிப்பாளிக்கு அத்தாட்சி, எடுத்துக்காட்டு, நற்சான்று, என்ற நிலை அப்போது!

ஆங்கிலத்தில் பேசினால்தான், எழுதினால்தான் பெருமை, கீர்த்தி, புகழ் என்ற எண்ணம் பெரிதும் வேரூன்றி நிலைத்திருந்த காலம் மாறி நீண்ட நாட்களாகி விடவில்லை, இன்னும்.

தமிழார்வம், தமிழ் படிக்கும் ஆர்வம், தமிழ் கற்றோன் என்றால், தகுதியுடையோனாக மதிக்கப்படும் நிலை, இப்போதுதான், சில ஆண்டுகளாகத்தான், தமிழ் நாட்டில் தோன்றியிருக்கிறது!

தமிழன் தமிழைப் படிக்கத் தொடங்கிவிட்டான், தமிழைப் போற்றத் தலைப்பட்டுவிட்டான்; தமிழருக்குத்

தனிப்பெருமை, தனது மொழிக்கு, தன் தாய் மொழிக்குத் தனது பணியைச் செய்திட முன் வந்துவிட்டான், நாடெங்கும் தமிழ்த் திருநாட்கள், முத்தமிழ் முழக்கங்கள் நடைபெறும் நன்னாளைக் காண்கிறோம், இன்று! இங்கும் நடக்கிறது, முத்தமிழ் விழா, அதிலே, இன்று, இயற்றமிழ்த் திருநாள்!

முத்தமிழை மறந்திருந்த, தமிழனின் தமிழுணர்வைத் தட்டியெழுப்பி, தன்னின மொழியைப் போற்றும் நிலைக்குத் தமிழறிவை, தமிழின் தனிச் சிறப்பை தமிழ் மொழிப் பற்றை உண்டாக்கினர், தமிழனிடம் சில பலர்.

மறைந்த தமிழ்ப் பெரியார், மறைமலை அடிகளாரும், தள்ளாதவயதடைந்தும், தளராது தமிழ்த்தொண்டு செய்து வரும் தமிழ் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனுர் அவர்களும், தமிழ் மொழிப் பற்றை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவர் முதல்வர்கள்,முன்னணிவீரர்கள்.

மறைமலை அடிகளாரின் தமிழ்ப் பற்றும், தனித் தமிழ் உணர்ச்சியும், திரு. வி. க. அவர்களின், தமிழார்வமும், தமிழ்ப் பண்பும், இருவரது தமிழ்த்தொண்டும், தமிழ் வளர்ச்சியில் அவர்களது பேருக்கமும், இடைவிடாத உணர்வும் உழைப்பும் தமிழர் இதயங்களில் இரண்டறக் கலந்துவிட்டன!

தமிழர் சரித்திரத்தில், தமிழ் மொழியின் மறுமலர்ச்சி ஏட்டில், அவர்களது காலம், அவர்களது தமிழ் வாழ்வு என்றும் நிலைத்து நிற்பவை!

இரண்டு தமிழ்ப் பெரியார்கள், தமிழின் மறுமலர்ச்சித் தூதுவர்களின் திரு உருவப் படத் திறப்புவிழா, இங்கே முக்கியப் பகுதி! மகிழ்ச்சி தரும் பகுதியுங்கூட!

தமிழுக்குக் கிடைத்த இரு சுடர்கள், தமிழ்ச் சுடர்கள், இரு திருவிளக்குகள், மறைமலை அடிகளாரும், திரு. வி. க. வும், ஆவார்கள். அவரைப் போற்றும் பேறு, உங்களுக்குக் கிடைத்தது கண்டு, அதிலே கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததையும் நினைத்து மனமிகமகிழ்கிறேன், என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் வழி நின்று, அவர்கள் போற்றிய தமிழை, அவர்கள் பரப்பிய தமிழைக் கற்றுத் தெளிந்து, தமிழர்களாய், தமிழ்ப் பெருமக்களாய், தமிழ் நாட்டை, தனித்திரு நாடாக ஆக்கிடும் பெருமக்களாய் நீங்கள், இன்றைய மாணவர்கள் வாழவேண்டும். இதுவே, இந்த இரு தமிழ்ப் பெரியார்களுக்கு, தமிழ்ச் சுடர்களுக்கு, நாம் காட்டும் கைமாறு!

தமிழ்! முத்தமிழ்! தமிழன் மூன்று கூறுகள், மூன்று வகைகள், மூன்று பிரிவுகள் இயல், இசை, கூத்து!

இயல், இசை, கூத்து! தமிழின் முப்பிரிவுகள்! தமிழின் தனிச் சிறப்பை, தனிப் பண்பை உணர்த்திடும் பரிவுகள்!

முத்தமிழ், முக்கனிகள்! மா, பலா, வாழை என்ற முக்கனி போன்றவை, இயல், இசை, கூத்து தமிழ் மொழிக்கு!

கனிகளிற் சிறந்தவை, முக்கனிகள். மா, பலா, வாழை என்பவை! இயல், இசை, கூத்து என்ற பிரிவுகளைக்கொண்ட மொழி, தமிழ் மொழி, நமது மொழி, சிறந்த மொழி!

மா! மாங்கனி! முக்கனியில் முதற் கனி! முத்தமிழின் முதற் பிரிவு, இயல்!

மாம்பழம்! சில இனிக்கும்; சில புளிக்கும், சில துவர்க்கும், சில எரிப்பும் தரும்.

சில மாங்கனிகள் பார்வைக்கு அழகாக இருக்கும் பருத்துப் பெருத்துமிருக்கும், கடித்தால் புளிக்கும். சில பல நல்ல மணந்தரும், மகிழ்ச்சியுந்தரும், சுவைத்து உண்ண, உண்ண உருசி பெருகிடும் சில பல மாங்கனிகளும் உண்டு.

மாங்கனிகளைப் பொறுக்கி, தேர்ந்தெடுத்துப் புசிக்க வேண்டும். சில உறுதி தரும், உருசியோடு. வேறு சில உண்ண உருசியும், உடலுத் தீங்கும் விளைத்திடும் பண்பு கொண்டதாகவும் விளங்கிடும்.

இதுபோலவே, இயல்! இயற்றமிழும் பல வடிவிலே, பல முறைகளிலே, பலப்பல பண்பு கொண்டது, பயன் தருவதாகவும், பயனற்றதாகவும் பலப்பல விதங்களிலே அமைந்திருக்கின்றது!

புராண இலக்கியம், பொழுது போக்கு இலக்கியம், அறிவை அகலப்படுத்தும் இலக்கியம், அப்பாவியாக்கிடும் இலக்கியம், கற்பனை இலக்கியம், காவியம், கதை, கட்டுரை, ஆராய்ச்சி, முன்னேற்றம், சிந்தனை, சீர்திருத்தம் பற்றிய முற்போக்கு இலக்கியம், மறுமலர்ச்சி இலக்கியம் என்று இயற்றமிழ் எத்தனையோ, சுவையும், சுவையற்றதுமான, பயனும் பயனற்றதுமான பல இலக்கியங்களைக் கொண்டிருக்கிறது.

மாங்கனிகளை, நன்மை பயப்பவை, தீமை தருபவை, உபயோக முள்ளவை, உபயோக மற்றவை என்ற முறையிலே, பிரித்து, பாகுபடுத்தித் தெளிந்து, தேர்ந்து உண்பது போல, இயற்றமிழில் அடங்கிய, இலக்கியங்களையும் ஆய்ந்து தெளிந்து கற்றிட வேண்டும் காலத்திற்கும் கருத்திற்கும் ஒத்த, உபயோகமான இலக்கியங்களையே படிக்க வேண்டும்!

பலா! தடித்த தோலுடன் கையைக் குத்தக்கூடிய முட்களையுடையதாகத் தோன்றுகிறது, பலாப் பழம்!

பார்வைக்கு, வெறுப்பைத் தருகிறது, பலா! சிரமம் பாராது தோலை உரித்து விட்டால், உள்ளே இருப்பது பலாச்சுளை! சுவையான பழச் சுளைகள்!!

மேலே முள், முரட்டுத்தனமான உருவம், முட்களைக் கொண்ட தோல் மூடியிருக்கிறது; ஆனால் உள்ளே உருசியான பழச் சுளைகள். உண்ண உண்ணத் தெவிட்டாத பழச்சுளைகள், உடலுக்கு உறுதியான பழச்சுளைகள்! முள் நீக்கித் தோலை உரித்தெடுத்துப் பெறும் பலாச்சுளையைப் போன்றதுதான், **இசை!**

இசையைத் கற்பது, இசை வல்லுநராவது எளிதல்ல! எல்லோராலும் முடியக் கூடியதுமல்ல!

இசையில் தேர்ந்திட, இராகம் தாளம், ஆலாபனம் இன்னும் எத்தனையோ முறைகளைத் தெரிந்து, புரிந்து கொள்ள வேண்டிய நிலை! இவையெல்லாம், இத்தகைய கட்டு திட்டங்களெல்லாம் முதலில் சுவையைத் தராது, இசைத் தமிழில், எல்லோருக்கும். ஆனால், இசைவாணர்கள் இனிய குரலில், பாடக் கேட்டிடும் பொழுது பரவசமடைகிறோம்! கேட்டுக் கேட்டு இன்புறுகிறோம் இசைத்தமிழை, முள் நீக்கிய பலாச்சுளைபோல்!

**வாழை!** தோலை உரித்ததும் பழத்தைச் சுலபத்தில் உண்ணமுடிகிறது! தோலை உரித்தவுடனே வெகு எளிதிலே பழத்தின் பண்பைப் பெறுகிறோம். அதே போலத்தான் முத்தமிழின் மூன்றாவது பிரிவு, நாடகமென்ற **கூத்து.**

தோல் சற்றுக் கனமாக இருந்தால் உரிப்பதிலே சற்றுத் தயக்கம் பின்னியிருக்கும், தாமதமுமேற்படும்

அதைப்போலவே கூத்து! அரங்கேற்றத்திலும் நடிகர் பொறுக்குதல், பயிற்சிக் காலம், பின்னணி, எல்லாம் முதலில், ஒன்றுசேர்த்து அமையச் சற்றுச் சிரமமாகவே இருக்கும். அமைந்தபின் தோல் உரிக்கப்பட்ட வாழைப்பழந் தான். சுலப வேலை தான், உண்ண, இப்படிப்பட்டதே கூத்து.

தோலைக் கண்ட கண்ட இடத்திலே வீசி எறிந்தால் கால் வழுக்கி விழுந்து காயமேற்படுத்திக் கொள்கிறோம். நாடகமும் அப்படித்தான். இறுதியிலே சற்றுக் கவனப் பிசகாக, குறைவாக நடந்துகொண்டால் தொல்லை நம்மை வட்டமிடும். கவனமாக நடந்து கொண்டால் நாடகத்தின் மூலம் நற்பணி கிடைக்கும்! நாட்டைச் செம்மைப்படுத்தி அறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லலாம்.

முக்கனி, கனிவகைகளில் சிறந்து விளங்குகின்றன! மொழிகளிற் சிறந்து விளங்குகிறது முத்தமிழ்!

இயல்! இயற்றமிழ் இலக்கியங்களாக இன்று நாட்டிலே நடமாடிடும் இலக்கியங்கள் என்னென்ன, இலக்கியங்களில்காணப்படுபவை, எவையெவை! என்ன பயன், அவற்றைக் கற்பதால்?

இலக்கியங்கள் மனிதனது எண்ணங்களை வளர்க்கின்றன! எண்ணங்களை ஏற்படுத்துகின்றன! கருத்துக்களை, பல தரப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிய விளக்கங்களைத் தருகின்றன!

இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது! மனிதனுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது! நன்மை தீமைகளை எடுத்துக் காட்டுகிறது! மனிதனது சிந்தனையைக் கிளறி விடுகிறது!

இலக்கியங்கள், எந்த முறையில் அமைகின்றனவோ, இலக்கியங்கள் எந்த முறையைப் போதிக்கின்றனவோ,

எந்தெந்த ஏற்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றனவோ, அந்தந்த முறைகளிலே, ஏற்பாடுகளிலே மனிதனது எண்ணமும் செல்லும், செல்லுகிறது.

எனவே இலக்கியங்கள். நல்ல முறையில், நல்ல கருத்துக்களைப் போதித்திடும் வழியில், மனிதனது எண்ணங்களைப் பண்படுத்தும் வகையில் அமைக்கப்படவேண்டியது அவசியமாகிறது! முக்கியமுமாகிறது!

இன்று, தமிழ் நாட்டில் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்பட்டு, மக்களால், தமிழ்ப் புலவர் பெருமக்களால் போற்றப்பட்டு வருகின்றன சில பல இலக்கியங்கள்!

இலக்கியங்கள் என்ற வரிசையிலே, இன்று, காணப்படுபவை பெரும்பாலும் மக்களுக்குத் தேவையான, வாழ்க்கைக்கு வேண்டிய கருத்துக்களைத் தருபவைகளாகக் காணப்படவில்லை! எல்லாம், ஒரே கருத்தை, பழமையைப் போதிப்பவைகளாகவே இருக்கின்றன!

என்றோ, யாராலோ, வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் என்ற முறையிலே ஏற்பட்டு, எழுதப்பட்டவைதான் முடிந்த இலக்கியங்கள், அவற்றில் கூறப்படும் கருத்துக்களே நாட்டினர்க்குத் தேவை; அவற்றை, ஏற்கவேண்டும், போற்றவேண்டும், ஏன் என்று கேட்காமல் பின் பற்றிடவும் வேண்டும் என்ற எண்ணம், கொள்கை, கோட்பாடு, நாட்டில் படித்த, புலவர்களிடையேயும் பெரிதும் காணப்படுகிறது!

பழைய இலக்கியங்கள், பழைய காலத்திற் கேற்றவையாக, சிறந்தவையாக இருக்கலாம்! ஆனால், அதே கருத்துக்கள், அந்தக் காலக் கருத்துக்கள், அப்படியே முழுதும், இன்று ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று கூறுவது, திட்டம் வகுப்பது, தீர்மானங்கள் செய்வது தகுதிதானா? தேவைதானா? கூறுங்கள்!

பழைய இலக்கியங்களிலே, காவிய ரசம் ததும்பலாம், நடையழகு நன்ருக இருக்கலாம், அதைத்தீட்டியவர் பெரிய புலவராகவும் இருக்கலாம்! அதற்காக, அவற்றில் காணப் படும் கருத்துக்கள், கதைகள், நீதி போதனைகள் அத்தனை யும் தேவை, தீர்மானமானவை, என்றும் மாற்றமுடியாத வை, மாற்றக் கூடாதவை என்று கூறுவதை எப்படி ஒப்ப முடியும், முழுதும்!

அந்த நூல்களிலே உள்ள காவிய ரசத்தைப் பருகலாம், சுவையோடு! வேண்டாமென்று கூறுவோர் யார்? நடையழ கைப் பாராட்ட வேண்டாமென்று தடுக்க மாட்டானே எந்தப் புல்லனும்?

காவிய ரசம், நடையழகு, இவற்றுடன், நின்றுவிடாது கருத்தழகையும் கவனிக்கவேண்டும் என்று கூருதே, காலத் திற்கேற்ற கருத்தா? களங்கமற்ற கருத்தா, என்று கருத் தூன்றிக் கவனிக்காதே! கேள்விகள் கேட்காதே! கண்மூடிப் படி, பாராயணம் செய், பாராட்டு, பாடமாகக்கொள், அதன் வழி நட, என்று கூறுவதை எப்படி ஒப்பிட முடியும்.

எந்த இலக்கியமானுலும் அதன் கருத்தை, அது தரும் பாடத்தை, போதனையை, நல்லறிவைப் பொறுத்துத்தான் அதன் சிறப்பு, அதனது தேவை, அமையும், அமைந்திட வும் முடியும்!

முற்காலப் புலவர்கள் என்ன, சாமான்யமானவர்களா? அகத்தியன் பரம்பரையில்வந்தவர்கள் அறியாமலாகூறியி ருப்பர்,என்றுஆர்ப்பரிப்பதும், வசிஷ்டர்வாக்கு,வேதவாக்கு, என்று போதனை செய்வதும், நம்பினவருக்குத்தான் மோட் சம், நம்பாதவர்க்கெல்லாம் நரகம் என்று பயமுறுத்தியும், பண்டைய ஏடுகளையே திரும்பத் திரும்ப, வலியுறுத்தி

அவற்றையே கற்று, தமிழர்கள் இலக்கியத் துறையிலே முன்னேறுது, காலத்திற்கேற்ற கருத்தமைந்த இலக்கியங்களை, புதுப்புது இலக்கியங்களை உண்டாக்காது, பழமையில் மூழ்கித் தவிக்கின்றனர்.

பழமை! பழமை என்று எதற்கெடுத்தாலும் பேசுகிறார்கள்! பழைய புராணம், பழைய காலம், பழைய பாடல், பழைய முறை, பழைய கருத்து, பழயமொழி என்றெல்லாம் கூறி, எண்ணத்தைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றனர்.

பழமை, பழைய ஏடுகள் பழைய கருத்துக்கள், பண்டை இலக்கியங்கள் தான் முடிந்தவை, சிறந்தவை என்ற நிலை மாறி புதிய இலக்கியங்கள் தோன்றவேண்டும், எழுதப்பட வேண்டும், இன்று!

நாகரீக சாதனங்கள் பலவும் தோன்றி, உலகம் வேகமாக முன்னேறிக்கொண்டே போகும் இந்நாளில், நாம் புதுப்புது கருத்துக்களை, எண்ணங்களை, ஏற்பாடுகளை, வாழ்க்கை முறைகளை, நாகரீகச் சாதனங்களைத் தெரிந்து கொள்ள, புதிய இலக்கியங்கள் உண்டாக்கப்படவேண்டும், என்று கூறுவது கூடாதா, தேவையற்றதா, பழமைக்கு விரோதமா, எந்த விதத்திலே தவறு? எடுத்துக்காட்டுங்கள்!

மனிதன், மனிதனுக வாழவேண்டும். மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் தேவை! மனிதனது முதற் தேவை, உணவு, உடை, இருப்பிடம் என்ற மூன்றும்.

முதற் தேவையான, முக்கிய தேவையுமான, மூன்று தேவைகளைப் பெற்றுல்தான், தேவையான அளவு பெற்றுல்தான் மனிதன் மனிதனுக வாழமுடியும்.

தேவையற்ற மனிதனுக, திருப்தியுடைய மனிதனுக வாழ, முக்கிய தேவைகளான, முதற் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் என்ற மூன்றையும் பெற்றிடத்தான் மனிதன் வாழ்கிறுன்!

மனித வாழ்வின் முக்கிய இலட்சியம், முதல் இலட்சியம், தனது முதற் தேவைகளைப் பெறுவதுதான், பெற்றுத் திருப்தியாக வாழ்வது தான்!

வாழவேண்டிய மனிதன், தனது வயிற்றை நிரப்பி உடை உடுத்தி, இருக்க இடம் அமைத்து வாழ, இயற்கை வளங்களைப் பண்படுத்தி உபயோகிக்கப் பல வழிகளிலும் தனது அறிவை, ஆற்றலை, சிந்தனையை, செயல் திறமையை, உடலுழைப்பைப் பயன்படுத்துகிறுன்.

காட்டுமிராண்டியாக, காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்து, இலைகளையும் தழைகளையும் உடுத்தி, கிடைத்த கிழங்கையும் கீரைகளையும், வேட்டையாடிய மிருகங்களின் பச்சை இறைச்சியையும் புசித்து வாழ்ந்த நிலையிலிருந்து, மனிதன், மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் அமைந்த அழகு நகரங்களைக் கட்டி, பட்டு, பருத்தி, கம்பளிபோன்ற ஆடைகளை அணிந்து, அரிசி கோதுமை, கம்பு, கேழ்வர்கு முதலிய அறுசுவை ஆகாரங்களைப் புசித்திடும் இன்றைய நாகரிக நிலைமைக்கு வளர்ந்திருக்கிறுன்.

இந்த வளர்ச்சிக்கு, மனிதனிடமுள்ள, மற்ற உயிரினங்களிடமில்லாத பகுத்தறிவு முதற் காரணம், மூலகாரணமுமாகும்.

மனிதன் நாகரிக முதிர்ச்சி பெறப்பெற, இயற்கை வளத்தைப் பல வழிகளிலும் தனக்கு உபயோகமான முறையில் பயன்படுத்திக்கொண்டே வரத்தலைப்பட்டான்.

கண்ட இடங்களிலே திரிந்து, கிடைத்தவற்றை கிடைத்த நேரத்தில் புசித்து, இலை தழைகளை யணிந்து, இருட்டிய நேரத்திலே இருக்கின்ற இடமே வீடெனத் தூங்கி வாழ்ந்த ஆரம்ப மனித வாழ்க்கை, இன்று, நாடு, நகரங்களில், அறுசுவை ஆகார வகைகளோடு அலங்கார ஆடை அணிகள் பூண்டு வாழும் நாகரிக நிலைக்கு உயர்ந்துவிட்டது, படிப்படியாக.

இந்த மாறுதலுக்கு, மனித வாழ்வின் மகத்தான மாறுதலுக்கு, மனிதனிடம் உள்ள அறிவே, பகுத்தறிவே அடிப்படை, ஆதாரம், வழிகாட்டி!

சிந்திக்கத் தொடங்கிய மனிதன், முதல் சிந்தனையாளன், இயற்கை வளத்தை, தனது வாழ்வு வசதியாக அமையும் வகைக்குப் பயன்படுத்தத் தொடங்கியதின் விளைவு, நாகரிக வாழ்வின் ஆரம்பக் கட்டம். முதல் அத்தியாயம்.

உணவைச் சேமித்து வைக்கத் தொடங்கி, மழை, வெயில் இவற்றிலிருந்து பாதுகாப்புடன் வாழ, குகைகளைக் கண்டுபிடித்து, குடிசைகள் கட்டி, வீடுகளை உண்டாக்கி, நாடுகள், நகரங்கள் வரை மனிதன் முன்னேறினான், தனது அறிவைக்கொண்டு.

சிந்திக்கத் தொடங்கிய முதல் சிந்தனையாளன், சுயநலமுள்ளவனாக, தன்னைப்பற்றிய எண்ணத்தை மட்டுமே கொண்டவனாக இருந்துவிட்டிருந்தால், இன்றைய உலகம், நாகரிக உலகம் ஏற்பட்டிருக்க முடியாது!

மனிதன், தான் வாழவேண்டும்; தன்னைப்போலவே, பிறரும் வாழவேண்டும். மனிதர் எல்லோரும் மனிதராகவே வாழ்ந்திடவேண்டும் என்ற மனப்பண்பைக்கொண்டவனாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான், மனித இனம் ஒன்றுபட்டு, நாகரிக வாழ்வு வாழ முடியும்.

நாகரிக வாழ்வு, பலப்பல சாதனங்களை, முன்னேற்ற வழிகளை, முற்போக்குக் கருத்துக்களை, நாளுக்கு நாள் புதிது புதிதாகக் கண்டுபிடித்துக்கொண்டே செல்கிறது; மனிதனது பகுத்தறிவு பண்பட்டுக்கொண்டே வருகிறது. மேன்மேலும் வளர்ந்து, வளப்பட்டுக்கொண்டே போகிறது!

இன்றைய நிலையில் தமிழர்கள் வாழ, மனிதராய் வாழ, மனிதனது முக்கிய தேவைகளான, உணவு, உடை, இருப்பிடம் என்ற முதற் தேவைகளை, தேவையான அளவு பெற்ற திருப்தியான வாழ்க்கையா, வாழ்கிறார்கள்?

ஒருவேளை உணவுக்கும் வழியற்றவர்கள், ஒட்டிய வயிறு படைத்தோர், பசியால் பரிதவித்துக் குழிவிழுந்த கண் படைத்தோர், காதடைத்தோர், உணவின்றி உடல் மெலிந்து, உருமாறி வாடினோர் இல்லையா? உடுக்க உடையின்றித் தவித்திடுவோர், கிழிந்த கந்தலை உடுத்துபவர், அழுக்கு ஆடையணிந்தோர் காணப்படவில்லையா, தமிழ் நாட்டில்? இருக்க இடமின்றி, தெருவில் நின்று தவித்திடும் கூட்டம் கிடையாதா? வானமே கூரையாக, கையே தலையணையாக, பூமியே பஞ்சணையாக, வீசும் காற்றே போர்வையாக, உறங்கிடும் மனிதர்கள் ஏன், இல்லை?

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடமின்றித் தவிப்போர் தொகை, ஏராளமாகத்தான் இருக்கிறது, இங்கே, தமிழ்த் திருநாட்டில்!

ஏன், இந்தநிலை, இல்லாத நிலை, இழிநிலை, இருக்கிறது, இருக்கவேண்டும், இந்தக் காலத்திலும்!

இயற்கை வளமில்லையா? உழைக்க உடலுறுதி பெற்ற மக்களில்லையா? இருக்கிறது, எல்லாம் இருக்கிறது! இருந்தும் பயன்?

இருக்கும் இயற்கை வளத்தைப் பண்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வழியில், முறையில், தமிழரது அறிவு, ஆற்றல், சிந்தனே, செல்லவில்லை என்பதே முக்கிய காரணம்!

இங்கு மக்கள், வாழவேண்டும், வசதியாக வாழவேண்டும் என்ற எண்ணமற்று இருக்கிறுர்கள்; இருக்கும்படி செய்யப்பட்டிருக்கிறுர்கள்!

'ஏதோ, நாம் கொடுத்துவைத்தது, இவ்வளவுதான்' 'நம்மாலாவது என்ன, எல்லாம் விதிப்படிதானே, நடக்கும்! 'கொடுத்துவைத்தவன், வாழ்கிறுன், கொடுத்து வைக்காதவன், வறுமையில் புரண்டு வாடி நெளிகிறுன்' 'புண்ணியம் செய்தவனப்பா, நன்ருக வாழ்கிறுன், அனுபவிக்கிறுன்' என்றெல்லாம் நாட்டில், நிலைதவறிய், நிம்மதியற்ற, ஏழை மக்கள், தாழ்ந்த மாந்தர், வாழ்க்கைத்தரம் குன்றிய வறுமைக் கூட்டத்தினர் பேசுகின்றனர்.

இந்த முறையிலே, கஷ்டத்திற்குக் காரணம் கடவுள், துன்பத்திற்குக் காரணம் புண்ணியமற்ற பிறப்பு, இல்லாமைக்குக் காரணம், கொடுத்து வைக்காதது, வேலை கிடைக்காது வாடுவது விதியின் செயல் என்றுதான் மக்கள் ஆறுதலடைகின்றனர்; தமக்குத் தாமே தேறுதலும் அளித்துக்கொள்கின்றனர்.

வாழ்வுப் பாரத்தை, தாங்கமுடியாது, தள்ளாடித் தாங்கி, வறுமைச் சுமையைச் சுமக்கமுடியாது வளைந்து, நெளிந்து சுமந்து வேதனை வாழ்வு, வரண்ட வாழ்வு, வாழ்கின்றனர்.

அர்த்தமற்ற திருப்தியும், வெறுப்பான வாழ்வும், சாவை எதிர்நோக்கிய சஞ்சல புத்தியும், கொண்ட சத்தற்ற

வாழ்வுதான், இன்றைய மக்களின், பெரும் பகுதி மக்களின் வாழ்க்கை நிலை; வாழ்க்கைத்தரம்!

'வாழ்க்கை வாழ்வதற்கே, வாழவேண்டும், வளமாக வாழவேண்டும், வாழத்தான் வேண்டும், வாழ்ந்தே தீருவோம்', வாழ்க்கையைப்பற்றிய கருத்து இப்படித்தானே இருக்கவேண்டும், மக்களுக்கு! ஆனால் மக்கள் வாழாதவர்களாக, வாழ முடியாதவர்களாகவே வாழ்ந்திடக் காரணமென்ன?

நாட்டிலே, பரவிக்கிடக்கும் நானுவித கருத்துக்களையும் ஊன்றிக் கவனித்துப் பாருங்கள். மக்கள், தமது இல்லாமைக்கும், இழிநிலைக்கும், 'விதி', 'கர்ம வினை', 'ஆண்டவன் விட்டவழி', என்ற வேதாந்தம் பேசி, 'ஏதோ இருப்பதைக் கொண்டு, திருப்தியடைய வேண்டும்', என்ற அளவிலே இருப்பதைக் காணமுடியும்!

தமிழர், தாழ்ந்ததற்குக் காரணம், தமிழகத்தில், தமிழரது எண்ணங்களில் ஏற்பட்ட, பக்தி, புராணம், மோட்சம், நரகம், மேலுலக வாழ்வு, கர்மம், வினை, விதி என்பன போன்ற கருத்துக்கள், மனிதனது சிந்தனைக்குத் தடை செய்திடும் கருத்துக்கள் புகுந்து ஆதிக்கம் செலுத்தினது தான் என்பது நன்கு விளங்கும்!

இத்தகைய, இடைக்காலத்தில் ஏற்பட்ட, தமிழரைத் தாழ்த்திய, தமிழருக்கு தேவையற்ற, கருத்துக்கள் தான் தமிழ் இலக்கியத்தில் ஏராளமாகக் காணப்பட்டு, அவையே, பக்திப் பாடல்களாக, புண்ணிய புராண ஏடுகளாக, வேத ஆகமங்களாக, ஆராய்ச்சி நூல்களாக, மனுநீதிகளாக, மார்க்கண்டேய புராணமாக, மதக் கிரந்தங்களாக, வசிஷ்டர் வாக்குகளாக, பகவான் திருவாய்மலர்ந்தருளிய மொழிகளாக, முனிபுங்கவரும், தவசிரேஷ்டர்களும் கேட்டு, வழி வழியாகத் தமது சீடகோடிகளுக்குச் சொல்லப்பட்ட போதனைகளாக நாட்டிலே, ஏடுகளாக நடமாடுகின்றன!

இயற்றமிழ் இலக்கியத்தில், பெரும் பகுதி, நாட்டு மக்களுக்குத் தெரிந்துள்ள, தெரியப்படுத்தப் பட்டுள்ள பலவும், புராண ஏடுகளாகவும், புண்ணிய கதைகளாகவும், இதிகாசங்களாகவும், பகவத் லீலைகள் பற்றியதாகவுந் தான் இருக்கின்றன!

'வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்', தேவைதானா, இந்தக் கருத்து, இன்றும்?

"காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா, மாயனார் குயவன் செய்த மண்ணுபாண்டம் ஓடடா" பாடுகிறார்களே, பக்தியோடு. என்ன நினைப்பது? வாழ எண்ணம் எங்கிருந்து வரும், வாழ்வை நம்பாவிடில்.

'வாழ்வை நம்பாதே! எதைத்தான் நம்புவது, வாழ்ந்தால் தானே, எதையும் நம்ப முடியும். வாழாவிட்டால், வாழ வழி தேடாது சும்மா இருந்தால் சுகம் வருமா? சோம்பேறி என்ற பட்டமல்லவா, கிடைத்துவிடும், சுலபத்தில்!

'வாழ்வை நம்பாதே' பாடிக்கொண்டே, பிச்சையெடுப்பர்.

'வாழ்வை நம்பாதே' வாயில், பாராயணம். கையிலே திருவோடு, வாழ்க்கைக்கு வழி தரும் காசு, பணம், உணவு பெற்றிட! என்ன வேடிக்கை! விசித்திரம், முரண்பாடு!

நமது முன்னோர் கருத்து, முற்காலப்புலவர்கள் பாடியவை, எழுதியவை என்ற ஒரே காரணத்திற்காக, பண்டைய இலக்கியங்களைப்பற்றிக் கேள்விகள் எழுப்பக்கூடாது, அதிலுள்ள கருத்துக்களைப் பற்றிய, எதிரான கருத்துக்கொள்வது கூடாது, பேசுவது குற்றம்; எழுதுவதற்குத் தடை, மாபாவி என்ற பட்டம், பழி, ஏசல், பூசல், தூற்றுதல்! சரியா? முறைதானா?

பண்டைய இலக்கியங்கள் 'தரம்' உள்ள இலக்கியங்கள். அவற்றை ஆராய்ந்து, அலசிப்பார்த்தால் அவற்றின் 'தரத்தை' உயர்ந்த இலக்கியப்பண்பை, இலக்கிய மாண்பை அறியமுடியாது, பழிப்பர், அது மிகமிகப் பாபம், அடாத செயல் என்று பேசிடுவது, பண்டைய இலக்கியங்களுக்குத் 'தரம்' அல்ல, அவற்றிற்கு உண்மையிலேயே, பெருமை தருவதுமாகாது! மாருக, அவற்றின் 'தரம்' அற்ற தன்மையையும், தாழ்ந்த நிலையையும், சிறுமையையுமே, குறிப்பிடுவதாகத்தான் தோன்றுகிறது!

'பயம்' ஏன்? ஏன், கருத்து வேற்றுமை கூடாது? சரியா, தவறு? தேவைதானு, என்று சிந்திக்கக்கூட, ஆராய்ச்சி செய்து முடிவு கண்டிடவும் உரிமையில்லையா?

அறிவுக்கு அப்பாற்பட்ட இலக்கியங்கள், அப்பாலேயே நிற்கட்டும், மனிதனது அறிவுக்கு வேலை தரும் அறிவு இலக்கியங்களே தேவை என்ற நிலைமை, சூழ்நிலை, உண்டாகித் தீரும் நாள் வெகுவிரைவில் வந்தே தீரும் என்பது நிச்சயம், உறுதி!

'தரம்' குறைந்துவிடும் 'தரம்' கெட்டுவிடும் என்று எதற்கெடுத்தாலும் பேசுவது, குறிப்பிடுவது ஏன்? எதற்காக இந்தப் பீதி, பயம் எல்லாம்?

ஆண்டவனைப்பற்றிய அருள் நூல்களைப்பற்றிய ஆராய்ச்சியா? மகேஸ்வரனைப்பற்றிய மத நூல்களிலே மாற்றமா? புண்ணிய கதைகளிலே, புதிய பாதையைத் தேடுவதா? மறுமலர்ச்சிக் கருத்துக்கள் காணவில்லையே என்ற மனச் சங்கடமான கேள்வியா? தகாது? ஆகாது கூடாது! என்பது, ஏன்? எதனுல்?

தகாத காரியம், தரம் கெட்டுவிடும், தரம் கெட்டுவிடும், என்று கூக்குரலிடும், அன்பர்களைக் கேட்கிறேன்;

'தரம்' என்ருல் என்ன? எது தரம்? எதிலே தரம்? எதைக் கொண்டு, எந்தத் துலாக் கோலைக்கொண்டு தரம் தாழ்ந்து விடும், தரம் தாழ்ந்துவிடுமென்ற தாரக மந்திர உபதேசம்!

'தரம்'—மேன்மையைக் குறிப்பதா? தன்மையைக் குறிப்பதா? அறிவையா? ஆராய்ச்சியையா? சன்மார்க்கத்தையா? சமரசத்தையா? நீதியையா? நேர்மையையா? எதைக் குறிப்பிடுகிறது 'தரம், தரம்' என்ற தாரக மந்திரம்; எது என்று கேட்கிறேன், குறிப்பிட்டுக் கூறுங்கள்!

இவ்வுலக வாழ்வை நம்பாதே, மாய வாழ்வு, மருள் தரும் வாழ்வு, உலக இன்பத்தையா தேடியலைவது, சிற்றின்பத்தைத்தேடி சித்தங் கலங்கிடாதீர், பேரின்பப் பெட்டகத்தின் பால் உங்கள் சித்தம் நிலைக்கட்டும், 'அவன்' புகழ் பாடி சிந்தை குளிருங்கள்' என்று ஏடுகள் எடுத்துக் கூறுவதையே தரம், தரம் என்று பேசுகின்றனர், நம்புகின்றனர் போலும்.

'தரம்' என்ருல் என்ன? எது தரம்? எப்படித் தரம் என்பது தெரிந்தால்தானே, எடுத்துக் கூறிஞல் தானே 'தரம்' 'தரமாக' இருக்கமுடியும்! தரத்தைத் தாழ்ந்திடாது பாது காக்கவும் முடியும்?

பழைய புராணங்களிலே, புண்ணிய கதைகளிலே, பண்டை இலக்கியங்களிலே, எது தரம், 'எந்தப் பகுதி மேன்மையானது, எந்தக் கருத்து களிப்பூட்டுவது, எது சிந்தையைக் குளிர வைத்திடுவது, எது 'தர'மானது என்பதைக் காட்டவேண்டும்.

'தரம்' என்பது என்ன? எதைக் குறிப்பது 'தரம்' என்ற தற்காப்பு வார்த்தை, 'தரம்' என்ற தாரகமந்திரம், உபதேச மொழி! காணுத, காணவும் முடியாத, தெரியாத, தெரிந்து

கொள்ளவும் முடியாத, புரியாத, புரிந்துகொள்ளவும் முடியாத 'தரம்' என்பது தான் என்ன?

பழமை, பழம் பெருமை, முன்னுள் வாக்கு, முன்னோர் கருத்து, அருளிலக்கியம், ஆலய வழிபாட்டுப் பாடல், புண்ணியந்தரும் புராணம், பேரின்ப இலக்கியம் என்ற அடைமொழிகள் மட்டுமே, போதுமென்ற கருத்தா? தரத்தைக் குறிப்பிட, இவையே போதுமா? கூறிவிடுங்கள் திட்டமாக, தீர்மானமாக!

இது தரம், அதுதான் தரம், என்று ஒரு நிலையை, நினைப்பை, நடப்பை, கருத்தை, கவர்ச்சியை, குறிப்பிட்டுக் கூறிவிடுங்கள்! தரம் என்பதற்கு ஒரு வரம்பு ஏற்படுத்துங்கள், முதலில்!

தரம் என்பது பயன்தரும் நிலையா, நினைப்பா, நடப்பா? தரம் என்பது, பக்தியா? பாராயணமா? அல்லது பழையன வெல்லாம், பண்டை இலக்கியங்கள் எல்லாம் தரமானவை; அவைதான் முடிந்த முடிபுகள், கருத்துக்கள் என்ருவது, தைரியத்தோடு முன்வந்து, கூறுங்கள், குறிப்பிட்டு, தெளிவாக, தீர்மானமாக!

பழமைமீது கொண்ட பற்றினுல், பாசத்தால், பக்தியினுல் புதுமை தேவையற்றது; புதுமையையும், பழமையிலேயே கண்டு மகிழ்ந்திடுவது, என்ற நிலையிலேயே, இலக்கியம் இடம் பெயராது, இருந்த இடத்திலேயே, இருக்கத்தான் வேண்டும் என்ற எண்ணமுடையோராகவே, இன்றைய தமிழ்ப் புலவர்களும், தமிழ் நாட்டுத் தலைவர்களும், தமிழ்ப் புத்த வித்தகர்களும் விளங்கிடுவது, நல்லதா? நாகரிக உலகில் வாழ்ந்திடும் நமக்கு, நல்லறிவு நாளுக்குநாள் பெருகிவரும், காலவேகத்திற்கேற்ற முறையிலே கருத்து மணம் பெருகிவரும் காலத்திலே, தேவைதானு, இனியும்? சிந்தியுங்கள்!

காலவேகம்! காலவேகம், மனித வாழ்வைப் பலப்பல விதங்களிலே மாற்றிக்கொண்டே வந்திருக்கிறது.

பழமைதான், 'தரம்' என்ற நிலையோடு, புதுமை எண்ணங்களே தோன்றிடாது, கட்டுப்பட்டு மனிதன் வாழ்ந்திருப்பானாகில், இன்றைய புதுமைகள், புதிய பாதைகள், நல்வாழ்வுப் பாதைகள், வாழ்க்கை வசதிகள், கருத்து முன்னேற்றங்கள், காலத்தின் வேகத்தோடு ஒட்டி, மாறி, முன்னேறியிருக்க முடியுமா? மனிதவாழ்வு, மிருக நிலையிலிருந்து, மனித நிலைக்கு, பகுத்தறிவு நிலைக்கு, நல்ல 'தரம்' நற்பயன் பெற்றதாக உருமாறித்தான் இருக்குமா? முடியாதே!

பழைய ஏடுகள் தான் தரமானவை! பழைய கருத்துகளே தரமுள்ளவை! பழைய எண்ணங்களே, ஏற்பாடுகளே தரந் தருபவை, பழைய பழக்கங்களே, வழக்கங்களே, கொள்கைகளே, கோட்பாடுகளே முடிந்தவை, முற்றுப்பெற்றவை, 'தரம்' கொண்டவை, என்று மக்கள் கொண்டிருந்தால், நமது மூதாதைகள், முன்னோர்கள் முடிவு கட்டியிருந்தால், ஒருகணம், ஒரு சிறிது நேரம், ஒரு சில விநாடிகள், நினைத்துப் பாருங்கள், மனித வாழ்வு—இருக்குமா? இருக்கத்தான் முடியுமா, இன்றையநிலையில், சூழ்நிலையில், என்பதை!

முன்னேற்றம் எங்கே, முற்போக்குதான் எங்கே? எங்கேயிருந்து வரும், வந்திருக்கும், வந்திருக்கவும் முடியும் இன்றைய முன்னேற்ற நிலைக்கு, நாகரீக நிலைக்கு, நல்வாழ்வுக் கட்டத்திற்கு, நமது நிலை, மனித வாழ்வின் வாழ்க்கை, இன்றைய வாழ்க்கை முறை!

காட்டுமிராண்டியாக, காட்டிலும், மேட்டிலும், மலையிலும், மலைக் குகைகளிலும் வாழ்ந்த மனிதன் இன்று, நாட்டிலும், நகரிலும், கூடகோபுரம் போன்ற மாட மாளிகைகளி

லும் கட்டுப்பாடான, கண்ணியமான வாழ்வு நடத்தும் நிலைமைக்கு மாறியிருப்பானு? முடியாது! நிச்சயமாக நடக்காது, நடந்திருக்கவே முடியாது.

மனிதன் காட்டுமிராண்டியாகவே காலம் முழுவதும் கழித்திருப்பான். நாமும் இன்றும், காட்டுமிராண்டிகளாகவே, கானக வாசிகளாகவே, காடுகளிலும், மேடுகளிலும் அலைந்து திரிந்துகொண்டிருக்க மாட்டோமா, பழமை, பழமை என்று பழங்கால மனிதன் பழமையையே போற்றி நின்றிருந்தால்!

முத்தமிழ்விழா கொண்டாடிடும் நிலை 'முத்தமிழ்' பற்றிய முழக்கங்கள் இருக்கமுடியுமா, இங்கே இன்று! வசிஷ்டர் வியாசர் காலந்தான், கருத்துக்களே 'தரம்' என்று தீர்மானித்து விட்டிருந்தால், நடக்காதே முத்தமிழ் விழா, முத்தமிழுக்கு விழா! முன்னேற்றம் என்ற எண்ணம் அரும்பியிருக்குமா? புதுப்புது கருத்துக்கள்தான் மலர்ந்திருக்க முடியுமா?

காட்டுமிராண்டிக் காலமல்ல, நாங்கள் குறிப்பிடும் பழங்காலம்; புராண காலந்தான் பழங்காலம், புண்ணிய புருடர்கள் தோன்றிய காலந்தான் பழங்காலம், இன்றுள்ள பழைய இலக்கியங்களில் காண்பவைதான் பழயகாலக் கருத்துக்கள், இன்றும், இனியும் தேவையான கருத்துக்கள் என்ருவது மாற்றிக் குறிப்பிட்டுவிட வேண்டும்.

வாதத்திற்காக, இதனை, இந்த முடிவை ஒப்புக்கொண்டாலும், மனித நிலை, மனிதனது முன்னேற்றம் அந்த அளவோடு நின்றிருந்தால்கூட, இன்றைய ஏற்றமும், பெரும் முன்னேற்றமும், மானிட வாழ்வில் ஏற்பட்டிருக்க முடியாது என்பது திண்ணம்!

மனிதனது சிந்தனை, தெளிவு, முன்னேற்றம் புராணத் தோடு, பழைய இலக்கியங்கள் கூறும் அளவோடு நிலைத்து, நின்றுவிட்டிருந்தால் கூட இன்றைய சூழ்நிலை, நாகரிக வாழ்வு, நல்வாழ்வு உண்டாக்கியிருக்காது, உருவாகியுமிருக் காது என்பது உறுதி! மறுக்கமுடியாத உண்மையுங்கூட!

பழமை, பழமை என்று பத்தாம் பசலிக்கொள்கை யையே கொண்டிருந்தால், காலிகோ பைண்டு செய்து, பொன்னிற எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட மேலட்டை களைக் கொண்ட, புராணப் புத்தகங்களைக் கண்டிருக்க முடி யாது! புராண கால இலக்கியங்கள் ஏடும் எழுத்தாணியுட னேயே, ஓலைச் சுவடிகளிலேயே, அடங்கிவிட்டிருக்கும். அனைவரும் படித்தறியும் புத்தகமாக, நூல் வடிவில், அச்சிடப் பட்டிருக்க முடியுமா? அல்லது, யாரோ, எந்த நாட்டிலோ, கண்டு பிடித்த அச்சுப் பொறியைத்தான் அதற்குப் பயன் படுத்தலாமா?

புதிய சாதனங்களால், பழைய கருத்துக்களைப் பரப் பிடப் பயன்படுத்திடத் தவறவில்லை; அதே நேரத்தில் புது மைக் கருத்துகளுக்கு வித்திடும் விவேக புத்தியைக் கையாண்டிட மறுத்திடும் நிலை! மூடநம்பிக்கையால் முற் போக்கு இலக்கியங்கட்கு முட்டுக்கட்டை போடும் நிலை! இந்த நிலை மாறவேண்டாமா? மாற்றப்படவேண்டாமா?

'சூழ்நிலை!' காலவேகம், மனிதனது முன்னேற்றம், எண்ணப் புரட்சியின் வேகமான முன்னேற்றம், விஞ்ஞான அறிவு. ஆராய்ச்சி, வாழ்க்கை முறையை, அதற்கான சுற்றுச் சார்பை, சூழ்ந்துள்ள தன்மைகளை, தரப்படுத்தி, வளப்படுத்தி நல்ல 'சூழ்நிலை'யை உண்டாக்கித் தருகிறது, உருவாக்கிக் கொடுக்கிறது!

நல்லனவெல்லாம் பழமையின் தரத்தைப் பரப்பிட, பழமையின் தரத்தை, ஏற்கனவே இருக்கும் தரத்தையே மேலும் உயர்த்திட, உபயோகிக்கப்படுகிறதே தவிர நல்ல பயனைத்தரும் வழியில் வகைப்படுத்திட, திருத்தியமைத்திட மனம் இல்லை!

மாற்றினால், பழமைக்குப் பெருமை குன்றும், குறையும்; புதுமை, புதுக்கருத்துக்கள் மேலோங்கிவிடும். பழமையின் புனிதத் தன்மை பட்டுவிடும், மறைந்தொழியும் 'தரம்' தாழ்ந்துவிடும், தரம் தாழ்ந்து விடும் என்று மாற்றத்தை, மனித முன்னேற்றத்தையே, பழமையின் பேரால், பழைய இலக்கியங்களை பங்கம் ஏதுமின்றிப் பாதுகாத்திடவேண்டும் என்ற பழக்கத்தால், தடுத்து நிறுத்த முனைவது, நம்மை நாமே நமது எதிர்கால வாழ்க்கையையே நம்மை விட்டு விலக்கி வைத்தவர்களாவோம்.

ஒரு குறிப்பிட்ட தரத்தை மட்டுமே பெரிதெனக்கொண்டிருந்தால், சக்கி முக்கிக் கற்களைக் கொண்டு தீ, நெருப்பை உண்டாக்கும் முறையிலிருந்து, நினைத்த நேரத்திலே நினைத்த இடத்தில் நெருப்பை உண்டாக்கிடும் தீப்பெட்டி தோன்றியிருக்குமா? காய்ந்த இலை, தழை, சருகுகளைக் குவித்துத் தீ வைத்து ஒளி உண்டாக்கிய காலம் மாறி, தீவட்டிகள் ஏற்பட்டு, தீவட்டியிலிருந்து எண்ணையும் திரியுமிட்ட அகல் விளக்குகளைப் பெற்று, அதன் பின்னர் மண்ணெண்ணெவிளக்குகள், பெட்ரோமாக்ஸ் போன்ற காந்த விளக்குகளும், இதற்கிடையே மெழுகு வர்த்திகளும் தோன்றி, இன்று எல்லாவற்றிற்கும் மேலான, வசதியான, ஒரு சிறு பொத்தானை அழுத்தினால் ஒளி மிகத்தந்திடும் மின்சார விளக்குகளைப் பெற்றுள்ள நிலை, வசதியான சௌகர்யமான நிலைக்கு முன்னேற முடியாது, என்பதை

உணர மறுப்பவர் யார், யார்? யார்தான் மறுத்திட முடியும், இதனை? முடியாதல்லவா?

சிற்பிகளின் சிந்தனை சிற்பங்களைச் செதுக்கிடும் அளவோடு நின்று, ஆண்டவன் ஆலயங்களை அழகுடன் அமைத்திடும் பணியோடு முடிந்திருந்தால் மாட மாளிகைகளையும், கூடகோபுரங்களையும், கோட்டைகளையும், கொத்தளங்களையும், சுற்றுச் சுவர்களையும், சூழ்ந்த மதில்களையும், மலையரண்களையும் கொண்ட மகத்தான மாபெரும் நகரங்களைக் கண்டிருக்க முடியுமா? நாடுகளைத்தான் பார்த்திருக்க முடியுமா?

கட்டிடமமைப்போரின் கவனம், கருத்து, கடும்உழைப்பு, கலைத்திறமை யாவும் கண்கவர் ஆலயங்களோடு நின்று விட்டிருந்தால்; காடுகளை அழித்து, மேடு பள்ளங்களைச் சரிபடுத்தி, சமன் செய்து, கழனிகளை உண்டாக்கி, வயல்களையமைத்து, வளப்படுத்தி விளைபொருள்களை உற்பத்தி செய்திடும் வாய்ப்புத்தான் கிடைத்திருக்குமா?

கரடு முரடான காட்டு வழிகளை மாற்றி, நல்ல நல்ல பாதைகளை யமைத்திருக்க முடியுமா? செப்பனிட்ட பாதைகளைக் கண்டிருக்க மாட்டோம். சரளைக் கற்களாலான கரடு முரடற்ற பாதை, சமன் செய்யப்பட்ட பாதை, சருக்கு நிலமற்ற பாதை, பாரவண்டிகளும், பலதிறப்பட்ட வாகனங்களும் வசதியாகச் சென்றிடும் பாதையைக் கண்டிருக்கவே முடியாது.

இந்த நிலையிலிருந்து மாறி, மேலும் மேலும் முன்னேறி, தார் ரோடுகளும், சிமெண்ட் பாதைகளும் இன்று சர்வ சாதாரணக் காட்சிகளாக நாட்டிலே நிலவுகின்றன.

மலைகளைக் குடைந்து இரும்புப் பாதைகள் அமைக்கப் படுகின்றன. மலையுச்சியை நோக்கியும், மலையுச்சியிலிருந்து மலையடிவாரத்தை நோக்கியும் பாதுகாப்பான பாதைகள் பல உண்டாக்கப்பட்டு விட்டன.

காட்டு வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி, நாட்டு வளத்தைப் பெருக்கிட பெரும் பெரும் அணைக்கட்டுகள், பேராறுகளைக் கடந்திடப் பெரும் பெரும் பாலங்கள் தோன்றியிருக்க முடியுமா; அறிவும் ஆராய்ச்சியும் சிந்தித்திடும் திறனும், செயல் முறையும், செயல் திறனும், பக்தியைப் பெருக்கி முக்தி தந்திடும் கோபுர வாயிற்படியளவிலேயே, எம்பெருமானுர் திருக்கோயில்களின் அருட் சுவர்களுக்கு இடையிலேயே அடங்கிவிட்டிருந்தால், அடக்கப்பட்டுமிருந்தால்!

தரம் கெட்டுவிடும், தரம் கெட்டுவிடும் என்று கூறிக் கூறி விடாப்பிடியாக இன்றைய புத்தக வித்தகர்கள், இலக்கிய கர்த்தாக்கள், ஏடெழுதிகள், எண்ணத்தை எழுத்துருவில் வடித்துத் தருவோர், கவிகள், கலைஞர்கள், காவிய கர்த்தாக்கள், கட்டுரையாளர்கள், கதாசிரியர்கள் ஆகிய எல்லோரும் பழைய இலக்கியங்களுக்கு விளக்க உரைகள் தந்திடுவதிலும், பழமையிலேயே புதுமை கண்டு பூரிப்பதிலும், பூத்துவரும் புதுயுக கருத்துக்களைப் பழமைப் பலிபீடத்திலே சாய்த்து பழமைக்குப் புத்துயிரளிப்பதிலுமே தமது காலத்தையும், கருத்தையும், நேரத்தையும், நினைப்பையும், நடப்பதையும் செலவிடுகின்றனர்.

உயர்ந்த இலக்கியங்கள், உத்தம இலக்கியங்கள், சிறந்த இலக்கியங்கள், என்பவையெல்லாம் எம்பெருமானைப்

பற்றியேதான் இருந்திடவேண்டுமா? ஆண்டவன் அடியார்களைப்பற்றிய புராணங்களாகவே, புண்ணியத்தைப் போதித்திடும் பக்திரசப் பாடல்களாகவே, பழமையை நிலைநாட்டிடும் பண்பு படைத்தவைகளாகவே விளங்கிடத்தான் வேண்டுமா இன்னும், இன்றைய சூழ்நிலையிலும்?

பழமைக்கும் புதுமைக்கும் உள்ள வேறுபாட்டை, மாறுபட்ட தன்மையை, ஏன், சில பல நேரங்களில் முற்றிலும் முரண்பட்ட தன்மையையும் காண முடிகிறதே.

எடுத்துக்காட்டாக பண்டைய போர்முறையையும் இன்றைய போர் முறையையும், பண்டைய பாதுகாப்பு முறையையும் தற்காலத் தற்காப்பு முறையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். பழமைக்கும் புதுமைக்கும் உள்ள மாற்றம், மகத்தான மாறுதல், தெளிவாகத் தெரியும்

படை! படை என்றதும் யானை, குதிரை, தேர், காலாட்படை, என்ற நால்வகைப் படைகளும் நம் கண் முன்னே காட்சியளிக்கின்றன!

பண்டைய தமிழ் இலக்கியங்களிலிருந்து கோட்டை கொத்தளங்களோடு கூடிய நாட்டையும், கோட்டையைச் சுற்றி மதிலரண்களும், அதைச் சுற்றி அகண்ட, ஆழமான அகழிகளையும், அந்த அகழிகளைத் தாண்ட முடியாது நிறுத்திட, தடுத்திட, வல்லமைமிக்க முதலைகளையும் கொண்டு வாழ்ந்திருந்த தமிழ் வேந்தர்களைப் பற்றிய வரலாறுகளைக் காண்கிறோம்.

கலிங்கத்துப் பரணியைவிட முன்னாள் போர் முறையை, போர்த் திறமையைக் கண்டு களித்திட வேறு நூல்களும் வேண்டுமா? வேண்டியதில்லையே!

நான் படித்த ஓர் பழந்தமிழ் ஏட்டிலே, படித்தது மிக நன்றாக நினைவிலிருக்கிறது. நான் படிப்பது குறைவு,

குறைந்த அளவாகவும் இருக்கலாம். ஆனால் படிப்பது குறைந்தாலும் படித்ததை மறப்பது கடினம், மிகமிகக் கடினம். அந்தத் தமிழ் ஏட்டிலே மிகச் சிறந்த தற்காப்புக் கருவியை தமிழ் மன்னன் கையாண்டதைக் கண்டு களித்தேன்.

கோட்டை மதில்களிலே, மதில்களில் ஏறி, மதில்களைக் கடக்கத் துணிந்திடும் எதிரிப்படையைத் தடுக்கத் தானாக இயங்கிடும் பொறியை அமைத்திருந்தான் அத்தமிழ் மன்னன், தமிழ் வேந்தன். எதிரி மதிலேறியதும் அவனது நெஞ்சையிருக்கிக் கொன்றிடும் திறன் படைத்த பொறி, அந்தப் பொறி! குரங்குப்பொறி என்று அந்தப்பொறி அழைக்கப்பட்டதாம்.

அந்த இலக்கியம் தோன்றிய காலத்தையும் அதன் தொன்மையையும் எண்ணிப் பார்த்திடும் நேரத்திலே அந்தக் காலத்தின் போர்த் தரம் மிகமிக முன்னேறியிருந்தது என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

தேசிங்கு ராஜன் கோட்டையும் அதன் பாதுகாப்பும் அதிலே அமைக்கப்பட்டுள்ள வழுக்குப் பாறைகள் பற்றிய செய்தியும், சரித்திரச் சான்றும் அந்தக் காலத்திய அதன் தரத்தைப்பற்றிய மதிப்பையும், மரியாதையையும் நினைத்தால் நம் நெஞ்சம் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்திடவில்லையா?

மேற்குறிப்பிட்ட போர்முறைகள் தவறானவை, தரமற்றவை என்று கூறிட நான் எண்ணவில்லை. ஆனால் அவைகள் கையாளப்பட்ட காலத்தையும், நேரத்தையும் நினைவில் நிறுத்தியேதான் அவற்றைப் பாராட்டவேண்டும், போற்றவேண்டும், புகழவேண்டும் என்று தான் கூற விரும்புகிறேன்.

அந்த காலத்திற்கேற்ற முறையில், அவை மிகவும் சிறந்தவை, தரமானவை என்பதை எவரும் மறுக்க முடியாது என்பது உண்மைதான். அதற்காக, அந்த முறையே இன்னும் தேவை, அவைகளே போர் முறைகள், போர்ச் சாதனங்கள் என்று இன்றும் கையாண்டால், நாட்டு நிலைமை, தற்காப்பு என்ன ஆகும் என்பதைச் சிறிது எண்ணிப் பாருங்கள்!

பண்டைய முறையிலே தேவையானவற்றைத்தெரிந்து எடுத்துப் போற்ற தவறக்கூடாது; அப்படியே தேவையற்றவற்றைத் தள்ளிடவும் தயங்கிடக் கூடாது!

அந்த நாளிலே ஒரு சில மன்னர்கள், யாக யோகாதிகளிலே பெரிதும் நம்பிக்கைவைத்துப் பகைவரை ஒழித்திடப் பெரிய பெரிய யாகங்களைச் செய்து, ஓமகுண்டங்களை வளர்த்ததாகக் கூடச் சில பல ஏடுகள் கூறுகின்றன.

பழைய முறை என்று இந்தக் காலத்தில் யாகம் செய்து ஓமகுண்டத்திலே நெருப்பை வளர்த்து, தீச்சுழலை எழுப்பினல், தீயின் ஒளி தரும் வெளிச்சத்தைக்கண்டு, விமானத்திலே சுற்றும் வெளி நாட்டான் சுலபமாக, குண்டு வீசிடத்தானே யாகமும் யோகமும் பயன்படும்?

இன்று நீராவிக் கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் என்று பல வகைக் கப்பல்களில் கடல் கடந்து சென்று வாணிபம் புரிகிறோம். மோட்டார், இரயில், ஆகாயவிமானம் போன்ற பிரயாண சாதனங்களில் பிரயாணம் செய்கிறோம்.

பழங்கால பிரயாண சாதனங்களல்ல இவை, என்று நவீன பிரயாண சாதனங்களைத் துறந்து, ஒதுக்கி விட்டு, மீண்டும் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு, கால் நடையாகவும், கட்டை வண்டியிலும் ஏறியுமே, பிரயாணத்தைத் தொடங்க

வேண்டும் என்று கூறும் பழமை விரும்பியை காணமுடியுமா இன்று இந்த நாட்டில்? காணவே முடியாதல்லவா!

இதைப் போலவேதான் இலக்கியத் துறையிலும் காலத்திற்கேற்ற கருத்துக்கள் புகுத்தப்படவேண்டும் என்று கூறுகிறேன்; தவரு, முறையல்லவா? சிந்தித்துக் கூறுங்கள் பதில்!

இலக்கியங்கள் இன்று பெரும்பாலும் போதிக்கும் முதற்கருத்து, முக்கியக்கருத்து 'விதி' என்ற தத்துவமாகும்!

இந்த 'விதி' என்ற தத்துவம் இன்று மட்டுமல்ல, என்றுமே மனிதனுக்கு மகத்தான தீங்கிழைக்கும், எக்காலமும் கேடுதரும் தத்துவமாகும்.

விதியை நம்பி, மதியைப் பறிகொடுத்து, பகுத்தறிவற்ற மனிதர்களாய் வாழ்வது மிகமிகக் கேடு, தீங்கு!

'ஏனப்பா ஏக்கம், என்ன வருத்தம் உனக்கு' என்று கேட்டவுடன் ஏக்கத்திற்கு விளக்கந்தராது, வருத்தத்தின் காரணத்தை விளக்கிடாது, ஏன் உணரவும் உணராது, "எல்லாம் என் தலை விதி" என்று தலையிலே அடித்துக் கொள்கிருனே மனிதன்; அந்த நிலைமை மாறி, மனிதன் தனது வருத்தத்திற்கும், வாட்டத்திற்கும் தனது உழைப்பும், ஊக்கமும், அதற்கான சூழ்நிலையுமே காரணம் என்ற சூழ்நிலையை, தன்னைச் சுற்றிலுமுள்ள நிலையை நன்கு உணர்ந்து, அலசிப் பார்த்து, ஆராய்ந்து, தெளிந்து, சூழ்நிலைக்கேற்ப நடக்கவும், தனக்கும், பிறருக்கும், சமுதாயத்திற்கும் நன்மைதரும் சூழ்நிலையை உண்டாக்கும் சூழ்நிலையின் தன்மையறிந்தவனுக மாறவேண்டாமா?

விதி, விதி என்று தனது மதியை மதிக்காது, மந்தமதி படைத்தவனுகவே தமிழன் வாழத்தான் வேண்டுமா?

ஆண்டவன் விட்டவழி என்று கிடந்து, தன்னம்பிக்கை யற்ற தமிழனுகவே, தாழ்ந்த தமிழனுகவே தமிழன் வாழக் கூடாது, இனியும்!

தமிழரைத் தட்டியெழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை! தன்னம்பிக்கையூட்டும் ஏடுகளே தேவை! மதியைப் பெருக்கி, விதியைத் தொலைத்திடும் விளக்க நூல்கள் ஏராளமாகத் தேவை!

மகேஸ்வரன் புகழ்பாடி, மதத்தை நம்பி, மதிகெட்ட மனிதனுக வாழவிடும் மத இலக்கியங்கள் தேவையே இல்லை. குலத்துக்கொரு நீதி வகுத்து, மனிதனது, சுயமரியாதை யைப் போக்கிடும் புராணங்கள், இலக்கிய வரிசையிலே, இருத்தல் கூடவேகூடாது!

"குலத்துக்கொரு நீதி" ஒவ்வொரு குலத்திற்கும் ஒவ் வொருவித தனித்தனித் தன்மையுள்ள, தராதரமுமுள்ள, பாரபட்சமான, நீதியைப் பகவான் லீலையென்றும், ஆண்ட வனின் திருவிளையாடல்கள் என்றும் போற்றிப் புகழும் நிலையிலுள்ள இத்தகைய ஏடுகளுக்குத் தகாத ஏடுகள், தேவையற்ற நூல்கள் என்று தூரத் தூக்கியெறிந்துவிடத் தான் வேண்டும்!

குலத்துக்கொரு நீதியா? அதுவும் ஆண்டவன் பேரிலா? என்று யாரும் ஆத்திரமோ அன்றி ஆச்சரியமோ கொண்டிட வேண்டாம். கற்பனையல்ல, நான் கட்டிவிட்ட கட்டுக்கதையு மல்ல; புராணங்கள், திருவிளையாடல்கள் என்று போற்றப் படும் புண்ணிய(!) ஏடுகளில் கூறப்படுவதைத்தான், நான் எடுத்துக்காட்டிக் கேட்கிறேன், இவை தேவைதானு, என்று; கொஞ்சம் நிதானத்தோடு நான் கூறுவதைக் கேட்டுச் சென்று புராணங்களையும் புரட்டிப் பார்த்து சரியா, தவரு என்று சிந்தித்துப் பின் முடிவு கட்டுங்கள்!

இதோ, குலத்திற்கொரு நீதி, ஆண்டவனே கையாண்டதாகப் புகழும் புண்ணிய (!) வரலாறுகளைக் காட்டுகிறேன். பாருங்கள்!

பெரிய புராணத்திலே ஒரு நாயனர் புராணம். காரைக்காலம்மையார் புராணத்தைக் குறிப்பிடுகிறேன்!

காரைக்காலம்மையார் என்ற அம்மையார் சிவனர் மீது சிறந்த பக்தி கொண்டவர். காரைக்காலம்மையார் திருக்கைலாயத்தையடைய விரும்பிப் புறப்பட்டார். கைலாயத்தையடைய அவர் நடந்து நடந்து சலித்து, பெண் உருவை விட்டுப் பேயாகி, பிசாசாக உருமாறி, நடக்கச் சக்தியுமற்று, உருண்டுருண்டு சென்றதினல், உடலம் தேய்ந்து, தேய்ந்து உருக்குலைந்து, அம்மையப்பனை, ஆலவாயப்பனை நோக்கி அபயக் குரல் கொடுத்தாராம்.

இந்த நேரத்திலே, பெண் வடிவுமாறி, பேயாகித் திரிந்து உருண்டுருண்டு, உடல் தேய்ந்த நிலையில் எம்பெருமான் தோன்றி, 'அம்மே, அம்மே' என்று அன்பொழுக அழைத்து, காரைக்காலம்மையை ஆட்கொண்டாராம்!

இதுமட்டுமல்ல இன்னும் இரண்டு நிகழ்ச்சிகளைக் காணவேண்டும், இதே பெரிய புராணத்தில், வாருங்கள், செல்வோம்.

கண்ணப்பர், ஆரம்பத்தில் அவருக்கு, இந்தத் திருநாமம் கிடையாது! திண்ணன் என்பது அவரது இயற்பெயர். அவர், காட்டிலே வசித்த வேட குலத்தவர். அவர் தினமும் சிவனைப் போற்றி வந்தாராம்.

ஒரு நாள் சிவனரின் ஒரு கண்ணிலே செந்நீர், குருதி! இரத்தம் வடிந்ததாம். அதைக் கண்டு மனம் மிக நொந்து என்ன செய்தும் இரத்தம் நிற்காத காரணத்தினல், தம்முடைய ஒரு கண்ணையே, அம்பினல் பெயர்த்தெடுத்து, செந்நீர் வடியும், குருதி கொட்டும் கடவுளின் கண்ணிலே அப்ப, குருதி நின்றதாம்

மீண்டும் மற்ருெரு கண்ணில், செந்நீர் வடியத் தொடங்கியதாம், என்ன செய்வார் இந்த அடியார், சிவத்தொண்டர்? தனது மற்ருெரு கண்ணையும் பெயர்த்து, ஆண்டவனின் மற்ருெரு கண்ணிலும் அப்பி, குருதி வெள்ளத்தை நிறுத்தத் துடித்தார். அடையாளத்திற்காகத் தமது பாதத்தைக் குருதி வடியும் கண்ணின் மேல் வைத்துக்கொண்டு தனது மற்ற கண்ணை, இருக்கின்ற ஒரே கண்ணைப் பெயர்த்தாராம் அந்த அடியார்.

அப்போது சிவனுர் தோன்றி 'நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப!' என்று கூறித் தடுத்தாட்கொண்டு, அவரது கண்களைத் திரும்பவும் கொடுத்துதவிச் சென்ருராம்.

இப்போது குறிப்பிட்ட இரண்டு நிகழ்ச்சிகளையும் நினைவில் நிறுத்துங்கள், நன்ருக.

இதோ மற்ருெரு காட்சி, நிகழ்ச்சி அதே பெரிய புராணத்திலிருந்து!

சம்மந்தர்—நால்வருள் ஒருவர், பார்ப்பன குடும்பத்தில் பிறந்தவர். பாலப் பருவத்தில், சிறு குழந்தையாக இருந்த போது, அவரது தகப்பனுர் குழந்தையைக் குளக்கரையில் விட்டுவிட்டு, நீரில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தாராம்.

நீரில் மூழ்கியவர், தலையை மீண்டும் வெளியே தூக்குவதற்குள், அந்தச் சிறிய இடைக் காலத்தில், குழந்தை, தந்தையைக் காணவில்லை என்று எண்ணிப் பயந்து அழத் தொடங்கி விட்டதாம்.

குழந்தையின் அழுகுரல், உமையொருபாகனுர் காதில் விழ, அவர் அம்மையோடு, உண்ணுமுலையாரோடு அங்கே தோன்றி பொற்கிண்ணத்திலே, உமையின் முலைப்பாலை ஊட்டினுராம் அழுதுகொண்டிருந்த அச்சிறுவனுக்கு, சம்மந்தருக்கு.

உமையின் அருட்பாலை உண்ட சம்மந்தர், அருட்செல்வ ராக, எல்லா முணர்ந்தவராக மாறிவிட்டார் என்று மேலும் தொடர்கிறது சம்மந்தர் வரலாறு!

மூன்று காட்சிகள், ஒரு புராணத்திலிருந்து பெரிய புராணம் என்ற ஏட்டிலிருந்து! மூன்று அடியார்களின் அருட்காதை! மூன்று நாயன்மார்களைச் சிவபெருமான் ஆட் கொண்ட வரலாறு, வழி, வகை, முறை! மேலே குறிப்பிடப் பட்டவை! எடுத்துக் காட்டப்பெற்றவை! என்ருல் கூறப் பட்டவை புராணத்திலிருந்து.

இந்த மூன்று நாயன்மார்களில் முதல் இரண்டு நாய ஞர்களைச் சிவஞர் ஆட்கொண்ட முறையையும், மூன்ருவது நாயஞரை ஆட்கொண்டமுறையையும் எண்ணிப்பாருங்கள்.

காரைக்காலம்மையாருக்குப் பேயாகி, உருக்குலைந்து, உருண்ட பின்னர் தான் 'அம்மே, அம்மே' என்ற அருள் வாக்கு பிறந்தது அம்மையப்பரிடமிருந்து! கண்ணப்பருக் கோ, கண்களைப் பெயர்த்து அப்பின நேரத்திலே தான் 'நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப' என்ற கனிவுமொழி, கடவுளருள் வாக்கு கிட்டியது, கிடைத்தது!

தந்தையைக் காணவில்லையே என்று தன் போக்கிலே அழுதுகொண்டிருந்த சம்மந்தருக்குச் சடுதியில் சிவனருள் கிடைத்துவிட்டது, உடனே உமையின் முலைப்பாலை யுண்டதால்!

கடும் சோதனைக்குப்பிறகு, காரைக்காலம்மைக்கும், கண்ணப்பருக்கும் கடவுளருள்! ஆனல் சம்மந்தருக்கோ சர்வ சாதாரண முறையில் அழுதவுடன், தன்னிச்சையாக தந்தையைக் காணவில்லையே என்று அழுதவுடன் அம்மை யின் முலைப்பால்! இரண்டிற்குமிடையே எவ்வளவு வேறு பாடு! வேதனை நிறைந்த வேறுபாடு! எண்ண காரணத்தால்! சிந்திக்கவேண்டாமா இதுபற்றி!

சம்மந்தர், பார்ப்பனர், மற்ற இருவரும் பார்ப்பனரல்லாதார் என்ற காரணந்தானே! வேறென்ன இதற்குக் காரணம்?

பெரிய புராணத்திலுள்ள எந்த நாயனுரை எடுத்துப் பார்த்தாலும், இந்த நிலே, இரண்டுவித அருள் பாலிக்கும் தன்மைகள், பார்ப்பன பக்தருக்கு ஒருவிதம், பார்ப்பனரல்லாத பக்தருக்கு வேறுவிதம் என்ற முறையில்தானே காணப் படுகிறது! எடுத்துப் பாருங்கள், புரட்டுங்கள் புண்ணிய புராணத்தை, பெரிய புராணத்தை! பின்னர் கூறுங்கள், நான் கூறுவது உண்மையா, அல்லவா என்று? உண்மை தானே, மறுக்கமுடிகிறதா பாருங்கள்! முடியாது, மறுக்கவே முடியவில்லே என்ற நிலேதானே!

இதுமட்டுமல்ல, ஆண்டவனின் திருவிளேயாடல்கள் எதை எடுத்துக்கொண்டாலும், குலத்துக் கோரு நீதி என்ற முறையிலேதான், பார்ப்பனருக்கு ஒரு முறை, மற்றவருக்கு வேறு முறை என்ற ஒழுங்கு முறையேதான் கையாளப் பட்டிருக்கிறது, ஆண்டவனுல்கூட, என்பதைத்தான் காண முடிகிறது! சந்தேகம் வேண்டாம். இன்னுமொரு எடுத்துக் காட்டு, திருவிளேயாடற் புராணத்திலிருந்து! மாபாதகந் தீர்த்த படலம், இதோ, பாருங்கள்!

ஒரு பக்தன், காளேப் பருவத்தையடைந்தான். கட்டழகியான தன் தாயையே புணர்ந்தான். தந்தை இருப்பதால் தானே, தயக்கம் ஏற்படுகிறது, என்று தத்துவம் பேசித் தந்தையையும் கொன்றுவிட்டான். பின்னர் மருள் கொண்ட காரணத்தால் ஊரைவிட்டு வெளியேறிச் சுற்றி, இறுதியாக மதுரை வந்தடைந்தான்.

பாவந் தீர வேண்டி, பரமனே வேண்டினன், அந்தப் பாதகன்; அருள் சுரந்திட வேண்டினன், ஆலவாயப்பனே

நோக்கி, அந்தப் பரமசண்டாளன்; தாயைப் புணர்ந்து, தகப்பனை கொன்ற அந்த அதர்மன்!

"பாதகா! பிடி சாபம், சண்டாளனே, நரகத்திற்குச் செல்லக் கடவாய், செக்கிழு, செந்தீயைத் தழுவு" என்றெல்லாம் கூறியிருப்பார்; படு நரகில் தள்ளியிருப்பார், ஆலவாயப்பன் அந்தச் சண்டாளனை, என்று தானே எண்ணுகிறீர்கள், எண்ண முடியும், நீங்கள்!

ஆலவாயப்பன், அருள் சுரந்த விதம் வேறு! பாவியைப் பார்த்தார், 'அப்பா, பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி யெழு! பசுவுக்கு அருகம் புல்லைப் போடு, கோயிலை மும்முறை வலம் வருக, உன் பாபந் தீரும், மோட்சம் கிட்டும்', என்று திருவாய் மலர்ந்தார்.

மாபாதகஞ் செய்தவனுக்கு மன்னிப்பு! மோட்சம்! இது ஆண்டவன் திருவிளையாடல்! மாபாதகந் தீர்த்திட்ட திருவிளையாடல்!

திருவிளையாடற் புராணத்திலே உள்ளது இந்தத் திருவிளையாடல்' 'மாபாதகந் தீர்த்த படலம், இது!

இந்தப் பாவி, ஒரு பார்ப்பனர் என்பதை இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது! அதுமட்டுமல்ல! காரைக்காலம்மைக்கும், கண்ணப்பருக்கும், சம்மந்தருக்கும், மாபாதகஞ் செய்தவனுக்கும், அருள் வழியில் இவ்வளவு ஓரவஞ்சனை இருப்பது, ஆண்டவனே செய்வது நீதியா? என்று கேட்பது கூடாதா? தவறு? எப்படித் தவறு?

'குலத்துக்கொரு நீதி, ஆண்டவனே ஒப்பிய நீதி; கடவுளே கடைப்பிடித்த நீதி என்று விளக்கிடும் ஏடுகள் தேவைதானா? 'குலத்துக்கொரு நீதி' போதனை தகுமா? முறைதானா? இந்தக்காலத்திலும், குலத்துக்கொரு நீதியா?

கடவுளை கேட்டதுண்டா யாராவது, எந்தப்பக்தராவது, இது பற்றி, இத்தகைய, 'குலத்துக்கொரு நீதி' முறைபற்றி!

ஆண்டவன் எனக்கு வேண்டுமானால் காட்சி தரமாட்டான், காட்சியளிக்கவும் மறுக்கலாம்! பாவி நான் பக்தர்கள் அகராதிப்படி! ஆனால் பக்தர்கள் தம் முன் தோன்றிடும் ஆண்டவனைக் கேட்டிடத் தவறலாமா, ஏன் இந்த ஓரவஞ்சனை என்று?

தப்பித் தவறி ஆண்டவன் என் முன்னே தோன்றிவிட்டால் நான் நிச்சயமாக அவரைக் கேட்டிட தவறமாட்டேன்! கேட்டே தீருவேன். "ஐயா ஆண்டவரே, அனைத்துயிரையும் படைத்துக் காத்தளிக்கும் எம்பெருமான் என்று பலராலும் போற்றப்படும் பெம்மானே! உமது அடியார்க்குத் தாங்கள் அருள் சுரக்கும் முறையிலே ஏன் இந்தப் பேதாபேதம், பாகுபாடு? பார்ப்பனருக்குச் சுலபமாக உமது கடாட்சம், கருணை கிட்டுகிறது! ஆனால் மற்றவர்கள் பலப்பல துன்பங்களையும், கடும் சோதனைகளையும் கண்ட பின்னரே, தங்கள் இன் சொல்லுக்கும், அருள்மொழிக்கும் ஆளாவது ஏனோ? 'குலத்துக்கொரு நீதி' தாங்களே காட்டுவது தர்மந் தானோ?" என்று கேட்டிடத்தான் போகிறேன் ஆண்டவனைக்கண்டால்!

ஆண்டவன் தோன்ற மாட்டார்! ஆகவே ஆண்டவனுக்காகப் பரிந்து பேசிடும் அடியார்களை, அறநூல் வல்லுநர்களைக் கேட்கிறேன்! 'குலத்துக்கொரு நீதி' வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் காணப்படுவது நல்லதா? தேவைதானோ?

பக்தர் வரிசையிலே கூட இந்தப் பாகுபாடு, குலத்துக்கொரு நீதி, காணப்படுகிறதே! பக்தர்களிலுமா இரு பிரிவுகள் மேல்—கீழ் உயர்வு—தாழ்வு என்ற மனப்பான்மை? என்று கேட்கிறேன்.

ஒரு சிலர், அதுவும் குறிப்பாகப் பார்ப்பன பக்தர்கள் மட்டும் எலக்ட்ரிக் லிப்ட் (Electric Lift) ஏறிச்செல்லும்

பக்தர்களாகவும், பார்ப்பனரல்லாதார் **இரும்புச் சுழல் படிக் கட்டு** ஏறிச்செல்லும் பக்தர்களாகவும் இருப்பது இலக்கியங் களிலும், புண்ணிய கதைகளிலும் காணப்படுவது மனிதர் கள் பிரிந்து வாழ்ந்திடும் சூழ்நிலையைத்தானே ஏற்படுத்தும், ஏற்படுத்தியுமுள்ளது?

**எலக்ட்ரிக் லிப்ட்** (மின்சாரத் தூக்கி—Electric Lift) சில உயர்ந்த, மிகப் பெரிய மாடிக் கட்டிடங்களில் உயரே செல்லவும் கீழே வரவும் அமைக்கப்பட்டிருக்கின்றது! இந்த மின்சாரத் தூக்கியில் ஏறவும், இறங்கவும் ஒரு சிலருக்கு மட்டுமே, குறிப்பாக உயர்தர அதிகாரிகள், கனதனவான் கள் போன்ருருக்கு மட்டுமே அனுமதி உண்டு! மற்றவர் மாடிக்குச் செல்ல படிக்கட்டுகளில் ஏறிச்செல்ல வேண்டும். சில இடங்களில் படிக்கட்டுகள் **இரும்புச் சுழல் படிக்கட்டாக** அமைந்திருக்கும். இரும்புச் சுழல் படிக்கட்டில், சுழன்று அதாவது சுற்றிச் சுற்றிச் செல்லும் படிகளில் ஏறிடுவதும் இறங்கிடுவதும் கடினமான காரியம்; கால்கள் கடுக்கும். இந்த முறையிலே பலர் செல்லவேண்டிய நிலை மாடிக்கு!

சுலபமான வழியில், சுகமாகப் பரமன் அருள் பெறும் பார்ப்பன பக்தர்கள் **எலக்ட்ரிக் லிப்ட் பக்தர்**களாகவும் மற்றவர்கள் **இரும்புச் சுழல் படிக்கட்டு பக்தர்**களாகவும் காணப்படுகின்றனர், புண்ணிய புராணங்களில்! உயர்ந்த குலத்துக்கு ஒரு நீதி! தாழ்ந்த குலத்துக்கு வேறு நீதி! மாற்றப்பட வேண்டாமா? சிந்தியுங்கள், நன்ருக!

இலக்கியங்கள் இத்தகைய விதி, மேலுலக வாழ்வு, குலத்துக்கொரு நீதி, என்ற மூன்று தத்துவங்களைப் போற்றும் முறையிலேயே, போதித்திடும் அளவுடனேயே அமைந்துள்ளனவே! இந்த மூன்று கருத்துக்களும் மக்களை

நல்வழிப் படுத்திடப் பயன் படுகின்றனவா? மனிதன் மனிதனாக வாழ்ந்திடும் சூழ்நிலையை உண்டாக்கித்தான் பயன் படுகின்றனவா? கூறுங்கள்!

மனிதன் தனது சூழ்நிலைக் கேற்பத்தான் வாழ்கிறான், வாழவும் முடிகிறது! மறுக்கமுடியாத உண்மை, இது!

**சூழ்நிலை!** சுற்றுச் சார்பு, சூழ்ந்துள்ள நிலைமை, சுற்றியுள்ள தன்மை, பரவிக்கிடக்கும் பண்பு, பழக்க வழக்கம், பகுத்துணரும் அறிவு, பாடுபடும் முறை, பலனடைந்திடும் அளவு, வாழ்க்கை வசதி, வளம் ஆகிய பலப்பல நிலைமைகளை ஒட்டித்தான் மனிதன் வாழ்கிறான். 'சூழ்நிலை'க்குக் கட்டுப்பட்டே மனித வாழ்வு நடக்கிறது!

**சூழ்நிலை** மனிதனை மனிதனாக்குகிறது; மனிதத்தன்மையற்ற மிருகமாகவுமாக்குகிறது! சூழ்நிலை மனிதனை மகா புருஷனாகவும் உயர்த்துகிறது; மாபாவியாகவும் தாழ்த்துகிறது! மனிதன் பொய் பேசுவதும்—புரட்டுகள் செய்திடுவதும், அஞ்சுவதும், அக்கிரமங்கள் செய்வதும், ஆள்வதும், ஆளப்படுவதும், வாழ்வதும், வீழ்வதும், உயர்வதும்—தாழ்வதும் **சூழ்நிலையைப்** பொறுத்துத்தான் இருக்கிறது!

தனி மனிதன் 'தரம்' உயர்ந்தால் போதும்; தனி மனிதன் 'பண்பு' வளர்க்கப்படவேண்டும். தனி மனிதன் தரம், பண்பு வளர, உயர உயர, சமுதாயத்தின் தரமும் பண்பும் தானே வளரும், உயரும் என்றெல்லாம் பேசப்படுவது தவறு, சரியல்ல! நடைமுறைக்கு ஒத்து வராத தத்துவம் அது!

தனி மனிதனது தரம் மட்டும், பண்புமட்டும் வளர்ந்தால் போதுமா? உயர்ந்தால் முடிந்துவிட்டதா? சமுதாய வளர்ச்சி, சமுதாயச் சிறப்பு தோன்றிட முடியுமா, தனி மனிதனது சிறப்பினால், உயர்வினால், பண்பட்ட தன்மையால் மட்டுமே!

சிந்திக்கவேண்டும்! தனி மனிதன் 'தரம்' ஏன் குறைகிறது? தனி மனிதன் ஏன் பண்பற்றவனுகிருன்? எந்தக் காரணத்தால் தனி மனிதன் திருடுகிருன்? பொய் பேசுவது ஏன்? புரட்டுகள் செய்வது எதற்காக! கலகங்கள் நடப்பது எந்த நோக்கத்தோடு! என்றெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்! நமக்கு நாமே கேள்விகள் கேட்டு, விடைகளைக் காணவேண்டும்.

மனிதனது நிலையை, அவனது தன்மையை, அவனது வாழ்க்கை முறையை, ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்போது தான் இந்த கேள்விகட்கெல்லாம் விடை, நல்ல விடை, நிலைமையைச் சரிவர விளக்கிடும் விடை கிடைக்கும்; காணவும் முடியும்.

தனி மனிதரில் எத்தனை பேர் தரமும் பண்பும் படைத்தவர்களைக் கண்டோம், இன்று வரை;

தாயுமானுர் 'தரம்' குறைந்தவரா? பட்டினத்தடிகள் 'பண்பு' படைத்தவரல்லவா? இராமலிங்க அடிகள் இருந்த நிலை, தரமும் பண்பும் படைத்தது தானே! இராமகிருஷ்ணர், விவேகானந்தர், உத்தமர் காந்தியார் போன்ருருக்கு, தனி மனிதன் என்ற அளவிலே தரமும் பண்பும் இல்லாமலா போய்விட்டது? இருந்ததே! ஆனுல்...? சமுதாயம் சீர் பட்டதா? இல்லையே! ஏன்? எதனுல்?

தனி மனிதரில் தரமும் பண்பும் மிக்க முனிபுங்கவர், தவசிரேஷ்டர்கள், அவதார புருடர்கள், அருளாளர்கள், அறநெறி யுணர்ந்தோர், அன்புவழி நடந்தோர், வாழ்ந்தோர், பலரைக் கண்டோம், கேட்டோம், பார்த்தோம், படித்தோம், பழகிஞேம்—போற்றிஞேம் புகழ்ந்தோம்—அத்துடன் முடிந்தது!

தனி மனிதனைப்போற்றி, மனிதனைவிட மேம்பட்டவர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி, அவதார புருடர், ஆண்டவன் தூதர் என்று கொண்டுபோய் நிறுத்தி வாழ்த்தி வணங்கிறோம். வேறென்ன?

தரமும் பண்பும் மிக்கார், மனிதரில் மாணிக்கம், ஞானிகள், ஜீவன் முக்தர்கள், மகாத்மாக்கள், மதபோதகர்கள், ஆழ்வார்கள், அடியார்கள், அவதார புருடர்கள் என்ற முறையில்தானே வைக்கப்படுகிறார்கள், போற்றப்படுகிறார்கள்?

அவர்களைப் போற்றி, புகழ் பாடிப் பாடி மகிழ்வதுடன் நின்றுவிடுகிறதே, மற்றவரது எண்ணம், எழுச்சி, நினைப்பு, நடப்பு எல்லாம்? இதுவே போதுமா? இதுதானா தனி மனிதனது தரமும் பண்பும் வளர்ந்ததின், உயர்ந்ததின் பயன், பலன்?

சமுதாய முன்னேற்றம் என்பது என்ன? இத்தகைய நிகழ்ச்சிகளே தானா? எண்ணிப் பாருங்கள்!

எத்தனை யெத்தனையோ மகான்களும், மகாத்மாக்களும், அடியார்களும், ஆழ்வார்களும், ஆண்டவன் தூதர்களும், ஆண்டவன் அவதாரங்களும், தோன்றிய பின்னருங்கூட மனிதரது நிலை உயரக்காணோமே! ஏன்? எந்தக்காரணத்தால்? தனி மனிதனது தரமும் பண்பும் அவனவன் சூழ்நிலைக்கேற்ப அமைகிறது என்பது தானே; உண்மைக் காரணம்.

சூழ்நிலைக்கேற்றபடி மனிதன் உருவாகிறான், உருவாக்கப்படுகிறான், பலப்பல விதங்களிலே என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

சூழ்நிலை செய்திடும், மனநிலைகளை, மாற்றங்களை, ஆக்கங்களை அழிவுகளை, நன்மை தீமைகளைக் காணவேண்டும்—கண்டு **சூழ்நிலை** சரிவர, அமையவேண்டியதின்

அவசியத்தை, அவசரத்தை உணர்ந்தாகவேண்டும்— உணர்ந்து ஆவன செய்தே தீரவேண்டும்!

கந்தன் ஒரு தொழிலாளி. கட்டை வெட்டுவான் ஒரு நாள், கட்டை வண்டியிழுப்பான் மற்ருெரு நாள், மூட்டை தூக்குவான் வேருேர் நாள். கூலிவேலை செய்வதே வாழ்க்கை அவனுக்கு.

கிடைத்த கூலியைக்கொண்டு, உண்ண முடிந்த அளவு உண்டு, ஏதோ கந்தைகளை யுடுத்து, வீதியின் ஓரங்களிலே படுத்துப் புரண்டு உறங்கி அவன் வாழ்கிருன்! அவனிடம் தரமும் பண்பும் தேடிஞல், உயர்ந்த வாழ்வை, வாழ்வின் இலட்சியத்தைத் துருவிப் பார்த்தால் கிடைக்குமா! எண்ணிட, தான் ஏன் கூலியாகக் காலந்தள்ளவேண்டும், என்று எண்ணிப்பார்க்க அவனுக்கு நேரமேது! நிம்மதியற்ற, நிலையுமற்ற வாழ்க்கை, வரண்ட வாழ்க்கை வாழும் அவனிடம் சென்று தத்துவம் பேசிஞல், சிவஞானபோத உபதேசம் செய்தால் என்ன சொல்லுவான்? முத்தமிழில் பேசமாட்டான். தலையிலடித்துக் கொள்வான். தலைவிதியை நொந்து கொள்வான். வேறென்ன செய்ய முடியும் அவஞல். தலைவிதி தன்னை தாழ்த்திவிட்டது என்று தனக்குத்தானேசமாதானம் செய்து வாழ்கிருன். 'விதி' என்ற நம்பிக்கை அவனை வாழ விடவில்லை. வாழ்க்கையின் முன்னேற்ற எண்ணம் அவனிடம் தோன்றவில்லை! இது அவனது சூழ்நிலை. அர்த்தமற்ற, அறியாமை நிலை!

நல்லவஞக இருக்கும் மனிதன் திடீரென்று கெட்டவஞகிருன்? பொய் பேசுகிருன், திருடுகிருன். பிறரை ஏய்க்கிருன், ஏமாற்றுகிருன். ஏன்?

கெட்டவன், பொய்யன், புரட்டன், திருடன், சோம்பேறி, ஏய்ப்பவன், எத்தன், காமுகன் என்று வாழ்வது யாருக்குத்தான் பிடிக்கும்?

கெட்டவனாக வேண்டும், பொய்யேதான் பேசவேண்டும், சோம்பித்தான் திரியவேண்டும், ஏய்த்துப் பிழைப்பதே நல்லது, எத்தன் என்பது புகழ்தரும் வாழ்வு, காமுகன் என்றால் போற்றுவர் யாவரும், கள்ளன் என்றால் கண்ணியம் என்று எண்ணி, தீர்மானம் செய்து, மனதார விரும்பியா இத்தகைய செயல்களில் மனிதன் ஈடுபடுகிறான்? அவனுக்குப் பெருமை தரும் வழிகள் என்று மதித்துச் செய்கிறான், தீச்செயல்களை யெல்லாம்?

வாழ வழி இதுதான் என்று எப்போது எண்ணி, இறங்குகிறான், எத்தனாக, ஏய்ப்பவனாக, கள்ளத்தனம் செய்திடும் எண்ணம், நினைப்பு, தீர்மானம் தோன்றிடுவது ஏன்? எப்போது, எந்த நிலையில்? முறையற்ற செயல், தகாத வேலை, கீழான காரியம், இழிமுறை என்பதையறிந்தும் ஏன் ஈடுபடுகிறான், இத்தகைய முறைகளில்? என்றெல்லாம் எண்ணியெண்ணி ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்போது தான் மனிதனது தன்மை, தரம், பண்பு தகாத வழியில் செல்லும் நிலை, நேரம், காலம், காரணம், துணிவு, தீர்மானம்—சுருங்கக் கூறுமிடத்துச் சூழ்நிலை விளங்கும்—புரியும்—தெரியும்—முழு நிலையில், உருவில்!

இல்லாததால் திருடுகிறான். இல்லாதவன் திருடுகிறான். பட்டினியால் பிறர் பொருளை அபகரிக்கிறான் என்று கூறிவிடுவது சுலபம், சர்வ சாதாரணமான வார்த்தை! இதுமட்டும் போதாது. திருடும் காரணத்தைத் தெரிந்து புரிந்துகொள்ள!

இல்லை, வாழ வழி இல்லை. உண்ண வழி இல்லை. ஒரு வேளை சோற்றுக்கும் வழி இல்லை, என்ற உடனே திருடவா துணிகிறான்? இல்லையே, இருக்கவே முடியாதே!

இல்லாதவன் இருப்பவனிடம் வேலை தேடுகிறான், கேட்கிறான். உழைக்க அவன் தயார்; ஆனால் வேலைதான் கிடைக்கு

வில்லை. சுற்றிச் சுற்றி யலேகிறுன்—சோம்பேறி என்ற பட்டம் தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை என்ற நிலை. வீட்டிலோ மனைவி மக்கள் வேறு பட்டினி! வயதான மாதா பிதாவின் நிலை மகாமோசம், வேதனை தரும் காட்சி! நோயாளிக் குழந்தை வேறு!

இவன் ஒருவன் பெறும் ஊதியம் அந்தக்குடும்பத்திற்குப் புதுவாழ்வு—புத்துணர்ச்சி தந்திடும் புதையல்!

இந்த நிலையிலே அவன் அலைந்து அலுத்து ஆயாசத்துடன் வீடுநோக்கித் திரும்புகிறுன்! ஏக்கம் ஒரு பக்கம், துக்கம் ஒரு பக்கம்–துயர் துடைத்திட வழியில்லையே என்ற துன்பச் சூழல் மற்ருேர் பக்கம்–பட்டினிக் குடும்பம், பதை பதைத்து துடித்திடும் துன்பக் காட்சியின் தோற்றம் தோன்றி உண்டாக்கிடும் துன்ப வெள்ளம் மற்ருேர் புறம் என்ற நிலையில், சூழ்நிலையில் அவன் நடக்கிருன், வீடு நோக்கி, அலுத்து, ஆயாசத்துடன்.

தன் விதியை நோகிருன். கதியற்ற நிலையை எண்ணி யெண்ணிக் கலங்குகிருன், கஷ்டப்படும் குடும்பத்தை நினைத்துக் கண்ணீர் வடிக்கிருன். கடவுளே' என்று ஏங்குகிருன், கண்டவரிடமெல்லாம் கடன் கேட்கிருன்.

கடன் தருவார் யாருமிலர், கதியற்ற நிலை. துன்ப வெள்ளம் கரைபுரண்டோடும் சூழ்நிலை. மனிதன் மனம் மாறுகிறது! நிலைமை மாற, ஒரு பொழுதாவது நல்லபடி கழிந்துவிட, குடும்பத்தின் பசி தீர்த்திட வழியில்லையா? வாழ்வா? சாவா? என்ற மனப்போராட்டத்திலே அவன் சிக்கித் தவிக்கிருன்!

திருடுவதா? பசிக்கொடுமை தீரத்திருடுவதா? குடும்பத்தை ஒரு வேளை காப்பாற்ற வழியில்லையே? வேறு வழி? திருடத்தான் வேண்டுமா? திருடன் என்பது தெரிந்தால்—

மீண்டும் வாழ்வு ஏது. திருடனுக்கு வேலை தருவோர் யார்—இந்த ஒரு பொழுதுக்காக வாழ்வெல்லாம் திருட்டுப்பட்டம் நிலைத்து விடாதா—கூடாது கூடாது—என்று மனம் மாறுவான். ஆனால்......?

மனக்குழப்பம், வறுமை தந்த வாட்டம், வேலையற்ற வாழ்வு, பல நாள் பட்டினித்துன்பம், தொல்லை, குடும்பத்தின் கோரநிலை கொடுமை! கொடுமை! கொடிய சூழ்நிலை அவனுக்கு!

சூழ்நிலையின் காரணமாக, கொடுமையைத் தாளாது, தாளவும் முடியாது, திருடும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். தயங்கித் தயங்கி, திருடத் துணிகிறான் முதலில். ஒரு வேளைக்கு வேண்டியது கிடைத்துவிட்டால், திருடியேனும் பெற்றுவிட்டால், நாளை வேலை தேடிப் பிழைக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டு, திருடத் துணிந்து, திருடனாகிவிடுகிறான்.

மறுதினமும் வேலை கிடைக்காவிட்டால், இதே நிலைக்குச் சற்றுத் தெளிவோடு செல்கிறான், திருடுகிறான் மீண்டும், மீண்டும். திருடனாகவே ஆகிவிடுகிறான், காலப்போக்கில்; வேலை கிடைக்காத, வாழமுடியாத காரணத்தால், வறுமையால், கொடுமையால், வளமற்ற வரண்ட சூழ்நிலையால்.

திருடன், பொய்யன், புரட்டன்—என்றும் மன்னிக்கப் படுவதில்லை, இன்றைய சமுதாயத்தில். திருடனுக்குத் தண்டனை தரும் அளவோடு தீர்ந்தது சட்டம்.

ஏன் திருடினான், திருடன் திருந்திட வழி என்ன? என்று எண்ணிப்பார்த்து, திருடர்கள் ஏற்படும், ஏற்படக் காரணமான நிலைமைகளை, நினைப்புகளை, கொடுமைகளை, சக்தியற்ற சூழ்நிலையை மாற்ற, மாற்றி நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டாமா?

சூழ்நிலையால் பொய் பேசும் மனிதன், தனது சூழ்நிலையை மாற்றிக்கொண்டு, நல்லவனாக மாற மார்க்கம் அமைக்க எண்ணி, துணிந்து நல்ல வழியிலே காரியமாற்றும் சந்தர்ப்பமளித்தால், மாற முடியாத, நல்லவனாக, பொய் பேசாதவனாக முடியும். கெட்டவன் நல்லவனாவான், கெட்டவனாகும் சூழ்நிலை—நல்லவனாகும் சூழ்நிலையாக மாற்றப்பட்டால், கெட்ட சூழ்நிலையிலிருந்து, நல்ல சூழ்நிலைக்குச் சென்றால், செல்லும் வசதியும் வாய்ப்பும் அமைந்தால், அமைத்துத் தரப்பட்டால், அமைத்திடும் வழி அவனுக்குப் புரிந்தால், புரியும்படி செய்யப்பட்டால்! இதைச் செய்வது எப்படி? யார்? யார்? எதன் மூலம்? எந்த முறையில், வழியில்? என்று கேட்கிறேன்!

சூழ்நிலை வளமாக்கப்பட, சுற்றுச் சார்பு தெளிவாக்கப்பட, வாழ்க்கை வசதி சரிபடுத்தப்பட மனிதன் சிந்திக்கத் தெரிந்துகொள்ள வேண்டும், தன்னைச்சுற்றி ஆராய்ந்தறியும் அறிவு பெறவேண்டும். தன்னம்பிக்கை கொண்டு, தனது உழைப்பில் உறுதிகொண்டு, ஊக்கத்தைத் துணை கொண்டு, வாழ்க்கை வாழ்வதற்கே என்ற இலட்சிய வாழ்வு வாழக் கற்றுத்தெளிய வேண்டும்! இது எப்படி நடக்கும்? எப்படி நடத்துவது, எப்படி ஏற்படுத்துவது, இந்தச் சூழ்நிலையை!

சூழ்நிலைதான் முக்கியம், தனி மனிதனது தரமல்ல, பண்புமல்ல என்று கூறினேன். இதைக் கேட்டதும், தனி மனிதனுக்குத் தரம் தேவையற்றதா? தரமற்ற, பண்புமற்ற மனிதனைப் படைத்திடத்தானா, இந்தப் பேச்சு என்று எண்ணி விடவேண்டாம்,

தனி மனிதனது தரமும் பண்பும் மட்டுமே போதாது, சமுதாயம், மனித இனம் சீர்பட, திருந்த, நல்வாழ்வு வாழ.

சூழ்நிலை, மனிதனை மனிதனாக வாழவைத்திடும் நல்லநிலை, நல்ல சூழ்நிலை, தேவை, மிக மிகத் தேவை என்று தான் கூறுகிறேன்.

மாந்தோப்பு அமைக்கவேண்டும் என்று எண்ணுகிறோம். அதற்குத் தேவையானவை என்ன? முதன் முதலில் மாஞ்செடிகள் தேவை, மாஞ்செடிகள் கிடைத்துவிட்டால் நல்ல மாந்தோப்பு கிடைத்துவிடுமா? கண்ட இடத்திலே நட்டால் மாந்தோப்பு வளமாக வளருமா? என்று தானே யோசிப்போம், ஆரம்பத்தில்!

நல்ல நிலம்வேண்டும், நிலம் நன்றாகப் பண்படுத்தப் படவேண்டும், நீர்வளமுள்ளதா, தேவைக்குத்தக்க முறையிலே, என்றெல்லாம் கவனித்து, நிலத்தைச் சீர்திருத்தி, செப்பனிட்டு, உரமிட்டு வளப்படுத்தி வகைப்படுத்திப் பின்னர் மாஞ்செடி நட்டால் முளைக்கும் நன்றாக; செழிப்பாகவும் வளரும்.

மாந்தோப்பு அமைய, நல்ல நிலமும், நிலத்தின் தரமும் பண்பும் கவனிக்கப்படுகிறது! செடி வளரும் இடம், நல்லதாக இருக்கவேண்டும் என்ற நிலை, நியதி இருக்கிறது! அதேபோல், தனி மனிதன் தரமும், பண்புமுடையவனாக இருந்தால், இருந்துவிட்டால் மட்டுமே சமுதாயம் சீர்படும், திருந்திவிடும் என்பது எப்படி முடியும்? மனிதன் வாழும் சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வு, பழக்க வழக்கம் போன்ற பலப்பல சூழ்நிலைக்குத் தகுந்தபடிதானே மனிதனது தரமும் பண்பும் அமையும். நல்ல சூழ்நிலையில் தானே நல்ல தரமும் நற் பண்பும் வளர முடியும் வளர்ந்துகொண்டே போக முடியும் மேலும் பரவவும் முடியும்! சிந்தியுங்கள்!

எனவே மனிதனது தரமும், பண்பும் குறிப்பாக, மனித வாழ்வு மனிதத் தன்மையோடு கூடிய நல்ல வாழ்வாக

அமைவது மனிதனது சூழ்நிலையைப் பொறுத்தே இருக்கிறது என்பது நன்கு தெரிகிறது; மிகமிகத் தெளிவாகத் தெரிகிறது,

சூழ்நிலை மனிதனை இயக்குகிறது; மனிதன் சூழ்நிலைக்குக் கட்டுப்பட்டே வாழ்கிறான்; வாழவேண்டியிருக்கிறது.

மனிதன் மனவளமும், மனத்திடமும், நல்லறிவும் பெற வேண்டும். ஆராயுந்திறனை அடைந்திடவேண்டும். பகுத்தறியும் பண்பு படைத்தவனாக வாழவேண்டும். இந்தச் சூழ்நிலையை அமைத்தாகவேண்டும். மனிதத் தன்மையோடு வாழ பகுத்தறிவைப் பரப்பும் நிலை, மனிதனை 'மனிதன்' என்ற எண்ணத்தோடு வாழவைக்கும் சூழ்நிலை தேவை, உடனடியாகத் தேவை என்பதை மறுமுறையும் கூற ஆசைப்படுகிறேன்.

காலத்திற்கேற்ற கருத்துக்களைப் பரப்பி கண்மூடிப் பழக்க வழக்கங்களை நீக்கி, மனித முன்னேற்றத்தை, முன்னேற்ற எண்ணங்களை, எழுச்சியை, அறிவை, ஆராய்ச்சியைத் தடுத்திடும், விதி, குலத்துக்கோரு நீதி, மேலுலக வாழ்வு என்ற கருத்துக்களை மனித உள்ளத்திலிருந்து நீக்கி, மேலும் பரவாது தடுத்து, மனிதனை தன்னம்பிக்கையுடையவனாக, எதையும் அலசிப் பார்த்திடும் அறிவு படைத்தவனாக தனது ஊக்கத்திலும் உழைப்பிலும் உறுதி கொண்டவனாக, வாழ்க்கை நடத்திடும் பகுத்தறிவாளனாக வாழவைக்கும் நிலை, சூழ்நிலை உண்டாக்கப்படவேண்டும்.

விதி—குலத்துக்கொரு நீதி—மேலுலக வாழ்வு என்ற பழமைக் கருத்துக்களைத் தடுத்து, புதுமை எண்ணங்களை, அறிவுக் கொள்கைகளை, ஆராய்ச்சித்திறனை, விஞ்ஞானக் கருத்தை மக்கள் எண்ணத்தில் எழுப்பவேண்டும். இதற்கு இலக்கியங்களும், ஏடுகளும் மிகச்சிறந்த கருவியாகும், சாதனமுமாகும்.

புத்தகங்கள் மூலம் பழங் கருத்துக்களை, பாசி படிந்த எண்ணங்களைப் போக்கி, நல்வாழ்வுக்கான நல்லறிவுக் கருத்துக்களை புதுமை எண்ணங்களை ஏற்படுத்த முடியும், எளிதில்!

சாக்ரடீஸ், ரூஸோ, வால்டேர் போன்ற ஆசிரியர்கள் அவ்வப்போது தீட்டிய மறுமலர்ச்சி ஏடுகள் எத்தனையோ மனமாற்றங்களை, எண்ணத் தெளிவுகளை, ஏற்படுத்தின மக்களிடையே!

மக்களிடம் மங்கிக்கிடந்த சிந்தனையைத் தட்டியெழுப் பின இவர்களது புத்துணர்ச்சி ஏடுகள். மனிதன் முன்னேற, புதுமையைக்காண, புதுவாழ்வு பெற்று, நல்வாழ்வு வாழ்ந் திடப் பெருந் துணைபுரிந்தன, இத்தகைய மறுமலர்ச்சி எழுத்தாளர்களது எண்ணங்கள், எழுத்தோவியங்கள்!

அதைப்போலவே, இங்கும் இத்தமிழ்த்திரு நாட்டிலும் மறுமலர்ச்சி நூல்கள் ஏராளமாகத் தேவை!

மகேஸ்வரனைப் பற்றிய இலக்கியங்கள், ஏடுகள் நீங்கி, நீக்கப்பட்டு, மனிதப் பண்பைப் பரப்பிடும் நூல்கள் எழுதப் படவேண்டும். பழமையின் பிடியிலிருந்து நீங்க, விதியின் சுழலினின்று விடுபட, மேலுலக வாழ்வுப் போதையிலிருந்து தெளிந்திட! உலகியல் அறிவுச்சுடர்கள், பகுத்தறிவுப் புத்த கங்கள், ஏராளமாகப் பரப்பப்படவேண்டும் மக்களிடையே!

சிந்தி! யோசித்துப்பார்! ஆராய்ச்சி செய். சூழ்நிலை யைத் தெரிந்து நட! நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள். "விதியல்ல உன் வேதனைக்குக் காரணம். மதியின் துணை கொண்டு நட" என்று எடுத்துக்காட்டவேண்டும், ஏடுக ளெல்லாம்,

தமிழில் எல்லாவகைக் கருத்துக்களும், வாழ்வை வளப் படுத்தும் எல்லா முறைகளும் எழுதப்படவேண்டும்!

தமிழ்ப் புலவர்கள், தமிழ்மொழி வல்லுநர்கள், தமிழ்ப் புத்தக வித்தகர்கள் இந்தத் துறையிலே, அறிவுத் துறையிலே பெரிதும் கவனம் செலுத்தி, முத்தமிழை—முக்கியமாகப் பகுத்தறிவுப் பாதைக்கே பயன்படுத்திட வேண்டுமென்று, ஆசைப்படுகிறேன்.

சாதாரண மக்கள், பாமர மக்கள் தெளிவுபெறும் வழியிலே, இலக்கியங்களை இயற்றுங்கள். சூழ்நிலையால் மனிதன் படும்பாட்டை விளக்குங்கள்.

'சூழ்நிலை' விளக்க ஏடுகளாகவே, இலக்கியங்கள் திகழட்டும். இசை நூல்கள் பரவட்டும். நாடகங்கள் நடக்கட்டும். இதுவே எனது எண்ணம். ஆவல், ஆசை!

இந்த எண்ணம், இந்த ஆவல், இந்த ஆசை, மேதாவித் தனத்தின் விளைவல்ல, மனித உள்ளத்தின் விளைவு, விருப்பம், வேண்டுகோள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதன் தன்னைச் சுற்றிலும் ஆராய்ந்து, சூழ்நிலையைத் தெளிந்து, தெரிந்து நடந்திடத் தூண்டிடும் ஏடுகளை எழுதியாகவேண்டும், தமிழில்!

இத்தகைய ஏடுகளை, மனித சமுதாயத்தின் நிலையை, வளர்ச்சியை நல்வாழ்வுக்கான வளர்ச்சியை, வளர்ச்சிக்கான வழிகளை, முறைகளை, முற்போக்கு எண்ணங்களை, ஏற்பாடுகளை, அறிவுக் கருத்துக்களை அனைவரும் படித்தும், படிக்கப் பக்கம் நின்று கேட்டும், பாவாணர்கள் பாகு மொழியிலே பாடிடக் கேட்டும், நடிகமணிகள் நடித்திடும் காட்சிகளைக் கண்டும் களித்தும், நாட்டு மக்கள் அனைவரும் நல்வாழ்வுப் பாதையை, நன்னெறியை, நன்கு உணர்ந்து, நடந்திட வேண்டும்.

முத்தமிழின் 'தரங்கெட்டு விடும், தரங்கெட்டு விடும்' என்று பழம் பல்லவியையே பாடிக்கொண்டு சில பலர் ஒரு புறம், இருந்துவரும் இந்த நேரத்திலும்,மறுமலர்ச்சி, முத்தமிழின் மறுமலர்ச்சி, மாறுதலுக்கான அறிகுறி இல்லாமலில்லை, இருக்கத்தான் இருக்கிறது.

நல்ல வாழ்வை, வாழ்வை வளப்படுத்திடும், வாழ்வை உண்டாக்கிடும் எண்ணங்களை எடுத்துக்காட்டிடும் ஏடுகள் சிலபல நாட்டிலே நடமாடிடுவதைக் காண்கிறோம்.

நல்லறிவுக் கருத்துக்களைப் போதித்திடும் நானுவித ஏடுகளும், இசை நிகழ்ச்சிகளும், நாடகங்களும், மக்களிடையே நல்லதொரு வரவேற்பைப் பெற்றிடத்தவறக் காணோம்!

தமிழ், தமிழ்ப்பேச்சு, தமிழ் எழுத்து, தமிழ்ப்புலவர், தமிழ்ப் புத்தகங்கள் என்றால் ஏதோ வேறு வழியற்றவன், விதியற்றவன், தமிழைக் கட்டியழுகிறான் என்றிருந்தகாலம் மாறி, இன்று தமிழன், தமிழ்மொழி, தமிழினம், தமிழகம், தமிழ்த்திருநாடு என்றெல்லாம் பேசப்படும் நிலை, தமிழினம் தமிழ் மொழியைப் போற்றிடும் நிலை, தன்மானங்கொண்டுள்ள நிலை, உண்டாக்கித்தானே இருக்கிறது!

முத்தமிழின் முன்னேற்றம், கருத்து முன்னேற்றம், கால வேகத்தோடு ஒட்டி, சூழ்நிலைக்கேற்ப, நல்ல வாழ்வை நோக்கி, நல்லறிவுப் பாதையில் சென்றுகொண்டே தான் இருக்கிறது, நிச்சயமாக.

தமிழின் மறுமலர்ச்சிக்கு, முத்தமிழின் மறுமலர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள், தடைகள் பலப்பலவிதங்களிலேஉண்டாகியே தீரும், உண்டாகியும் வருகிறது.

மத மூட நம்பிக்கைகளின் பேரால், ஆண்டவன் பக்தி, பாராயணம் பழங்கருத்து, பராசர் வாக்கு, இதிகாசம், எம்பெருமான் திருவாக்கு, அருள்வாக்கு, விதி, மோட்சம், நரகம்

என்பதின் மேலுள்ள பற்று, பாசம், பயம் முதலான பலப்பல வழிகளிலே, முட்டுக்கட்டைகள் முத்தமிழ் குறித்து மட்டு மல்ல, எங்கும், எதற்கும், எந்த நாட்டிலும், எந்தக் காலத் திலும் ஏற்பட்டேதான் இருக்கின்றன.

வரலாற்றைக் கவனித்துப் பாருங்கள். உலகின் பற்பல நாடுகளிலும், பலப்பல நூற்றுண்டுகளாக மனித வாழ்வின், வாழ்க்கை முறைகளும், மன மாறுதல்களும் சுலபத்தில் ஏற்பட்டுவிடவில்லை.

சிறு சிறு மாறுதல்களும், ஏன்? மிகமிகச் சாதாரண மாறுதலுங்கூட, மகத்தான எதிர்ப்புக்கும், ஏளனத்திற்கும் ஆளான பின்னரே, ஆரம்பத்தில் எதிர்க்கப்பட்ட பின்னரே தான் மக்கள் மனதில் தோன்ற ஆரம்பித்தன. மேலும் எண் ணத்தெளிவை ஏற்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும் என்ற எண்ணத்தை, எண்ண மாறுதலை, எண்ண முன் னேற்றத்தை ஏற்படுத்திடும் நிலை, சூழ்நிலை ஏற்பட்டது.

மாறுதலைக் கண்டு மக்கள் மருண்டனர். மாறுதலே தேவையில்லை என்றுங்கூட எண்ணினர்—மனித வாழ்வில் மாறுதலுக்கான அறிகுறி, ஆரம்பம் ஆரம்பித்த நேரத்திலே!

உலகம் தட்டை என்று உலகமே எண்ணியிருந்த நேரத்திலே—நம்பியும் இருந்த காலத்திலே, கடவுள் கதை கள் எல்லாம் இதே கருத்தை வலியுறுத்தி, வலியுறுத்தி வழங்கி வந்த வழிவழி எண்ணத்தை சாதாரணமாகவா, மாற்ற முடிந்தது.

உலகம் தட்டையல்ல! நீண்ட சதுர வடிவமானதல்ல! தட்டைப்போலத்தான் கண்ணுக்குத் தோன்றுகிறது. ஆனால் கருத்தூன்றிக் கவனித்தால் உலகம் ஒரு உருண்டை. உருண்டை வடிவமானது என்று முதன் முதலில் கூறிய **கலீலியோ** கல்லடிபட்டார். கசடன்–கடவுள் தன்மைக்கே விரோதி என்ற தூற்றுதல் மொழிகளுக்கெல்லாம் ஆளானன்.

கேலிக்கும், கண்டனத்திற்கும், கல்லடிக்கும், சொல்ல டிக்கும் கலங்கிடாது, எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் அஞ் சாது, எண்ணத் தெளிவோடு தனது சிந்தனையின் முடிவை, உலகம் தட்டையல்ல—உருண்டை என்ற உண்மையை உலகினர்க்கு உணர்த்திடத் தயங்கிடவில்லை அந்தக் கலீலியோ அந்தக் காலத்திலே!

உலகம் உருண்டை என்ற உண்மை, இன்று உலகம் முழுதும் ஒப்பிய உண்மையாக உலவிடக் காண்கிறோம்! உபயோகமும் இருக்கிறது இந்த உண்மையால் உலகிற்கே!

எந்தத் துறையிலும்,எந்தவிதக் கருத்து மாறுதல்களுக் கும் ஆரம்பத்திலேயே ஆதரவு கிடைத்துவிடாது என்ற எண்ணத்தைக்கொண்டு எதிர்ப்பு,ஏளனம்,தடை, தண்டனை இவற்றைக்கண்டு இதற்கெல்லாம் மனித இனம் கட்டுப்பட்டு நின்றுவிட்டால்—நின்று விட்டிருந்தால் மனித வாழ்வில் எத்தகைய மாறுதல்களும், முன்னேற்றமும் ஏற்படமுடி யாது ஏற்பட்டிருக்கவும் முடியாது என்பதை மீண்டும் வலி யுறுத்தி குறிப்பிட விரும்புகிறேன்.

நல்ல மாந்தோப்பு அமைய—நல்ல களம்—விளை நிலம் எப்படி முக்கியமாகிறதோ—மூலமுமாகிறதோ அப்படியே தான் மனிதன் தரமும், பண்பும் படைத்தவனாக நல்ல வாழ்வு—நாகரீக வாழ்வு வாழவேண்டுமானால், மனிதன் வாழ்ந்திடும் களம்—நிலம், சமுதாயம், சமுதாயத்தின் நிலை, சூழ்நிலை முக்கியமாகிறது—மூலமும் ஆகிறது?

சமுதாயம், மனித சமுதாயம் தனது முக்கிய தேவை களை உணவு, உடை, வீடு என்ற மூன்று, முக்கிய, முதற் தேவைகளை முழு அளவில்—தேவையான அளவில், தேவை யான நேரத்தில் பெற்று திருப்தியான வாழ்வு வாழ்ந்திட, வாய்ப்பும் வசதியும் பெற்றாகவேண்டும்.

மனிதன் தனது அறிவின் துணைகொண்டு இயற்கை வளத்தைப் பண்படுத்தி, பாகுபடுத்தி, இயற்கைச் சக்திகளை கட்டுப்படுத்தி பலப்பல விதங்களிலே தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளபடி மனிதன் இயற்கை வளத்திலிருந்து, பெறும் தனது தேவைகளை மழை, புயல், காற்று, நீர், நெருப்பு, காட்டுமிருகங்கள் இவைகளினின்று பாதுகாத்து, சேமித்து வைத்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.

தட்ப வெட்பம்—வறண்ட நிலவளம்—இயற்கையின் திடீர் மாறுதல்களின் விளைவு ஆகிய சூழ்நிலையின் காரணமாக, முதற்தேவைகள், தேவையான அளவு, தேவையான நேரத்தில் கிடைக்காத—கிடைக்க முடியாத திருப்தியற்ற நிலையில் ஏற்கனவே அறிவையும்ஆராய்ச்சியையும்,சூழ்நிலையும், தெரிந்து—தெளிந்து—புரிந்து சேமித்து வைத்த மனிதனது தேவைக்கு மேற்பட்ட தேவையில்—முதற் தேவையில், முக்கிய தேவையான உணவு, உடைகளை தெரிந்தோ தெரியாமலோ தேவையான அளவு எடுத்துக் கொள்கிறான்.

இந்த நிலையில் ஏய்ப்பவனும், ஏய்க்கப்படுபவனும்—எத்தனும், ஏமாளியும்—சுரண்டுபவனும், சுரண்டப்படுபவனும்—உழைப்பவனும், உழையாது பிறர் உழைப்பை உறிஞ்சி உண்டு கொழுத்திடுவோனும்—நன்மையும், தீமையும்—பொய்யும், புரட்டும்-புகுந்தன மனித வாழ்வில்!

மனித வாழ்வு—இன்றைய மனித வாழ்வு எத்தனையோ மனப்போராட்டங்களிடையேயும் சுருங்கக் கூறுமிடத்து, வசதியையும், வாய்ப்பையும்—சமயத்தையும்,

சந்தர்ப்பத்தையும்—அறிவையும், ஆற்றலையும்—அறியாமையையும், அஞ்ஞானத்தையும்—பெருமளவு விஞ்ஞானத்தை துணைகொண்டு நடந்திடும் நிலையில் இருக்கிறது.

"மனிதர் உணவை மனிதர் பறித்திடும் வழக்கம் இனியுண்டோ" என்று பாடிவிட்டால் மட்டுமே போதுமா? போதாதே! மனிதன் உணவை, மனிதனே பறிக்கிறான். ஒருவன் உண்ணும் உணவை இன்னொரு மனிதன் பறிக்கிறான்! ஏன்? எந்தச் சூழ்நிலையில்?

மனிதர் உணவை மனிதர் பறிப்பதுமட்டுமல்ல, மனிதனை மனிதனே மனிதனாக மதிக்காத மனப்பான்மை, நிறுத்துப்பார்த்திடும் நேர்மையற்ற நிலை—மதம், சாதி, ஆண்டவன் தூதன், ஆண்டான் அடிமை, பிறப்பால் உயர்ந்தோன், பிறப்பால் தாழ்ந்தோன், ஏழை பணக்காரன் இன்னும் எத்தனை எத்தனையோ முரண்பட்ட கொள்கையினிடையே சிக்கிச் சீரழியவில்லையா, இன்றைய மனித வாழ்க்கை!

எத்தனையோ சிக்கல்களுக்கிடையே—முரண்பட்ட மூட நம்பிக்கைகளுக்கிடையே—அறிவாளி அறிவற்றவனையும்—இருப்பவன் இல்லாதவனையும்—பலமுள்ளவன் பலமற்றவனையும்—சுரண்டிச் சுகபோகியாக வாழ்ந்திட வாய்ப்பும் வசதியும் அமைந்ததாகத்தானே இன்றைய சமுதாயம் இருக்கிறது!

விடுவிக்க முடியாத வாழ்வுச் சிக்கல்களும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளும், மூட நம்பிக்கைகளும், சுய சிந்தனையற்ற, சலிப்பான சத்தற்ற வாழ்க்கை முறையுமே தான் இன்றைய வாழ்வை—மனித வாழ்வை—மிருக நிலைக்கே மீண்டும் மீண்டும் கொண்டு செல்லுகின்றன!

வாழ்வுச் சிக்கல்களை சீர்படுத்தி; செப்பனிட்டு முரண்பட்ட கொள்கைகளிலே தெளிவடைந்து, மூட நம்பிக்கைகளை முறியடித்துச் சுய சிந்தனையாளனாக மனிதன் மாறிட வேண்டாமா?

ஏன் வாழ்விலே சிக்கல்கள் ஏற்படுகின்றன? எத்தகைய முரண்பட்ட கொள்கைகள் நீக்கப்படவேண்டும்? மூட நம்பிக்கையால் ஏற்படும் முட்டுக்கட்டைகள் என்னென்ன? எவை யெவை? என்றெல்லாம் மனிதன் சிந்தித்துச் சிந்தித்து சிந்தனைத் தெளிவு பெற்று தெளிந்த வாழ்வு—திருப்தியான வாழ்வு—மனிதனை மனிதனாக வாழ வைத்திடும் வாழ்வு—நாகரீக வாழ்வு—நல்ல வாழ்வு வாழ வேண்டாமா மக்கள்!

நாகரீக வாழ்வு—நல்ல வாழ்வு வாழ்ந்திட, மக்களைத் தயார் செய்திடுவதே இன்றைய பணி—முதற்பணி—முக்கிய பணி—மக்கட்பணி!

மனிதாபிமானம் படைத்த எவரும் இந்த முயற்சியில் ஈடுபட தயங்கிடவோ—மயங்கிடவோ—மருண்டிடவோ கூடாது! கூடாது!

மக்களிடையே மத மூட நம்பிக்கைகளைப் போக்கி சாதி, சமய பேதங்களையகற்றி, சமத்துவத்தையும், சன்மார்க்கத்தையும் ஏற்படுத்தி, அஞ்ஞானத்தை நீக்கி விஞ்ஞான உணர்வை ஊட்டித் தன்னம்பிக்கையையும், தளராத உழைப்பையும், ஊக்கத்தையும் உண்டாக்கித் தீரவேண்டும்!

இந்த மாறுதலை உண்டாக்கிட நல்லறிவும், நல்லெண்ணமும் படைத்தோர், அறிவிலும் ஆற்றலிலும் ஆராய்ச்சியிலும் உணர்ந்தோர், ஊருக்கு உழைத்திடும் உத்தம எண்ணம் கொண்டோர், தன்மானத்தில், தமிழரது தன்மான வாழ்வில் தளராத தன்னம்பிக்கைகொண்டு—தமிழை—தமிழ் மொழியை—முத்தமிழை—தமிழர் வாழ்வு—தன்மான வாழ்வாக—நாகரீக வாழ்வாக–நல்ல வாழ்வாக மாற்றிடப் பயன்படுத்திட வேண்டும்.

மக்களிடையே எத்தகைய மனமாற்றமும், எண்ணத் தெளிவும், கருத்துக்களும் பரவிட, எளிதில் பரவிட, மொழி, முதற் கருவியாக விளங்குகிறது.

மொழி வழியேதான் எத்தகைய கருத்துக்களும், பரவு கின்றன; பரப்பப்படுகின்றன முதலில்.

தமிழ்மொழி மூலம், முத்தமிழ் மூலம், தமிழரது வாழ் வில் மாறுதலை யுண்டாக்கிட முடியும் நிச்சயமாக.

தமிழர், தம்மின மொழியை, தமிழ் மொழியைப் பெரி தென மதித்துப் போற்றி, புகழ்ந்து, பரப்பிடும் நிலைமை, மறுமலர்ச்சி, தமிழின் மறுமலர்ச்சி பூத்துக்குலுங்கிவரும் இந்த நேரத்திலே தான், இந்தச் சூழ்நிலையில் தான், தமிழ ரை தன்மானமுள்ளோராக, நாகரீக மாந்தராக, நல்ல வாழ்வு நடத்திடும் மனிதராக மாற்ற முடியும்.

தமிழில் தலைசிறந்த கருத்துக்கள் யாவும் தரப்பட வேண்டும். தமிழில் தன்மானக் கருத்துக்கள், மனிதாபிமான எண்ணங்கள் கொண்ட ஏடுகள் எழுதப்பட்டு மக்களிடையே மறுமலர்ச்சியை உண்டாக்கவேண்டும்.

இன்றைய தமிழ்மொழிப் புலமை படைத்தோர் தமிழ் வாணர்கள், தமிழ்ப் புத்தக வித்தகர்கள் தரங்கெட்டுவிடும் என்று, பழமை விரும்பிகளாகவே விளங்கிவராது, மறு மலர்ச்சி நூல்களை இயற்றித்தர வேண்டுகிறேன்.

கால வேகத்திற்கு ஏற்ற முறையிலே, விஞ்ஞானம் வளர்ந்து முன்னேறி வரும் இந்த நாளிலே அகில உலகின் நிலையையும் விளக்கிடும் ஏடுகளைத் தமிழில், தமிழர்கட்குத் தரவேண்டும்.

மறுமலர்ச்சி என்றதும் மருண்டிடும் மனப்பண்பு படைத்தவராகாது, மனவலிமை படைத்து, மனிதாபிமானத் தைத் துணைகொண்டு மறுமலர்ச்சி நூல்களை எழுதுங்கள், எழுதுங்கள் என்று தமிழரை, தமிழ்ப் புத்தக வித்தகர்களைக் கேட்டுக்கொள்கிறேன்!

புதிய மறுமலர்ச்சி ஏடுகளை எழுதுங்கள்; ஏழையின் துயரைப் பாடுங்கள், ஏன் ஏழையானுன் என்று கேளுங்கள்; ஏழையின் நிலையை, பாட்டாளியின் துயரவாழ்வைக் காவியமாக்குங்கள், தொழிலாளியின் துயரை, துன்ப வெள்ளத்தை, நாட்டின் நாலுவித நிலையை, மனித வாழ்வின் சூழ்நிலையை விளக்குங்கள் என்று மீண்டும்மீண்டும் வேண்டுகிறேன்.

ஆரம்பத்திலேஏற்படும்எதிர்ப்பைக்கண்டு மருளவேண்டாம்; தடைகள், தண்டனைகள், எதையும் பொருட்படுத்திட வேண்டாம். துணிவுடன் காரியமாற்றுங்கள். வெற்றி நிச்சயம் கிடைத்தே தீரும் என்பது உறுதி, மிக மிக உறுதி!

தமிழ்ப் புலவர்களே! தமிழ்ப் புத்தக வித்தகரே, தமிழனின் எழுத்து, பேச்சு, எண்ணம், கருத்து, கொள்கை, கோட்பாடு யாவும் பழைய புராண, புண்ணிய இலக்கியங்களுடனேயே நின்று விடத்தான் வேண்டுமா? கூறிவிடுங்கள், மனம் விட்டு!

நம்மால் முடியாத, புதிய இலக்கியங்களை உண்டாக்கிட, புதிய எண்ணங்களை, ஏற்பாடுகளை, காலத்திற்கேற்ற கருத்துக்களை, சூழ்நிலையை உணர்ந்து நடந்திடும் மன உறுதியைத் தந்திடும் ஏடுகளை, எழுதிட முடியாதா? ஏன் முடியாது? முடியும். நிச்சயமாக முடியும். ஆனுல்......?

'தரங் கெட்டுவிடும், தரங் கெட்டுவிடும்' என்ற பல்லவியையே பாடிப் பாடி பழமையைப் போற்றிப் புகழ்ந்திடும் மனம் படைத்தோர், மாறுதலை எதிர்ப்போர், வெறுப்போர், மறுப்போர் இத்துறையிலே ஈடுபட மறுக்கலாம், ஈடுபடுவோரைத் தடுத்து நிறுத்தவும் முனையலாம்;

தடைகள் பல ஏற்படுத்தித் துன்புறுத்தலாம்; தயவு தாட்சண்யம், பக்தி, முக்தி, மோட்சம், நரகம் சாதிமதம் என்ற பலப்பல முறைகளின் துணைகொண்டு.

எந்த முறைகளின் துணைகொண்டும், தமிழகத்தில் ஏற்பட்டுவிட்ட மாறுதலை, தமிழன் மறுமலர்ச்சியைத் தடுத்திடவோ, தடைசெய்து நிறுத்திடவோ, முடியாது; ஆம் நிச்சயமாக முடியாது; முடியவே முடியாது.

கடந்த பத்தாண்டு காலத்திலே தமிழின் வளர்ச்சி மகத்தானது; மகிழ்ச்சி தரும் வகையில் மாறுதலடைந்துள்ளது.

நாட்டிலே நடமாடும் நானாவித நிகழ்ச்சிகளும், ஏட்டிலே படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. அறிவு நூல்கள் நாட்டில் நல்லதொரு வரவேற்பைப் பெற்றுவருகின்றன.

தமிழ் இசை உணர்ச்சி பெருகி, வளர்ச்சியடைந்து வருகிறது. தன்மதிப்புப் பாடல்கள் தமிழகத்தில் பாடப்பட்டு பரவி வருகின்றன.

நாடகத் துறையிலேயும், நல்லதொரு மாறுதல், மறுமலர்ச்சி தோன்றிவிட்டது. நல்லறிவுப்பாதைக்கான—நாடகங்கள் சூழ்நிலையால் பரதவித்திடும் மனிதரைப்பற்றிய நாடகங்கள் நடிக்கப்படுகின்றன.

முத்தமிழ், நாடெங்கும் முழங்கப்படுகிறது. முத்தமிழ், தமிழர் வாழ்வும் வளமும் பற்றிய அக்கறைகொண்ட முறையில், துறையில், நல்ல வாழ்வுக்கான கருத்துக்களைப் பரப்பிடும் பணியில் பயன்படுத்தப்படுகின்றது என்ற செய்திகள் ஓரளவுக்கு மன மகிழ்ச்சியைத் தருகின்றன.

முத்தமிழில் புலமை பெற்று முன்னேற்றமடைந்துள்ளோர், இந்த மறுமலர்ச்சிக்கான ஆக்க வேலையிலே ஊக்கமேதுமின்றி, ஒதுங்கி நின்று விடுவது முறையல்ல! முன்

வந்து இந்த மறுமலர்ச்சியை மொழிவழி ஏற்பட்டுள்ள விழிப்பை வகைப்படுத்திட வேண்டும்.

இப்படிச் செய்யாது, 'தரம், தரம்' என்று கூறிக்கொண்டேயிருந்தால் ஒரு பயனும் ஏற்படாது.

இதனால் மறுமலர்ச்சி மங்கிவிடாது; மறைந்தும் விடாது.

மறுமலர்ச்சி நூல்களிலே 'தரம்' குறைந்ததென்ற குற்றத்தைக் கூறிக்கொண்டேயிருந்தாலும், அவற்றின் மூலம் நாட்டுக்குக் கிடைத்திடும் நற்பயனை, நற்பயன் கருதிச் செய்யப்படும் முயற்சியைப் பாராட்டாமலிருக்க முடியாது, யாராயிருந்தாலும்!

பயன் தரும் எந்தக் காரியமும் தரமுள்ளவையாகத்தான் இருந்திட வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

துவக்கத்திலே, பயன் பெரிதாகவும், தரம் சிறிதாகவும் இருக்கலாம். பயன் பெருகப் பெருக, தரத்தைத் தானே உயர்த்திப் பண்படுத்திட முடியுமே!

தேசீய கவி பாரதியின் பாடல்கள்தான் மக்களிடையே எந்தவிதத்தில் நடமாட ஆரம்பித்தன? தரம் கருதியா, முதலில் மக்கள் மனதில் பதிந்தன—இல்லையே?

பாரதியின் பாட்டும் ஒரு பாட்டா? என்று எத்தனை புலவர்கள் பரிகசித்தனர் பாரதியின்பாட்டை, ஆரம்பத்தில். ஆனால்...?

பயன், வெள்ளையனை விரட்டிட, மக்களிடையே வீராவேச உணர்ச்சியைத்தட்டி எழுப்பின பாரதியின் பாடல்கள், அந்தக் காலத்தில்.

"அச்சமில்லை! அச்சமில்லை! உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை! அச்சமில்லை!" என்று மக்கள் வெள்ளையனை எதிர்த்து ஆர்ப்பரிக்கும் அளவுக்கு வீர உணர்ச்சியைத் தட்டியெழுப்பியதே, பாரதியின் பாடல்கள்!

பயன், சுதந்திரப் போராட்டத்திற்கு மக்களை தயாரித்துத் தருமளவுக்கு பயன்பட்டதே பாரதியின் பாடல்கள், அன்று.

முதலில் பயன் கருதி பரவிய, போற்றப்பட்ட பாடல்களிலே இன்று தரமும், பண்பும் இருப்பதைப் பலர் காட்டிடக்காண்கிறோம்—கூறிடக் கேட்கிறோமே.

இன்று இசையரங்குகளிலே, தனி அரசு செலுத்திடும் தியாகராஜ கீர்த்தனங்களின் ஆரம்ப நிலை என்ன? எந்த அளவுக்கு அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன என்பதை எண்ணிப்பாருங்கள்.

தியாகராஜ கீர்த்தனங்கள் ஆரம்பத்தில் பஜனை மடங்களில் பாடப்படும் வெறும் பக்திப் பாடல்களாக மட்டுமே மதிக்கப்பட்டன—கையாளப்பட்டன.

நாளடைவில் காஞ்சீபுரம் **நயினாப்பிள்ளை** அவர்கள் அவற்றிற்கு இராகம், தாளம், பல்லவி முதலிய இசை அமைப்புகளை பிரித்துப் பாகுபடுத்தி, பாடிக் காட்டினார் முதலில்.

நயினாப்பிள்ளை அவர்கள் செய்த மாறுதல் இசைத் துறையிலே மாறுதலை உண்டாக்கிவிட்டது! இதன் பின்னரே தியாகராஜ கீர்த்தனம் இசை வாணர்களின் திறமையை எடுத்துக் காட்டிடும் கருவியாகக் கையாளப்பட்டு வருகிறது.

இந்த முறையிலே தான், பயன் கருதிச் செய்யப்படும் எந்த மாறுதலும், மறுமலர்ச்சியும், அதற்கான முயற்சியும் ஆரம்பத்திலே தரம் தாழ்ந்தவைகளாகக் கருதப்பட்டாலும், அவைதரும் பயனுள்ள விளைவுகளால் பலவித நன்மைகள் நிச்சயம் ஏற்படுகின்றன.

நான் இடையிலே குறிப்பிட்டபடி தமிழர் வாழ்வு தழைக்க தமிழ் மனம் நாடெங்கும் செழித்துக் கொழிக்க, தமிழர் தமிழராய் வாழ, தன்மானத்துடன் வாழ, தமிழன் தன்னைத்தான் உணர்ந்து, தன்னம்பிக்கை பெற்றுத் தன்னையும், தன்னைச் சுற்றிலுமுள்ள சமுதாயத்தின் சூழ்நிலையைத்

தெரிந்து—புரிந்து—தெளிந்து—வாழும் நிலைக்கான வகையில், வழியில், முறையில் முத்தமிழ் விளங்கவேண்டும், பயன்படவேண்டும், பயன்படுத்தப்படவேண்டும் என்பதை மறுபடியும் உங்கள் நினைவுக்கு கொண்டு வருகிறேன்.

இசைத் துறையையும் பழமையை நீக்கிப் புதுமை எண்ணங்களையும், நல்வாழ்வுக் கருத்துக்களையும், புகுத்திப் பயன்படுத்தவேண்டும்.

ரேடியோவைத் திருப்பினால்"ஏன் பள்ளிகொண்டீரையா ஸ்ரீரங்கநாதரே" என்பன போன்ற பாடல்களைக் கேட்கிறோம் அடிக்கடி. என்றோ படுத்து எழுந்திராத—எழுந்திருக்கவும் முடியாதவரைப்பற்றி ஆராய்ச்சியேன்? இதை விட்டு மக்கள் மனவளத்திற்கான பாதையிலே இசை வல்லுணர்கள்–இசைவாணர்கள் தம் திறமையை பயன்படுத்த வேண்டுகிறேன்.

நாடகத்துறை நல்லதொரு மலர்ச்சி அடைந்துள்ளது, மறுமலர்ச்சி துறையில் என்பதற்கு சந்தேகமே இல்லை.

கடந்த பத்தாண்டு காலத்திலே 'திருமழிசை ஆழ்வார்' "ஐயப்பன்" போன்ற ஓரிரு புராண நாடகங்கள் தவிர, வேறெந்த புராண நாடகங்களும் அரங்கேற்றப்பட்டதாகத் தெரியவில்லை!

"மானேஜர்" "ரத்தக்கண்ணீர்" 'வாழ முடியாதவர்கள்' "விடியுமா?" "யார் குற்றவாளி?" "தோழன்" "கைதி" என்பன போன்ற பலப்பல நாடகங்கள் தான் நாட்டில் நடமாடுகின்றன!

இவைகளிலே கலைத்திறனும், தரமும் குறைந்திருக்கலாம் ஒரு சில புலவர்களின் எண்ணப்படி. ஆனால், காலத்திற்கேற்ற கருத்துக்களும், சமுதாய சீர்திருத்தத்திற்கான வழிகளும், வகைகளும் எடுத்துக்காட்டப் படுகின்றன, ஆராயப்படுகின்றன என்பதை எவராலும் மறுக்கமுடியாது!

"பழைய புராண இலக்கியங்களை எல்லாம் பயனற்றவை என்று ஒதுக்கி விடாதீர்கள். தேடித் துருவிப்பார்த்தால் தினையளவேனும் பயன் தராமல் போகாது" என்றும் கூறுகின்றனர் ஒரு சிலர்.

காஞ்சியிலே உள்ள பெரிய தேரிலே ஒரு மானை அமரவைத்து, தேரை கவனியாதே! மானைப்பார்! அதன் மருளும் விழிகளைப்பார்! அதன் உடலிலே உள்ள புள்ளிகளைப்பார்! காதுகளைக் கவனி! என்றால் எத்தனைபேர் காண்பர்—காணமுடியும்? இது போலத்தானே புராணங்களிலும், பயனைத்தேடி அலைவதும்.

முக்கனி படைத்த நாடு, முத்தமிழ் படைத்த நாடு, முத்தமிழால் முன்னேற, மறுமலர்ச்சி பெற முத்தமிழைப் போற்றுங்கள்! முத்தமிழை முன்னேற்ற பாதைக்கு பயன்படுத்துங்கள்.

தமிழில் வரலாறுகளில் வரும் விடுதலை வீரர்களைத் தீட்டிக் காட்டுங்கள். விஞ்ஞான முன்னேற்றத்தை விளக்குங்கள். மத—மூட நம்பிக்கைகளை தகர்த்தெரியுங்கள். வாழ்ந்த இனம் ஏன் வீழ்ந்தது? எந்தக் காரணத்தால்? எந்தக் கருத்துக்களை கையாள நேரிட்டதால் என்றெல்லாம் கேளுங்கள். விடை காணுங்கள்.

ஆராய்ந்து, ஆராய்ந்து அலசிப்பார்த்து அழைத்து வாருங்கள்—தமிழன் தாழ்ந்ததற்கான காரணங்களை. தமிழர் வாழ்வில் புகுந்த முரண்பட்ட மத, மூட நம்பிக்கைகளை தமிழரிடமிருந்து விரட்டுங்கள்.

வஞ்சக வலை வீசி தம் வாழ்வை வளப்படுத்திக்கொண்ட **வைதீக வெங்கண்ணு**வின் வரலாற்றை ஏட்டிலே படம்பிடித்துக் காட்டுங்கள். தன்மானத்துடன் தன்நிகரற்று விளங்கிய தஞ்சை பேரரசு வேதியன் வெங்கண்ணு வழி சென்றதால், வீழ்ந்த பரிதாபத்தை—சூழ்நிலையை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்! ஏன் செய்யக்கூடாது இவைகளை யெல்லாம்?

வெங்கண்ணுமட்டுமா? எத்தனை பூர்ணையாக்கள்—எத்தனை காகப்பட்டர்கள்? எத்தனை சாணக்கியர்கள். அவர்களின் தந்திரங்களை யெல்லாம்—அவர்கள் கையாண்ட வேத—சாஸ்திர, புராண—மதமென்ற வஞ்சக வலைகளை யெல்லாம் விளக்கிக் காட்டுங்கள்! கூடாதா?

மீண்டும் கூறுகிறேன், முத்தமிழ், சூழ்நிலையை மனித வாழ்வின் சூழ்நிலையை, வளப்படுத்தும் வகையிலே பண்படுத்தப்படவேண்டும் — பரப்பப்படவேண்டும்—பயன்படுத்தப்பட வேண்டும்.

சூழ்நிலையை எதிர்த்துப் போராடி முன்னேற முடியாது சிக்கிச் சீரழியும் மக்களை ஏட்டிலும், இசையிலும், நாடகத்திலும் கண்டு; மனித முன்னேற்றத்தின் எதிரான—மனிதாபிமானத்திற்கு மாறான—நிலையை—சமுதாயத்தின் அமைப்பை—பழக்கங்களை—வழக்கங்களை—மனிதனது சுற்றுச் சார்பை—சூழ்நிலையைத் திருத்துங்கள், தெளிவாக்குங்கள், மாற்றுங்கள் அறிவின் துணைகொண்டு.

வாலிபர்களாகிய நீங்கள் இந்த மாணவப் பருவத்திலே, முத்தமிழிலே பற்றுகொண்டு, முத்தமிழ் மூலம், நாட்டின் நிலையை—சூழ்நிலையை நன்கு தெரிந்து, நாட்டின் எதிர்கால ஏற்றத்திற்கான பற்று—பாசம்—பயிற்சி பெறவேண்டும்! பெறவேண்டும் பகுத்தறிவின் துணைகொண்டு!

வாழ்க! வளர்க! முத்தமிழ்!

*

# ஏ, தாழ்ந்த தமிழகமே!

★

## புரட்சியின் சிகரம்

தலைவர் அவர்களே! அருமைத் தோழர்களே!! மிக உற்சாகத்துடன் ஒரு கவிக்கும் (பாரதி தாசன்) ஒரு பேராசிரியருக்கும் [பேராசிரியர் கா. சு. பிள்ளை] சிறந்த முறையிலே பாராட்டுதல்கள் நடத்துகிற இந்த உங்கள் சம்பவத்திலே, நான் கலந்துகொண்டு பேசுவதற்கும், இதில் பங்கு எடுத்துக்கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கும் எனது மகிழ்ச்சி. இந்த நிகழ்ச்சி ஒரு சில நாட்களுக்கு முன்பே நடந்திருக்கவேண்டும்; பல வேலையின் காரணமாக நான் வரத் தவறியதால் முடியவில்லை; அதற்கு மன்னிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களுக்கு என்னை அறிமுகப்படுத்திய தோழர் தண்டபாணி அவர்கள் பலபடச் சொல்லி விட்டார். அவர் என்னைப் புரட்சியின் சிகரம் என்றார்; புரட்சி இவ்வளவு குள்ளமாயிராது. புரட்சியின் சிகரம் என்றால், அது இங்கே அமர்ந்திருக்கும் டாக்டர் சிதம்பரநாதன் அவர்களுக்குப் பொருந்தும். அவர் மிகவும் உயரமானவர். ஆகவே, நான் புரட்சியின் சிகரத்திற்குப் பக்கத்திலே, மலைச் சாரலிலே நின்றுகொண்டு ஏதோ சில பேசலாமென்றிருக்கிறேன்.

# ஒரே இனம்

கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அளித்த கவிதைகளை நான் பார்த்திருக்கிறேன்; படித்துமிருக்கிறேன் என்பதற்காக மட்டுமல்ல நான் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைக்கப் பிரியப்படுவது. புரட்சிக் கவியும் நானும் ஒரே இனம்; ஒரே மனக்கொள்கை உடையவர்கள். பொதுமக்கள் துர்ப்பாக்கிய வசமாக, அவர் நாட்டுக்கு ஆற்றுகின்ற தொண்டைப்பற்றி நினைக்காவிட்டாலும் ,ஒரு சிறு நன்றியாவது செலுத்தாவிட்டாலும், பல மாணவர்களின் உள்ளங்களிலே பாரதிதாசன் மேல் அன்பு ஊடுருவிப்பாய்ந்து, அவருக்கு இப்படிப்பட்ட பாராட்டுதல் விழா நடத்துவது பற்றிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் மகிழ்ச்சியுடன் ஆச்சரியமும் கலந்து வருகிறது. பலர் படித்தவர்கள். கட்சிக் கொள்கைகளைப் பரப்புபவர் என்று கூறுகிறார்கள்; புரட்சிக் கவிஞரைப் பற்றிக் குறிப்பிடும்போது, தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோலக், 'கவிஞர் மாத்திரம் ஓர் கட்சியின் கவி; குறிப்பிட்ட கொள்கைக்காகத் தனது கற்பனா சக்தியைப் பாழ்படுத்துகிறவர்; வகுப்பு வாதத்தை வளர்க்கிறவர்; நாத்திகர்' என்று மாத்திரம் ஒரு சிலரால் தூற்றப்படாமல் இருந்தால், அவரது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும். அவர் அப்படியே இருந்தாலும் இருப்பதற்குக்காரணம் அவரது இயற்கையல்ல. இந்த துரதிர்ஷ்டமான நாட்டிலே நானாவிதமான கட்சிகள் நடமாடுகின்றன. அக்கட்சிகள் என்னும் கூடாரத்திலே கவிகள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றி வெட்டவெளியிலே கொண்டு வந்து உலவச்செய்ய தமிழர்களுக்குப் போதிய உள்ளம் இருக்குமானால், உரம் இருக்குமானால், வீரம் இருக்குமானால்,

நாங்கள் தடைசொல்லமாட்டோம். அந்தக் கட்சிக் கவி என்று சொல்லப்படுபவரிடம், சொல்பவர்கள் கட்சி பேதமின்றிக் கவி என்பதற்காக மட்டும் அன்பு செலுத்திஞல் போதும்; இன்பம் பெறலாம்.

## எதற்காக?

புரட்சிக் கவிஞரின் கருத்தோவியங்களைப்பற்றி, அறிஞர்-சிதம்பரநாதனைப் போன்றவர்கள் தாம் பேசுவது பொருத்த மாகும். ஆனால், என்னைப்போல் அவரது கொள்கையைக் கடைப்பிடித்து, நண்பர் தண்டபாணி குறிப்பிட்டது போல், அவருக்குத் தோழனுகவும் தொண்டனுகவும் இருந்து, அவரது கருத்துக்களை ஏட்டிலே தீட்டியும், நாட்டிலே பேசியும், செயலிலே காட்டியும் வருபவர்கள் உரிமைக்காகப் பேசலாம். ஆகவே, நானும் உரிமைக்காகக் கவிஞரின் படத்தைத் திறந்து வைக்க அருகதையுள்ளவன். அப்படித்திறந்து வைக்கும் போது, கவி கண்ட நுட்பத்தைப் பற்றியோ, கலை நயத்தைப் பற்றியோ, காவிய ரசத்தைப் பற்றியோ அல்லது, அவைகளுக்கு விளக்க உரையோ, விரிவுரையோ, கருப்பொருளோ பருப்பொருளோ கொடுக்க அல்ல, நான் பேச இருப்பது.

## நல்ல காலம்

இப்பொழுது தமிழிலே பாடுகின்ற தமிழுக்காக உழைக்கின்ற எல்லாக் கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது. எக்கட்சியினராயினும், எம்மதத்தினராயினும், எக்கொள்கையினராயினும், செய்கிற தொண்டு தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பயன்படுகிறதென்ருல், தமிழனுடைய உள்ளம் குளிர்கிறது. உடனே கவிகளைக் கட்டி அணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகிருன்; பாராட்டுகிருன்; பரிசளிக்கிருன். இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக்காட்டு.

# இதற்கு முன்

இதற்கு முன்பெல்லாம், கடந்த 10, 15 ஆண்டுகளாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தது கிடையாது. கவிகளை மக்கள் கனவிலுங் கூட கருதினார்களில்லை. தமிழுந் தன்னந் தனியே தமிழரை விட்டுப் பிரிந்து உலவிற்று. உதாரணமாக, அப்பொழுதெல்லாம், தமிழ் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எவ்வளவு தொடர்பு இருந்ததென்றால், முருகனுக்கும் தெய்வயானைக்கும் எவ்வளவோ, அவ்வளவு. தமிழ்ப் பண்டிதர்களுடைய நிலையே தனி; அவர்கள் சரிந்த தலைப்பாகையும், உலர்ந்த கண்களும், ஒட்டிய கன்னங்களும், வீட்டில் அரை டஜன் குழந்தைகள் என்ற எண்ணமும், குறைந்த ஊதியமும் அவர்களைப் பரிதாபகரமான நிலையிலே கொண்டுவந்து நிறுத்திற்று. அதிக ஆற்றலிருந்தும், ஆங்கிலம் கற்காத காரணத்தால் நிலை தாழ்ந்தது. தமிழனுக்குத் தாய்மொழியைக் கற்றுக் கொடுத்த காரணத்திற்காகச் சம்பளம் குறைந்தது. அவர்களை இகழுவது, தள்ளிவைப்பது ஆகியவைகளின் பிரதி பலிப்பு மாணவர்களிடையேயும் தென்பட்டது. தமிழ் வகுப்பு என்றால், இஷ்டப்பட்டால் போகிற வகுப்பு என்று நினைத்தார்கள். தமிழ் வகுப்பு நடந்துகொண்டேயிருக்கும். தெய்வயானையை விட்டுவிட்டு வள்ளியைத் தேடிக்கொண்டு முருகன் போவது போல், மாணவர்கள் வாத்தியாரை விட்டுவிட்டு வெளியே போய்விடுவார்கள் ஆனால் அந்த நிலை இன்று மாறிவிட்டது. எங்கு சென்றாலும் தமிழ், தமிழர் என்ற பேச்சுக்களையே நான் பார்த்திருக்கிறேன் ஓரிரண்டு ஆண்டுகளாக. ஆங்கிலத்திலேயே பேசுவேன் என்று சபதம் செய்து கொண்டிருந்தவர்கள் கூட, 'இன்று தமிழிலேயே பேசுவேன்; தமிழிலேயே எழுதுவேன்; எண்ணுவேன்' என்று சொல்வதை. தமிழிலே

கவிதைகள், தமிழிலே நாடகங்கள்; தமிழிலே இசைகள்; இவைகளை, யாரும் எங்கு சென்றாலும் பார்க்கலாம். நேற்றுக் கூப்பிட்டிருந்தால் 'வரமாட்டேன்' என்று இன இறுமாப்புடன் இருந்திருப்பவர்கள்கூட, இன்று தாமும் தமிழர், தமிழர் இனம் என்று சொல்லிக்கொள்ள முற்படுகிறார்கள். ஆனால், இந்த நிலை என்றும் மாறாமல் நிலைத்திருக்குமாக!

## நேற்றைய உறக்கம்; இன்றைய விழிப்பு.

என்ன! இவ்வளவு நாளுமில்லாததோர் விழிப்பு, ஓர் உணர்ச்சி, தாய்மொழிப்பற்று, தன்னினப்பற்று, தமிழர்களிடையே ஏற்பட்டதற்குத் தமிழன் தன் நிலை உணர வந்ததற்குக் காரணம், இந்தப் புரட்சிக்கவி பாரதிதாசன். நேற்று இல்லை, இன்று இருக்கிறார் என்று சொல்லுவேன் என்று நீங்கள் கருதினால், அப்படிச் சொல்பவனல்லன். அவருக்கு முன்னால் இருக்கும் பெயரே, அவருக்கு முன் மாபெருங்கவி பாரதியார் இருந்தார் என்பதை நினைவூட்டுகிறது. கவிகளும் புலவர்களும் இதற்கு முன் இருந்த இழி நிலைக்கும், தமிழிடையே தமிழர் பற்றுக்கொள்ளாததற்கும் காரணம்; தமிழ் நாடு என்றால், அது குறுகிய மனப்பான்மை என்றும், தமிழ் மொழி என்றால். அது உத்தியோகத்திற்கு லாயக்கானதல்லவென்றும், தமிழ்ப்படித்த ஒரு சில வட்டாரங்களிலே உலவி வந்ததும், தமிழ் நாட்டின் எல்லையைக் குறிக்க வந்தால், தமிழனுடைய மேன்மையைப்—பண்பைக் குறித்தால், தமிழனுடைய தனித் தன்மையைக் குறித்தால், நாம் நாட்டுக்குச் செய்கின்ற நாச காரியங்கள் என்று தவறாகத் தெரியாமல், பாமரர்களும், படித்தவர்களும் கருதினதும் தான் ஆகும். தெரிந்து பாமரர்களுக்குப் பரிந்து பேசுவது போல, நடிக்கும் நயவஞ்சகர்கள் நாட்டிலே உண்டாக, எத்தர்களும் ஏமாளிகளும் ஏற்பட்டனர். ஏமாற்றி வாழ்பவன் எத்தன்;

ஏமாறுபவன் ஏமாளி. தன்னுணர்வு அற்ற மக்களால் தமிழும், தமிழ் அறிஞர்களும், போற்றப்படாமல் மூலை முடுக்குகளிலே தூங்கிக் கிடந்தனர்.

ஆனால் இன்று தூங்குகிறவர்களைத் தட்டி எழுப்புகின்றனர். துக்கப்படுகிறவர்களுடைய துயரத்தைத் துடைக்கின்றனர். தேம்பித் திரியும் கலைவாணர்களைத் தேடித் தேடிப் பிடித்து, அவர்களை மார்போடு அணைத்து உச்சிமோந்து, முத்தங் கொடுத்து உள்ளம் பூரிக்கின்றனர். இவனா, இவன் என் இனத்தவன்; அது தமிழா? அமிழ்தினுமினியதல்லவா? அவனா? அவன் ஓவியக்காரன்; அவன் ஓவியங்கள், ரவிவர்மா படத்துடன் போட்டியிடும்; அவன் தமிழிசை வாணனா? தமிழிசை எந்த விதத்திலும் தெலுங்கைவிடக் குறைந்ததல்லவே! அவன் நடனக்காரன்; அவனது நடனம் வடநாட்டு நடனத்தைவிட ரம்மியமாக இருக்கும்; அவன் நடிகன், மேல் நாட்டு நடிகனும் அவனிடம் தோற்றுவிடுவான். தமிழ் நாட்டு நடிகன் நமது இருதயத்தைத் தான் நடிக்கும் நாடக மேடையாக்கிக் கொள்கிறான். அவன் கவிஞன், அவன் பாக்களில் ஒரு அடிக்கு, மேல் நாட்டிலே, ஓராயிரம் பொன் கொடுப்பார் என்று இன்று தமிழ் அறிவாளிகளை, சிற்பிகளை, சிந்தனையாளர்களை, கவிஞர்களை, கலைவாணர்களை தமிழகம் போற்றுகின்றது. இந்த நிலை நேற்று இல்லை. இன்று இருக்கிறது; நாளை நீடித்திருக்கவேண்டும். நிலைத்திருந்தால் தான், ஒரு பாரதிதாசன் அல்ல; எண்ணற்ற பாரதிதாசர்கள் தோன்றுவார்கள். அவர்களைக் கண்டு, அவர்கள் காட்டிய வழிகளைத் தமிழகமும் தமிழரும் பின்பற்றிப் பயன் அடைய ஏதுவாகும்.

கவிஞர்களையும், மற்றவர்களையும் அன்று போற்றாததற்கும், இன்று போற்றுதற்கும் இன்னுமொரு காரணமுண்டு. சங்க இலக்கியங்களிலே, நமது கண்ணும்கருத்தும் படாதபடி திரையிட்டுவந்தார்கள். உங்களில்பலர் சங்க இலக்கியங்களை

படித்திருக்கலாம். சிலர் புரிந்துகொண்டிருக்கலாம். சிலர் புரிந்தது போல் பாவனை காட்டலாம். நான் சங்க இலக்கியங்களைப் படித்தவனல்ல; அல்லது படித்தவனைப்போலப் பாவனை செய்பவனுமல்லன்; அதற்காக, வெட்கப்படப்போவதுமில்லை. சங்க இலக்கியங்களை நான் படிக்கவில்லை என்றால், அதற்குக் காரணம் எனது அறியாமையல்ல. என் கண்முன் சங்க இலக்கியங்கள் நர்த்தனமாடவில்லை. என் கண்முன் அவைகளைக் கொண்டுவந்து புலவர் பெருமக்கள் நிறுத்தவில்லை.

நாவலர்களும், பாவலர்களும், சங்க இலக்கியங்களைச் சுற்றி நாலுபக்கமும் வேலிகள் அமைத்து, இங்கு எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் எழுப்புச் சுவரை எழுப்பிவைத்துக்கொண்டும், "உள்ளே ஆடுது காளி, வேடிக்கை பார்க்க வாடி" என்பதுபோலத் 'தொல்காப்பியத்தைப் பார்; அதன் தொன்மையைக் காணீர் என்றால், அதனிடம் யார் அணுகுவார்? சங்க இலக்கியங்களை வீட்டைவிட்டு வெளியேற்றி நாட்டிலே நடமாட விடவேண்டும். நடனசுந்தரிகளாகச் சிறுசிறு பிரதிகள் மூலம், தொல்காப்பியக் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால் தான், தொல்காப்பியம் சிறுசிறு குழந்தைகளாக ஒவ்வொருவருடைய மடியிலேயும் மனதிலேயும் தவழும். ஒவ்வோர் இல்லமும் இலக்கியப் பூங்காவாகக் காட்சியளிக்கும். இன்றையப் புலவர்கள், உண்மையிலேயே இனிமையையும் எளிமையையும் சங்க இலக்கியத்துடன் சேர்த்து மக்களுக்கு ஊட்டியிருப்பார்களானால், சங்க காலப் புலவர்களைப் போற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்குமானால், அவர்கள் ஒவ்வோர் இல்லத்தையும் இலக்கியப் பூங்காவாக்கும் உழவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படியில்லை என்பதை நினைக்கும் பொழுதுதான் அவர்கள் இவ்வளவு நாட்களாக நாட்டுக்குச் செய்தது தொண்டு அல்ல; துரோகம் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

புலவர்கள் தாங்கள் நன்மை செய்வதாய்க் கருதிக் கொண்டு, ஒரு சில புலவர்களையும் கவிகளையுமே பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தியும், பொது மக்களின் பாராட்டுதலுக்கு அந்த ஒரு சிலரே அருகதையானவர்கள் என்று சொல்லியும் வருகிறார்கள். அதன் மூலம் உண்மைக் கவிகள், உயிர்க் கவிகள், சங்ககாலப் புலவர்கள் மறைக்கப்படுகிறார்கள் என்பதை மறந்துவிடுகிறார்கள். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால், கம்பனை எந்த அளவுக்குப் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்களோ, அந்த அளவுக்குச் சங்ககாலப் புலவர்களை அறிமுகப்படுத்தவில்லை. கம்பனைத் தெரிந்த பொதுமக்கள் தான், அதிகம் இருப்பார்களே தவிர, இளங்கோவைப் பற்றித் தெரிந்தவர்கள் கொஞ்சமாகத் தான் இருப்பார்கள். வேண்டுமென்றால், தில்லையில் ஒரு ஓட்டுப்பெட்டியை வைத்துப் பிரச்சாரமில்லாமல், அப்படி இருந்தால் இருபக்கமும் நடத்தி, கம்பனுக்கும் இளங்கோவுக்கும் ஓட்டுப் போடச் சொன்னால், தேர்தலில் கம்பன்தான் வெற்றி பெறுவான். ஆனால் நாம் நமது கற்பனா சக்தி முன்பு இருவரையும் நிறுத்திப் பேசச் சொன்னால், கம்பன் இளங்கோவைப் பார்த்து, 'எனக்கு உயிர் ஊட்டிய உத்தமரே என்பர். எனக்கு அணி அழகு தந்த ஆணழகரே' என்பர்.

அகத்தையும் புறத்தையும் அதிலே காட்டப்பட்ட கருத்துக்களையும், அணிகளையும், உவமைகளையும் நாம் அறியாமற் போனதற்குக் காரணம்; பத்திரிகைகள் ஒரு கவியைப்பற்றியே புகழ்வதும், ஒரு சில கவிதைகளிலேயே அது எவ்வளவு பழமையில் அழுந்தியிருந்த போதிலும், புதுமை மிளிர்வதாகவும், ரசம் ததும்புவதாகவும், விளம்பரப்படுத்துவதும், மிதிலைச் செல்வியைப் பற்றியும், கோசலைச் செல்வனைப்பற்றியும், மாதாந்தர வெளியீடுகளும், ஆண்டு மலர்களும்,

பிரத்தியேகப் புத்தகங்களும் வெளியிடுவதும் தான் ஆகும். கம்பனையும், சேக்கிழாரையும் அடிக்கடி பலப்பல நிறங்களிலே காட்டுவதன் மூலம்—கம்ப ராமாயணத்தையும், பெரிய புராணத்தையும் தத்துவார்த்தங்களாலும், புதுமைக் கருத்துக்களாலும் காட்டி நிலைநாட்டுவதன் மூலம், வள்ளுவனையும் மக்கள் அதிகம் காணமுடியவில்லை.

அகநானூற்றையும், புறநானூற்றையும் மக்கள் மறக்க நேர்ந்தது, கற்றறிந்தோர் ஏற்றும் கலித்தொகையைக் கற்றவரிடம் காண்பதே அரிதாகிவிட்டது. பரிபாடலைப் பார்க்கவே முடியவில்லை. ஆகவே, சங்க இலக்கியங்கள் மங்கி, மக்களுடைய மனத்தைப் பெருமல் போனதற்குக் காரணம் அந்தச் சங்க இலக்கியக் கர்த்தாக்களைக் காண முடியாதபடி நமது கண்முன் திரைபோட்டுவிட்டார்கள். ஒரு சிலரையே மீண்டும் மீண்டும் அறிமுகப்படுத்துவதன் மூலம், பொது மக்களுடைய ஆதரவைப் பெற முடியும்; குறிப்பிட்ட திட்டம் நிறைவேறும்; மக்களுடைய மனத்தை மாசற்ற கவிகளின் மீது பாயவிடாமல், மருண்ட பாதைக்கு இழுத்துச் சென்ருல் தான் என்ன! எதிர்க் கட்சியினருக்கு மட்டமா அல்லவா என்று பார்த்துக்கொண்டால் போதும் என்றெண்ணிவிடும் நயவஞ்சக நாசகாரர்கள் நாட்டிலே உலவி வருகின்ருர்கள்.

## பிரசாரம்

கம்பனுக்குப் பிறகு எவ்வளவு கவிவாணர்கள் தோன்றினும், கம்பனுக்குமுன் பலர் இருந்தபோதிலும் அவர்கள் வெறும் கவிகளாயிருக்கலாம். ஆனல் கவிச் சக்கரவர்த்தி கம்பன் தான் என்று சிலர் சொல்லுகிருர்கள். கவிதை எவ்வளவு புரட்சிகரமாயிருந்தபோதிலும், கவிதை, காலத்தைப்

படம் பிடித்துக்காட்டும் கருவியாக இருந்தபோதிலும் அவ்வ களை இயற்றியவர்களைக் கவிச்சக்கரவர்த்தி என்று சொல்ல மாட்டார்கள். அவர்கள் போற்றுகின்ற கவியிடம் (நாமக்கல் கவியுடன்) உள்ள கட்சிக்கொள்கைகள் தெரிய அந்தக் கவியுடன் போட்டியிடக்கூடிய புரட்சிக் கவியிடம் (பாரதி தாசன்) உள்ள, காலத்துக்கேற்ற கருத்துக்கள் கட்சிக் கொள்கைகளாகத் தெரியும். உடனே இந்தக் கவியைக் கட்சிக்கவி, கற்பனைசக்தியைக் குறிப்பிட்ட கொள்கைக்காகப் பாழ்படுத்துகிறவர், என்று பொதுமக்களுக்கு அறிமுகப் படுத்திவிடுவார். அறிவிழந்த மக்கள் அதை நம்பிக் கவி களைக் கைவிடுவர்.

## காரண மில்லாம லில்லை

ஏன் புரட்சிக் கவியைப் புத்துலகச் சிற்பியாக, மக்கள் முன் கொண்டுவந்து நிறுத்துவதில்லை யென்றால், அவரு டைய புதுமைக் கருத்துக்களைக் காணும்படி மக்களைத் தூண்டுவதில்லை யென்றால் காரணமில்லாமலில்லை. மக்கள் புரட்சிக்கவியின் உண்மை உருவத்தைப் பார்த்துவிட்டால் அவர்களால் தூக்கி வைக்கப்பட்ட கவிகள் தொப்பென்று கீழே விழுந்து விடுவார்கள். கவிகளுக்கு மதிப்புக் குறையும்; போற்றினவர்கள் பிழைப்பும் கெடும். இளங்கோவைப்பற்றி மக்கள் அறிய ஆரம்பித்துவிட்டால். 'சிலம்பு' நாட்டிலே ஒலிக்க ஆரம்பித்துவிட்டால், கம்பனுக்கும் கம்பராமாயணத் துக்கும் அவ்வளவு மதிப்பு இராது. மேன்செஸ்டர், கிளாஸ் கோ முதலிய இடங்களிலிருந்து மெல்லிய துணிகள் வரு கின்றன என்றால், லாங்கிளாத்துக்கு அவ்வளவு கிராக்கி இருக்காது என்பது மட்டுமல்ல; சேலம் ஆறு, ஏழு முழ வேட்டிகளுக்கும் மதிப்பு இருக்காது. ஆமதாபாத் புடவைகள் அமோகமாகக் கிடைக்கின்றன.

என்றால், ஆரணங்குகள் பெங்களூர் புடவையை எப்படி விரும்புவர்? கம்பனைப்பற்றி நான் குறை கூறுவதாக நினைக்கக்கூடாது. உங்களிடமுள்ள குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். ஒரு சிலரைப் போற்றுவதன் மூலம் தான் புகழடைய முடியும்; நமது புலமை மிளிரும் என்ற நினைப்பு ஒழியவேண்டும்.

## பாண்டியன் பரிசு

இந்த முறையிலே பாரதிதாசனின் பாண்டியன் பரிசு குறையைப் போக்குவதாக இருக்கிறது. பாண்டியன் பரிசு, சங்ககால இலக்கியங்களிலுள்ள உவமைகளையும், அணிகளையும், எளிய நடையில் எல்லோரும் புரிந்து கொள்ளுமாறு இயற்றப்பட்டிருப்பதைக் காணலாம். பாடலுக்கு லக்ஷணம் படித்தவுடன் இலேசில் புரிந்து கொள்ளக்கூடாது என்றும், புலமைக்கு லக்ஷணம் பிறர் கண்டு பயப்படவேண்டும் என்றும் கருதுகிறார்கள். பாரதிதாசனின் காவியத்தைப் பார்க்க, படித்து உணர, இலக்கணம் தேவையில்லை; இலக்கியங்களைப் படித்திருக்க வேண்டுவதில்லை; நிகண்டு தேவையில்லை; பேராசிரியர்கள் உதவி தேவையில்லை; ஆனால் இதைப் புலவர்கள் சிலர் வெறுக்கின்றனர்; மறுக்கின்றனர்! எளிய நடையிலே எழுதுவது ஒரு ஆற்றலா என்று; தம்மால் எழுத முடியாவிட்டாலும் ஏளனம் பண்ணுகின்றனர்!

## புலவர்களுக்கே பழக்கம்

ஒருவர் எழுதின புத்தகத்திற்கு மறுப்போ, அல்லது அதில் ஏதாவது குறையோ காணாவிட்டால், சில புலவர்களுக்குத் தூக்கம் வராது. திருவிளையாடல் புராணத்திற்கு விளக்கவுரையென்று திரு. வி. கலியாணசுந்தரனாரால் ஒரு புத்தகம் பிரசுரிக்கப்படும். அந்த புத்தகம் அச்சில் இருக்கின்ற அதே நேரத்தில், அதே அச்சுக்கூடத்திலேயே

திரு. வி. க. வுக்குச் சில கேள்விகள் என்று ஓர் துண்டுப் பிரசுரம் வெளியாகும். ஒருவர் போட்ட புத்தகத்திற்கு இன்னொருவர் மறுப்பு எழுதாவிட்டால் அவருக்கு நிம்மதி ஏற்படாது. காரணம் அவர்களிடம் மூலதனம் குறைவு. ஒருவர் எடுத்து ஆளவேண்டுமென்றிருந்த அணியை, இன்னொருவர் கையாண்டிருப்பார். ஆகவே, எழுதியதில் குற்றங்கள் கண்டுபிடித்து அவரது பிழைப்பையும் கெடுத்துவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் மீதும் குற்றமில்லை! அவர்களிடம் எண்ணற்ற கருத்துக்கள் ஊறுவதில்லை, கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளாக நானும் பார்க்கிறேன்; பாரதியார், சுந்தரம் பிள்ளையைத் தவிர, மேல் நாடுகளில் உள்ளது போலக் கலையைக் காலத்தின் கண்ணாடியாக்குகிறார்களா? அல்லது கலையைக் கடை வீதியில் கொண்டுவந்து நிறுத்துகிறார்களா? அவர்களது பாக்களிலே எழுச்சி இருக்கிறதா? அதனால் நாடு உயர்ச்சியடைய ஏதாவது மார்க்கமுண்டா? என்று: என்றால், இல்லை. காரணம், புலவர்களின் பிற்போக்கான நோக்கமே.

நான் ஒரு புலவரைப் பார்த்து, ‘தோழரே! அணுகுண்டு கண்டுபிடித்தது எவ்வளவு ஆச்சரியம்! அதன் அழிவு சக்தியைக் கேட்டீரா?’ என்றால், ‘அது என்னப்பா பெரிது; ஆங்கிலேயனோ, அமெரிக்கனோதான் அழிவு சக்தியை ஏற்படுத்த அந்த ஆயுதத்தை கையிலேந்த வேண்டும். நம் பரமசிவம் நெற்றிக்கண்ணைத் திறந்தால் போதும். கண்ணிலிருந்து நெருப்பு ஜ்வாலைகள் பறக்கும். எதிரிலே உள்ள அத்தனைப் பொருள்களும் சாம்பலாகிவிடும்’ என்று பதில் சொல்லுவார். ‘அது இருக்க இது ஏன்?’ என்ற பிற்போக்கான நோக்கமும், சோம்பேறித்தனமும் தான் காரணம்.

## அது இருக்க இது ஏன்?

அது இருக்க இது ஏன் என்று மேல் நாடுகளிலே கருதி இருப்பார்களானுல், ஆளில்லா விமானத்திற்குப் பிறகு அணுகுண்டு கண்டுபிடித்திருக்க முடியுமா? தொல்காப்பியம் நமக்கு இருக்கும்போது, நமக்கு வேறென்ன வேண்டும் என்றிருந்தால், அகமும் சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலப்பதிகாரமே போதுமென்றிருந்தால், கலிங்கத்துப்பரணி கிடைத்திருக்குமா? கலிங்கத்துப்பரணியே போதுமென்றிருந்தால் மனோன்மணியம் தோன்றியிருக்க முடியுமா? மனோன்மணியமே போதுமென்றிருந்தால், பாரதியாரின் தேசீய கீதங்களைக் கேட்டிருக்க முடியுமா? பாரதியாரின் தேசீய கீதங்களே போதுமென்றிருந்தால், தேசிகவிநாயகம் பிள்ளையின் தாயினுமினிய அன்பு குழைத்தூட்டும் பாக்களைப் பார்த்திருக்க முடியாது. தேசிகவிநாயகம் பிள்ளையே போதுமென்றிருந்தால், நாமக்கல்லாரின் 'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற புதுமாதிரியான சண்டை தத்துவப் பாடலைக் கண்டிருக்க முடியுமா? அதுபோலத்தான் நாமக்கல்லாரே போதும் என்றிருந்தால், கொலைவாளினை எடடா! மிகு கொடியோர் செயலறவே, என்னும் பாரதிதாசனின் உணர்ச்சிமிக்க புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்க முடியாது.

## காலத்தின் சிருஷ்டி கர்த்தா

பாரதிதாசன், மேல் நாட்டுக் கவிகளைப்போல் கலையைக் காலத்தின் கண்ணுடியாக்குகிருர். காலத்தையே சிருஷ்டிக்கிருர்; காலத்தையே சிருஷ்டிக்கிருர் என்பது மாத்திரமல்ல, காலத்தை மாற்றுகிருர்; காலத்தை மாற்றுகிருர் என்பது மாத்திரமல்ல, மாறிய காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிருர்; அழைத்துச் செல்கிருர் என்பது மாத்திரமல்ல; சமயம் கிடைத்தால் முன்னேயும் பிடித்துத்

தள்ளுகிறார். தென்றல் வளரும்; நிலவு வளரும்; செல்வம் வளரும் அவைபோல, அவரது கவிதைகளும் வளரவேண்டும்.

## பத்துப் பேர்கள்

ஆனால் அவைகள் வளரக்கூடாது என்று ஒரு பத்துப் பேர்கள்—அந்தப் பத்துப் பேர்களுடைய பெயரையும் அரசியல் மேடையாயிருந்தால் குறிப்பிட்டிருப்பேன். இது அறிவு மேடையானதால் குறிப்பிடாமல் விடுகிறேன். கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் அவர்களெல்லாரும். தங்களைத் தவிர வேறு யாரும் சங்க இலக்கியங்களை அறிய முடியாது; அப்படியே அறிந்தாலும் பொதுமக்களின் ஆதரவிற்குத் தங்களைத் தவிர வேறு யாரும் அறுகதை அற்றவர்கள் என்று கருதுகிறார்கள்.

## கையில்லா ஊமையர்

ஒரு மாதத்திற்குமுன் சங்க இலக்கியங்களின் ஒன்றான குறுந்தொகையில், ஓர் உவமையைப் படித்தேன். இந்தக் காலத்தில் கற்பனை நிலை எவ்வளவு தூரம் கயமைத்தனத்திற்குப் போயிருக்கிறது என்பதை ஊகித்தேன். வித்தியாசத்தைப் பாருங்கள். இந்தக் காலத்துப் புலவர்கள் எந்தக் கருத்தை ஒரு அந்தாதி மூலமாகவோ, அகவல் மூலமாகவோ, வெண்பா மூலமாகவோ விளக்குவார்களோ, அதைக் குறுந்தொகை ஆசிரியர் ஒரே அடியில் கூறிவிட்டார். அந்த அடிதான் கையில்லா ஊமையன் என்பதாகும்.

ஒரு தோழன் காதலிலே ஈடுபடுகிறான். உவமையின் நேர்த்தியைப் பாருங்கள்! கட்டுக்கடங்காத காளை; இருந்தாலும் கட்டுப்படுகிறான் இரு கண்களுக்கு. மனதில் ஏதோ நினைக்கிறான். அதை எதிரேயுள்ள கட்டழகியிடம் சொல்ல

முடியவில்லை. எதைப்போல என்றால் காலைநேரம், காட்டிலே ஓர் பாறையிலே வெண்ணெய் இருக்கிறது; கையில்லா ஊமையன் இதற்குக் காவல்; காலைக் கதிரவன் காலையில் எழுந்து தனது இளங்கதிர்களைப் பாய்ச்சுகிறான். வெண்ணெய் உருகுகிறது. வெண்ணெய் உருகுவதைப் பார்க்கிறான். பார்த்ததும் ஐயோ! வெண்ணெய் உருகுகிறதே என்று கூவலாம். ஆனால், வாயில்லை. நேரே ஓடிப்போய் எல்லாம் உருகுவதற்குள் எடுக்கலாம்; ஆனால் கையில்லை. கதிரவன்இந்தக் கையில்லாஊமையனின்கதியற்ற நிலையை அறியான். அவன் அவனது வேலையைச் செய்கிறான். அவன் பிரபஞ்சத்திற்கும் சொந்தம். காவலாளிக்குக் கையில்லை; வாய் ஊமையே தவிர கண் மாத்திரமிருக்கிறது இந்தக் கோரக்காட்சியைக் காண. அதைப்போலவே, கண் மாத்திரம் இருக்கிறது கட்டழகியைக் காண. ஆனால் சுயமரியாதை இல்லாததாலோ, சுதந்தர உணர்ச்சி இல்லாததாலோ கையில்லை [ கையில் துணிவில்லை ] அவளது கரத்தைப் பிடிக்க. அந்த வடிவழகியைக் கண்டு ஏதோ பேசவேண்டுமென்று நினைக்கிறான். ஆனால், சமுதாயக் கட்டுப்பாடுகள் அவனது வாயை மூடிவிட்டன. எவ்வளவு அருமையாக ஒருவன் ஒருத்தியைச் சமுதாயக் கட்டுப்பாடுகளால் தொடமுடியாமல் கஷ்டப்படுகிறான் என்பதை ஒரு சிறு அடியில் விளக்குகிறார். "கையிலூமன் வெண்ணெய் உருகாது பாதுகாத்தாற் போன்று" என்று.

## மறக்கலாம்; ஆனால் மறக்க முடியாது.

சங்க இலக்கியங்களின் இன்பங்களைச் சொல்லிக் கொண்டிருந்தால், இன்று முழுதுஞ் சொல்லிக்கொண்டிருக்கலாம். சங்க இலக்கிய நுட்பத்தை அனுபவிக்க வேண்டிய

இடங்களை, நமக்கு ஏற்ற எளிய முறையில் அளிப்பது என்றால், அந்தத்துறையில் பாரதிதாசன் நாட்டுக்கும் நமக்கும் செய்துள்ள தொண்டினை மறந்தாலும் மறக்கலாம்; ஆனால் மறக்கமுடியாது. பாரதிதாசன் தரும் இலக்கியச் சுவையை அனுபவிக்க இலக்கணம் கற்றிருக்க வேண்டிய தில்லை. பாரதிதாசன் பாக்களைப் படித்தவுடன் அவை நமது இரத்தத்தோடு இரத்தமாகக் கலக்கின்றன. உணர்ச்சி, நரம்புகளிலே ஊறுகிறது. சுவைத்தால் ருசிக்கிறது; படிக்கி றோம்; பாரதிதாசன் ஆகிறோம். படிக்கிறோம்; நாமும் பாடலாமா என்று நினைக்கிறோம். படிக்கிறோம் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்கிறோம். ஆனால், சில புலவர்கள் அதிலே இலக்கண அமைப்பு இல்லை எனலாம். அது அவர்களது ஓய்வு நேர வேலையாக இருக்கட்டும்!

காரியத்திலே ஈடுபடுகிற நாம், ஓட்டைச் சட்டியா யிருந்தாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி என்று கருதுகிறோம். சுவைக்குதவுமா, கற்க நிகண்டு தேவை யில்லையே, பாட்டிலே ஏதாவது எளிமையுடன் இனிமை மாத்திரம் கலந்து விடாமல் எழுச்சியும் கலந்திருக்கிறதா, புரிகிறதா, புரிந்து பயனடையலாமா என்று பார்க் கிறோம். நாம் தான் பெரும்பான்மை. அவர்கள் குறைந்த எண்ணிக்கை என்று சொல்லி ஓரிடத்தில் கூறுமாறுபோலப் பாட்டை படித்தவுடன் புரிந்துகொள்ளும்படியாக இருக்க வேண்டும் என்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகம்; கடின நடையிலே கவிதைகளை விரும்புபவர்கள் எண் கொஞ் சந்தான். அவர்கள் பாரதிதாசனின் பாக்கள் எந்தச் சன் னங்கள் மட்டமானவை என்று தேடித்திரிபவர்கள். நாம் தான் சுவையை அப்படியே அனுபவிப்பவர்கள். பயனடை கிறோம். காரணம் எளிய இனிய நடை இதுவரை அவரது

நடையைப்பற்றிச் சொன்னேன். அவர் எடுத்துக்கொள்ளும் பொருள் என்ருல், அவர் கொடுக்கும் தலையங்கங்களென்ருல், அவை புரட்சிகரமாயிருக்கும்; புதுமையாயிருக்கும்.

## இரண்டு நாக்குகள்

ஒரு காலத்திலே, தமிழகத்திலே சாலைகளையும் சோலைகளையும் கண்டு களித்து சந்தனக் காடுகளிலே சத்தம் அமைத்துப் பண் பாடினுர்கள். பிற்காலத்திலே, அதாவது இடைக்காலத்திலே, வாழ்வு இந்த லோகம் அந்த லோகமாகப் பிரிந்தது. பேரம்பலம் சிற்றம்பலம் என்பது போல, மாய வாழ்வு மனித வாழ்வு என்று ஏற்பட்டது. இடைக்காலப் புலவர்களின் உள்ளங்களிலே ஒரே நேரத்தில் இரண்டு மாறுபட்ட காட்சிகள் தோன்றி மறைந்தன. ஒரே உதட்டில் இரண்டு நாக்குகள் புரண்டன. குன்றைப்பற்றிப் பாடுகின்ற நேரத்திலே, அந்த லோகம், அந்த வாழ்வு என்ற எண்ணங்கள் தோன்ற, அந்தக் குன்று முருகனுடைய தோளாகவும் அதுவும் வள்ளியிடம் கொஞ்சிய தோளாகவும் காட்சியளித்ததே தவிர, மலைச்சரிவிலே வளைந்துஒடும்ஆறும்; கரடுமுரடான பாதை; இவைகளைத்தாண்டி மலைமீதிருந்து கீழே பார்த்தால் காடு தெரியும் காட்சி; காடுகளில் சிறுத்தையும், புலியும் உலவும் காட்சி; அங்கு வேடுவரும் வில்லியரும் ஆடுகிற வேட்டை ஆகிய இயற்கை எழில், அந்த விநாடி தோன்றவில்லை [சிரிப்பு]

## கற்பனைக் கோலை

இன்று நாடக மேடைகளில் நடக்கிற வள்ளி திருமணத்திற்கும், அதிலிருந்துதான் இது கற்பனையானதோ என்று எண்ணும்படியான ஓர் இயற்கை நிகழ்ச்சியை; சங்க

இலக்கியத்தில் வர்ணிக்கப்படுவதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். பண்டைக் காலப் புலவர்களின் கள்ளங் கபடமற்ற உள்ளத்தையும், இடைக்காலத்திலே இரட்டை வாழ்க்கையினிடையே புராண மெத்தையில் புரண்ட புலவர்களின் உள்ளத்தையும், இந்தச் சிறு படப்பிடிப்புத் தெளிவாக்கும் என நம்புகிறோம். ஓர் தலைமகன் காட்டுக்கு வேட்டையாடச் செல்கிறான். தன் வேல் தைத்த யானை எப்பக்கம் ஓடிவிட்டது என்று தேடிக்கொண்டு வந்தவன் முன் ஓர் ஆரணங்கு எதிர்படுகிறாள். நல்ல அழகி. பக்கத்திலே பளிங்கு நீரோடை. கட்டழகன் அந்த மங்கையை மணந்துகொள்ள இச்சைப்படுகிறான். மணந்து கொள்வதென்றால் இந்தக் காலத்தைப்போலப் பொருத்தம் பார்க்க ஐயரைத் தேடுவது தேவையில்லாதிருந்த காலம் அது. காதலர் இருவரும் கண்களாற் பேசினார்கள். வாய் அச்சுப்பதுமை போலிருந்த போதிலும் அருகே சென்றான். வஞ்சி அஞ்சினாள்; அஞ்சாதே அஞ்சுகமே என்றான். ஆனால், சற்று நேரத்தில் ஓர் அலறல் கேட்கிறது. அது என்னவென்று கேட்கிறாள் அந்த ஏந்திழையாள். அது என் வேல் வலிக்குத் தாங்கமுடியாமல் பிளிறும் யானையின் குரல் என்கிறான். பாவைக்கு யானை என்றால் பயம் போலிருக்கிறது. 'ஐயோ, யானையா! அச்சமாயிருக்கிற' தென்றாள். 'அச்சமானால் அருகே வா' என்றான். வந்தாள்; அணைத்துக்கொண்டான்!! திருமணம் முற்றிற்று!!! (பெருத்த ஆரவாரமும் பலத்த கை தட்டலும்.)

இந்த ஒரு சம்பவத்தைப் பிற்காலத்தில் வள்ளிக் கதையாக்கி அந்த வீரனை வேலனாக்கி, கிழவனாக்கி, தேனும் தினைமாவும் கேட்டான் என்று சொல்லி, வளையற்காரனாக்கி விட்டார்கள். வைதீகத்தைப் புகுத்தி, மூட நம்பிக்கையை

வளர்க்கும் பகுத்தறிவிற் கொவ்வாத ஏடுகள் இருக்குமானுல் அவை குற்றம் என்று கருதப்பட்டகாலம். இதனுல் அந்தக் காலத்திற்குத் தகுந்தாற்போல் அப்போது கவிதைகள் எழுந்தன. இடைக்காலத்திற்குத் தகுந்தாற்போல், இன்றைய வள்ளிக்கதை போன்றவைகள் இயற்றப்பட்டன. காலத்திற்கேற்றவாறுதான் கவிதைகள் இயற்றி யிருக்கிருர்கள் என்ருல், காலம் என்னும் சிறையிலிருந்து தன்னை விடுதலை செய்துகொள்ளாதவன் சிறந்த கவியாகமாட்டான். அவன் கோர்ட்டுகளில் உள்ளவர்களைப்போல, ஒரு காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துவைக்கும் ரிகார்டு பேர்வழி. அவன் அழகாக நெல்மணிகளைச் சேகரித்து மிராசுதாரருக்குக் கொடுக்கும் பண்ணையாள். அவன் சிறந்த கவியாகமாட்டான். சிருஷ்டி கர்த்தாவாக மாட்டான். எக்காலத்திலும் ஜீவித்திருக்கும் உயிர்க்கவி யாகமாட்டான்.

## காலமெனும் சிறை

இடைக்காலக் கவிகளும் அதற்குப் பின்னுல் ஏற்பட்ட அநேக கவிகளும், காலமென்னும் சிறையிலே தங்களைத் தாங்களே ஒப்படைத்து விட்டார்கள். அவர்கள் அதினின்றும் வர முயன்ருல், அதைச் சுற்றி மதமெனும் மண்டபச் சுவரை ஏறிக்குதிக்கவேண்டும். சாத்திரம் எனும் சப்பாத்தி வேலிகளைத் தாண்டவேண்டும். ஆதலால் தான் அந்தக்கவிகளுக்கு, ஆண்டவனின் அவதார லீலைகளைப் பற்றியும், கைலைக்கும் திருப்பதிக்குமுள்ள தொடர்பைப் பற்றியும், தேவாதி தேவர்களைப்பற்றியும், தேவாதிதேவன் கௌதமர் ஆசிரமத்திலே செய்த ஆபாசத்தைப்பற்றியும், எழுத எண்ணம் பிறந்ததே ஒழியக் காடுகளைப் பற்றியோ, மாடுகளைப் பற்றியோ, மலைகளைப் பற்றியோ, கவிதைகள் செய்யவில்லை.

செய்யவில்லையா; அடாது! காலைக் கதிரவனைப் பற்றியும் மாலை மதியத்தைப் பற்றியும் பாட்டுக்களில்லையா? இதோ பாரும் என்று சொல்லலாம்; இருக்கின்றன. ஆனால் வைதிகமெனும் குறுக்குச் சங்கிலியுடனே பிணைக்கப்பட்டிருக்கின்றன. கவிதாரசத்துடனேயே அவைகள் கல்லூரி மாணவர்களின் நெஞ்சில் நஞ்சைப் பாய்ச்சுகின்றன.

அதனால் தான் நமது புரட்சிக்கவி அந்த இரண்டையும் வெட்டு என்கிறார். கூரில்லாத வாளைக் கூராக்கு என்கிறார்; படி இல்லாத குளத்திற்குப் படி கட்டு என்கிறார். குன்று இல்லாத இடத்திலே செய்குன்றுவது செய் என்கிறார்; குள்ள உள்ளத்தைக் கொலைசெய் என்கிறார். கூனாதே நிமிர்ந்து நட என்கிறார். மேகத்திலிருந்த நில வொளி வெளியே வரட்டும் என்கிறார். அந்த லோகத்தைப் பற்றிப் பாடாதே; இந்த லோகத்தைப்பற்றிப் பாடு என்கிறார்; நாம் வாழும் இந்த இடத்தைப்பற்றிப் பாடு என்கிறார்; காலத்துக்கு அடிமையாகாதே என்கிறார்; இலக்கணக் கட்டுப்பாடுகளுக்குப் பயப்படாமல் பாடு என்கிறார். அதனால்தான் அவரைப் "புரட்சிக் கவி" என்றழைக்கிறோம்; உயிர்க்கவி, உண்மைக் கவி என்று அழைக்கிறோம்.

## புரட்சிப் புதுவை

புரட்சிக்கவி என்றுதான் அழைக்கிறோமே ஒழிய, புரட்சியில் முதற்கவி என்றழைக்கவில்லை. அவர் இந்த லோகத்தைப்பற்றி இவ்வளவு புரட்சிகரமாகப் பாடுவதற்குக் காரணம், அவர் வாழும் புதுவை ஆகும். புதுவையானது பிரான்சு நாட்டைச் சேர்ந்தது. பிரான்சு சுதந்திரத்தின் பிறப்பிடம். நாம் எல்லாம் ராஜாதி ராஜர்களைப் போற்றிய நேரத்தில், அங்கு அரசர்களைச் சிறையில் அடைத்தகாலம்.

அரண்மனைகளை ஆசிரமங்களாக அநியாயக் கோட்டைகளாக ஆக்கிய நேரத்திலெல்லாம், அங்கு பாஸ்டிலி உடைக்கப் பட்ட நேரம். ஆண்டான் அடிமை என்ற வார்த்தைகள் இங்கு உலவிய நேரத்திலெல்லாம், அங்கு சுதந்திரம் விடுதலை என்ற கோஷங்கள் வானைக் கிழித்த நேரம். அந்தப் பிரான்சின் சாயல், அந்தப் பிரான்சின் தென்றல், அவர் வசிக்கும் புதுவையில் வீசுவதால்தான், அவர் கொடுக்கும் தலைப்புகள் புரட்சிகரமானதாகப் புத்துலகக் கருத்துக்களைக் கொண்டிலங்குவதாக இருக்கின்றன.

## யாருக்குத் தெரியும்

பல கவிகளுக்கு, அவர்கள் பாடுகிற பாட்டுக்களைப்பற்றி அவர்களுக்கே தெரியாது. ஆனைமுகனைப் பற்றி அழகாகப் பாடுவார்கள். துதிக்கையைப் பார்த்ததுண்டா? அதன் அகல நீளமென்னவென்றால், தெரியாது. ஊர்வசியும் ரம்பையும் சிறந்த நாட்டியக்காரிகள்; அவர்களிருப்பது தெய்வலோகம் என்றால், கேள்வி ஞானமே ஒழிய அனுபவமேது? பத்துத்தலை ராவணனைப் பற்றிப் பாடுகிறார்களென்றால், இராவணனைப் பார்த்ததேது? பரமசிவன் பார்வதியுடன் ரிஷப வாகனரூட ராய்த் திடீர் திடீரெனத் தோன்றி மறைகிறார் என்றால், என்றாவது கண்டதுண்டா? படித்ததை எழுதுகிறார். கேட்டதை ஒப்புவிக்கிறார். அதாவது ஒருவர் கேள்விப்பட்டு எழுதுவார்; சொல்லுவார் சொன்னதைக் கேட்டவர் அதையே எழுது வார். இது பரம்பரை என்பதே தவிர, கண்டதை—பார்ப்பதை—அனுபவ பூர்வமாக எழுதுகிறார்கள் என்பதற்கில்லை. (சிரிப்பு)

## சிந்தனை சொல்லிற்று

பாரதிதாசன் மாத்திரம் தான், தான் கண்டதை எழுதுகி றார் பார்த்ததை எழுதுகிறார். புரியாத விஷயங்கள், தெரியாத

விஷயங்கள் ஜோலிக்கே போகமாட்டார். காணுத கடவுளைப் பற்றி எழுதமாட்டார்; இன்று இல்லாவிட்டாலும் நாளை பரிகாசத்திற்கு இடமாகும் என்று. நான் வேதாந்தத்தைப் பற்றிப் பேசினுல் வேடிக்கையாயிருக்கும்; சங்கராச்சாரி பொருளாதாரத்தைப்பற்றிப் பேசினுல் வேடிக்கையாயிருக்கும் என்பதுபோல; அலையையும், மலையையும், மயிலையும், மடந்தையையும் பற்றிப் பாடவேண்டிய புலவர்கள், ஆறு முகத்தைப்பற்றியும், ஆறு முகத்தில் எந்த முகம் வள்ளிக்கு முத்தம் கொடுத்த சொந்த முகம் என்பதைப் பற்றியும், பரமசிவத்தின் சூலாயுதத்தைப் பற்றியும், அந்த சூலாயுதம் மொட்டையாயிருந்தால் மேருமலையின் எந்தப்பாகம் தீட்ட உபயோகப்படும் என்பதைப் பற்றியும் பாடினுல், வேடிக்கையாயிருக்கும் என்பது மட்டுமல்ல; ஏதோ புலவர் கஞ்சாப்புகையில் கப்சா அடிக்கிருர் என்றுதானே நினைக்க நேரிடும். (சிரிப்பு)

பண்டிதர்களின் பரம்பரையிலே, பாரதிதாசனும் கொஞ்சநாள் இருந்தார். கவி பாடினுர்; மற்றவர்களைப் போல, மயிலையும் முருகனையும் பற்றிப் பாட்டுக்கள் பாடினுர். வள்ளியைப்பற்றி லாலிகள் பாடினுர். அவரது பாக்களும், வெள்ளிக் கிழமை விளக்கு ஏற்றிவைத்த நேரத்தில் மஞ்சள் பெட்டியில் வைத்துப் பூசிக்கப்பட்டன. இதைப் பார்த்தார் நம் கவிஞர். நாம் இவ்வளவு நாட்களாகப் புளுகிவிட்டோமே; எவ்வளவு மக்களை மருளுக்கு அழைத்துச் சென்றிருக்கிருேம்; அவர்களுக்கு உண்மையை உரைக்கவில்லையே; நாம் அகப் பட்டுக்கொண்டோமே! நெற்றிக்கண் பரமசிவத்தைப் பாடிவிட்டு; பிறகு ஓர் பகுத்தறிவுவாதி, நீ பரமசிவத்தைப் பார்த்தாயா? என்று கேட்டால் என்ன சொல்வது என்று சிந்தித்தார் அந்தச் சிந்தனை

அவருக்குச் சொன்னது; 'உனக்குக் கவிதைபாட கயிலாயம் தானு தேவை? கடவுள்தானு வேண்டும்! சுனையைப்பற்றிப் பாடு. பாறையைப் பற்றிப் பாடு; தென்றலைப் பற்றிப் பாடு; நீல வானைப்பற்றிப் பாடு; கோள விழியைப்பற்றிப் பாடு; (முழுநிலவைப் பற்றிப் பாடு) கூர்வாளைப் பாடு; வீரனின் தோளைப் பற்றிப் பாடு; வட்ட தாமரையைப் பற்றிப் பாடு. அவைகள் உனது பேனுமுனையின் கட்டளைக்குக் காத்துக் கிடக்கின்றன என்று. இதை 'ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட' என்னும் அவரது கவிதையிலே பார்க்கலாம் அது அவரது கவிதை மட்டுமல்ல; அவரது சுயசரித்திரமு மாகும்.

## அவர் செய்தது

நம்பத் தகாதவைகளை நம்புவதா? நம்பும்படி நாட்டு மக்களை நிர்ப்பந்திப்பதா? இதைவிட நயவஞ்சகர் செயல் வேறென்றுமில்லை. அந்த இலாகாவே வேண்டாமென்று இந்த லோகத்துக்கு வந்தார். வந்து கடவுள் முதற்கொண்டு கர்ப்பத்தடை வரைக்கும், காதலிலிருந்து விதவை மறுமணம் வரைக்கும், சுண்ணும்பு இடிக்கிற பெண்ணின் பாட்டிலி ருந்து ஆலைச்சங்கு நாதம் வரைக்கும், அன்றுட வாழ்க் கைக்கு அவசியமானதெனக் காணப்படுவதைக் கண்டுகளிப் பதை, நாம் பாடவேண்டுமென்றிருந்ததைப் பாடினுர்; பாடுகிறுர். நாம் பார்ப்போம்; இந்தக் கட்டழகியின் கண்ணீ ருக்காவது ஒரு பாட்டுப்பாடவேண்டும் என்று நினைப்போம். ஆனுல் பாடமுடியாது. அதைப் பாரதிதாசன் பாடுவார். நமது வேலையை அவர் செய்து தருகிறுர்.

நாம் விதவைகளைப் பார்க்கிறேம்; அவர்கள் பூவணி யாத கோலத்தைப் பார்க்கிறேம். அவர்கள் கன்னத்தில்

வந்து காய்ந்துபோன நீரைப் பார்க்கிறோம். தேம்புதலைக் கேட்கிறோம்; மமதையாளர்கள் அவர்களுக்கு மணவாளர் களும் தேவையா என்று சொல்லுவதைக் கேட்கிறோம்; அதே மமதையாளர்கள் மாளவேண்டிய வயதிலே, காமரசம் பருகுவதற்காகக் கன்னிகைகளைத் தேடுவதைப் பார்க்கி றோம்; தாத்தாவுக்கு வாழ்க்கைப்பட்ட பெண், தாழ்வாரத்தி லே தனியே புரள்வதைப் பார்க்கிறோம்; அவளது கண்ணீர் தலையணையை நனைத்துக்கொண்டிருப்பதையும்பார்க்கிறோம்; பார்த்துக் கருத்தை வெளியிட கவிதைகள் கட்டலாமா என்று நினைக்கிறோம். ஆனால் முடியவில்லை; கவிஞர் பாரதி தாசன் அதைக் கவிதையால் பாடுகிறார், பாடி, 'இதைத் தானே தம்பி நீ பாடவேண்டுமென்று நினைத்தது' என்று காட்டுகிறார். நாம் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். அவர் கவிதைகளிலே, அந்த லோகத்தைப் பற்றியோ, அந்த வாழ்வைப் பற்றியோ இருக்காது.

## காதற்ற ஊசி

பட்டினத்தடிகள் காலத்திலிருந்துதான் மாய வாழ்வைப் பற்றி மக்கள் அதிகம் நினைக்க ஆரம்பித்தனர். 'காதற்ற ஊசியும் கடைவழிக்கு வாராதுகாண்'என்ற மாயவாழ்க்கைத் தத்துவம் இன்றும் உலவுகிறது நாடகங்களிலே, நீங்கள் இதைப் பார்த்திருக்கலாம். அங்கிருந்து 'அரசன் வருவான். அரசனைப்பார்த்து ஒருவன் கேட்பான்; இந்த அரண்மனை யாருக்குச் சொந்தம்? இந்த நந்தவனம் யாருக்குச் சொந்தம்? இரும்புப்பெட்டி யாருக்குச் சொந்தம்? இரும்புப்பெட்டியி லுள்ள இருபது லட்சம் யாருக்குச் சொந்தம்? என்று. அரசன் 'யாருக்கும் சொந்தமல்ல' என்று சொல்லுவான்,

உண்மையிலேயே அவன் இறந்த பிறகு அதை அவன் மகன் அனுபவிப்பான்; மகனில்லாவிட்டால் மருமகன் அனுபவிப்பான். மருமகன் இல்லாவிட்டால் அவனது வார்சுகளில் ஒருவன் அனுபவிப்பான். வார்சுமில்லாவிட்டால் தர்ம கர்த்தாக்கள் அனுபவிப்பார்கள். தர்ம கர்த்தாக்கள் இல்லாவிட்டால், நிரந்தர தர்மகர்த்தர்களாகிய நமது சர்க்கார் அனுபவிப்பார்கள். இதை மக்கள் உணருவதில்லை. உணர அவர்கள் மனம் இடம் கொடுக்காது. (கை தட்டல்)

ஓ. கே. அந்த 'மாயம்' எந்த அளவிற்கு மயக்கத்தை மக்களிடையே உண்டாக்கிற்று என்றால், நாற்பது வயது ஆளைப்பார்த்து 'என்ன சௌக்கியமாயிருக்கிறீர்களா?' என்றால், சௌக்கியமாயிருக்கிறேன்; இல்லை; என்று மேல் ஸ்தாயி இரங்கிக் கீழ் ஸ்தாயிலே சொல்லுவான். சொல்வதிலே சுரங் குறைந்திருக்கு மென்பதோடு மட்டுமல்ல; பேச்சுடன் பெருமூச்சும் கலந்து வரும். அந்தக் கலப்புக் கேட்டவனுக்கே பயம். கவலையையும் உண்டாக்கிவிடும்; (சிரிப்பு) நல்லாயிருக்கிறேன் என்று சொன்னால் என்ன? மேல் நாடுகளிலே ஆங்கிலத்திலே ஹௌ டு யு டு என்றால் உடனே ஓ. கே. (நன்றாயிருக்கிறேன்) என்று சொல்வார்கள். அதனால் தான் அவர்கள் வாழ்கிறார்கள். நாம் ஏதோ இருக்கிறோம் (மீண்டும் சிரிப்பு) பத்து வயதிலேயே பரதேசியாகி, பரலோகத்தைப்பற்றி, மாயத்தைப்பற்றி, 'காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா' என்று பாடுகிறோம்; இந்த வாழ்வு, எத்தனை நாளைக்கு சார்! எல்லாம் மாய வாழ்வு; இது சதம் என்று கருதுகிறீர்கள் என்று உண்மையிலேயே, தெரிந்தோ, தெரியாமலோ எண்ணுகிறவர்கள், ஏட்டிலே தீட்டுகிறவர்கள், நம்மவரில் அநேகம் பேர் இருக்கின்றனர்,

## அழைத்தால்

'சிவனே, அப்பா, உனது பாதாரவிந்தம் எப்போது கிடைக்கும்' என்று சிலைக்குமுன் கதறுகிற ஒரு சைவரிடம், ஒரு வேளை, பரமசிவன் போல் யாராவது வந்து 'பக்தா பயப்படாதே, எழுந்திரு; உனது சிவநேசத்தைக் கண்டு உள்ளம் பூரித்தேன். இன்றுமுதல் நீ என்னுடன் இரண்டறக் கலந்துகொள்ளலாம் வா! என்று அழைத்தால், போவதற்கு அவர் தயாராயிருப்பாரா என்று கேட்கிறேன். என்ன சொல்லுவார் அப்பொழுது. 'பிரபோ' தாங்கள் காட்சியளித்தது போதும்' என்பார். 'அப்பொழுது தான் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் தனது மகன் பி. ஏ. ல் முதல் வகுப்பிலே பாசாக வேண்டாமா, என நினைப்பார். தன் ஒரே மகளுக்கு நல்ல இடத்தில் மணம் முடித்து வைக்கவேண்டுமே என்று நினைப்பார். போன வருடம் பாங்கியிலே போட்ட 9 ஆயிரம் ரூபாய் எப்போது 10 ஆயிரமாக ஆகும் என்று எண்ணுவார். ஈசனைப் பற்றிய எண்ணம் தோன்ருது. உண்மையிலேயே அவர்கள் பக்தியில்அர்த்தமிருக்கிறதா? மாயவாழ்க்கையைப் பேசுவதில் நிஜம் இருக்குமா? என்ருல் இல்லை. இவைகளெல்லாம் மக்களை மயக்கி, அவர்கள் உழைப்பிலே வாழ்வதற்காக நயவஞ்சகர்களால் வகுக்கப்பட்ட சூழ்ச்சியான வழிகள். மக்கள் இதை நம்பி இந்த வழியிலே போய்த் தடுமாறுகிருர்கள்.

## புரட்சி மனப்பான்மையைத் தீய்த்தவைகள்

விழுப்புரம் ஜங்ஷனிலிருந்து கொண்டு பாண்டிக்குப் போகிறவன் வழி பார்ப்பது போலவும், திருச்சி ஜங்ஷனிலுள்ளவன் மதராசுக்குப் போவதற்கு விழிப்பது போலவும், மக்கள் பிறந்தவுடனேயே அண்ணாந்து மேலே பார்த்துக்கொண்டு,

'அப்பா, இதை விட்டு எப்போது அந்த லோகத்திற்கு வருவேன்' என்று, இந்த லோகத்தை ஒரு ஜங்ஷனுக்கிவிட்டார்கள். [சிரிப்பு] சமணர்கள் காலத்தில் நிலையாமை தத்துவம் கொஞ்சம் வளர ஆரம்பித்தது. மணிமேகலையில் ஓர் இடத்தில் யாக்கை நிலையாமையைப்பற்றி ஆசிரியர் சுதமதியின் வாயின் மூலம் கூறியிருக்கிறார். சுதமதி, மணிமேகலையின் தோழி, மலர்வணத்திலே மணிமேகலையைக் கண்ட அரசகுமாரன் [உதயகுமாரன்] 'மானே! மயிலே! மரகதமே! என்று கூறுகின்றான். கூறிக்கொண்டே கிட்ட வருகின்றான்' அப்போது சுதமதி கூறுகிறாள்.

வினையில் வந்தது; வினைக்கு விளைவாயது;
புனைவது நீங்கிற் புலால் புறத்திடுவது;
மூப்புவிளி உடையது; தீப்பிணி யிருக்கை;
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்—

மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து" [மணிமேகலை] 'மானே என்கிறீரே, அங்கே என்ன இருக்கின்றது? தோல்; தோலைப் பியத்தால் நார்; நாரைப் பியத்தால் நரம்பு; நரம்பைப் பியத்தால் இரத்தம், சீழ்;இவற்றிலாகாமரசம் பருகலாமென்று வந்தீர்?' என்று யாக்கை நிலையாமையைப் பற்றிக் கூறுகிறாள். காமவேகத்தை அடக்குவதற்காக, சுதமதி அரசகுமாரனிடம் யாக்கை நிலையாமையைப்பற்றிக் கூறினது போல, மக்களின் மனோவேகத்தை அடக்க, மாய வாழ்வைப் புகுத்தினார்கள் சில நயவஞ்சகர்கள்; எத்தர்கள் நல்லவர்களைப்போல நடித்தார்கள்; ஏமாளிகள் இந்த லோகத்தில் கஷ்டப்படாமல், அந்த லோகத்தில் சுகம் கிடைக்கும்; இந்த லோகத்தில் நடக்கிற அநியாயங்களுக்கு, அந்த லோகத்தில் நீதி கிடைக்கும் என்றெண்ணி, எவ்வளவு கொடுமைகளை எவர் இழைத்தாலும், அது எம்பெருமான் இட்ட

கட்டளை என்று சொல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியா மல் அனுபவித்தார்கள்; அனுபவிக்கிறார்கள், மாய வாழ்வு, விதி, அந்த லோகம் என்பவைகளெல்லாம் புரட்சி மனப் பான்மையைத் தீய்த்துவிட்டன.

## வேறு நாடாயிருந்தால்

இல்லாவிட்டால், 150 ஆண்டுகளாக இவ்வளவு பெரிய நாடு, பரந்தவொரு விஸ்தீரணத்தைக்கொண்ட நாடு, பலப் பல புராணப் பெருமைகளைக் கொண்ட நாடு, அந்நியனு டைய ஆட்சியிலே இருந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர் களா? அல்லது பார்த்திருக்கிறீர்களா? மேல் நாடுகளிலே 25 ஆண்டுகளுக்கு ஒரு தடவை புரட்சி என்று படிப்போம். கலையிலே புரட்சி; மதத்திலே புரட்சி; நடை உடை பாவனை யிலே புரட்சி; பொருளாதாரத்தில் புரட்சி; எல்லாவற்றிலும் எங்கும் புரட்சி என்று படிப்போம். இங்கு ஏதாவது புரட்சி உண்டா? என்றால் இல்லை. (இன்று இல்லாவிட்டால் நாளை யாவது ஏற்படுமா?) வங்கத்திலே பஞ்சம் ஏற்பட்டது. பட் டினியால் பல லட்சம் பேர் பிணமாயினர். அந்தப்பிணத்தை நாயும் நரியும் இழுத்தன என்ற இந்தக் காட்சி, என்ற இந்த நிலை மேல்நாடுகளிலே, வேறு நாடுகளிலே மட்டும் ஏற்பட் டிருந்தால் என்ன நடந்திருக்கும்; அப்பொழுதே புரட்சி நடந்திருக்கும். ஆனால், துர்ப்பாக்கியமான இந்நாட்டிலே அது கிடையாது. ஏன் ஏற்படவில்லை? ஆங்கிலேயனுடைய ஆயுதங்களுக்கஞ்சியா? இல்லை. புரட்சி மனப்பான்மையையே நமது கவிதைகளும் காவியங்களும் அடக்கி விடுகின்றன; ஆதலால்தான்.

## இருந்தால் என்ன? இறந்தால் என்ன?

அதனால் தான் நமது கவி பாரதிதாசன் இந்த லோகத் தைப் பற்றிப் பாடுகிறார். இந்த லோகத்தில் நீ பிறந்தது

வாழ; வாழ என்றால் நிம்மதியுடன் வாழ; பிறரைச் சுரண்டா மல் வாழ; பிறரை வஞ்சித்தால் தான் வாழலாம் என்ற எண் ணமில்லாமல்வாழ; சுதந்தரமாய்வாழஎன்கிறார். உறுதியிலே சிறந்த கவியான இக்பால் என்பவர், வாழ்க்கையைப் பற்றி குறிப்பிடும்போது, அச்சமற்ற வாழ்க்கை தேவை என்கிறார். அச்சமற்ற வாழ்க்கை என்றால் அந்நியருக்கு அச்சமற்ற வாழ்க்கை; அறியாமைக்கு அச்சமற்ற வாழ்க்கை. சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு அச்சமற்ற வாழ்க்கை. அந்த அச்சமற்ற வாழ்க்கையைத்தான் தமிழன் நடத்த வேண்டும். அதற்கு இடையூறாக எந்தக் கட்டுப்பாடுகள் வந்த போதிலும் தூள் தூளாக்கவேண்டும். இதைத் 'தாயின் மேலாணை, தந்தைமே லாணை, தமிழக மேலாணை, தூய என் தமிழ்மேல் ஆணை யிட்டே நான் தோழரே உரைக்கின்றேன்' என்று அவர் பாட்டில் கூறுகிறார். அவர்கவிதைகளிலே இந்த லோகத்தைப் பற்றி, இந்த வாழ்வைப்பற்றி, வாழ்கின்றமுறையைப்பற்றித் தான் இருக்கும். இதுதான் தேவை.

அவன் ஏன் ஏழை? பூர்வ ஜென்மத்தில் செய்த பாவம். அவன் ஏன் பணக்காரனாயிருக்கிறான்? அவன் செய்த புண் ணியம். அவன் ஏன் தூங்காமலும் வேலை செய்துகொண்டே யிருக்கிறான் ?இவன் ஏன் வேலையில்லாமல் தூங்குகிறான்? அவாளவால் பூர்வஜென்மபலன் தாழ்ந்தஜாதி என்று ஒன்று ஏன் இருக்கவேண்டும்? உயர்ந்த ஜாதி இருக்கிற பொழுது தாழ்ந்த ஜாதி இருந்து தானே ஆகும் என்ற வேதாந்தங்களை யும்—பிறந்தோம்: பரமன் இட்ட கட்டளையை அனுபவித்துத் தானே தீரவேண்டும் என்ற கோழை உள்ளங்களையுமே வளர்ப்பவைகள் எந்த உருவத்தில் இருந்தால் என்ன? கலை யாயிருந்தால் என்ன? காவியமா யிருந்தால் என்ன? எழுசீர் அடியாயிருந்தால் என்ன? அந்தாதியாயிருந்தால் என்ன?

அகவலாயிருந்தால் என்ன? இவைகள் இருந்தால் என்ன? இறந்தால் என்ன! பிற்காலத்திற்குத் தேவையில்லை. தேவையில்லை என்று சொல்லுபவர்களைக் கலையின் விரோதிகள், கலை நிலை உணரா மக்கள் என்றும், தங்களையும் ஆதரிக்க ஒரு பத்துபேர்கள் இருக்கிறார்கள் என்ற துணிச்சலால் சிலர் சிந்தனையின்றி நிந்திக்கலாம். ஆனால் அவர்களெல்லோரும் வருங்கால மக்களின் கண்டனத்துக்குறியவர்கள்.

## ஏன் சொல்லுகிறோம்?

மீனாட்சி சுந்தரனார்களும்: சிதம்பர நாதனார்களும், புத்தம் புதுக் கவிதைகளைக் காவியங்களை இயற்றித் தரத்தானே இருக்கிறார்கள். சேரன் செங்குட்டுவனின் வீரத்தைப்பற்றி ஒரு பாட்டுப் பாடுங்கள் என்று மீனாட்சி சுந்தரனார்களைக் கேளுங்கள்; 'ஏன்? வீரம் சேரன் செங்குட்டுவனில்தான் இருக்கிறதா? கம்பராமாயணத்திலே வீரம் செறிந்திருக்கிறதே' என்பார்கள். (பலத்த கை தட்டலும் சிரிப்பும்) நான் மீனாட்சி சுந்தரனாரைப்பற்றி ஏதோ தவறாகக் கூறுகிறேன் என்று நினைக்கவேண்டாம். இராமனுடையவீரம் தமிழனுடைய வீரத்திற்கு நல்ல எடுத்துக்காட்டல்ல. தமிழனுடைய வீரத்திற்குத் தக்க சான்று உள்ளதைப் பாடுங்கள் என்கிறோம். புதிய கவிதைகளைப் பாடுங்கள் என்கிறோம். எங்கள் ஊனக் கண்ணுக்குத் தெரியும் பொருளைப்பற்றிப் பாடுங்கள் என்கிறோம். சாதாரண மக்களின் சதையையும் பிய்க்கும்படியான கவிதைகளைப் பாடுங்கள் என்கிறோம். தாயின் தன்மை ததும்பும்படி பாடுங்கள் என்கிறோம். தேயிலைத் தோட்டத்திலே நமது இளம் பெண்கள் படுகிற கஷ்டத்தைப்பற்றிப் பாடுங்கள் என்கிறோம். பாட்டாளி கொடிய பணக்காரனுக்கு அடிமை; பணக்காரன் பூசாரிக்கடிமை; பூசாரி ஏட்டுக்கடிமை; ஏடு கலைக்கு அடிமை; கலை கலாரசிகர்களுக்கு அடிமை; கலாரசி

கர்கள் பழமைக்கடிமை என்ற அடிமைத்தனம் அறுபடும் மார்க்கத்தைப்பற்றிப் பாடுங்கள் என்கிறோம்.

அப்படி நம் புரட்சிக்கவி பாரதிதாசன் பாடியதால் தான், அவரை உண்மைக்கவி என்கிறோம். அவர் ஒருவர் தான் நாம் விரும்புகிற முறையிலே காட்சியளிக்கிறார். நமது பாராட்டுதலுக்குரியவர் ஆகிறார். நந்தவனத்தில் உலவுகிற ஒருவன், ஒரே ஒரு ரோஜாப்பூவைப் பார்க்கிறான். அதை அவனது ஒரே தங்கைக்குக் கொண்டுபோய்க் கொடுக்கிறான் என்பதுபோல.

## குட்டிப் பாரதிதாசன்

நாமக்கல் கவிஞரின் மகனார் "தியாகி"யில் தீட்டிய ஓர் கவிதையைப் பார்த்தேன். நாமக்கல் கவிஞர் வீட்டிலே ஓர் குட்டிப் பாரதிதாசன் வளர்கிறார். மணியடிக்கிறதாம் பள்ளிக்கூடம் விட்டு வீடு வருகிறார். வழியிலே சாலைக்குப் பக்கத்தில் எச்சிலிலை வீழ்கிறது. சில நாய்கள் பாய்கின்றன; அந்த நாய்களுடன் இவர் கண்களும் பாய்கின்றன. ஆனால், ஆச்சரியப்படவில்லை; அடுத்த விநாடி ஓர் வற்றிய மனித உருவம் வருகிறது.எச்சிலைகளின் மேல் பாய்கிறது. பாய்ந்து நாயைக் கல்லால்கூட அடிக்க வலுவில்லாமலும், கையால் பிடித்துத் தள்ளுகிறது. தள்ளிவிட்டு, நாயின் எச்சிலை உண்கிறது. நாய் சும்மா போகவில்லை. ஒரு கடி கடித்துவிட்டுப் போகிறது. இதைக் காண தம்பிக்கு ஆச்சரியம் மட்டுமல்ல, வேதனையும் பிறக்கிறது. தம்பி, இந்தக்காட்சியை இன்னும் காணும்படியான நிலையிலே உள்ள, 'ஏ பாரத நாடே' என்கிறார். கவிதை முடிகிறது. முடிக்கிறார் என்றால், எல்லோரையும் போல, "ஈசனே சிவகாமி நேசனே" என்று முடிக்கவில்லை 'என் நாடே' என்று கவிதையை முடிக்கிறார். இன்று கவிதைகள் அப்படிப்பட்ட முறையிலே வெளிவரவேண்டும் என்கிறோம்.

# முத்திரை மோதிரம்

பாரதிதாசன் பாக்கள் அத்தகையன; அதனுல்தான் அவர் பாக்களை மாணவர்கள் போற்றுகின்றனர். அவரைச் சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம்; அவர் கார சாரமாகச் சாதியைச் சமயத்தைக் கண்டிக்கிருர் என்பதற்காக பாரதி தாசன் வர்ணுஸ்ரமத்தைக் கண்டிக்கிருர். கண்டிக்கலாமா? சனுதனத்தைச் சாடலாமா? வகுப்பு வாதத்தை வளர்க்க லாமா என்று கேட்கின்றனர். வகுப்புவாதத்தை அவர் வளர்க்கிருர் என்ருல், வகுப்புவாதம் இந்த நாட்டைவிட்டுப் போகத்தான்—விட்டு விலகத்தான்–பாரதிதாசன் பாடுகிருர். கவிதைகளைக் கவண் கற்களாக உபயோகப்படுத்துகிருர். அந்தக் கற்கள் வருணுஸ்ரமத்தைத் தாக்குகிறது. அது யாருக்குச் சொந்தமான கோட்டையாயிருந்தால் என்ன; அது யாருக்குச் சொந்தமான கொத்தளமாயிருந்தால் என்ன; தாக்கட்டும், தகர்க்கட்டும் என்கிருர். அந்தக் கோட்டைக்குச் சொந்தக்காரர் யார் என்று பார்க்கிருர்; அவர்களைத் தாக்குகிருர்.

கன்னையா கம்பெனி நாடகம் நடக்கிறது. ராஜபார்ட் வேஷத்தில் உள்ளவனின் ராகம் ரசிக்கவில்லை, தொண்டை கட்டிய காரணத்தால்; உடனே நாடகத்தைப் பார்ப்பவர்கள், 'உள்ளே போ, உள்ளே போ' என்று கூச்சல் போடுகிருர்கள்; போய் விடுகிருன். நாடகம் முடிந்து, வெளியே போகிறவர்கள் என்ன பேசிக்கொள்வார்கள்? 'கன்னையா கம்பெனி மோசம்' என்பார்கள். ராஜமாணிக்கம் பிள்ளை நாடகம் நடக்கிறது. நடிகர்களின் திறமையாலோ, அல்லது மின்சார விளக்குகளின் மினுமினுப்பாலோ, உட்கார்ந்திருப்பவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. நாடகம்

முடிந்து, வெளியே போகிறவர்கள் என்ன பேசிக்கொள்வார்கள்! 'ராஜமாணிக்கம் கம்பெனி நன்ருயிருக்கிறது' என்பார்கள்.

எப்படித் தொண்டை கட்டிய நடிகன், கன்னையா கம்பெனிக்குச் சொந்தமானதால், கன்னையா கம்பெனி பழிப்புக்கிடமாகிறதோ, அதேபோல, வருணுஸ்ரம கொடுமைக்கு ஜாதீயக் கொடுமைக்குச் சொந்தக்காரர்களாய் இருப்பவர்கள் பழிப்புக்கு இடமாகிருர்கள். ஜாதீயக் கொடுமையின் மேல் எந்த சிலாசாசனம் பொறிக்கப்பட்டிருக்கிறது? யாருடைய முத்திரை மோதிரம் போடப்பட்டிருக்கிறது என்று பார்த்த நேரத்தில், ஒரு வகுப்பாரின் முத்திரை மோதிரம் தெரிந்தது. தெரிந்ததால் தான், நாமும் நமது கவியும் ஆரியத்தைத் தாக்குகிருேம்; காரணத்தோடு.

பார்ப்பனர்கள் எனது ஆருயிர் நண்பர்கள். எப்படியிருந்தால்? பார்ப்பனர்கள் மாத்திரம் தங்களுடைய குறையை நீக்கிக் கொள்வார்களாளுல், இந்தப் பாரில், பார்ப்பனத் தோழர்களைப்போலப் பரம திருப்தியாளர்கள் யாரும் எனக்கு இருக்க முடியாது. நீக்கிக்கொள்ள கொஞ்சம் தன்னலமற்ற தன்மைவேண்டும். புதுமைக் கருத்து வேண்டும்; துணிவு வேண்டும்; அஞ்சாநெஞ்சம் வேண்டும். புதுச்சேரியிலே வைதிகர்களைத் திட்டுகிருர்களென்ருல், பயப்படாமல் போய் ஏன் என்று பார்க்கவேண்டும். காக்கை குருவி எங்கள் குலம் என்று பாரதி பாடிய இந்த நாட்டிலே, சூத்திரர்கள், மனிதர்கள் எங்கள் குலம் என்று சொல்வதற்கு இன்றும் அஞ்சுகிருர்கள் என்ருல், நாங்கள் வீசுகிற குண்டு எந்தக் கோட்டை மீது வீழ்ந்தாலென்ன? அதிலிருந்து வெளிவரும் விஷவாயுக்கள், நச்சு வாடைகள், மூடக்கு வாதங்கள் ஒழியவேண்டும்.

பார்ப்பனத் தோழர்கள் மாத்திரம் நம்முடன் கைகோர்த்துத் தோளுடன் தோள் இணைந்து, நாம் "ஜாதியை ஒழிப்போம்" என்று எழுதியும், பேசியும், செயலிலே காட்டியும் வருவது போல் வரட்டும்; வராவிட்டால் சும்மா இருக்கட்டும், சும்மா இல்லாவிட்டால் எதிர்க்காமலாவது இருக்கட்டும்; எதிர்க்காமல் இருக்க முடியவில்லை என்ருல், ஏளனம் செய்யாமலாவது இருக்கட்டும்; ஏன் என்று கேட்காமல் எதையாவது செய்யட்டும் என்று கூறட்டும். பாருங்கள்! பத்து வருடத்தில் ஜாதி ஒழிகிறதா, இல்லையா என்று! கவி கண்ட கனவு நினைவாகிறதா, இல்லையா என்று.

## அறிவு கெட்ட தமிழகம்

எங்கே—எடுத்துக் கொள்ளுங்களேன். ஒரு பத்திரிகை, "பகவத்கீதையிலே நாலு சாதி இருக்கவேண்டும்" என்று பரமாத்மா கூறியிருக்கிருர் என எழுதும். "அது யார் சொன்னது? பகவத்கீதையிலே சாதிக்காதாரமில்லை" என்று ஒரு பேப்பர் எழுதும். மற்ருேர் பேப்பர், "நீங்கள் கீதையை வேறுவிதமாக அர்த்தம் பண்ணிவிட்டீர்கள்" என்று செந்தமிழ்ச் செல்வி தீட்டும். அறிவுகெட்ட தமிழகம்; எதைத்தான் நம்பும்! கீதையை நம்புமா? தனிப்பட்டவர்கள் சொல்லும் தத்துவார்த்தத்தை நம்புமா?

## அலங்காரமான உடை, ஆனுல் ஆபாசமான கருத்து.

காலையில் நான் ரயிலில் வரும்பொழுது, நான் வந்த கம்பார்ட்மெண்டில் ஒரு கல்லூரி மாணவர், திருச்சி செயின்ட் ஜோசப்பில் வேதாந்தம் படிக்கிறவர்; இரு பார்ப்பனப் பண்டிதர்களிடம் தர்க்கம் பண்ணிக்கொண்டு வந்தார். மாணவர் அந்த ஐயர்களைப் பார்த்து, 'வினை என்கிருர்களே,

அதைப்பற்றி விதண்டா வாதக்காரர்கள் சில சமயங்களிலே கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை; அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்' என்ருர். உடனே பண்டிதர்கள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல், "நீங்கள் கல்லூரியிலே படிக்கிறேன் என்கிறீர்களே, சாப்பாடு எங்கேயோ?" என்று மாணவனைக் கேட்டார்கள். மாணவர் அதற்கு, 'பிராமணர்களுக்கெல்லாம் நம் ஹாஸ்டலிலே தனி இடம் உண்டு. அங்கே தான் சாப்பாடு என்ருர். நெற்றியிலே ஒன்றும் இல்லாவிட்டாலும், உடனே மாணவன் பிராமணன் என்று தெரிந்துகொள்கிருர்கள். மாணவன் நெற்றியிலே நீரில்லை. கல்லூரியிலே படிக்கிறவர்; அதுவும் வேதாந்தப் படிப்புப் படிக்கிருர்; இங்கிலீஸ்காரனும் பார்த்துப் புதுமாதிரி என்று கற்றுக்கொள்வான், அவ்வளவு அழகாகக்கிராப்பை வாரிவிட்டிருக்கிருர். அலங்காரமான உடைதான்; ஆனுல் ஆபாசமான கருத்துக்கள் மாணவன் பிராமணன்என்று தெரிந்துகொண்ட பிறகுதான், அந்தப்பண்டிதர்கள் சரி, விவாதிக்கலாம் என்கிருர்கள்.

விவாதம் ஆரம்பமாயிற்று. மாணவன் கேட்டான் ஒருவன் கஷ்டப்படவும் இன்னொருவன் சுகப்படவும் காரணம் என்ன? என்று. அதற்கு அவனவன் செய்த பாவ புண்ணியம் என்று பதில் அளித்துவிட்டு, மாணவனைப் பார்த்து "சரி தம்பி! ஒருவன் 60-ம், இன்னொருவன் 40-ம், மற்ருெருவன் 20-ம் மார்க்குகள் வாங்கக் காரணம் என்ன?" என்ருர்கள். அவன் பண்டிதர்கள் மொழியிலேயே "அவாளவாள் படித்த படிப்புக்குத் தக்கவாறு" என்ருன். பண்டிதர்கள், "இதைப் போலத்தான் சுகத்தையும் கஷ்டத்தையும் அவாளவாள் செய்த பாவ புண்ணியத்திற்குத் தக்கவாறு அடைகிருர்கள்"

என்று எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் விவாதிக்கத் தர்க்க சாத்திரம் தேவையில்லை; வேதாந்தங்களே உதாரணம்; கதைகள் மூலம்தான் விளக்குவார்கள். 'சரி அதிருக் கட்டும்' என்று சற்று நேரம் கழித்து மாணவன், "இந்த ஜென்மத்தில் அனுபவிப்பது, போன ஜென்மத்தில் செய்த பாவம்; போன ஜென்மத்தில் கஷ்டத்தை அனுபவிப்பதற்கு அதற்கு முந்திய ஜென்மத்தில் செய்த பாவம் என்று, இப்படியே அதற்கு முன்ஜென்மம், அதற்கு முன்ஜென்மம், என்று போய்க்கொண்டேயிருந்தால், முதல் ஜென்மம், அதாவது ஆண்டவன் உயிரை உடலிலே முதன் முதல் புகுத்திய ஜென்மம், அந்த ஜென்மத்திலே செய்த பாவத்திலே கொண்டுபோய் விடும். அந்த ஜென்மத்தில் பாவம் செய்ததற்கு யார் குற்றவாளி? படைக்கும் பொழுதே பாவத்தைச் செய்யாதபடியல்லவா ஆண்டவன் படைத்திருக்கவேண்டும்! அது இல்லாமல், பாவம் செய்யும்படியே படைத்துவிட்டு, 'பாவம் ஏன் "செய்தாய்? என்று கண்டிப்பது ஒரு குற்றம். பாவம் செய்யாமல் படைக்காதது இன்னொரு குற்றம். ஆகவே, நாம் செய்கிற பாவத்திற்குக் குற்றவாளி பரமன் தான் என்று சொல்கிறீர்களே, ஜென்மம் என்பது உண்டா? அப்படி யிருந்தால் முதல் ஜென்மத்திற்கு முன் என்ன நடந்தது? என்று யாராவது கேட்டால் என்ன பதிலளிப்பது என்றான்?"

பண்டிதர்கள் கொஞ்சம் விரைத்துப் பார்த்தார்கள். "ஜென்மம் என்று ஒன்று உண்டா என்று கூடவா கேட்கின்றார்கள். நம்பிக்கையிலிருந்து தான் வாதமே எதுவும் தொடங்க வேண்டும். முதல் ஜென்மம் இருந்தது என்று தான் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு முந்திய

விவரங்கள் சொன்னால் புரியாது. அதிருக்கட்டும், இந்தப் பிரச்சனை யெல்லாம் யார் கிளப்பி விட்டது? ஈரோட்டு நாயக்கராகத்தானிருக்கும். இவாளெல்லாம் பெரியார்களாம். ஓர் கட்சியின் தலைவர்களாம்" என்று பேச ஆரம்பித்து விவாதத்திலிருந்து தப்பித்துக்கொண்டார்கள். இது நான் காலையில் ரயிலில் கண்ட காட்சி.

இதுபோல் இன்னும் வருணாசிரமம் தாண்டவமாடினால் அதை ஆதரித்துக் கவிதைகளும், கதைகளும் கல்கிகளும் எழுதினால், இந்தச் சாதி மட்டம்; அந்தச் சாதி உசத்தி என்று சாதி மட்டக்கோலை நாம் வைத்திருக்கும் வரையில் வேண்டுமென்றே ஒரு கட்சியையும் கட்சியின் தலைவரையும் தூற்றுகிறவரையில், இந்த நாடு நற்கதியடைய மார்க்கமில்லை.

## யாருக்கு வெட்கம், அணுகுண்டு சகாப்தத்திலே.

வைதிகத்தையும் மூடப்பழக்கத்தையும் வளர்க்கும் மகாமகத்திற்குப் போகாதே என்றால், சுயமரியாதைக்காரன் சொன்னான் என்பதற்காகக் கல்கி, மகாமகக் குளத்தையும், அங்கு குழுமியிருந்த மக்களையும் படம் பிடித்துக்காட்டி, "இதோ பாருங்கள், சுயமரியாதைக்காரன் காட்டுக் கூச்சல் போடுகிறானே, எவ்வளவு கூட்டம் இந்த நெருக்கடியான காலத்திலும். இதிலிருந்தே அவர்கட்கு பிரச்சார பலமில்லை என்று தெரிகிறதல்லவா?" என்பதன் மூலம் சுயமரியாதைக் காரனுக்கு வெட்கம் என எழுதியது யாருக்கு வெட்கம்? முதலில் கல்கி ஆசிரியர் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை மறந்துவிடுகிறார்-இந்த அணுகுண்டுசகாப்தத்திலே அழுக்கு நீரிலே குளித்தால் ஆண்டவனுடைய அருளைப் பெறலாம் என்பதை ஆதரிப்பதுபோலல்லவா நமது படம் இருக்கிறது என்று அவமானப் படவேண்டியவர் அவர்தான்,

ஆகவே, எதையும் சுயமரியாதைக்காரன் சொன்னுன் என்பதற்காக எதிர்க்காமல், மகாமகம் மடமையை வளர்க்கிறது என்றவுடன், தினமணி ஆதரித்து எழுதட்டும்; சுதேசமித்திரன் தலையங்கம் தீட்டட்டும், ஹிந்து எழுதட்டும்; வேண்டுமென்ருல் மதருஸ் மெயில் இதழும் மகாமகத்தை ஆதரிக்கட்டும்; இந்த நாட்டில் எவ்வளவு காலம் அறியாமை நீடித்திருக்குமோ, அவ்வளவு காலம் அவர்களுடைய அந்நிய ஆட்சி நீடித்திருக்கும் என்பதற்காக பத்து வருடம் சுயமரியாதைக்காரன் சொல்வதை ஏற்று எழுதட்டும்; எழுதாவிட்டாலும் எதிர்க்காமலிருக்கட்டும். பாருங்கள் 10 வருடத்திற்குப் பின் இந்த நாட்டிலே ஜாதி இருக்குமென்று நினைக்கிறீர்களா? அஞ்ஞானம் இருக்குமா? தீண்டாமை இருக்குமா? எல்லாம் போன இடம் தெரியாமல் போய்விடும்.

## ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு

பாரதியார்கூட "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு" என்று கூறிஞர். இதைச் சொல்லியும்—ஒரு கத்தை குச்சியை ஒடிக்க முடியாது; தனியாயிருந்தால் ஒடித்து விடலாம் என்று சொல்லியும், பள்ளி மாணவர்களுக்கு ஒற்றுமையின் அவசியம் போதிக்கப்படுகிறது. ஒற்றுமை என்ருல் எதற்கு ஒற்றுமை? நெருப்புக்கும் நீருக்குமா? மானுக்கும் புலிக்குமா? பிஞயிலுக்கும் தண்ணீருக்கும் பேதமிருக்கும்; ஆனுல் அதில் ஒற்றுமையைக் காணுதல் என்ருல் முடியுமா?

## வேற்றுமையில் ஒற்றுமை

இந்து முஸ்லீம் ஆகிய இரு பெரும் சமுதாயங்கள் பல துறைகளிலே வேற்றுமையைக் கொண்டவைகள். அவைகளில் ஒற்றுமை என்ருல் ஏற்படுமா? வேற்றுமையில் ஒற்றுமை காண்பி; இது தர்க்கத்துக்குரியது; மாணவர்கள்

கேள்வித்தாளுக்குரியது; நாட்டுக்குரியதா? நாட்டிலே நடவாது. அதை உத்தேசித்துத்தான் நமது புரட்சிக் கவிஞர் உலகம் ஒன்று என்று உலகப் பொதுவுடமை பேசுவதைக் கடுமையாகக் கண்டிக்கிறார். இனம் கலந்தால் இடறும் என்கிறார். சனாதன ஊற்றை தூர்க்க வேண்டும் என்கிறார். வருணாசிரமத்தின் வாயிற்படியைஅடை என்கிறார். வேதாந்தம் சித்தாந்தம் எல்லாம் வேலை ஒழிந்த நேரத்தில் ஆண்டிகள் விவாதிக்கவேண்டிய பொருள்; கொலைவாளினை எடு;முதலில் கொடியோர் செயலை அறவே ஒழிப்போம் என்று, மகாராசர்கள் உலகாளுவதா என்றும் கேட்கிறார்.

## கொலை வாளினை எடு

அந்தக் காலத்திலே கஷ்டம் ஏற்பட்டால், 'இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவனும் செத்துவிட்டானோ, முட்டமுட்டப் பஞ்சமே வந்தாலும் பாரமவனுக்கே' என்று பாரம் பழிகளை 'அவன்மேல்' சுமத்தினார்கள்; பதிலை எதிர்பார்க்காமல் இடைக் காலத்தில், 'கேட்டவரம் அளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள், கூட்டோடே எங்கே குடி போனீர்!' என்று கடவுளைப் புலவர்கள் தேட ஆரம்பித்தார்கள். ஆனால் பாரதிதாசனோ, கடவுளைக் காண முடியவில்லை. ஆகையால் கடவுள் வந்து கடுங்கோலர்களைத் தண்டிப்பார் என்று நினைக்காதே; கொலை வாளினை எடடா; நாம்தான், அந்த மதோன்மத்தர்கள் மண்டையிலே அடிக்கவேண்டும்" என்கிறார். அந்தக்கால மக்கள் 'கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில், கடும்புலி வாழும் காடும் நன்றே? என்றுஅரண்மனையைவிட்ஆரண்யமே மேல் என்றுஆரண்யம் புகுந்தார்கள்.அரசாட்சியைப்பற்றிக்கவலைப் படாமல், பாரதியார் வந்தார். "தனி ஒருவனுக்கு உணவில்லை

யென்றில், இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று அழகாக அரசியலைத் தாக்கச் சொன்னார் மக்களை. ஆனால், பாரதிதாசனோ கொலைவாளைக் கையில் கொடுத்து, நேரே நம்மைக் களத்திலேயே கொண்டுவந்து நிறுத்துகிறார்.

## காதலும் வீரமும்

பாரதிதாசன் தென்றலைப்பற்றியும், தமிழைப்பற்றியும், வீரத்தைப்பற்றியும்தானே பாடினார்; காதலைப்பற்றி பாடியிருக்கிறாரா என்றால், வேண்டியமட்டும் பாடியிருக்கிறார்; அவர் கவிதைப் பகுதிகளில் எந்தப் பகுதியைப் படிக்காவிட்டாலும் காதல் பகுதியைப்பற்றி யாரும் படிக்காமலிருக்க மாட்டார்கள் என்பதற்காக, நான் காதலைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. காதலையும் வீரத்தையும் பாடும்படியும், பாடி ஆடும்படியும், அதை இசையிலே காட்டும்படியும், அவரது காவியங்களும், கவிதைகளும் சொல்லுகின்றன. தமிழ் நாட்டிலே காதலைப்பற்றியும் வீரத்தைப்பற்றியும் புலவர்கள் அதிகம் பேசுவதற்கும் எழுதுவதற்கும் காரணம்; தமிழ் நாட்டின் இயற்கை எழில், இங்கு சுற்றிப் பார்த்தால், இங்கிலாந்தில் காணப்படுவது போலச் சுண்ணும்புக்குன்றுகள் தோன்ற. அழகிய குன்றுகளுக்கும் பக்கத்திலே சாலைகள்; சாலைகளுக்குப் பக்கத்திலே சோலைகள்; சோலைகளுக்குப் பக்கத்திலே வற்ருத ஜீவநதிகள்; வற்ருத ஜீவநதிகளுக்குப் பக்கத்திலே அவைகள் பாய்ந்திடும் நன் செய்கள்; நன் செய்களிலே நிற்கும் புஞ்சை உழவர்கள்; அந்த உழவர்கள் பாடும் பள்ளு, அந்தப் பள்ளு நெஞ்சை அள்ளும் விதம். இந்தக் கவின் பொருந்திய காட்சி, தமிழனுக்கு காதலை ஊட்டுகிறது. காட்டை நாடாக்கி இருக்கிறார்கள். ஒரு காலத்திலே, விந்திய

10

மலைக்குத் தெற்கே காடாயிருந்ததை பிறநாட்டார் கண்டு மெச்சத்தகுந்த அளவு மட்டுமல்ல; பொறுமைப்படும் அளவுக்கு அழித்து, நாடுகளும் வீடுகளும்அமைத்திருக்கிறார்கள். வியாபாரத்திலே தழைத்தோங்கி யிருக்கிறார்கள். வீரத்திலே திளைத்திருக்கிறார்கள். இன்றும் வீரம் போற்றப்படுகிறது போர்க்களங்களிலே!

தமிழனுடைய வீரம் மங்காதிருந்ததற்குக் காரணம். தமிழனுடையவீரத்திற்கும்பிறருடைய வீரத்திற்கும் மிகுந்த வித்தியாசமே. தமிழன் என்றும் அக்கினியாஸ்திரம் உபயோகித்ததில்லை; பாஸ்பதத்தைப் பயன் படுத்தியதில்லை. அவனது ஆயுதங்கள் அவனிரு பருத்த தோள்கள். இடையிலே வாள்; வாளை ஏந்தக் கை; கைக்கேற்ற கருத்து; கருத்துக்கேற்ற களம்; களத்துக்கேற்ற காட்சி; அங்குப் பிணக்குவியலைக்கண்டு பயப்படாத காட்சிக்கேற்ற கம்பீரம். கனக விசயரைக் கைது செய்யக் கங்கைக் கரைக்குச் சென்றான் சேரன் செங்குட்டுவன் என்றால்—சென்றான் வீரர்களுடன்; வீரர்கள் சென்றனர் வாள்களோடு; திரும்பினர் வெற்றியோடு.அன்று ஆரியம் தாள் பணிந்தது வாளுக்காக. சேரன் செங்குட்டுவன் வெற்றி பெற்றான் என்றால், ஐயனுடைய அருளாலல்ல; மழையைப் பொழியும் வருணாஸ்திரமில்லாமல், அழிக்கும் அக்கினியாஸ்திரமில்லாமல், இலங்கையை ஆட்டிடுமாமே அந்த வாயுவாஸ்திரமில்லாமல், சேரன் சண்டையில் வெற்றிபெற்றான்.

இந்த அஸ்திரங்கள், குலோத்துங்கன், ராசராசன் போன்றவர்கள் பர்மா மீது படையெடுத்த போதும், பிற நாடுகளைப் பிடித்த போதும் உபயோகிக்கப்படவில்லை. (கை தட்டல்) உபயோகிக்கப்பட்டதாகச் சான்றுகளில்லை; தமிழர்

களுக்கு ஒரு வீசை இரும்பு; ஓர் சிறிய உலைக்கூடம்; கொஞ்சம் மூளை; இவை இருந்தால் போதும் வாள் வடிக்க. வாள் வடித்து விட்டார்களானால், அவர்களுக்கு முன்னமேயே இருக்கின்ற அஞ்சா நெஞ்சமும், அருமைக் கையும் போதும். பர்ணகசாலைகள் அமைக்கவேண்டியதில்லை. நெடும் பல யாகங்கள் செய்யவேண்டியதில்லை; ஐயனின் அருளைப்பெற, எப்பொழுது அம்மையும் அப்பனும் சண்டை சச்சரவுகளில்லாமலிருக்கிறார்கள்என்றநேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. (பலத்த சிரிப்பு)" அந்தமாதிரியான தமிழனின் வீரத்தை அழகாகப் பாடியுள்ளார் பாரதிதாசன்.

## பாரதிதாசன்

பாரதிதாசன் பாக்கள், தமிழனின் வீரத்தையும் காதலையும் நினைவூட்டும்; பாரதிதாசன் படம் அதற்கு உறுதுணையாயிருக்கும். பாரதிதாசன் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து அவருக்கு பாராட்டுதல் செய்வதற்கும், செய்வதற்குக் காரணமாயிருந்தவர்களுக்கும், துவக்கியவர்களுக்கும், அந்தத் துவக்கிய மாணவர்களுக்கு உறுதுணையாக நின்று பேராதரவு அளித்த பேராசிரியர்களுக்கும் எனது வணக்கம். அவர்களை நன்றாக, மனமார வாழ்த்துகிறேன். பாரதிதாசன் முகத்திலே அமைதி தவழாது; அதற்குப் பதிலாக புரட்சி வாடை வீசும். கோப ஜ்வாலை வீசும். திரு. வி. க. ஆண்மையில் பெண்மை காணுவது போலக் காணமுடியாது அவரது முகத்திலே. மீசை கருத்து முறுக்கேறியிருக்கும். அவருடைய முகத்திலே யோகத்தின் சின்னங்களைக் காணமுடியாது. தியாகத்தின் தளும்புகளைக் காணலாம். அவர் அண்மையிலே புதுவையில் சிலரால் காலித்தனமாகத் தாக்கப்பட்டார் ஆனால் புதுவையில் பட்ட அந்தத் தியாகத் தளும்புகள்

இந்தப் படத்திலே தெரியாது. அந்தத் தியாகமூர்த்தியின் திருவுருவப்படம் தமிழ் நாடு எங்கணும், மாட மாளிகையிலே, மாட மாளிகைகள் மட்டுமல்ல; மண்குடிசைகளிலே, மண்குடிசைகளிலே மட்டுமல்ல; மக்களுடைய மனதிலேயும் பிரகாசிக்க வேண்டும். அவரது ஆவேசம் எல்லோருக்கும் உண்டாகுமாக; அவரது ஒவ்வொரு கவிதையும் இந்த நாட்டின் விடுதலைக்கான வெடிகுண்டுகளாகுமாக! அவரது ஒவ்வொரு கவிதையும் ஒரு ரூசோவாக மாறுமாக!! அவரது ஒவ்வொரு கவிதையும் ஒரு வால்டேராக மாறுமாக!!!

**ஏ தமிழ் நாடே!** ஏ தாழ்ந்த தமிழ் நாடே! தேய்ந்த தமிழ் நாடே! தன்னை மறந்த தமிழ் நாடே! தன்மானமற்ற தமிழ் நாடே! நன்றி கெட்ட தமிழ் நாடே! கலையை உணராத தமிழ் நாடே! கடவுளின் லட்சணத்தை அறியாத தமிழ் நாடே! மருளை மார்க்கத்துறை என்றெண்ணிடும் தமிழ் நாடே! ஏ சோர்வுற்ற தமிழ் நாடே! வீறுகொண்டெழு,உண்மைக் கவிகளைப் போற்று! உயிர்க் கவிகளைப் போற்று! உணர்ச்சிக் கவிகளைப் போற்று! புரட்சிக் கவிகளைப் போற்று! புத்துலகச் சிற்பிகளைப் போற்று!!

என்று கூறி, உங்கள் அனைவரின் சார்பாகவும், பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும், **புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்** அவர்களது படத்தைத் திறந்துவைக்கிறேன்.

★

# அற நிலையங்கள்

அன்புள்ள தலைவர் அவர்களே, தோழர்களே!

இந்த வட்டாரத்தில் இக்கூட்டம் கூட்டப்பட்டது எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கின்றது. நீங்கள் வியாபாரிகள். ஆகவே, இந்தப் பக்கத்திலே உங்களிடையில் கெட்டுப் போன சரக்கை, எவரும் வந்து விற்று விட்டுப் போய்விட முடியாது. ஒருவன் கொண்டுவந்த சரக்கை நிறுத்துப் பார்த்து, அது வியாபாரத்துக்குத் தேவையுள்ளதுதானு என்று பார்த்துத்தான் அதை வாங்குகிறீர்கள். அதைப் போலவே, உங்களிடையே வந்து பேசப்படுபவைகள், உங்கள் காதுகளில் கேட்பவை அனைத்தையும் நீங்கள் நிறுத்துப் பார்த்து, சரியானவைகளை ஏற்கவேண்டும். பொதுவாக காங்கிரஸ்காரர்கள் எதைச் சொன்னாலும், திராவிடக்

கழகத்தாராகிய நாங்கள் எதிர்ப்பவர்கள் என்ற தப்பபிப்பிராயம், ஒரு சிலரிடையே பரவியிருப்பதை நீங்கள் அறிவீர்கள். எந்தக் காரியத்தையும், எந்தச் சட்டத்தையும், சீர்திருத்த நோக்குடைய நாங்கள் எதிர்ப்போம் என்று சொல்வது தவருகும்.

வைதிக வைத்தியநாத அய்யரும், வரதாச்சாரியும் இந்துமத அறநிலையப் பாதுகாப்பு மசோதாவை எதிர்க்கின்ருர்கள். வரதாச்சாரியும் வைத்தியநாத அய்யரும் இதற்குப் பரம்பரை வைரிகள். காங்கிரஸ்காரர்கள் கொண்டுவரும் இந்த மசோதாவை, சில காங்கிரஸ்காரர்களே சட்டசபையிலே எதிர்க்கிருர்கள். காங்கிரஸ்காரர்களால் சிறையில் பிடித்துத் தள்ளப்படும் நாம் இதற்கு ஆதரவு தருகிருேம். நாம் இதற்கு ஆதரவு தருவதற்குக் காரணம், நமக்குள்ள சமநோக்கு. வரதாச்சாரியும், வைத்தியநாத ஐய்யரும் எதிர்ப்பது, வைதிகப் பித்தால்; நம்மிடம் அந்தக் கயமைத்தனப் பித்து இல்லை. ஆகவே நாம் ஆதரவு தருகிருேம். காங்கிரஸ்காரர்கள் நம்மை அழைத்தாலும் அழைக்காமற்போனுலும், நாம் இதற்கு ஆதரவு தருகிருேம்.

நாம் எதிர்ப்பது எதை? பார்ப்பனர் புரட்டை, அவர்கள் ஆதிக்கத்தை, பார்ப்பனீயத்தை, அவர்கள் பகை மூட்டிவிடும் பான்மையைத்தான் எதிர்க்கிருேம். திராவிட கழகத்தாராகிய நாங்கள் ஆரம்பத்திலிருந்து கண்டித்து வருவது பார்ப்பனர்களை அல்ல, பார்ப்பனர்களிடையே குடியேறி இருக்கும் பார்ப்பனீயத்தையே. இன்றைய பார்ப்பனீயம் மடாதிபதிகளை ஆதரிக்கின்றது. நாம் சாட்டும் குற்றச்சாட்டுகளைப் பார்ப்பனீயம் மழுப்பி மறைக்க முயல்கிறது. இந்த மடாதிபதிகள் எல்லோரும் பார்ப்பனர்கள் அல்லர். ஆனுல் மடாதிபதிகளின்

தொடர்பால் பார்ப்பனியம் வாழ்கிறது. தருமபுரி ஆதீனத்து மடாதிபதி பார்ப்பனர் அல்லர். திருவாவடுதுறை ஆதீனத்து மடாதிபதியும் பார்ப்பனர் அல்லர். இவர்கள் பார்ப்பனர் அல்லாதார் என்ற காரணத்தால், இவர்களை நாங்கள் போற்ற வில்லை. இந்த மடாதிபதிகள் பார்ப்பனரல்லாதாராக இருந்த போதிலும், இவர்களால் நாடு கெடுகிறது என்ற காரணத் தால், நாங்கள் கண்டிக்கத்தானே செய்கிறோம்! அவர்களுக் காகப் பரிந்து, நாங்கள் வாதாடவில்லையே. சமுதாயத்திலே இவர்கள் ஆதிக்கம் செலுத்துவதாலும், பல ஆலயங்களின் தொடர்பைக்கொண்டு நேர்மையற்ற செயல்களைச் செய்து வருவதாலும், மடங்களிலே மாசு உள்ளது என்ற காரணத் தாலும், நாங்கள் மடாதிபதிகளின் போக்கைக் கண்டிக்கி றோம்.

நெருக்கடிக்கிடையே உங்களை நிற்கவைத்துக்கொண்டு, வியாபார அலுவல் நேரத்தில் இந்தக்கூட்டம் நடைபெறு கிறது. வியாபாரிகள் பலரிடையே நாங்கள் சொல்லும் கருத்து பரவவேண்டுமென்பதற்காகவே தான் இந்த முறை யில் ஏற்பாடு செய்யப்பட்டது. வியாபாரிகளாகிய உங்களிடை யே அதிகமாக நாங்கள் பழகாதவர்கள். 5 பலம் கற்பூரம் என்ன விலை? என்று ஒருவன் பேசிக்கொண்டிருக்கும் பொழுதுதான் நாங்கள் வேறு ஒரு இடத்தில் பேசிக்கொண் டிருப்போம். உங்கள் வியாபார நேரமும் எங்கள் பேச்சு நேர மும், ஒரே நேரத்தில் நடக்கின்ற காரணத்தால், உங்களிடை யே நாங்கள் பழக இயலவில்லை.

நாங்கள் அதிகமாக உங்களிடைய பழகாத காரணத் தால், எங்களைப்பற்றிய சில தவறான கருத்துக்களை நீங்கள் கொண்டிருக்கக்கூடும். ஆகவே, நேரில் ஒருமுறை உங்களி

டையே பேசுதல் நலம் என்று எண்ணியே இந்தக் கூட்டத்தில் பேச ஒப்புக்கொண்டேன். வியாபாரிகளாகிய உங்களை ஏமாற்றித் தேர்தலுக்கு ஓட்டு வாங்கிச் சட்டசபைக்குச் செல்லவேண்டுமென்று, நாங்கள் இங்கே பேச வரவில்லை. நல்லதொரு மசோதாவை, ஆதரித்துப் பேசவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்.

பெருங்காயம் வாங்கும் செட்டியார் கடையிலேயே கருவேப்பிலையும் கேட்டால், இல்லை யென்றுதான் சொல்லுவார். கருவேப்பிலைக்குக் கொத்தவால்சாவடியின் உள்ளே சென்றுதான் கருவேப்பிலை வாங்கவேண்டும். அதைப்போல, எல்லா விஷயங்களையும் ஒரு கட்சியிலிருந்தே பெற்றுவிட முடியாது.

பெருங்காயம்—கருவேப்பிலை முதலியவைகளைக்கொண்டு சாம்பார் செய்ய, முக்கியமாகப் பருப்பு வேண்டும். நாம் வாங்கும் பருப்பும் வேகிற பருப்பாக வாங்கவேண்டும். அதுவும், கொஞ்சம் வாங்கி வேகவைத்துப்பார்த்து, நன்கு வேகிறது என்று அறிந்த பின்னர்தான் வாங்கவேண்டும். வாழ்க்கையிலே சமையலுக்காகப் பருப்பு வாங்கவும் பதார்த்தம் வாங்கவும் கலை தேவையாயிருக்கிறது. வாழ்க்கைச் சந்தையிலே நீங்கள் இன்னும் எவ்வளவு கலைவளம் பெறவேண்டுமென்பதைச் சிந்தனை செய்து பாருங்கள். வாழ்க்கைச் சந்தைக்கு வேண்டிய பல விஷயங்களையும் ஒரு கட்சியிலிருந்தே பெற்றுவிட முடியாது. ஒவ்வொரு கட்சியிலிருந்தும் சில கொள்கைகளை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

வியாபாரிகளாகிய நீங்கள், மக்களை எடைபோட்டு, அவர்களுக்கு வேண்டிய சரக்கைப் பரிசீலனை செய்து தான்

வாங்குகிறீர்கள். இப்பொழுது இருக்கும் சட்டசபையில் முன்பிருந்ததைப்போல எதிர்க்கட்சியில்லை. பெருவாரியான காங்கிரஸ்காரர்களைக் கொண்டு, இன்றையத்தினம் சட்டசபை நடக்கிறது. பெருவாரியான காங்கிரஸ்காரர்களின் ஆதரவின் பேரில் கொண்டுவரும் இம்மசோதாவைப்பற்றிக் கருத்து வேற்றுமை இருக்க நியாயமில்லை. எனினும், சில கதர்ச்சட்டைகாரர்கள் இதை எதிர்க்கிறார்கள். இவர்களுக்கு மக்களில் பெரும்பாலோர் ஆதரவு தராமல் இருந்தும், கல்கி, சுதேசமித்திரன், ஹிந்து ஆகியவைகள் ஆதரவு தருகிறது.

எங்களைத் தேசத் துரோகிகள் என்று முன்பு காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள். நாங்களோ, காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்த இந்த மசோதாவை ஆதரிக்கிறோம். ஆனால் சில காங்கிரஸ்காரர்கள் இதை எதிர்க்கிறார்களே! இவர்களைத் தேசத்துரோகிகள் என்று நீங்கள் சொல்லமாட்டீர்கள்? ஒரு கட்சியின் கண்ணியம், கட்டுப்பாடு, இவற்றை இவர்கள் கொண்டிருக்கிறார்களில்லை. அப்படியிருக்க, இவர்கள் பேச்சைக் காங்கிரஸ்காரர்களில் பலர் கேட்கத்தான் செய்கிறார்கள்.

வரதாச்சாரியையும்—வைத்தியநாத அய்யரையும் கட்சியிலிருந்து விலக்க முடிந்ததா? முடிகிறதா? முடியுமா?

இந்த மசோதா சட்டமாக்கப்பட்டுவிட்டால், மடங்களெல்லாம் சீர்திருத்தப்படுமே என்று இவர்கள் அஞ்சுகிறார்கள். மாற்றுக் கட்சியாராகிய நாங்கள் மந்திரி சபையினரால் சிறையிலே தள்ளப்படுபவர்கள். நாங்கள் சிறையிலே இருந்த நேரம் போக மிகுதியிருக்கும் நேரங்களில் இம்மசோதாவை ஆதரித்துப் பேசி, மந்திரிசபைக்கே செலவழிக்கிறோம். பல

விஷயங்களில் எங்களுக்கும் அவர்களுக்கும் தகராறு; அப்படியிருந்தும், அவர்கள் கொண்டுவரும் மசோதாவை நாங்கள் ஆதரிக்கிறோம். எந்தக்கட்சி அரசியலிலும் சரி, அகில இந்தியாவிலும் சரி, அகில உலகத்திலும் சரி, இந்த அற்புதம் நடக்கவே நடக்காது.

காங்கிரஸ் கட்சி, எதிர்க்கட்சியின் லேபிலைப் போட்டுக் கொண்டு காட்சி அளிக்கமுடியாது. திராவிடக்கட்சி யென்பதும் ஒருலேபில்தான். ஆகவே, லேபிலைப் பார்த்து யாரும் ஏமாந்துவிடக்கூடாது. சிசர்ஸ்சிகரெட் பாக்கெட்டுகளில் அக்பர்ஷா சிகரெட்டுகளும், அக்பர்ஷாசிகரெட் பாக்கெட்டுகளில் சிசர்ஸ் சிகரெட்டுகளும் இருக்கும். ஆதலால், லேபிலைப் பார்த்துவிட்டுச் சரக்கை வாங்கிவிடக்கூடாது. உள்ளே இருக்கும் பொருளைப் பார்த்துத்தான் வாங்கவேண்டும்.

அழகப்பாக்கள், டால்மியாக்கள், டாட்டாக்கள் ஆகிய பெரும் பணக்காரர்கள்' எல்லாம் எப்பொழுதும் ஒரு கட்சியிலேயே இருப்பவர்கள் என்று எண்ணுகிறீர்கள்? முதலாளிகளுக்கு நாளை காங்கிரஸ் பிடிக்காமல் போகலாம், வியாபாரிகளுக்கு வரிப் பளு அதிகமாக அதிகமாக, அவர்கள் காங்கிரசை வெறுத்து வேறு கட்சியிலே சேரக்கூடும். தொழிலாளர்கள் பலருக்கு மனம் நோகலாம். இதன் காரணமாகத் தொழிலாளர்களும் வேறு கட்சியில் சேரலாம். ஆகவே· யாரும் ஒரே கட்சியிலேயே என்றைக்கும் இருந்துவிடுவார்கள் என்று சொல்லிவிடமுடியாது.

மந்திரிசபை இந்த மசோதாவை நல்ல நோக்கத்துடன் தான் கொண்டு வந்திருக்கிறது. தமிழ் நாட்டிலே எல்லா ஆலயங்களிலும் சீர்திருத்தம் தேவை. ஆனால், நாம் எண்

ணும் சீர்திருத்தமெல்லாம் இம்மசோதாவில் நிறைவேறி விடும் என்று நாம் எண்ணிவிடமுடியாது.

இம்மசோதா ஒரு முதற்படி , சீர்திருத்தத்துக்கு, அறி குறி, அத்தாட்சி, நாளாக, நாளாக, நாம் சொல்லும் நல்ல தொரு சீர்திருத்தத்துக்கு வந்துதானே ஆகவேண்டும்? ஒரு கோயிலிலே 27 தீவட்டிகள் எரியவைக்கப்படுகின்றன. அந்த 27 தீவட்டிகளும் சரியாக எரிகின்றனவா? அதில் ஊற்றி விட்ட எண்ணெய் போக மிகுதியிருக்கும் 2 வீசை எண் ணெய் அர்ச்சகர் வீட்டுக்குச் செல்லுகிறதா? 10 படி வெண் பொங்கலில் 2 படி வெண்பொங்கல் தெரியாமல் அர்ச்சகர் வீட்டுக்குச் செல்லுகிறதா? என்பதையெல்லாம் பார்ப்பதற் குத்தான் இந்த மசோதா. பொதுவாகச் சொன்னுல், கோயில் களிலே, திருட்டு எந்தவிதத்திலும், எந்த ரூபத்திலும் நடை பெறக்கூடாது. அதைத் தடுப்பதற்குத்தான் இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. கோயில்களில் எத்தனை பாபாத் மாக்கள் ,எத்தனை புண்ணியாத்மாக்கள் இருக்கின்றனர் என் பதைக் கண்டுபிடிப்பதற்கும் இம்மசோதா பயன்படும்.

கோயில் திருட்டுகள் இன்று நேற்றல்ல, நம் முப்பாட் டனுர் நாட்களிலிருந்தே நடந்துவருகின்றன. விஜயநகர அரசர் கிருஷ்ணதேவராயர் ஆண்ட காலத்தில், அவர் ஆட்சி தெற்கே திருவாரூர் வரையில் பரவியிருந்தது. அப்பொழுது திருவாரூரில்உள்ள சிவாலயத்தின் அர்ச்சகன் நாகராஜ நம்பி என்பவன் 63 நாயன்மார் விக்கிரகங்களில் 2 விக்கிர கங்களைத் திருடி, பஞ்சலோகத்தாலான அவைகளை உருக்கி விற்றுவிட்டான்; இதைத் திருவாரூரில் உள்ள ஒரு சிவபக்தர் அறிந்தார். இவ்விஷயத்தை எப்படியேனும் அரசருக்குத்

தெரியப்படுத்தவேண்டுமென்று எண்ணினார். அரசனிடத்தில் பக்தர் நேரில் சென்று கூற அச்சப்பட்டார். அவர் ஒரு கிளியை வளர்த்து வந்தார். அந்தக் கிளியை:—

"கிருஷ்ணதேவராயா! கிருஷ்ணதேவராயா!
முன்னாள் அறுபத்து மூவர் இருந்தார்;
இந்நாள் இரண்டுபேர் ஏகினார்—கன்னான்
நறுக்குகின்றான்; விற்றுவிட்ட
நாகராச நம்பி இருக்கின்றான், கிருஷ்ணதேவராயா!"

என்று பாடுவதற்குப் பழக்கிவைத்தார். ஒருசமயம் கிருஷ்ண தேவராயர் திருவாரூர் வந்தார். அவரிடத்தில் தான் வளர்த்த கிளியினைத் தூதுவிட்டார். அந்தக்கிளி, அரசனிடம் சென்று அச்சிவபக்தன் கூறியதை அப்படியே கூறிற்று. அரசன் அது விஷயத்தை ஆராய்ந்து உண்மையறிந்து; நாகராஜ நம்பியை, நாட்டின் எல்லைக்கப்பால் துரத்திவிட்டார். நான் குறிப்பிட்ட பாடல் நாஸ்திகர் இயற்றியதல்ல; தனிப் பாடலில் இருக்கிறது; இன்றும் காணலாம்.

இரட்டைப் புலவர் என்று இரு புலவர்கள் இருந்தார்கள். இவர்களில் ஒருவர் குருடர், மற்றொருவர் முடவர். முடவரைக் குருடர் தன் தோள்மீது ஏற்றிக்கொண்டு, ஊர் ஊராகப் பிரயாணம் செய்வார்கள். ஒருசமயம் இவர்கள், கோயமுத்தூர் ஜில்லாவிலே உள்ள ஈங்கூருக்குச் சென்றார்கள். பசி காதடைத்ததால் அங்குள்ள சிவபெருமான் கோவிலுக்குச் சென்றார்கள், அர்ச்சகர் ஆராதனை காட்டிவிட்டு, தட்டின் மேல் துணியை மூடி எடுத்துச் சென்றுவிட்டார். இவர்களுக்குப் பிரசாதம் ஒன்றும் கொடுக்கவில்லை. உடனே குருடராகிய புலவர்:

"தேங்குபுகழ் ஈங்கூர் சிவனே—வில்லாளி அப்பா ;
நாங்கள் பசித்திருக்க நியாயமோ ?"

என்று சிவபெருமானை வேண்டினர். உடனே சிவபெருமான் விடையளிப்பதுபோல, முடப்புலவர்,

"போங்காணும் கூறுசங்கு; தோல்முரசு
கொட்டுஓசை அல்லாமல் சோறுகண்டமூளியார்சொல்"

என்று பாடினர். இதிலிருந்து, அக்காலத்திலே கோயில் களில் இத்தகைய அக்கிரமங்கள் நடந்தனவென்பது தெரிய வில்லையா ; முதலமைச்சர் நன்கு ஆராய்ந்து, இன்றைய ரிக்கார்டுகள் மூலம் 88 கோயில்களிலே திருட்டு நடைபெற் றிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார். இன்னும் அவரது கண்ணுக்கு வராதன எத்தனையோ ! மறைக்கப்பட் டவை எத்தனையோ ! யாம் அறியோம்.

நான் இருப்பது காஞ்சீபுரம் என்பது உங்களிலே பலருக்குத் தெரியும். அங்குள்ள பெரிய சிவாலயமாகிய ஏகாம்பரநாதர் கோயிலிலே, ரிஷப தேவர் வாகனத்திலே, சிவனார் புறப்பட இருந்த சமயந், திடீரென்று ரிஷபவாகனத் தின் வால் இருக்கிறதே, அந்த வாலில் இருந்த கற்றையாகிய வெள்ளியை யாரோ களவாடிக்கொண்டு போய்விட்டார்கள், காவல், போலீஸ் எல்லாம் இருக்கத்தான் செய்தது; ஆனால் திருட்டும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. சிவனார் கோயிலில் மட்டும்தான் திருட்டு என்று எண்ணிவிடாதீர்கள் வைணவர்கள் கோயிலிலும் திருட்டு நடைபெறுகிறது, காஞ்சீபுரத்திலேயே உள்ள பெரிய வைணவக் கோயிலாகிய வரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் சென்னை பிரபல வக்கீல் V. V. சீநிவாச ஐயங்கார் ஒரு டிரஸ்டி.

அவர் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் வரதராஜப் பெருமாளுக்கு வைரத்திஞல் வெள்ளை நாமமும், கெம்பிஞல் சிகப்பு நாமமும் செய்து அளித்தார். பெருமாளின் நெற்றியிலே, அது அணியப்பட்டிருந்தது. பக்தர்கள் அதைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தார்கள். ஒரு பாகவதர் அந்நாமம் நம்மிடத்திலிருந்தால் நம்முடைய வறுமையெல்லாம் நீங்கிவிடுமே! வைரக்கற்கள் நமது மருமகளின் திருகுபில்லைக்கு ஏற்ற கற்களாகுமே! ஆண்டவனின் பிள்ளைதானே நாம்! தகப்பஞரின் சொத்து பிள்ளைக்குத்தானே பாத்தியம்! என்று இவ்வாறெல்லாம் எண்ணிஇருப்பார். அவர், ஒருநாள் நடு இரவில் மதிற்சுவரேறிக் குதித்து உள்ளே சென்ருர், வரதராஜப்பெருமாளின் நெற்றியிலே கையை வைத்தார். உடனே நாமத்தை அபகரித்துக்கொண்டு போய்விட்டார். இதுபோன்ற திருட்டுக்கள் பல இடங்களிலே நடைபெறுகின்றன.

வைரம் எவ்வளவு? பச்சை எவ்வளவு? முத்து எவ்வளவு? நவரத்தினங்கள் எவ்வளவு? ஜடபில்லைகள் எத்தனை? என்று இந்த மசோதா வந்ததும், இந்துமத பரிபாலனக் கமிட்டி கணக்குக் கேட்கும். அதற்குத்தான் இந்த மசோதா. கோயில்களிலே அற்புதமாக நடைபெறும் திருட்டை அடியோடு ஒழிக்க இம்மசோதா பெருந்துணை செய்கிறது. இதில் என்ன தவறு? இதில் என்ன குற்றம்? இதை வரதாச்சாரியும் வைத்தியநாத ஐயரும் எதிர்ப்பானேன்?

வைத்தியநாத ஐயர் நல்ல சட்டம் தெரிந்தவர். மதுரை வட்டாரத்திலே செல்வாக்கு வாய்ந்தவர், ஆஸ்ட்ரேலியா, ஆப்ரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளிலே சட்டம் எப்படி கையாளப்படுகிறது என்பதை நன்கு ஆராய்ந்தவர். அட்

லாண்டிக் சமுத்திரத்திலே எப்படி எப்படி அரண் அமைக்க முடியும்! என்பதையெல்லாம் நன்கு தெரிந்தவர். கேவலம் ஆகமத்திற்காக அவர் புத்திக் கூர்மையைச் செலவழிப்பதா?

"இந்த மசோதா வந்த பின்னர், நம்மவருக்குப் பிடிக்காத இன்னும் பல சீர்திருத்தங்களை யெல்லாம் செய்வார்கள். அதனால் நம்மவர்களுடைய ஆதிக்கத்திற்கு அபாயம் நேரிடும். ஆகவே, இப்பொழுதே "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள்" போட்டதுபோல, நாமும் போட்டு, இம்மசோதா சட்டமாகாதபடி செய்துவிட்டால், பின்னர் சீர்திருத்தமெல்லாம் நடைபெருது', என்று வரதாச்சாரிகளும் வைத்தியநாதய்யர்களும் கனவு காண்கிருர்கள். சாரதா சட்டத்துக்கு இவர்கள் தாள் போடவில்லையா? பொட்டு கட்டுதல் (அதாவது தேவதாசி) மசோதாவுக்குத் தாள் போடவில்லையா? உடன்கட்டை ஏறுதல் என்னும் கோராமைக்குத் தாள் போடவில்லையா? அவர்கள் எதையும் எதிர்க்கத்தான் செய்வார்கள். நீதியிலே நேர்மையிலே நம்பிக்கை உடையவர்கள் நாம். மாஜி மந்திரி டாக்டர் சுப்பராயன், திருவல்லிக்கேணியிலே, வசந்த மண்டபத்திலே, வழக்கமாகக் கூடும் நேரத்திலே, கூடிய ஒரு கூட்டத்திலே இந்த மசோதாவைப்பற்றிப் பேசுகையில்:-

"நாஸ்திகர்கள் இந்த மசோதாவை ஆதரிப்பதால் இந்த மசோதா கெட்டுவிடும் என்று எண்ண வேண்டாம்" என்று குறிப்பிட்டு பேசுகிருர், நாம்மனதார இந்தமசோதாவைஆதரிப்பதைக்கெட்டது என்கிருர். யார்? டாக்டர் சுப்பராயன் மட்டும் ஆஸ்திகரா? அவர் சொல்வதைப்போல் நாங்களும் நாஸ்திகரல்ல, அதே சமயத்தில் அவரும் ஆஸ்திகரல்ல. அவரை

வேண்டுமானால் 1949-ஆம் வருஷத்து ஆஸ்கர் என்று சொல்லலாம். டாக்டர் சுப்பராயன் ஓர் உண்மையான நாஸ்திகர். தம் குல ஆசாரத்தையும், அனுஷ்டானத்தையும் விட்டு ஜாதி வித்தியாசத்தையும் பாராமல், 25-ம் வயதிலே—காதலால் காரிகை ராதாபாய் அம்மையாரை கடிமணம் புரிந்துகொள்ளவில்லையா? கடல் கடந்து மேல்நாடு செல்லவில்லையா?

பக்தர்கள் அரைப்பலம் கற்பூரம் கொளுத்திவிட்டு ..னக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வரவேண்டும் என்று ஆண்டவனை வழிபடுவதுபோல், கும்பாபிஷேகத்துக்கு ஆயிரக்கணக்கில் ரூபாயைச் செலவு செய்து பலன் கிடைக்காமல் அடிவயிறு எறிகிறதே! என்று சொல்வது நாமல்லவே!

நாங்கள் கடவுளிடத்தில் அன்பைச் செலுத்துகிறோம். அவர் எங்களுக்கு அறிவையும் அருளையும் கொடுக்கிறார். நாங்கள் நாஸ்திகர்கள் என்று எங்களிடத்தில் விரோதமும் பகையும் இருக்குமானால், நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே எங்கள் மண்டை பிளக்க என்று சாபமிடலாமே! அல்லது பேசமுடியாமல் நாக்கு இழுத்துக்கொள்ளக் கடவது என்று சொன்னால் இழுத்துக்கொள்ளுமே! கைகால்கள் பிடித்துக்கொள்க என்று சொன்னால் பிடித்துக்கொள்ளுமே! சுலபமான வழிதான். ஆனால் எங்கேயாகிலும், இந்தக்காலத்தில் இப்படி நடக்கிறதா? நடக்க முடியுமா? முடியாது.

தன்னுடைய ஜட்கா வண்டியிலேயே பிரயாணம் செய்ய வேண்டுமென்று விரும்பும் ஜட்கா வண்டிக்காரன், நாம் பஸ்ஸில் ஏறப்போவதைப்பார்த்து; "இந்தப் பஸ்ஸிலா ஏறப்போகிறீர்கள்? அடிக்கடி சக்கரம் பஞ்சராய் போய்விடுமே! சீக்கிரம் போய்ச் சேராதே! அந்த பஸ்ஸை நம்பி ஏமாறாதீர்கள்!

இதோ, ஜட்கா வண்டி! நொடிப்பொழுதில் போய்விடும்' என்றுதான் சொல்வான். அதே ஜட்கா வண்டிக்காரன், அவசர அலுவலாக எங்கேயாகிலும் செல்லவேண்டி யிருந்தால், அவன் சொன்ன, அதே பஸ்ஸில் தான் பிரயாணம் செய்வான். அதைப்போலத்தான் புதிய புதிய மாறுதல்களும் நடக்கின்றன.

மக்கள் வாழ, நல்லதொரு திட்டம் தேவை. பணம் எல்லா இடங்களிலும் பரவினுல்தான் வியாபாரம் நன்ருக நடைபெறும். பணம், சில இடங்களிலே முடங்கி விட்டால், வியாபாரம் சரிவர நடைபெருது.

பாங்கியிலே, ஒரு ஆயிரம் ரூபாய் வீணுக முடங்கிக் கிடப்பதை விட, அதே பணத்தைக்கொண்டு, ஒரு 5000-ரூபாய்க்கு சரக்கு எடுத்து, அதனுல் லாபம் ச்ம்பாதிக்கத் தான் வியாபாரிகளாகிய நீங்கள் எண்ணுவீர்கள். அப்பொழுதுதான் பணம் முடக்கமின்றிப் பொருளாதாரம் பெருகும். அதேபோல் நம் நாட்டில் பல கோயில்களிலே லட்சக்கணக்கான ரூபாய்கள், நகைகளாகவும், நிலங்களாகவும், வாகனங்களாகவும், கிரீடங்களாகவும் மக்களுக்கு ஒரு சிறிதும் பிரயோசனமில்லாமல் முடங்கிக் கிடப்பதை எடுத்து, பல ஆலைகளேயும், தொழிற்சாலேகளேயும் ஏற்படுத்தலாமே; இந்தியாவில் வாழும் 40 கோடி மக்களும் வேலே செய்து பிழைக்கலாமே! நாட்டின் பொருளாதார வளமும் பெருகுமே! வேலேயில்லாத் திண்டாட்டம் ஒழியுமே!

அமெரிக்கா செல்வபுரியல்லவா! அமெரிக்காவிலே ஏசுநாதருக்கு; தங்கத் தேர் செய்ய முடியாதா? இத்தாலியிலே முடியாதா? இதுவரை நம்மை ஆண்ட பிரிட்டிஷ்

ரகாதிபத்யம் நினைத்தால் ஏசுநாதருக்கு வைரக் கருட வாகனம் செய்யமுடியாதா? செல்வமில்லையா அவர்கள் நாட்டில்! நம் நாட்டிலேதான் தங்கத்திலே கருட வாகனங்கள், தங்க யானைகள், வெள்ளி ரிஷபங்கள், எல்லாம்! பல கோயில்களில் வைரமாக, முத்தாக, பச்சையாக, நவரத்தினங்களாக நகைகள் இழைத்து வைத்திருக்கிறார்கள். இந்திய அரசாங்கத்தார், இந்தியாவை அடமானம் வைத்து உலக பாங்கியிலிருந்து கடன் வாங்கப்போகிறார்கள். அதற்காக அமெரிக்காவிலிருக்கும் சர்வதேச பாங்கியிலிருந்து பொருளாதார நிபுணர்கள் வந்தார்கள். அவர்களிடம் ஓடுகிற காவிரியைக் காட்டியும், கோதாவரியைக் காட்டியும், விண்ணை இடிக்கும் இமயத்து உச்சியைக் காட்டியும், விந்திய மலையைக் காட்டியும், காட்டைக்காட்டியும், நாட்டைக் காட்டியும், நாட்டின் வளத்தைக் காட்டியும், சர்க்கார் கடன் கேட்டிருக்கிறார்கள். உலக பாங்குகளிலே கடன் வாங்கக்கூடிய நிலையில்' நம் இந்திய சர்க்கார் இருக்கிறது.

கோயில்களிலோ கோடிக்கணக்கான ரூபாய்கள் நகைகளில் முடங்கிக்கொண்டிருக்கிறது. மக்கள் அரிசியின்றி அல்லற்படும்பொழுது, நூற்றுக்கணக்கான மூட்டைகளைப் பதுக்கி வைப்பதையும், கள்ள மார்க்கட்டில் விற்பதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். நாட்டிலே பணமின்றி வறுமை தாண்டவமாடும்போது, கோயில்களிலே பலகோடி ரூபாய்கள் கடவுளின் பெயரால் பதுக்கிவைத்திருப்பதும், ஒருவிதக் கள்ளமார்க்கட் அல்லவா?

நியாயத்துக்கும், அறிவுக்கும், சட்டத்துக்கும், மனிதத் தன்மைக்கும் கட்டுப்பட்டவர்கள் அப்படிச் செய்வார்களா?

உயிருள்ள பாம்பின்மேல் படுத்துக்கொண்டு, கடலிலே அறிதுயில் செய்யும் மகாவிஷ்ணுவுக்கு வாகனமேன்?

சிவனுர் புலித்தோல் தவிர எனக்கு வேறு ஒன்றும் தேவை யில்லை என்கிருர். அப்படியிருக்க, சிவனுருக்கு வாகனமேன்? தங்க யானையேன்? வெள்ளி ரிஷபமேன்? இரவிலே வெள்ளி ரதம் புறப்படுகிறதென்ருல், தீவட்டி பிடிப்பவர்கள் தேவைப் படுகின்றனர். திருட்டு நடைபெருமல் இருப்பதற்காகப் போலீஸ். போலீஸ்காரர்களை மேற்பார்வையிட மேல் அதி காரி. இன்னும் சி. ஐ. டி. க்கள் வேறு. இதுமட்டுமா? இதைப் பார்வையிட ஒரு மந்திரி—இவையெல்லாம் பஞ்சம் மிகுந்த இந்த நாட்டில் தேவைப்படுகின்றன. மாதா கோயிலிலே நாலுபக்கமும் வாசற்படி; காவல் ஏதாகிலும் வைத்திருக்கி ருர்களா? முஸ்லீம்களின் மசூதிகளிலும் நாலுபக்கமும் வாசற்படி; வெட்டவெளி ஏதாகிலும் காவல் அங்கேதேவைப் படுகிறதா? இல்லையே.

காஞ்சீபுரம் கருடசேவைக்குப் போலீஸ் பந்தோபஸ் துக்காகப் போலீஸ்காரர்கள், எங்கெங்கிருந்து வருகிருர்கள் தெரியுமா? கோதாவரி ஜில்லாவிலிருந்தும், மற்ற ஜில்லாக் களிலிருந்தும், போலீஸ் வரவேண்டியிருக்கிறது. விழாவுக்கு பக்தர்கள் ஆயிரக்கணக்கில் வருகிருர்கள். 18 திருப்பதிகளி லிருந்தும் கருட சேவையைக் காணப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகிருர்கள்.

சில பக்தர்கள் கத்தரிக்கோலின் கூர்மையைக் காண வருகிருர்கள். மக்களின் கழுத்திலிருக்கும் நகைகளைப் போலீஸ்காரர்களையும் ஏமாற்றிவிட்டுக்கத்தரித்துக்கொண்டு சந்தடி செய்யாமல் நழுவிவிடுகின்றனர். காஞ்சி வரதராஜர் பெயரால், ஏதாகிலும் கைத்தொழில் கற்பிக்கப்படுகிறதா? இல்லை! ஏதாகிலும் பள்ளிக்கூடங்கள் நடத்துகிருர்களா? இல்லை!

வரதராஜர் ஏழைகள் விடுதி என்று ஏன் அந்தக்கோயில் தர்மகர்த்தர்கள் வருடந்தோறும் கோயிலுக்கு வரும் பணத்தைக்கொண்டு நடத்தக்கூடாது?

தீராதவினையெல்லாம் தீர்க்கும் திருப்பதி வெங்கடேசப் பெருமான் பெயரால், திருப்பதியில் இப்பொழுது ஒரு கல்லூரி நடைபெறவில்லையா?

கோயில்களிலே முடங்கிக் கிடக்கும் பணத்தை, நல்ல வழிகளில் பயன்படுத்தினுல், எவ்வளவோ புதிய தொழில்களை உண்டாக்கலாமே!

வியாபாரிகளாகிய நீங்கள், ஒரு கடையிலே, 15 வயதுடைய பையன் தேவை என்று, ஒரு போர்டு எழுதிப் போட்டுப்பாருங்கள்! மறுநாளே ஆயிரக்கணக்கான பையன்கள் வந்து வேலைக்காக நிற்பார்கள்! அவ்வளவு தூரத்திற்கு வந்திருக்கிறது வேலையில்லாத் திண்டாட்டம். தொழில்வளம் குன்றியிருக்கும் நாட்டில்—பொருளாதார ஞானம், சூனியமாய் இருக்கும் இந்த நாட்டில், புதிய தொழில்களை ஆரம்பித்தால் எவ்வளவுபேருக்கு வேலை கிடைக்கும்? சிந்தியுங்கள்.

வேலையில்லாத் திண்டாட்டத்தால், பலர் வாடியபோது இதற்கெல்லாம் காரணம்—வெள்ளையர்கள் தான் என்றோம். முன்பு ஒரு பகையாளி இருந்தான்: எதற்கும் நாம் அவனைச் சுட்டிக்காட்டி வந்தோம். ஆகஸ்ட் 15-ம் தேதிக்குப் பிறகும் நாம் இப்படி பழி சுமத்த முடியுமா? முடியாது, குற்றம் வெள்ளையரிடமல்ல, நம் அரசாங்கத்தாரிடமே இருக்கிறது.

நம் நாட்டிலே, இப்பொழுது இரும்பு கிடைக்கிறது. கிடைத்துவிட்டால் மட்டும் போதுமா? அந்த இரும்பைக் கொண்டு, நல்ல தொழிற்சாலைகள் பல ஏற்படுத்த

வேண்டும். தங்கம் கூட நம் நாட்டில் கிடைக்கிறது. அதையும் நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும். மேல்நாட்டிலிருந்து, இயந்திரங்கள் பல தருவிக்க வேண்டும். இங்கேயே — பாரதியார் விரும்பியபடி — இரும்பைக் காய்ச்சி, நமக்கு வேண்டிய நல்ல ஆயுதங்களைச் செய்யலாமே!

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
யத்திரங்கள் வடித்திடுவீரே!"

—என்று சொன்னார் பாரதியார். நாற்பதுகோடி மக்களும் நலமுடன் வாழ வழிதேட வேண்டாமா?

'சுயராஜ்யம் கேட்டாயே தம்பீ! என்னபலன் கண்டாய்?' என்று நம்மை நோக்கி, சிலோன் சிரித்துக்கொண்டே கேட்க இருக்கிறது! செக்கோ மாதும், அமெரிக்க அணங்கும் ஏன்? அகில உலகமும் நம்மை நோக்கி, உங்கள் நாட்டிலே வறுமை போய்விட்டதா? இந்தியா பழயபடி வளமுள்ள நாடாக ஆகிவிட்டதா? என்று கேட்கத் தயாராக இருக்கின்றன.

ராஜேந்திரன், குலோத்துங்கன் போன்ற தமிழ் மன்னர்களெல்லாம், மக்கள் வெளிநாடுகளிலே வியாபாரம் செய்து தாங்கள் பெற்ற லாபத்திலே அளித்த பொருளைக்கொண்டு, கோயில்களைக் கட்டினார்கள். கோயில்களிலே, எத்தனை ஆயிரம்பேர் வேலை செய்திருப்பார்கள்? வெய்யிலிலும் மழையிலும் எவ்வளவு தொழிலாளர்கள் கஷ்டப்பட்டிருப்பார்கள்? தஞ்சாவூரிலே மலையே இல்லை! எவ்வளவு காததூரம் கடந்து, வெய்யோன் ஒளியில் கஷ்டப்பட்டுப் பாறைகளையும் கருங்கற்களையும் சேகரித்திருப்பார்கள்? எவ்வளவு பவுன்களைப் போட்டிருப்பார்கள்? எவ்வளவு சிற்பிகள் இரவு பகலென உழைத்திருப்பார்கள்?

நம் நாட்டிலே, பக்தர்கள் பணத்தையெல்லாம் கோயில்களிலே பக்தி பாங்கில் ஏராளமாகப் போட்டிருக்கிறார்கள். தற்போதுள்ள பாங்குகளில் செக், கியாஷ் ஆகாவிட்டால், பாங்க் நம்மை மோசடி செய்ததாக எண்ணுகிறோம். கியாஷியர் (Cashier) மீது சீறுகிறோம். இவ்வளவும் நடக்கிறது. ஆனால், கோயில்களிலே உள்ள பக்தி பாங்கிலே அப்படியில்லை!

பண்டைக்காலத்தில், நூற்றுக்கால் ஆயிரங்கால் மண்டபங்களிலே, பள்ளிக்கூடங்கள் நடந்தன. கோயிலிலேயே அழகிய பூந்தோட்டம் இருந்தது. மக்கள் நீராடுவதற்காக, நல்ல குளமொன்று இருந்தது. மாலை வேளையிலே **மதியை வளர்க்க**, அந்த ஆயிரங்கால் மண்டபங்களிலே மக்கள் கூடுவார்கள். அக்கால அரசியலைப்பற்றியெல்லாம், அந்த மண்டபங்களிலே மக்கள் உரையாடுவார்கள். இப்பொழுது, ஆயிரங்கால் மண்டபங்கள் உள்ள நிலை உங்களுக்குத் தெரிந்ததே. ஆயிரங்கால் மண்டபத்தில், அர்த்தராத்திரியிலே படுத்திருந்து வந்தவரைப் பார்த்து, "என்னப்பா தம்பீ! இராத்திரி கொண்டாட்டம் தான் போலிருக்கு" என்று முதுகில் தட்டிக் கொடுத்துக் கேட்கும் கேவல நிலையில் இருக்கிறது.

கோயில்களிலே மாசு உள்ளது. அதைப் போக்கத்தான், ஓமந்தூரார் இந்த மசோதாவைக் கொண்டுவந்தார். பாசி படர்ந்த தடாகத்தைக் கோயில்களிலே சீர்செய்கிறார்களா? இல்லை. கோயில்களிலேஉள்ள பணத்தைக்கொண்டு, கோயில் அதிகாரிகள், தொழு நோயாளர்களுக்காக, ஏன் ஓர் ஆஸ்பத்திரி அமைக்கக்கூடாது? ஏழை—பஞ்சை மக்களைக் காப்பாற்றும் பொறுப்பை ஏன் கோயில் அதிகாரிகள் எடுத்துக் கொள்வதில்லை?

ஆபத்பாந்தவர், அனாத ரட்சகர் என்று ஆண்டவரை, ஏழைகள் அழைக்கவில்லையா? அந்த அனாத ரட்சகர் வாசம் செய்யும் கோயிலில், அனாதைகளுக்கு ஏன், புகலிடம் தருதல் கூடாது?

கை ஒடிந்து, கால்கள் இன்றி, கண் இன்றிக் கிடக்கும் மக்களைப்பற்றி, எந்தக் கோயில் அதிகாரிகளாவது கவனம் செலுத்தியதுண்டா? நீங்கள் ஓட்டல்களுக்குச் சென்றால், மாலையில் மந்தகாசமான சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டே சிற்றுண்டி அருந்துகிறீர்கள். சிற்றுண்டி அருந்தியபின்னர், நல்ல துளிரான வெற்றிலையைப் போட்டுக்கொண்டு வரும் பொழுது, ஓட்டலின் வாயிற்படியில் பிச்சைக்காரன் நின்று கொண்டு—நீங்கள் பாபம் செய்திருந்தாலும் சரி, பாபம் செய்யாதிருந்தாலும் சரி—"ஏ, புண்ணியவானே? தரும துரையே? சாமியே? எஜமானே?" என்று கூப்பிட்டு, ஒரு காலணா கேட்கிறான்.

ஓட்டலின் உள்ளே, நீங்கள் மாலையில் மந்தகாசத்துடன் கேட்ட எம். எஸ். பாட்டெல்லாம் எங்கே? அங்கே கேட்ட இசையை, அங்குண்டான இன்ப உணர்ச்சியெல்லாம் நீங்கள் மறந்துவிடவேண்டியதுதான். இந்தப் பஞ்சை மக்களின் நிலை மாறவேண்டாமா? நீங்கள் இந்தக் காட்சியைப் பார்க்கிறீர்கள். தாயுமானுர்,

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"

என்று பாடினார். இராகபாவத்தோடு இப்பாடலைப் பாடகர்கள் பாடக் கேட்பீர்கள். பாடகர்கள், இப்பாடலை ரசமாகப் பாடுவதால், என்ன பயன்? எல்லோரும் இன்புற்று வாழ,

யார் முயற்சி எடுத்துக்கொண்டார்கள்? என்று கேட்கிறேன். வியாபாரிகளாகிய உங்களைக் கேட்கிறேன். பொன்னுச்சாமியும், துரைசாமியும் முயன்றால், ஒரு வாசகசாலையாவது, பள்ளிக்கூடமாவது அமைக்கலாமே!

வியாபாரிகளில் பலர், தருமகாணிக்கை வசூல் செய்கிறார்கள். வசூல் செய்து, கோயில்களுக்கு அளித்தீர்களே தவிர, யாராவது ஒருவர், உயர்தரப்பள்ளி கட்டியிருக்கிறீர்களா? ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறீர்களா? வாசகசாலை அமைத்திருக்கிறீர்களா? அதுதானே இல்லை!

எது பாவம்? எது புண்ணியம்? என்று பலருக்குத் தெரியாது. ஒரு வீசைக்கு 40 பலம் என்று சொல்லிவிட்டால் போதுமா? அந்த 40 பலம் கல் இருக்கிறதே, அது சரியாய் இருக்கிறதா, என்று பார்த்துவிட்டால் மட்டும் போதுமா? சர்க்கார் முத்திரையிட்ட பின்னர், ஏதாகிலும் சூது செய்திருக்கிறார்களா என்றும் பார்க்கவேண்டாமா?

மிகுந்த ஒளிதரும் காஸ் (Gas) விளக்குகள், பொய்க்கால் குதிரை, திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் நாதஸ்வரம் ஒரு பக்கம்; மற்றொரு பக்கம், திருவீழிமிழலை சகோதரர்கள், வாணவேடிக்கைகள். இவைகளைக்கொண்டு, திருவிழா வெகு விமரிசையாக நடக்கிறது.

இன்கம்டாக்ஸ் ஆபீசுக்குக் கணக்கு காட்டுவதற்காக, மூன்றுவிதமான கணக்குகள், மூன்றுவிதமான கணக்குப் பிள்ளைகள். பொய்க் கணக்கெழுதி வெற்றிபெற்றுவிட்டால், ஆண்டவனுக்கு உற்சவத்தைப் பரிசாக அளிக்கிறார்கள்; சர்க்காரையும் ஏமாற்றுகிறார்கள்.

தலையிலே முக்காடிட்டுக்கொண்டிருக்கும் 50 வயது தாய்மார்களைத் தவிர, 30 வயது பெண்கள் யாராவது ஆண்ட

வனையா பார்க்கிறுர்கள்? ஆண்டவனின் கழுத்திலே இருக்கும் வைரப்பதக்கத்தைப் பார்த்தாயா? என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிறுர்கள். அதே நேரத்தில் வைர வியாபாரி, எத்தனை காரட் வைரமப்பா அது? சுராஜ்மல்லுக்கு அதைப்போன்ற வைரத்தை கொடுத்தால், நமக்கு நல்ல கமிஷன் கிடைக்குமே! என்று எண்ணுகிருன்.

ஒரு டைரி வைத்துக்கொண்டு, யார் புண்ணியவான்? யார் பாபி? என்று கண்டுபிடிப்பதற்காகக் குறிப்பு எழுதி வந்தால், நீங்கள் 6-ந் தேதி புண்ணியவான் என்று யாரை எழுதினீர்களோ அவரைப்பற்றி; 7-ந் தேதி பாபி என்று எழுதுவீர்கள். 7-ந் தேதியன்று, பாபி என்று எழுதியவரை 9-ந் தேதியன்று, புண்ணியவான் என்று எழுதுவீர்கள்.

3ம் 3ம் = 6, 4ம் 4ம் = 8, இரண்டும் இரண்டும் பெருக்கினுல் நான்கு என்று நிர்ணயிக்கப்பட்ட முடிவைப்போல், பாவ—புண்ணியங்கள் நிர்ணயிக்கப்படாதவை.

ஒரு காலத்திலே பசு, ஆராய்ச்சிமணியை அடித்ததாம். அரசன் சென்று பார்த்தானும்; பசு, கண்ணீர் விட்டு நின்றதாம். அதன் கன்று, இளவரசனுன வீதி விடங்கன் நடத்திய தேர்க்காலில் அகப்பட்டிறந்தது என்று கேள்வியுற்றுனும். 'இப்பசு, தனது கன்றை யிழந்து வருந்துவது போல, எனது ஒரே புதல்வனை யிழந்து, நான் வருந்துவேன்! அதுவே நீதி!' என்று தன் குமாரனைத் தேர்க்காலில் இட்டுப் பசுவுக்கு நீதி செய்தானும், மனுநீதிகண்ட சோழன்.

இப்படி, இந்தக் காலத்திலே யாராகிலும் செய்ய முடியுமா? செய்ய முயன்றுலும், சட்டம் இடந்தருமா? சர்க்காருடைய 302-வது சட்டம் சும்மாயிருக்குமா?

வல்லூறுக்கு பயந்து வந்த ஒரு புருவின் உயிரைக் காப்பதற்காகத் தனது சதையை அறுத்துக்கொடுத்தானும் சிபிச் சக்கரவர்த்தி. இது அந்தக் காலத்தில். இப்படி யாராகிலும் இத்தக் காலத்தில் செய்வார்களா? புரு பறந்துவந்தால், நாம் அதைப் பிடிக்க முடியுமா? அப்படிப் பறந்துவரும் புருவை, நாம் பிடித்தாலும், மண்ணடி கவுஸ் வீட்டுக்காரர் சும்மா யிருப்பாரா?

சிபிச்சக்கரவர்த்தி செய்ததைப் போலச் செய்ய, நமக்கு எங்கே அவ்வளவு சதையிருக்கிறது? வேண்டுமானால்,மடாதிபதிகள் அதைச் செய்யலாம்.

சிவராத்திரி அன்று, காட்டுக்குள் ஒருவன் சென்றான். காடு இருண்டுவிட்டது. வீட்டிற்குத் திரும்ப எண்ணினான். பின்னால் ஒரு புலி, தன்னை நோக்கி வருகிறதைக் கண்டான். உடனே, அருகில் இருந்த வில்வமரத்தில் ஏறிக்கொண்டான். மரத்தினடியிலே ஒரு சிவலிங்கம் இருந்தது. அதை அவனறியான். துரத்திவந்த புலியும், மரத்தினருகே வந்து நின்றது. இவன் மேலே ஏறியிருப்பதைப் பார்த்து, இவனைக் கொல்ல எண்ணி, அங்கிருந்து செல்லாமல், மரத்தையே சுற்றிச் சுற்றி வந்தது. மரத்தின் மேலிருந்தவன் பார்த்தான். கீழே இறங்கிச்செல்ல வழியில்லை. இரவாகியதால், தூங்கிவிடுவோமோ என்று அச்சம் ஏற்பட்டது. தூங்காமல் இருப்பதற்காக; மரத்திலிருந்த வில்வ இலைகளை ஒவ்வொரு தழையாகக் கிள்ளிக் கீழே போட்டுக்கொண்டிருந்தான். எனினும், மறுதினம் அவன் மாண்டான். அவனுடைய உயிரைப் பிடித்துப் போக எமதூதர்கள் வந்தார்கள். உடனே சிவகணங்கள் வந்து, "அவர் உயிரைத் தொடாதே! அவர் சிவபக்தர்" என்று சொல்லி, அவனைக் கைலாயத்துக்கு அழைத்துச்

சென்றன. தன்னுடைய உயிரைக் காக்கவேண்டி, சிவராத்திரி யன்று விழித்திருந்து சிவலிங்கம் என்றும் அறியாமல் கீழே கிள்ளிப்போட்ட தழைகளினுல், அவனுக்கு முக்தி கிடைத்த தாகப் புராணம் கூறுகிறது. சாக்கிய நாயனுர், சிவனுரைக் கல்லால் அர்ச்சித்து முக்தி பெற்றதாகக் கூறப்படுகிறது. காரைக்காலம்மையார், உடல் தேய, உள்ளம் நெகிழ, பேயுருக்கொண்டு, எலும்பெலாம் தேய, கைலயங்கிரியை நோக்கிச் சென்ருர். ஆனுல் சிவபெருமான், காரைக்காலம் மையாரை நோக்கி, "அம்மையே திருவாலங்காட்டிற்கு வா" என்று அழைத்தார். இவைகளால் ஆண்டவனை அடைய எந்த வழியைப் பின்பற்றுவது? என்று திட்டமாகப்புராணங் கள் கூறவில்லை.

ஐந்து அல்லது ஆறு ரூபாய் சம்பளம் கட்டுவதற்காக, ஏழைப் பையன் ஒருவன் வந்து காசு கேட்டால், என்ன சொல்கிருேம்? "ஏண்டா இப்படி பிச்சை எடுத்து அலைகிருய் படிச்சவனெல்லாம் என்னத்தை செய்துவிடுகிருர்கள்? எங் கேயாவது கடையிலே போய் வேலை பார்" என்றுதானே சொல்லுகிருேம்.

கிருத்திகை அபிஷேகத்திற்காக ஓடிவரும் அர்ச்சகரிடம் 'அடிக்கடிதான் அபிஷேகம் செய்கிறேனே; ஒரு கார்த்தி கைக்கு நம்மை விட்டுவிடுங்கள்' என்று சொன்னுல் கேட்க மாட்டாரா? அதை மட்டும் தவருமல் செய்து விடுவார்கள். ஏழைப் பையனின் படிப்புக்கு எந்தவித வசதியும் செய்ய மாட்டார்கள்.

மக்களைக் கெடுப்பது எவையோ, அவையெல்லாம் பாபம். மக்களை வாழவைப்பது எவையோ, அவையெல்லாம்

புண்ணியம் என்று நாம் கொள்வோமானால் அது மிகப் பொருத்தமாக இருக்கும். துறவிகளுக்கும், ஜீயர்களுக்கும் அதிகமான பொருள் ஏன்? துறவறத்தை மேவுகின்ற துறவிகளுக்கு ஏராளமான பொருள்கள் ஏன்?

பட்டினத்தடிகள், "இருக்கும் இடந்தேடி உணவு வராவிடில், உணவு இருக்கும் இடந்தேடி ஏகேன்" என்றார். இது பட்டினத்தார் பாசுரம். யாராவது, துறவிகளைத் தேடிவந்து உணவு கொண்டு வந்தால்தான் துறவிகள் உண்ணவேண்டும். இதுதான் துறவிகள் பண்பு. இப்படி இருக்கத் துறவறத்தை மேவும் திருவாவடுதுறைமடாதிபதிகளுக்கு,நஞ்சையும் புஞ்சையும் ஏன்?

ஓர் அரசனுக்குத் தம்பியாக இருந்தும், அரச பாரத்தைத் தாங்காமல், சேரன் செங்குட்டுவனின் தம்பி உண்மைத் துறவியாக இருந்து, சீரிய சிலப்பதிகாரத்தை இயற்றவில்லையா?

திருவாவடுதுறை தம்பிரானுக்குப் பத்து விரலிலும் மின்னும் வைர மோதிரம் ஏன்? கையில் கமண்டலம் ஏன்? காதில் குண்டலமேன்? குண்டலத்தின் நடுவே தங்கம் ஜொலிப்பதேன்? நெஞ்சிலே வஞ்சகம் ஏன்? பக்கத்திலே பாடும் குயில்கள் ஏன்? ஆடும் மயில்கள் ஏன்? இதுவா துறவறம்?

"பசித்தால் புசி" என்றுதானே துறவிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது! பசித்தால் புசி என்றால் என்ன? காயேனும், செங்கனியேனும், கந்தமூலமேனும், உதிர் சருகேனும் பசிக்குத் துறவிகள் உட்கொள்ளலாம் என்றுதானே சொல்லப்பட்டிருக்கிறது? மணிமுடி துறந்து அரசை உதறித்தள்ளி நடுநிசியிலே குழந்தையையும், ஆசைக்கினிய மனைவியையும் பிரிந்து கபில வஸ்துவை விட்டு, புத்தர் துறவுகொண்டார்.

என்றுல் அதிலே அர்த்தமிருக்கிறது. சமணர்கள் துறவுகொண்டார்கள் என்றுல் அர்த்தமிருக்கிறது. ஆனுல் மனிதஉருவிலே தோன்றி, மக்களை ஏய்த்து வாழுவதற்காகத் துறவு பூண்டவர்களை நாம் எப்படி உண்மைத்துறவிகளாக ஏற்கமுடியும்?

மனித பரம்பரையிலே தோன்றிய மக்கள் என்பதையும் மறந்து, எந்தப் பரம்பரை? என்று கேட்டால், நாங்கள் திருக்கயிலாயப் பரம்பரை என்று, ஜடைமுடி தரித்துக் கொண்டு, இந்த மடாதிபதிகள் ஆணவத்தோடு சொல்லக் கேட்டிருக்கிறேம்.

ஏழைகள் வாழும் இடத்தருகே வெள்ளம் வந்த பொழுது, இந்தத் திருக்கயிலாய பரம்பரைகள் அங்கே சென்று ஏழைகளுக்கு ஏதாகிலும் உதவி செய்திருக்கிறுர்களா? பிளேக் வந்தபொழுது கவனித்திருக்கிறுர்களா? நாட்டிலே பஞ்சம் வந்த பொழுது, களஞ்சியத்திலே இருந்த நெல்லை வாரி வழங்கியிருக்கிறுர்களா? பாபி! பாபி! என்று உலகிலே சிலரைப்பார்த்து மடாதிபதிகள் கூறுகிறுர்களே, அவர்கள் பாபிகள் என்று சொல்லப்படுபவர்களுக்கு, ஏதாகிலும் உபதேசம் செய்திருக்கிறுர்களா?

கொழுத்துப் பழுத்துத் திரியும் மடாதிபதிகளுக்கு ஒரு மடமேன்? கமண்டலமேன்? குண்டலமேன்? சேல்விழி மாதரேன்? அந்தத் தையலின் மையலிலே மயங்கித் திரிந்து, மது அருந்துவானேன்? படுக்கை அறையிலே லீலைகள் பல புரிவதேன்? தமிழ் நாட்டிலே துறவிகளின் இலட்சணம் எப்படியிருந்தது என்பதைப் பத்து ஆண்டுகளுக்கு முன்னே "சந்திரகாந்தா"வின் மூலம் காட்டினுர்களே!

மடாதிபதிகளைப்பற்றி பேசினால், அந்தக்காலத்தில் தலையைச் சீவிவிடுவதுகூட உண்டு. அப்படி இந்தக்காலத்தில் யாரும் செய்துவிட முடியாது. அப்படிச் செய்தாலும், ஆயிரம் தலைகள் பேசத் தயாரா யிருக்கின்றன.

மக்களிடையே மதிப்பை இழந்து, மாண்பை இழந்து, கருணையை இழந்து இருக்கும் சோற்றுத் துருத்திகளால் நாட்டுக்கு ஏதாகிலும் பயன் உண்டா? முன்பெல்லாம் மடாதிபதிகளைப்பற்றி பேசினால், ஒருவினாடியிலே கருவருத்து தள்ளிவிடுவார்கள். அது அந்தக்காலத்தில். இன்று எல்லாக் கட்சியாரும், மடாதிபதிகளின் போக்கைக் கண்டிக்கிறார்கள். இந்த அறநிலைய பாதுகாப்பு மசோதாவை எல்லாக்கட்சியாரும் ஆதரிக்கிறார்கள்.

எது பாபம்? எது புண்ணியம்? என்பதை நன்கு ஆராய்ந்து, அறிவுத் தெளிவுகொண்டு, நீங்கள் வாழவேண்டுமென்று சொல்லி, இதோடு முடித்துக்கொள்கிறேன்.

★

# சொல்லும் பயனும்

அன்புள்ள தலைவர் அவர்களே; கல்லூரி முதல்வர் அவர்களே, பெரியோர்களே, தோழர்களே!

என்னை நீங்கள் பேச அழைத்ததற்காகப் பெருந்தன்மை யோடு நன்றி செலுத்துகிறேன். தமிழ் மன்றத்தின் துவக்க விழாவில் நான் கலந்துகொள்வதால் என்னென்ன பலாபலன் கள் கிடைக்கும் என்பதை நீங்கள் அறியாமல் இருக்க முடி யாது. அநேகமாக இங்கு என்னைப்புரிந்துகொண்டவர்களும் அதிகமாக இருக்கமுடியாது.

இங்கு நான் பேசப்போவது எல்லாம் முடிந்த முடிபு களல்ல! நான் சொல்வதை யெல்லாம் கேட்டுச் சிந்தனை செய்து சீர்தூக்கிப்பார்க்கும் உரிமை உங்கள் அனைவர்க்கும் உண்டு.

தமிழ்மொழிக்கும் உங்கள் மனப்பான்மைக்கும் சிறந்த மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டிலே தமிழ் மொழியிலே பேசவேண்டுமென்ற எண்ணம் கிடையாது. அறிவும் ஆற்றலும் அதிகமாகப் பரவிக்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, ஆங்கிலம் தெரிந்திருந்தாலும் 'தமிழ்மொழியில் பேசினால்தான் மக்கள் நம்மை மதிப்பர்' என்ற தளராத எண்ணம் நாட்டிலே பரவியிருக்கிறது. உங்கள் கல்லூரி முதல்வர் தமிழிலே பேசி என்னை மகிழ்ச்சியோடு வரவேற்றார். பல கல்லூரிகளிலே என்னைப் பேச அழைத்து வரவேற்புரை தருகின்ற முறைக்கும் உங்கள் கல்லூரி முதல்வர் தருகின்ற வரவேற்புரைக்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கின்றது.

உங்கள் கல்லூரி முதல்வர் நல்லெண்ணத்தோடு, பெருந்தன்மையோடு, அதிலும் தமிழில் பேசி என்னை வரவேற்றதற்காக உண்மையிலேயே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மற்றக் கல்லூரி முதல்வர்கள் என்னைப் பேச அழைப்பதற்குமுன் "தயை செய்து எங்கள் கல்லூரி மாணவர்களுக்காகத் தாங்கள் ஆற்றப்போகும் சொற்பொழிவு இலக்கியம் பற்றியதாகவே இருக்கட்டும்" என்பர். "மாணவமணிகளின் மனதிலே புரட்சி எண்ணங்களைத் தூவிவிடாதீர்" என்று கேட்டுக்கொள்வர். தங்கள் கல்லூரி முதல்வர் இம்மாதிரியான நிபந்தனைகளையெல்லாம் எனக்குவிதிக்காமல் என்னைப் பேச அழைத்ததற்காகப் பெருமிதமடைகிறேன்.

நாட்டின் நலிவைப் போக்கப் பாடுபடும் என்னிடம் உங்களுக்குத் தவறான நம்பிக்கை இருக்காது என்பதோடு அம்மாதிரியான் புரட்சிகரமான எண்ணங்களை இங்குத் தூவிவிட மாட்டேனென்ற திடமான நம்பிக்கை உங்களுக்கு இருப்பதை நான் நன்கறிவேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூல காரணமானவர் நம் தியாகராயர். தியாகராயரின் குறிக்கோள் தான் திராவிட இயக்கத்தாரின் குறிக்கோள். திராவிடனுகிய நான் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவன். தியாகராயரின் வழிவந்த திராவிட இயக்கத்தைச் சார்ந்தவன் என்பதிலே பெருமை கொள்ளுகிறேன்.

நாட்டு மக்கள் அனைவரும் தியாகராயரை நன்கு புரிந்துகொள்ளுகிற காலம் விரைவில் வரப்போகிறது. கல்லூரி வளர்ச்சிக்காகக் கல்லூரி முதல்வர்விடுத்த வேண்டுகோளை நீங்கள் நன்கு நிறைவேற்ற வேண்டும்.

தியாகராயர் பெயரால் கல்லூரிகள் மட்டுமல்ல தியாகராயர் பெயரால் துறைமுகங்கள், பெரிய பெரிய கப்பல்கள், சங்கங்கள், மண்டபங்கள் இன்னும் பலப்பல தோன்றப் போகின்றன.

கல்லூரி முதல்வர் ஆற்றிய வரவேற்புரையில் நானும் நாடகத்திலே பங்கெடுத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னுர். உங்கள் கல்லூரி நடத்துகின்ற கலை விழாவிலே நடிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததற்காக உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனுல் நாடகம் ஆடிக் கல்லூரி வளர்ச்சிக்குக் காசு சேர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதே என்பது குறித்து வருந்தாமல் இருக்கமுடியுமா?

எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களிடம் பொறுமை, உயர்ந்த பண்பு, நல்லெண்ணம் இவை யாவும் உண்டு. திராவிட இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள் அனைவரும் உங்கள் கல்லூரி வளர்ச்சிக்குத் தேவையான உதவிகள் எல்லாம் செய்வோம்; தியாகராயரைப்பற்றிய எண்ணங்கள்

நாட்டில் எங்கணும் பரவச்செய்வோம். தியாகராயரைப் பற்றிய பல ஏடுகள் எழுதி நாட்டிற்கு அளிக்கவேண்டுமென்று தலைவர் என்னைக் கேட்டுக்கொண்டார்.

இப்பொழுது ஏடுகள் எழுதுவது ஆபத்தான காரியம். ஏடுகள் எழுதினால் சட்டக் கல்லுளிகளால் குத்தப்படும். தியாகராயரைப் பற்றிய ஏடுகளை நாங்கள் நிச்சயமாகத் தீட்டுவோம், ஒன்றை மட்டும் தலைவர் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். எங்கள் இயக்கம் எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம். நாங்கள் எதிர்ப்புக்கு அஞ்சாதவர்கள். எதையும் தாங்கும் இதயம் எங்களிடம் உண்டு.

அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சய மாகக் கிடைக்கும்.

நம்முடைய அடிமைத் தளைகள் நீங்க வேண்டுமானால் நம்முடைய அடிப்படைக் கட்டிடம் பலமாக இருக்கவேண்டு மென்று சர். தியாகராயர் அல்லும்பகலும் அரும்பாடுபட் டார். அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக் கிறது. திராவிட சமூகத்திலே தியாகராயர் ஒருபெரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார்; பொருளாதாரத்துறை, அரசியல்துறை, சமுதாயத்துறை ஆகியவற்றில் நல்ல இடம் பெற்று உழைத்தார்.

கல்லூரி முதல்வர் பேசும்பொழுது குறிப்பிட்டார் "இனிமை, ஒளி (Sweetness and Light) இவை தாம் நிச்சயமான குறிக்கோள்" என்று. நம்முடைய குறிக்கோளும் இதுவேதான். ஒளியின் பிம்பங்களாக நாம் திகழுகிறோம். நமது பண்டைப் பெருமைகளை நாம் உணர வேண்டும். நம்முடைய பரம்பரை பெரியது. நமது தமிழினம் மானமே பெரிதென மதித்த இனம். எவ்வுயிரையும் தன்னுயிர்போல் காத்து வந்தவன் தமிழன். பிறரை எதிர்பார்த்து வாழாதவன்

தமிழன். பிறருக்குப் புறமுதுகு காட்டி ஓடாதவன் தமிழன். இமயத்தில் புலி பொறித்து கடாரத்தை வென்று ரோம் நகருக்குப் பொன்னுடை விற்றவன் தமிழன்.

மாணவத் தோழர்களே!

இக்கல்லூரி மாணவர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும். உங்களுக்கு இடைவிடாத உழைப்புத் தேவை. இந்தக் கல்லூரியிலே நீங்கள் சேர்ந்து கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைத்ததற்காகப் பெருமிதமடையுங்கள். அன்று தேய்ந்துவந்த திராவிடர்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்களுக்குப் புத்துயிர் ஊட்டக் காரணமாகக் காட்சிதந்த பூமான் தியாகராயர், அவர்பெயர் கொண்ட கல்லூரியில் கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைத்ததே என்று பெருமை அடையுங்கள். நாம் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூலகாரணமானவர் நம் தியாகராயர் என்று அடிக்கடி சொல்லி வருகிறேன். தியாகராயர் செய்த தொண்டு மிக மிகப் பெரியது. தம்முடைய சமூகத் தொண்டைத் தான் தியாகராயர் பெரிதாக மதித்தார். அன்று தியாகராயர் திராவிடப் பெருங்குடி மக்கள் முன்னேற வேண்டுமென்று பாடுபட்டதன் பலனை இன்று நாம் காண்கிறோம்.

இன்று தேவைப்படுகிற கருத்து அந்த நாளிலே தேவைப்படாமல் இருந்திருக்கலாம். செஞ்சிக்கோட்டையின் உள்ளே பகைவர்கள் யாரும் புக முடியாதபடி அந்தக் காலத்துக்கு ஏற்பக் கோட்டை கட்டப்பட்டது. ஆனால் அந்தக் கோட்டையையே வைத்துக்கொண்டு இந்தக் காலத்திலே யாரும் போர் செய்ய முடியாது. அந்தக்காலத்து நிகழ்ச்சியையும் இந்தக்காலத்து நிகழ்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எதையும் சரியா? தப்பா? என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். சரியில்லாததைத் தூக்கி எறிய வேண்டும்.

திருப்புகழ் பாடாதே என்று சொன்னால் திருப்புகழ் பாடுபவர்களுக்குக் கோபம் வருகிறது. பூகோளத்தைப்பற்றி பேசக்கூடாது என்றால் நமக்குக் கோபம் வரும். பழையகால ஏற்பாட்டிற்கும், புதியகால ஏற்பாட்டிற்கும் எவ்வளவோ வேறுபாடு. 20 ஆண்டுகளுக்கு முன் ஏ. ஆர். பி. இல்லை. போர் சமயத்தில் அதுவும் இக்காலத்தில் ஏ. ஆர். பி. மிகவும் தேவைப்படுகிறது. அந்நாளில் இராவணனிடம் ஏ. ஆர். பி. இருந்திருந்தால் இராமர் இலங்கையை அளித்திருக்க முடியாது, இராமரிடம் கூட அப்பொழுது ஏ. ஆர். பி. இல்லை என்பதை அனைவரும் அறிவர். ஆனால் ஏ. ஆர். பி.—க்குப் பதிலாக ஹனுமான் இருந்தார். ஏ. ஆர். பி. அன்று இருந்ததா? இல்லையா? என்ற சந்தேகம் உங்களுக்கு இருந்தால் கம்பராமாயணத்தில் உள்ள யுத்தகாண்டத்தைப் புரட்டிப் பாருங்கள்.

பழங்கால, முதலை மனப்பான்மை நமக்கு இருக்கக் கூடாது. பழங்கால, முதலை மனப்பான்மை இருந்தால் வெற்றி நிச்சயமாக கிடைக்காது. உலகமென்பது ஓர் உருண்டை என்று புராணம் இயற்றியவர்களுக்குத் தெரியாது.

நம் நாட்டு மக்களில் பலருக்கு இமயமலை எங்கிருக்கிறது என்று தெரியாது. இமயமலை என்றால் என்ன? என்று கேட்போர் அதிகமாக இருப்பார்கள். ஆனால் நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர்க்கு பரமசிவம் தெரியும்; கைலையங்கிரி தெரியும். நம்மவர்களில் பெரும்பாலோர்க்கு சைனா, ஜப்பான், அமெரிக்கா நம்முன் இருப்பது தெரியாது. கிரகங்களைப்பற்றி நன்கு தெரிந்து வைத்திருப்பார்கள். அந்தக் காலப் புராணப் பித்தர்கள் தங்கள் மனம்போல், தங்களுக்குட்பட்ட கருத்துக்களையெல்லாம் புராணங்களாக எழுதிவிட்டார்கள்.

நம் மனம் ஒரு மியூசியம்போல இருக்கிறது. எது கொள்ளத்தக்கதோ அதை ஏற்றுக்கொள்ளுங்கள். எது தள்ளத் தக்கதோ அதைத் தள்ளிவிடுங்கள்!

தமிழ் என்றால் தமிழ் மக்கள் அனைவரையும் குறிக்கும். தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுகூட வேண்டுமென்ற உயர்ந்த கருத்தை நன்கு வரவேற்கிறேன். அறிவுத் தெளிவோடு எதைத் தள்ளவேண்டுமோ அதைத் தள்ளவேண்டும். புலவர்மணிகள் என்னதான் திறமையோடு, எதுகை மோனையோடு, உவமை கற்பனை நயத்தோடு இராவணனுக்குப் பத்துத் தலைகள் என்று சொன்னாலும் இந்தக் காலத்து மாணவர்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளுவீர்களா? தமிழ்ப் புலவர்கள் என்ன சொல்லியும் உங்களை நம்பவைக்க முடியாது. பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் நீங்கள் இப்பொழுது பலம் பெற்றிருக்கிறீர்கள். சொன்னவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ளும் காலம் இதுவல்ல! அதிலும் இந்தக்கால மாணவர்களை எவரும் எளிதில் ஏமாற்றிவிட முடியாது. மாணவர்கள் மனத்தைத் துலாக்கோல் போல் வைத்து, தாங்கள் கேட்பவற்றை மனமாகிய துலாக்கோலில் இட்டுப் பார்க்கவேண்டும். நேர்மையானவற்றை ஏற்கவேண்டும். மற்றவற்றைத் தள்ளவேண்டும். அதற்கு ஆசிரியர்கள் வழி செய்யவேண்டும். பெருந்தன்மையோடு எந்தக் கருத்துக்கும் நீங்கள் மனதிலே இடம் தரவேண்டும்.

எத்தகைய கருத்துக்கும் நீங்கள் மனத்திலே இடம் தருவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. மாணவ மணிகளாகிய உங்களுக்கு ஆராயும் அறிவுவேண்டும். நீங்கள் அனைவரும் புத்துலகச் சிற்பிகளாகவேண்டும். உங்களிடம் தீரமும் திறமும் இருந்தால் மட்டும் போதாது. இத்துடன் அறிவு, ஆராய்ச்சிகளும் தேவை. இதற்கான பண்பும் பயிற்சியும் மிகமிகத் தேவை. அறிவுத் தெளிவோடு ஆராய்ந்து இது சரி, இது தவறு என்று முடிவுகட்டும் மனப்பான்மை உங்களுக்கு வேண்டும். இதோடு திட்டவட்டமான கொள்கையும், பெரு

நோக்கும் உங்களுக்கு இருக்கவேண்டும். பகுத்தறிவுப் பிரச்சாரத்தைப் பரவவிட்டால் மாணவர்கள் கெட்டுவிடுவார்கள் என்று ஆசிரியர்கள் எண்ணிஞல், தாங்களே கொஞ்சம் தவறு செய்வதாகத்தான் ஆகும். பகுத்தறிவுப் பிரசாரம் மாணவர்களைக் கெடுப்பதற்குப் பதில், உயர்த்தும்; அவர்கள் மனப்பண்பை விரிவாக்கும். அவர்களை நற்கருத்துடையவர்களாக்கும். இதை அறிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாத ஆசிரியர்கள்தான் "மாணவர்கள் கெட்டுவிடுவார்கள்" என்று கூறுவார்கள். எவரும் முற்றும் உணர்ந்தவர்கள் இல்லை, ஆசிரியர்களே பகுத்தறிவுகொண்டு பல விஷயங்களை ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில்தான் இருக்கின்ருர்கள்.

**சந்தேகம்**

சிலருக்கு எதற்கெடுத்தாலும் சந்தேகம். சிலருக்கு சந்தேகிப்பதே தவருனது என்ற தவருன எண்ணம். சிலர் கண்களுக்கு சந்தேகிப்பதே குற்றமாகத் தென்படுகிறது. அனைவரும் குற்றவாளிக் கூண்டிலே நிற்கிருேம். சான்ருக ஒன்றிரண்டு சொல்லுகிறேன். சிலருக்கு நெற்றியிலே சிறிதாகக் குங்குமப் பொட்டு வைப்பது நல்லதா? அல்லது பெரிதாகக் குங்குமப் பொட்டு வைப்பது நல்லதா? என்று சந்தேகம் எழுகிறது.

காஞ்சிபுரத்திலே அண்ணங்கராச்சாரியாரைப்பலர் நன்கு அறிவர். அவரிடம் ஆஸ்திகர்களுக்குப் பெருமதிப்புண்டு. அவரைக் கேட்டால் நாமம் பற்றிய விளக்கத்தை நன்கு உரைப்பார். பட்டை பட்டையாகப் போடுவார். ஏனென்ருல் தூரத்திலிருப்பவர்களுக்கு நாமம் போட்டிருப்பது தென் கலையா? வட கலையா? என்பது நன்கு தெரியவேண்டுமாம்.

விபூதி அணியும் பழக்கம் உங்கள் நாட்டில் இன்னும் இருந்து வருகிறதா என்று ஐரோப்பாவிலே கேட்டால் சர். சி, பி. இராமசாமி ஐயர் சொல்லுவார்; “எங்கள் நாட்டிலே விபூதி அணிவது குறைந்திருக்கிறது” என்று. இங்கே மதப் பற்றுள்ளவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டால் ‘இங்கு மதப்பற்று இன்னும் குறையவில்லை! விபூதி அணியும்வழக்கம் இருந்து வருகிறது’ என்பார். சர். சி. பி. இராமசாமி ஐயரை நோக்கிப் பட்டை நாமம் போட்டுக் கொள்வது நல்லதா? என்று கேட்டால் பட்டையாகப் போடுவதில்தான் நாமத்தின் மாண்பு இருக்கிறது என்று சொல்லுவார். இடத்திற்கு ஏற்ப அவர் பதில் சொல்லுவார். உங்கள் தலைமுறையிலேதான் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு நீங்கள் தீர்ப்புக் கூற வேண்டும்.

புதிய கருத்துக்கள் பல தோன்ற வேண்டிய நேரம் இது! வேறு லோகத்திலே இருப்பதைப் பற்றிய சந்தேகங்களை இந்த லோகத்திலே கேட்பது தவறும்.

மானத்தோடு வாழ, ஒருவனை ஒருவன் தாழ்த்தாமல் வாழ்வதற்கு உரிய ஏடுகள் தேவை. சுவையும் பயனும் எதில் இருந்தாலும் எடுத்துக்கொள்ளுங்கள். பயன் மட்டுமிருந்து சுவையில்லாமல் இருக்கக்கூடாது. சுவை மட்டுமிருந்து பயனில்லாமல் இருக்கக்கூடாது. இரண்டும் ஒருங்கு சேர்ந்து இருக்கவேண்டும்.

மணிமேகலையிலே ஒரு பாடல். அதாவது:—

“வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்”

ஜெனரல் ஆஸ்பத்திரியிலே டாக்டர் சடகோபன் அவர்கள் நோயாளியின் கையைப் பிடித்துப் பார்க்கும் பொழுது "இவருக்கு வந்த நோய்.

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
........................
........................புறமறிப் பாராய்"

என்று சொல்லிவிட்டுப் போவாரா? டாக்டர் அப்படிச் சொல்லமாட்டார்.

பல நாட்களாக மணிமேகலையை விரும்பிக்கொண்டே யிருந்த உதயகுமரன், அவள் சோலை சென்ருளென்பது தெரிந்து மகிழ்ந்து, "அங்கே போய் மணிமேகலையை என் தேரிலேற்றிக் கொண்டு வருவேன்" என்று உறுதி பூண்டு தேரைச் செலுத்திக் கொண்டு சென்று உபவனத்தின் மதில் வாயிலை யடைந்தான்.

மணிமேகலை அத்தேரொலியைக் கேட்டுச் சுதமதியை நோக்கி "உதயகுமரன் என்மேல் மிக்க விருப்பமுடையவ னென்று மாதவிக்கு வயந்தமாலை முன்னர்ச் சொல்லியதைக் கேட்டுளேன்; இஃது அவனுடைய தேரொலிபோலும்; இத் துன்பத்திற்கு யாது செய்வேன்" என்ருள்; அதைக்கேட்ட சுதமதி அவளை அவ்வனத்திலிருந்த பளிங்கு மண்டபத் திற்குள் போகவிட்டுப் பூட்டிவிட்டாள். அங்கு வந்த உதய குமரன் மணிமேகலையைப்பற்றித் தனது வேட்கை தோன்ற வினவிஞன்.

அப்பொழுது சுதமதி உதயகுமரனை நோக்கி,

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
....................பாராய்"

என்று உடம்பினியல்பைக் கூறினள்.

சுஞேவும் பயுடரும் போடாமல் காமத்தை அடக்க வேண்டும் என்று ஒரு தோழி சொன்ன பதில் அது. இதை வைத்துக்கொண்டு "விணையில் வந்த இந்தக் காயம் அநித்தியமானது" என்று எல்லாருக்கும் சொன்னல் பொருந்துமா? இடத்திற்கு ஏற்ப எதையும் சொல்லவேண்டும். ஆங்கிலத்திலே ஒரு பாடல் உண்டு! அதாவது:—

Twinkle twinkle little star!
How I wonder what you are
Up above the world so high?
Like a diamond in the sky.

"ஏ நட்சத்திரமே! உயரத்திலே இருக்கிற நீ வைரத்தைப் போல எவ்வளவு அழகாக இருக்கிருய்" என்று சொன்ஞல் ஓர் ஏழையின் மகனுக்கு என்ன தெரியும்?

"Like a diamond in the sky" என்ற வரியைப் பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள் அதிகமாக இரசிப்பார்கள்; இதற்குக் காரணம் என்ன? பணக்கார வீட்டுப் பிள்ளைகள் வைரத்தைப் பார்த்திருக்கும்; மேலும் பணக்கார வீட்டுப் பிள்ளைகளிடம் வைரமோதிரமிருக்கும். அதை வைத்துக்கொண்டு அவர்கள் நட்சத்திரத்தைப் பார்த்து 'ஏ! மின்னும் நட்சத்திரமே! நீ வைரத்தைப்போல எவ்வளவு அழகாய் இருக்கிருய்? மின்னும் வைரத்தைப் போல மின்னுகிருயே!' என்றெல்லாம் புகழுவார்கள். ஏழைப் பிள்ளையோ வைரத்தைப் பார்த்திருக்க முடியாது. அவனுக்கு வைரத்தைப்போல் மின்னும் என்ருல் தெரியாது. சுவையும் பயனும் உள்ள ஏடுகள் நம் தமிழ் மொழியிலே ஏராளமாக உண்டு. அநேகர் தமிழ் ஏடுகளை மறைத்து வைத்திருந்த காரணத்தால் பலருக்குத் தமிழ் ஏடுகளைப்பற்றி நன்கு தெரியாமல் போயிற்று. தமிழுள்ளத்தை அப்படியே எடுத்துக் காட்டும் ஏடுகள் பல தமிழ் மொழியிலே உண்டு.

உங்களுக்குத் தமிழ்மொழி வளர வேண்டுமென்ற மனப்பான்மை மட்டும் இருந்தால் போதாது. சுவையும் பயனும் உள்ள ஏடுகளையே நீங்கள் படிக்கவேண்டும். உதாரணமாக திருப்புகழிலே சுவைமட்டும் இருக்கிறது. ஆனால் பயன் இல்லை, அதை விட்டுவிடுவோம். அற்புதமான கருத்துக்கள், சாரமுள்ள செய்திகள், அஞ்ஞானத்தையும் இருட்டையும் போக்கி அறிவு தரும், மின்சாரம், மோட்டார், இரயில் இவையெல்லாவற்றையும் பயன் கருதி ஏற்றுக்கொள்கிறோம்.

**ஆத்மார்த்தம்—லோகாயுதம்**

இந்த உலகத்திலே தானே முயன்று, இன்ப நல்வாழ்வு தேடிக்கொள்வதுதான் லோகாயுதம். இறைவனை நோக்கித் தவம் செய்து மறு உலகத்திலே நன்மைகளைத் தேடுவதுதான் ஆத்மார்த்தம். உலக நல்வாழ்வை விரும்பாதவர்கள் எவரேனுமுண்டா? ஆனால் சில போலி பக்தர்கள் லோகாயுதம் வெறுக்கப்படக்கூடியது போலவும், ஆத்மார்த்தம் விரும்பக்கூடியது போலவும் பேசி நடிக்கின்றார்கள்.

ஏசுநாதர் தம் சீடர்களுக்குச் சொன்னார்;

"ஊசியின் காதிற்குள்ளே ஒட்டகத்தை நுழைத்தாலும் நுழைத்து விடலாம். பணக்காரன் பரமண்டலத்திற்கு போவதென்பது முடியாது" என்று.

இங்கே என் அருகில் அமர்ந்திருக்கும் தேசிகருக்கு எது லோகாயுதம் எது ஆத்மார்த்தம் என்பது நன்கு தெரியும். "பொன்னார் மேனியனே" என்று அவர் பாடிய பாடலைக் கேட்டிருப்பீர்கள். அரசர்களும், அரசிளங்குமரிகளும் நல்ல போக பாக்கியத்திலே இருக்கிறார்கள். காஞ்சிக்கோயில்களிலே முப்பது லட்சம் ரூபாய் பெறுமான பொன், வைரம், நவரத்தினம் இவற்றாலான நகைகள் இருக்கின்றன. இதைப் போன்று நவரத்தினங்களாலான சிலுவையைக் காட்டுங்கள்!

பொன்னுலான ஏசுநாதரையும் நீங்கள் எவரும் பார்க்க முடியாது. வைரத்தால் தீட்டப்பெற்ற சிலுவையையும்நீங்கள் எங்கும் பார்க்க முடியாது. கிறிஸ்தவர்கள் கையில் வைரம் கிடைத்தால் அது லயோலா கல்லூரியாக இருக்கும். மிஷன் ஆஸ்பத்திரியாக இருக்கும். சென்னையிலே பிள்ளை பெறும் ஆஸ்பத்திரிகளில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால், அதுவும் இங்கு வைத்தியர்கள்கைவிட்டால் வேலூரில் இருக்கும் மிஷன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கிறோம். வேலூரிலே உள்ள அமெரிக்க மிஷன் ஆஸ்பத்திரியிலே இங்குக் கைவிடப்பட்ட நோயாளியின் நோயை நன்கு கவனித்து அவர்களை உடல் நலத்தோடு அனுப்பும்பொழுது அவர்கள் க்கையில் பைபிள் தந்து அனுப்புவதைக் காண்கிறோம். இதைப்போல இங்கு பக்தர்கள் மக்களுக்கு நன்மையும் புரிந்து பகவத்கீதையைத் தந்தனுப்பட்டுமே பார்ப்போம்! முடியாது.

மாணவர்களாகிய உங்களிடம் எல்லோராலும் கைவிடப் பட்ட கேஸ் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மனிதனை மனித னுக்க, மனிதனிடமிருந்து மிருகத்தன்மையைப் பிரிக்க மக்க ளிடத்திலே மனவளத்தை உண்டாக்க நீங்கள் பாடுபட வேண்டும். மூட நம்பிக்கையுள்ள மக்களைத் திருத்த டாக்டர் களால் முடியாது. உங்களால்தான் முடியும்.

உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகளான நீங்கள் எல்லோரும் சேர்ந்து அறிவுப் பிரசாரம் செய்யவேண்டும். உங்கள் ஓய்வு நேரத்தை நல்ல வழியில் பயன்படுத்துங்கள்! நாட்டின் உயிர் நரம்புகளான நீங்கள் உங்கள் காரியத்திலே வெற்றி பெற, இடைவிடாது பகுத்தறிவுப் பிரசாரம் செய்ய வேண்டும். நாட்டிலே எதை நீக்கவேண்டுமோ அதையெல் லாம் நீக்கவேண்டும். முன்னேற்றப் பாதையிலே செல்லும் மாணவர்களாகிய நீங்கள் முதன் முதலாகச் செய்யவேண்டிய

கடமை யாதெனில், மனிதத் தன்மைக்கு மாருன கருத்துக்கள் நாட்டிலே பரவவொட்டாமல் தடுக்க வேண்டும், சமுதாயத்திற்கு உழைக்கவேண்டும் என்ற ஆர்வமுள்ள மாணவர்கள் கிராமாந்தரங்களுக்குச் சென்று அங்குள்ள பாமரர்களுக்கு அறிவு புகட்டவேண்டும். அஞ்ஞானத்தை அறவே இந்நாட்டைவிட்டுஓட்ட நீங்கள் எல்லா வழிகளிலும் பாடுபடவேண்டும். நீங்கள் அனைவரும் துணிவுடன் சேர்ந்து கூட்டு முயற்சியில் ஈடுபடவேண்டும்.

சென்ட்ரல் ஸ்டேஷனையும். எழும்பூர் ஸ்டேஷனையும் தெரிந்துகொள்வதற்கு முன் அவை எங்கே இருக்கின்றன என்பதை முன்னதாகவே தெரிந்து கொள்ள வேண்டும். எப்படிப் போனால் சென்ட்ரலை அடையலாம், எப்படிப் போனால் எழும்பூரை அடையலாம் என்று தெரிந்துகொள்ள வேண்டும். செல்லும் இடத்திற்கு முன் முடிவைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஒழுக்கம் ஒரு பொது நீதி. ஆனால் அது இடத்துக்கிடம் ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றது. எல்லா மக்களுக்கும் ஒழுக்கம் ஒரே படித்தாயில்லை. பெண்ணுக்கு ஓர் ஒழுக்கம் சொல்கிருேம்; ஆண் அதைக் கடைப்பிடிப்பதில்லை. ஏழைக்கு ஓர்ஒழுக்கம் சொல்கிருேம். பணக்காரன் அதை கடைப்பிடிப்பதில்லை. வேலைக்குச் சரியாக 8-மணிக்கு வரவேண்டிய தொழிலாளி 9-மணிக்கு அதாவது ஒரு மணி நேரங் கழித்து வந்தால் முதலாளி தொழிலாளியைப் பார்த்துக் கேட்டால், அதற்குத் தொழிலாளி, "இல்லை சார்! நான் 8-மணிக்கே வந்து வேலை செய்துகொண்டிருக்கிறேன்" என்று சொல்லுவான். உடனே முதலாளி, "பொய் பேசினால் போஜனம் கிடைக்காது அப்பா! ஏன் பொய் பேசுகிருய்?" என்று கேட்பார். இதே சமயத்தில் முதலாளிக்கு ஒரு வியாபாரம் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், வியாபாரி ஒரு பொருளை நாலாயிரம் ரூபாய்

கொடுத்து வாங்கியிருப்பான். அந்தப் பொருள் விற்பனைக்கு வந்தால் வாங்க வந்தவனிடம் என்ன சொல்லுவான் தெரியுமா?

"நான் இந்தப் பொருளை ஆறுயிரம் ரூபாய் கொடுத்துத் தான் வாங்கினேன். உங்களை உத்தேசித்தே இதை நியாய விலைக்குத் தருகிறேன். நிச்சயமாக நம்புங்கள். இன்னும் கேட்டால் நான் சத்தியமாக சொல்லுகிறேன்—நான் இந்தப் பொருளை ரூபாய் 6000 கொடுத்துத்தான் வாங்கினேன். உங்களை உத்தேசித்து அதுவும் உங்களுக்காக வாங்கிய விலைக்கே தருகிறேன். நான் இந்த விலைக்குத் தந்ததை வேறு யாரிடமும் சொல்லவேண்டாம்'' என்று பன்னிப்பன்னிக் கூறுவான். ஆனால் முதலாளி அந்தப் பொருளை வாங்கிய விலையோ ரூபாய் 4000. இதில் முதலாளிக்குக் கிடைக்கும் இலாபமோ இரண்டாயிரம் ரூபாய். திறமையோடு பொய் சொல்லி வியாபாரம் செய்வதால் முதலாளிக்குக் கிடைக்கும் இலாபம் அதிகம். ஆனால் தொழிலாளி முதலாளியிடம் பொய் சொன்னால் அவனுக்குக் கிடைப்பது என்ன? வசவு, உதை —வேலையில்லாமை, பசி இவைதான்.

பொதுவாக, நாட்டு மக்களைத் திருத்துவதற்கு முன் அவர்களுடைய சூழ்நிலையைக் கவனிக்க வேண்டும். நாம் கூடியிருக்கும் இந்த இடத்திலே எல்லோருக்கும் உட்காருவதற்கு உரிய இடமில்லாததால் உங்களில் சிலர் ஜன்னல் ஓரத்திலே அமர்ந்திருக்கிறீர்கள். உங்களை அப்படி அமர வைப்பதற்குரிய சந்தர்ப்பம் இன்று ஏற்பட்டிருக்கிறது; ஆகவே நீங்கள் ஜன்னலில் அமர்ந்திருக்கிறீர்கள்.

திருடனுக்கு முதலில் திருடவேண்டுமென்ற நோக்கமில்லை! வறுமையால் அவன் வாட்டமுறும் பொழுது தானாக

அவனுக்கு உதிப்பதென்ன? திருடினால்தான் வாழ்வு என்பது தான். இப்படி அவன் எண்ணியவுடன் தைரியமாகத் திருட ஆரம்பித்துவிடுகிருனே? இல்லை! திருடப் புறப்படும் பொழுது எந்த வகையிலே திருடினால் வெற்றி கிடைக்கும் என்று திட்டம் போட்டுத்தான் திருட ஆரம்பிக்கிருன். முதலாவதாகத் திருடும்பொழுது அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும். திருடனைத் திருடாதே என்று சொல்வதற்குமுன் அவன் திருடுவதற்குக்காரணமாக இருப்பது எது? என்று அவன் சூழ்நிலையைக் கவனிக்கவேண்டும்.

இருபது நாட்களுக்கு முன் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. அதைப் பார்த்திருப்பீர்கள். திருநெல்வேலி ஜில்லாவிலே 8பேர் ரேஷன் ஆபீசைச் சேர்ந்தவர்களைப்போல ஒரு பணக்காரர் வீட்டில் புகுந்து "நீங்கள் மறைவான இடத்திலே நெல் மூட்டையைப் பதுக்கி வைத்திருக்கிறீர்களாமே? எங்கே? அந்த மூட்டையைக் காட்டுங்கள் பார்ப்போம்" என்று அவர்களிடம் சொல்லிச் சோதனை செய்வதுபோல் செய்து, அங்கிருந்த பெண்மணிகளையெல்லாம் ஒரு ஓரமாக நிற்க வைத்து அவர்களுடைய நகைகளையெல்லாம் கழற்றிக் கொண்டு வெளியிலிருந்த ஜீப்காரில் ஏறிச் சென்றுவிட்டார்களாம். இதுபோன்ற சம்பவங்கள் பல பத்திரிகையிலே காணலாம்.

மேல் நாடுகளிலே மாதர்கள் நகையணியும் வழக்கமில்லை! அவர்களிடம் பணம் சேர்ந்தால் அப் பணம் பாங்கில் இருக்கும், அல்லது நல்ல கம்பெனிகளிலே பங்குகள் ஆக இருக்கும். நம் நாட்டிலேதான் பெண்மணிகள் பணத்தை நகைகளாக்கி 6 ஜதை 7 ஜதை வளையல்கள், வைர அட்டிகைகள், காதில் தோடுகள் அவற்றேடு குண்டலங்கள், சடைபில்லைகள் என்றெல்லாம் அணிந்து கொள்கிருர்கள்.

நம் நாட்டிற்கேற்றபடி சூழ்நிலையை மாற்றி அமைக்க வேண்டும். நல்ல ஏடுகளை மொழி பெயர்க்கும் வேலையிலே நீங்கள்ஈடுபடவேண்டும். தேவாரம், திருவாசகம் இவற்றிலே இருக்கும் தமிழ்நாட்டு இயற்கை வளத்தைப்பற்றி யெல்லாம் தொகுத்து நூலாக வெளியிடுங்கள்; நாங்கள் அதை வேண்டாமென்று சொல்லவில்லை! நாட்டிலே நடக்கின்ற செய்தியை எழுதட்டும்; வரவேற்போம். நாட்டிலே நடவாத ஒன்றைப் புனைந்து எழுதுவதைத்தான் நாம் தடுக்கிறோம்.

கம்பராமாயணம் நடக்காத கதை—நான் புனைந்தது—கற்பனை—நடந்த நிகழ்ச்சியல்ல—இது உண்மை! இப்படிப் பாகுபடுத்திப் போட்டு அடியிலே ஓர் அடிக் குறிப்பு எழுதி இறுதியிலே இப்படிக்கு பதிப்பாசிரியர் என்று எழுதி வெளியிட்டால் நாம் மகிழ்ச்சியோடு வரவேற்போமே! நூலை வெளியிடும் ஆசிரியர் இந்த முறையிலே உழைத்தால் நாட்டு மக்களுக்கு நல்ல சுவையும் பயனும் கிடைக்கும்.

மாணவர் கழகம் என்ற தோட்டமும், அதன் இலட்சியங்கள் என்ற மணமலர்ச் செடிகளும், செயல் வீரர்களின் கண்ணியம் என்ற தண்ணீரில் தொண்டு என்ற எருவால் வளரவிடவேண்டுமென்று சொல்லி, என் உரையை இந்த அளவோடு முடிக்கிறேன்.

★

# பொருள்

தோழர்களே!

தமிழ்ச் சங்கச் சார்பில் பேச வேண்டுமென்று இக் கல்லூரித் தோழர்கள் என்னைக் கேட்டார்களேயன்றி, இன்ன பொருளைப் பற்றித்தான் பேசவேண்டும் என்று கூறினார்களில்லை. அப்படித்தான் அவர்கள் இன்ன பொருளைப்பற்றிப் பேச வேண்டும் என்று எனக்குப் பணித்தாலும், 'இவனுக்கு என்று அமைந்த ஒரு பொருளைப்பற்றி வற்புறுத்தாமல் இருக்கப் போகின்றானா என்ன?' என்று அவர்கள் நினைத்திருப்பார்கள்; எனவேதான் அவர்கள் இன்ன பொருளைப் பற்றிப் பேச வேண்டும் என்று கேட்காமலிருந்திருக்கலாம்; ஆகையினால் நான் 'பொருள்' என்பதைப் பற்றி இப்போது பேசுகிறேன்.

எந்த நாட்களையும் விட, இந்த நாட்களில் இதைப்பற்றி மக்கள் நினைக்கவேண்டிய அவசியம் வந்துவிட்டதனால் பொருளைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. எதைப்பற்றி நினைத்தாலும் அதைப்பற்றிப் பேசியாக வேண்டியிருக் கிறது. அதற்குப் பேச்சுக் கலை அவசியப்படுகிறது. மற்ற கல்லூரிகளைவிட நீங்கள் நாட்டிற்குத் தேவையான ஒரு பிரச் சினையைப்பற்றிப் பேசியிருக்கிறீர்கள். மற்றவர்க்கு நம்முடைய கருத்து உடன்பாடோ உடன்பாடில்லையோ தேவையோ தேவை இல்லையோ அதுவல்ல பிரச்னை நாம் செய்யவேண்டிய தொண்டு, கடமை என்ற ஆணையிலே நடத்தப்படவேண்டும். அந்த முறையிலே, கல்லூரி மாணவர் களாகிய நீங்கள், தொட்டுப் பார்க்காததைக்கூடத் தொட்டு பார்த்திருக்கின்றீர்கள். கிருஸ்துவக் கல்லூரி மாணவர்களா? திராவிட நாடு—தமிழ் நாடு என்பதைப் பற்றி வாதித்திருக் கிறார்களா? என்று பச்சையப்பன் கல்லூரியில் படித்த நான் ஆச்சரியப்பட்டுவிட்டேன். உண்மையிலே மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நாட்டுப் பற்று நாட்டின் ஆக்கத்திற்கான ஓர் அறிகுறி. அதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்; பெருமையும் அடைகிறேன்.

இந்த எண்ணம் மாணவர்களுக்கு இன்னும் வளர வேண்டும். அதற்குக் கருத்துத் தெளிவு மிகவும் இன்றியமை யாதது. வெளியிடாமல் மனத்திலே மட்டும் உள்ள கருத்து, மனிதத் தன்மைக்கு ஏற்றதல்ல; அது காட்டிலே உள்ள ஒரு முறை, எதற்காகக் கூறுகின்றேன் என்றால், நான் பேச எடுத்துக்கொண்ட ‘பொருள்’ என்பதற்குக் கருத்துத்தெளிவு, ஒருவருக்கு ஒருவர் மிகமிகத் தேவை. எனவே ஒருவருக் கொருவர் கலந்து பேசுவதில் தவறில்லை.

**இழந்த பொருளைப் பெறலாம்**

'பொருள்' என்பதிலே காந்தியாரை இழந்து விட்டது-நாட்டின் அரிய பொதுப் பொருளை இழந்து விட்டதாகும். நம் நாட்டின் பொதுப் பொருளாகிய காந்தியார் மறைந்தது அரசியல் துறையிலாயினும் சரி, அறிவுத் துறையிலாயினும் சரி ஒரு பெரிய நஷ்டமே யாகும். ஆனால், நாம் இழந்த பொருளைப் பிறகு பெறவும் முடியும். அதற்குப் புதுக் கருத்துக்கள் தேவை. இது அரசியல் அரங்கில் இருப்பவர்களுக்கு நன்ருகத் தெரியும்.

அந்தப் புதுப்பொருள் என்ன? அது கிடைக்க நீங்களும் நானும் அம்முயற்சியில் ஈடுபடவேண்டும். அதற்கான ஒத்துழைப்பு மிகவும் தேவை. எனவே நான் அடிக்கடி கூறுவது போல், ஒருவர்க்கொருவரிடையே கருத்துத் தெளிவு ஏற்படவேண்டும். அதற்குஅடிப்படை பேச்சுக்கலை. பேச்சுக்கலைஇல்லாதஇடமில்லை. எங்கும்பேச்சுமேடை; பட்டிதொட்டிகளில்-பொது இடங்களில்-எங்கும் காண்கிருேம். அச்சுத்தொழில் செய்யும் இடங்கள் பத்திரிகாலயங்களாக மாறுகின்றன. இதுவே பேச்சுமேடை வளர்வதற்கு ஓர் அறிகுறி. ஆனல் பேச்சுக் கலையைத் தவருன முறையில் பிரயோகித்தல் கூடாது. சான்ருக சில நாட்களுக்கு முன், திருச்சி பத்திரிகை யொன்றில் 'பிள்ளை பிடிக்கும் பீதி' என்ற தலைப்பில் வந்த செய்தி, நாட்டு மக்களுக்கே ஓர் அதிர்ச்சி. எங்கும் அதைப்பற்றிப் பயமும் குழப்பமும் பரப்பிவிடப்பட்டது.

உள் விஷயங்களைப் பார்க்காமலே, தாடியுடன் ஒருவன் காணப்பட்டாலும், தடுமாறி ஒருவன் வந்தாலும், தழதழத்த குரலில் பேசினுலும், குழந்தையில்லாத காரணத்தினுல் அன்பினுல் பார்த்தாலும் சரி, இவன் பிள்ளை பிடிப்பவன் என்ற சந்தேகம். இவ்வளவு குழப்பமும் 'பிள்ளை பிடிக்கும்

பீதி' என்ற தலைப்பில் வந்த செய்தியின் காரணத்தினால்தான். ஏன் இதை நான் கூறுகின்றேன் என்றால், ஒரே ஒரு வார்த்தையில் நாட்டு மக்களுடைய மனத்தை மாற்றிவிடக்கூடிய அளவு பிரசார மேடையைத் தவறாக உபயோகிக்கிறார்கள் அவசரப்பட்டோ, விஷமத்தனத்தினாலோ, ஆறு அங்குலத்தில் பெரிய செய்தியைப் போட்டுவிட்டாரேயொழிய, அது உண்மையா? உண்மையென நம்பலாமா? அதிகாரிகளைக் கேட்டறிய வேண்டாமா? என்று ஆசிரியர் யோசிக்கவில்லை. 'பீதி' என்றால் காரணமில்லாத பயம். அது கருத்துத் தெளிவுடன் வெளிப்பட்டிருந்தால், குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதற்கு இடமில்லாமல் இருந்திருக்கும். இப்படியே ஒவ்வொரு துறையிலும், கருத்துத் தெளிவற்ற முறையில் பிரசாரம் செய்கின்றார்கள். எவை பேசப்பட்டாலும் கருத்துத் தெளிவுடன் இருக்கவேண்டும். அது எந்த வார்த்தையானாலும் சரி, எந்தக் காரணத்தானாலும் சரி, அது யார் பேசினாலும் சரி, பேசும் பொருளின் உட்கருத்தை கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் வேறொரு பொருளைப் பெறமுடியும். ஏன்? இழந்த பொருளையும் நாம் பெறக்கூடும் இவை அனைத்துக்கும் கருத்துத் தெளிவுதான் மிகவும் அவசியம்.

ஆரம்பத்திலே, மாணவனொருவன், பாரதியார் பாடிய நாட்டுப் பாடல் ஒன்றைப் பாடும் பொழுது, 'ஆரிய நாட்டினர் சீரிய கொள்கையை' என்ற அடியைக் கேட்டதும், பல நண்பர்கள் வருந்தியிருக்கலாம். மற்றும் பலர், அண்ணாத்துரை இதற்கு என்னதான் சொல்கின்றான் என்று பார்க்கலாமே! என என் முகத்தையே உற்றுப் பார்த்தனர். இன்னும் சிலர் வேண்டுமென்றே அண்ணாத்துரைக்கு எதிராகத்தான் பாடப்பட்டது என்று கருதலாம். ஆனால் எது

எப்படியாலும் பாரதியார் கூற வந்தது, ஆரிய நாட்டி டினரின் சீரிய கொள்கைபற்றியே தவிர, வேறு கொள்கை களைப்பற்றி அல்ல. அது எந்த நாட்டார் செய்தாலும்—ஆரிய நாட்டினர் மட்டும் அல்ல—சீரிய கொள்கையாயிருந்தால் ஒப்புக்கொள்ள வேண்டும் என்னும் கருத்துடன்தான் பாரதியார் "சீரிய கொள்கை" என்று கூறினார். அப்படிப் பட்ட சீரிய கருத்துக்களைத்தான் அவரவர்கள் நாட்டிலே பரப்பிக்கொண்டு வருகின்றார்கள். கருத்துக்கள் எதுவாயி னும் உண்மைப் பொருள் என்னவென்பதைக் கவனித்தாக வேண்டும்.

**பொருள் இரு வகை**

பொருள் என்பதை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று வஸ்து. மற்றொன்று கருத்து. இதைப் பிரிக்கின்ற நேரத்தில், இவை மெய்ப் பொருள், இவை அநித்தியப் பொருள், இவை மாயப் பொருள் என்றெல்லாம் பிரிக்கின்றார்கள். இதில் வஸ்து என்பது தேவைக்குரிய பொருளாகும். ஆனால் தேவைக்குரிய பொருளைத்தான் அழியக் கூடியவை, அநித்ய மானவை, மாயம் என்றெல்லாம் கூறுகின்றனர். மற்றொன்று மேலுலகப் பொருள், அது எப்பொழுதும் அழியாத தன்மை வாய்ந்தது. அதை அடைவதற்கான மார்க்கம், இகத்திலுள்ள பொருள்களின் மீது இச்சை கொள்ளாதிருத்தலே. ஆனால் இது வாழ்வில் அவசியமற்றது, தேவையில்லாதது.

இத்தகைய மெய்ப்பொருளை அடைவதற்கு உட்பொருளை உணர்வதற்கு, வேத வேதாந்தங்கள்பேசி,யாகயோகாதிகள் செய்து, காக்ஷாயம் தரித்து, கையிலே ஜெபமாலை ஏந்தி, அதற்கேற்ற வெண்ணீறு அணிந்து, அமர்வதற்காகப் புலித் தோல், படுத்துறங்குவதற்காகப் பர்ணசாலை, அதைப் பார்த்துக்கொள்வதற்காக ஓர் ஆள், அந்த ஆளுடன் பேசு வதற்கு மற்றோர் ஆள் தேவைப்படுகின்றன. நாகரீக உலகம்

ஏற்பட்டது எப்படி என்ருல், பர்ணசாலை ஒன்று, இரண்டாகி, அவைகள் குடிசைகளாக மாற, பிறகு ஆற்ருேரத்தில் குடியேற, ஆற்ருேரம் கிராமமாக அமைய, கிராமங்கள் சேர்ந்து நகரமாகி, இப்பொழுது நாகரிக அளவில் பெரிய நகரங்களாக ஏற்பட்டுவிட்டன.

ஆரியர் காலத்தில்தான் பொருள் என்று ஒன்று இருந்ததால் அருள் என்று மற்ருென்று ஏற்படுத்தப்பட்டது. பிறகு பொருளைப் போகப் பொருள் என்று பேசப்பட்டது. அநித்யம், மாயை என்றெல்லாம் பேசப்பட்டது. மாடு, மனை, மனைவி, மக்கள் இவை ஆத்மார்த்தத்துறையில் நம் நாட்டுப் போகப் பொருள்கள். ஆத்மார்த்தத் துறையிலே நம் நாட்டு மக்கள் ஈடுபட்டனர் என்ருல், மேல் நாட்டிலுள்ள மக்கள் போகப் பொருள்களிலே நாட்களைச் செலவழித்தனர். மேல் நாடுகள் வியாபாரத்தில் ஈடுபட்டு, இறுதியாக இந்நாட்டில் வைசிராய் மாளிகை ஏற்படுத்தும் அளவிற்கு வரும்வரை மேல் நாட்டானின் ராஜதந்திரம் சென்றது. இதற்கெல்லாம் காரணம், ஆத்மார்த்தத்துறையிலே நம்மவர்கள் ஈடுபட்டார்கள். ஆனுல் அவர்களோ......?

**அவர்களும் நாமும்**

அவர்கள் காரில் சென்ருல், நாம் கால்நடையிலே செல்கிருேம். "அது என்ன, அந்தக் கார் மிகவும் அதிசயமோ! கார் கெட்டுவிட்டால் அவன் இறங்கித் தள்ளவேண்டும். ஆனுல் நம்முடைய காலோ!" என்கின்ருன் நம்மவன் ஏன் அப்படிக்கூறுகின்ருனென்ருல், இவனுக்குக் கார்கிடையாது. இப்படிப்பட்ட சபல புத்தி நம்மவரிடத்தில். அதுமட்டுமல்ல; வீடு ஒருவனுக்கு இருக்கும்; வீடற்றவன்அவனிடத்தில் வாடகைக்கு இருப்பான். இருவருக்கும் ஏதாவது சச்சரவு ஏற்பட்டால், வாடகைக்கிருப்பவன் மிகவும் கோபமாக, "கட்டினவனுக்கு ஒரு வீடு என்ருல் கட்டாதவனுக்கு ஆயிரம் வீடுகள்

உண்டு'' என்பான். இப்படிப்பட்ட அற்ப புத்திதான் நம்மவர்களிடத்தில் காணக்கிடக்கின்றது. துப்பாக்கி இல்லை; அதிகாரம்-இல்லை; சட்ட புத்தகம் துவக்கப்படவில்லை; அரசாங்க அநுபவம் அணுவளவும் கிடையாது. ஆனால் அரசாங்கத்தை இழந்த அனுபவம் இருக்கிறது. காரணம் வரட்டுத்தத்துவ வேதாந்தமே நம்மை இக்கதிக்கு ஆளாக்கியது—அது மட்டுமா! அவனிடத்திலேயுள்ள துப்பாக்கியைப் பார்த்து, "இது என்னப்பா ஆட்கொல்லிதானே! இது ஆளைத்தானே கொல்லும்! ஆத்மாவைக் கொல்லாது-? இது என்ன? மோட்டார்கார்! எவ்வளவு வேகம்—! மணிக்கு 60 மைல். அது என்ன பிரமாதம்! எம்முடைய மனோவேகத்தைக் கணக்கெடுக்கவே முடியாது. கணக்கெடுத்ததே கிடையாது'' என்கிறான் நம்மவன்.

"உம்முடைய ராஜ்யம் எவ்வளவு தூரம் பரவியுள்ளது?-அமெரிக்காவிலே ஒரு பாகம் உம்முடைய ஆட்சியின் கீழ்; நியூஜீலண்ட் உம்முடைய பாதுகாப்பில்; உம்முடைய ராஜ்யம் ஆஸ்திரேலியாவின் பரப்பு; இந்திய உபகண்டத்திலே-தென் ஆப்பிரிக்காவிலே உம்முடைய ஆட்சி; இவ்வளவும் உம்முடைய ராஜ்யத்தின் பரப்பு-இவ்வளவுதானா? இது அவ்வளவு பிரமாதமல்ல; ஆனால் எங்களுடைய ராஜ்யமோ அதல, சுதல, பாதாள-என்று இப்படிப் போய்க்கொண்டேயிருக்கும். உம்முடைய ராஜ்யங்கள் கண்ணுக்கு எட்டியவைகள் என்றால், எம்முடைய ராஜ்யங்கள் கண்ணுக்குக் காணாதவைகள்; கணக்கெடுக்க முடியாதவைகள்; உங்களிடத்திலே நாணயங்கள் என்னென்ன? 'பௌன்-பொன்-ரூபிள்ஸ்' இவ்வளவுதானா? எங்களுடைய தேவலோகத்திலே ஒரு மரம்; பெயர் கற்பக விருக்ஷம். எது கேட்டாலும் கிடைக்கும் அதனிடத்தில். 'கோஹினூர்' கேட்டால் கோஹினூர் கொடுக்கும்; ஸ்டர்லிங்

கேட்டால் ஸ்டர்லிங் கொடுக்கும்; டாலர் கேட்டால் டாலர் கொடுக்கும்'' என்கிறான் நம்மவன்.

இப்படி நம்மவர்கள் பேசிக்கொள்வதில் ஓர் அலாதித் திருப்தி ஏற்பட்டுவிட்டது. சொல்லும்போதே நம்பிக்கையுண் டாகும். சொல்லச் சொல்ல நாம் நம்பினோம். அவன் பார்த்துப் பார்த்து நம்பினான். ஆகஸ்ட் 15-ந் தேதிக்குப் பிறகும் இந்த ஏமாற்றம் இருக்கக்கூடாது என்பது என் எண்ணம். இந்த நிலைமை நீடித்தால், நாம் அவனை இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்பதுதான் பொருள்.

அங்கே ஏழை—பணக்காரன் என்ற பேதம். அதிலே ஏழைகள்தான் எதிலும் வெற்றி பெறுவார்கள். அவர்களுக்கு எங்கும் எப்போதும் விடுதலை நிச்சயம். ஏன்? ஏசுநாதர்கூட, தம் சீடர்களை நோக்கி, "ஊசித் துவாரத்திலே உடல் பெருத்த ஒட்டகம் நுழைய முடியும்; ஆனால் பணக்காரர்கள் பர மண்ட லத்திலே நுழைய இடமிராது'' (It is possible for a camel to enter into the eye of the needle, fhan for rich man to enter into the Heaven) என்று கூறியுள்ளார்.

**பாவையர் பக்கத்திலே வீற்றிருக்க......**

அந்த நாடுகளில் மாத்திரம் தான் என்ன? வேதாந்தி களுக்குப் பஞ்சமா? அறிவாளிகளில் பிளாட்டோ விளங்க வில்லையா? பைசோசா ஒரு வேத வித்தகன் ஆயிற்றே! வேதாந்தத்தில் சிறந்தவனாக மாக்ஸ்முல்லர் விளங்கவில்லை யா? அவர்களையும் அவர்களுடைய தினசரி வாழ்க்கையையும் பாருங்கள்? நம்முடைய சங்கராச்சாரியாரையும் பாருங்கள்! ரிஷிமார்களையும் பாருங்கள்! கைலாச பரம்பரையில் உதித்த தம்பிரான்களையும், திருவண்ணமலை ரமண மகாரிஷியையும் போய்ப் பாருங்கள்! புதுச்சேரி அரவிந்த யோகியையும் போய்ப் பாருங்கள். அத்தனை பேர்களையும் போய்ப் பாருங்கள். இவர்களைப் பார்க்கவேண்டு

மென்றால் 4, 5 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பில்தான் இவர்களைக் காணமுடியும். சுற்றிலும் சாலைகளும் சோலைகளு மிருக்கும்; பாதையோரத்தில் புஷ்பச் செடிகள் உண்டு; நிழல் தரும் மரங்கள் இருமருங்குமுண்டு. இவைகளையெல்லாம் கடந்து சென்றால் அழகிய மண்டபம் விளங்கும்; மண்டபத் திலே அழகிய சிற்ப சித்திரங்கள் விளங்கும்; பலவகைக் கோலாகலத்துடன் இருக்கும் பலவிதக் கோலங்கள்; ஒருபுறம் வெள்ளிக் குத்துவிளக்கு விளங்கும்; திரியைத் தள்ளுவதற் குத் தங்கத்தினாலான குச்சி இருக்கும். தங்கத்தைவிட ஜொலிப்புடன் பளபளப்பாக விளங்கும் பாவையர்கள் பக்கத் திலே வீற்றிருப்பார்கள்.

புராணத்திலே, விஸ்வாமித்திரரைப் பற்றிய ஒரு கதை யுண்டு. அவர் காமதேனுவைக் கட்டி வைத்துத் தேவ அரசர் களுடன் சண்டைக்குச் சென்றாராம். பிறகு அது மாடுபிடிச் சண்டையாக மாறியது. இராமாயணத்திலே, முன்னோர்கள், முனிவர்கள், வேதாந்திகள், இவர்கள் அத்தனை பேரும் பொரு ளோடுதான் வாழ்ந்தார்கள். பொருளிடத்திலே இச்சையில் லாமல் எந்த முனி சிரேஷ்டரும் வாழவில்லை. உலகம் மாயை —அநித்தியம் என்று பேசியவன்கூடப் பொருள்கள் தரும் போகத்திலே புரண்டுதான் வாழ்கின்றான்.

### ஆத்மார்த்தவாதிகளின் சொல்லும் செயலும்

மேல் நாட்டினர் பொருளைத் தேடிக்கொள்வதிலும், அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவதிலும் காலங் கழித்தார்கள். ஆனால் நம்மவர்களோ பொருளை அநித்திய மென்று கூறிக்கொண்டு, அதே பொருள் தரும் சுகத்தில் வாழ்ந்தார்கள், வாழ்கின்றார்கள். நம்மவர்கள் வீடுகளிலே உள்ள பாத்திரங்கள் எல்லாம் 4000, 5000 ரூபாய் மதிப்பிடக் கூடிய அளவிற்கு வெள்ளிச் சமான்களாகவே இருக்கும்; வெளிப்புறத்திலே வெள்ளியால் ஆனவை, உட்புறத்திலே

தங்க முலாம் பூசப்பட்டவையாகவே காணமுடியும், எல்லா வகைச் சாமான்களும்—வெள்ளைக்காரன் வாழும் வீடுகளில் போய்ப் பார்த்தால், வெள்ளிச் சாமான்களே காணமுடியாது. குடிப்பதற்காகச் சாதாரண கப்–சாசர் அவ்வளவுதான். காண முடியும். அவன் பொருளை உபயோகத்திற்காக வைத்திருக் கின்ருன். ஆனல் நாமோ உயர்வதற்காகப் பொருளை வைத் திருக்கின்ருேம். நண்பர்கள்/சிலர் வீட்டிற்குப் போய், இந்தப் பொருளைப் பார்த்தாயா! உங்கள் வீட்டில் உண்டா? என்று கேட்டால், உண்டு என்பர்; ஆனல் "பெட்டியிலிருக்கிறது. கலியாணத்தின் போதுதான் அதை எடுப்பேன்" என்பார். நம்மவர்கள் பொருளை உபயோகிக்கும் முறைக்கு இந்தச் சான்றே போதுமானது. ஒருவனுக்கு 10000 ரூபாய் சொத்து இருந்தால், 8000 ரூபாய் பெருமானமுள்ள நகைகளாகவே அவன் மனைவிமீது காணலாம். ஒருவர் மாதம் 200 ரூபாய் சம்பாதித்தாலும் வெளியிலே அவருடைய மதிப்புத்தெரியாது. அவருடைய மனைவி கோவிலுக்குப் போகும் போது விலை உயர்ந்த சேலை கட்டிக்கொண்டு போவதிலிருந்துதான் அவ ருடைய மதிப்புப் பெருகித்தெரியும். லேடி மவுண்ட்பேட்டனைப் பாருங்கள்! அவர் மீது ஒரு நகை கூட காணமுடியாது. மேல் நாடுகளிலே ஒவ்வொருவரிடத்திலும் பொருள் இருக்கின்ற தென்ருல் அதை வெளியே காட்டிக்கொள்ள மாட்டார்கள். ஆனல் நாமோ? ஆத்மார்த்தத்தில் மதிப்பு வைத்துப் பொரு ளிடத்தில் மதிப்பு வைக்காதவர்கள் என்கின்ருேம் சொல்லள வில்; செயலிலோ...?

ஆண்டவன் நம்மையும் படைத்தான்; பொருளையும் படைத்தான்; கடலைப் படைத்தான்; கடலுள்ளே முத்தையும் படைத்தான்; முத்தைக் கொண்டுவர மனிதனுக்குத் திறமை யையும் படைத்தான்; பூமியிலே பொன்னைப் படைத்தான்;

அதை வெட்டி எடுப்பதற்கு ஆளையும் படைத்தான். "கல்லூரியிலே நீ படிக்கவேண்டும், ஆனால் நீ பரீட்சைக்குப் போகக் கூடாது" என்று ஆசிரியர் மாணவனைப் பார்த்துக் கூறுவாரா! மணம் செய்து வைத்துத் திடீரென்று தம்பதிகளைப் பிரித்துவைத்தால்—எப்படியிருக்கும்? அதுபோலவே படைக்கப்பட்ட பொருள் ஒவ்வொன்றும் உபயோகத்திற்காகவே தான். பொருளை அலட்சியப்படுத்துவது படைப்பை அலட்சியப்படுத்துவதாகும். பொருள் ஒன்றன் மீது பற்றுவைத்து அதைக் கைப்பற்ற முயற்சித்து, கிடைக்கத் தவறி, அதனால் கோபப்பட்டு, அப்பொருள் நமக்குத் தேவையில்லை, வேண்டாம் என்பது அலட்சிய சுபாவத்தை வளர்க்கும் தத்துவ ஞானிகள் என்று கூறப்படுபவர்களின் வெறும் போக்காகும்.

நம் நாட்டிலே 100-க்கு 75 பேர் பொருள் குறைவு உள்ளவர்கள். ஆகஸ்ட் 14 வரை நமக்குப் பொருள் கிடைக்காததால், "சுரண்டுவதற்கு ஆங்கிலேயன் இருக்கின்றான், அவன் சென்றபின் நாடு வளமடையும்" என்ற சாக்குப் போக்குக் கூறினர். அதற்குப் பிறகு பொருள் கிடைக்காவிட்டால், அது நம்முடைய திறமையின்மையைக் குறிக்குமேயன்றி வேறொன்றும் குறிப்பிட இயலாது.

**ஆண்டவன் கோயிலில் அநித்தியப்பொருள்கள் ஏன்?**

பொருள்மீது பற்று வையுங்கள் என்று கூறுகின்றேன் நான். பொருள் அழியக்கூடியது என்பார்கள் அவர்கள். அழியக்கூடிய வரையில் பொருளை உபயோகியுங்கள் என்று கூறுகின்றேன் நான். ஆத்மார்த்தத் துறையில் பற்றுக் கொண்டிருக்கும் அன்பர்கள் நம் நாட்டு ஆண்டவன் இருக்

கும் கோயில்களில் போய்ப் பார்க்கவேண்டும்! அங்கே உள்ள பொருள்கள்! அப்பொருள்களின் அளவு! உண்மையிலேயே அதற்கு ஒரு டி. எஸ். பி. ஆபீஸரைக் காவல் வைக்கவேண்டும். பள்ளிகொண்ட கோலத்திலே விளங்கும் ஸ்ரீரங்கநாதன் எப்போதும் படுத்துக்கொண்டுதான் இருப்பார்—அவர் போட்டுக்கொண்டுள்ள நகைகளை எழுந்து பார்க்கக்கூட அவருக்குத் தோன்றாது. அவர் மீதுள்ள நகைகளைக் கணக்கிடவே முடியாது. வைரத்திலே வெள்ளை நாமம் என்றால், கெம்புக் கல்லினால் ஆக்கப்பட்டது சிவப்பு நாமம். மூலஸ்தானம் முதற்கொண்டு மடைப்பள்ளி வரை கையாளப்படும் சாமான் அத்தனையும் வெள்ளி. வெள்ளி அண்டாக்கள், வெள்ளியாலான குத்து விளக்குகள் எண்ணில; ஆத்மார்த்தத் துறையிலே ஈடுபடும் அன்பர்கள் இதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். "பொருள் அழியக்கூடியது; பொருள் மீதுள்ள பற்றை யகற்றுங்கள்; பொருள் தேவையில்லை; பற்றறுப்பதே ஆண்டவனை அடையும் வழி" என்று பேசிவிட்டு அதே ஆண்டவனிருக்கும் கோயில்களில் இவ்வளவு பொருள்களா? சாதாரணப் பொருள்களல்ல! இலட்சக்கணக்கில் மதிப்பிடக்கூடிய பொருள்கள். திருவாவடுதுறை ஆதினத்திற்கு 2000 வேலி நிலங்கள் ஏன்? தருமபுர ஆதினத்திற்கு அத்தனை காணி நிலங்கள் ஏன்? திருப்பதி வேங்கடேசுவரனுக்குப் பல லட்சங்கள் பெறுமானமுள்ள கிரீடங்கள் எதற்காக? தீராத வல்வினையைத் தீர்த்தருளும் வைத்தீசுவரனுக்கு எதற்காக அத்தனை சொத்துக்கள்? எந்த ஆண்டவனும் மக்களுக்காக அத்தனை பொருள்களையும் திருப்பிக்கொடுத்ததாக இது வரையிலும் இல்லை. அந்தக் காட்சிகளெல்லாம் ஓர்புறம் என்றால், வயிறொட்டி, கண்குழிவிழுந்து, வாயுலர்ந்து, வரண்ட தலையனாய், வாடிய நெஞ்சனாய்க் காணப்படும் ஏழை மற்றொருபுறம்.

**நம் நாடு ஏழை நாடா?**

நம் நாட்டை ஏழை நாடு என்று கூறுகின்றார்கள். ஏழை நாடு என்பதும் பொய். இரண்டாவதாகப் பற்றற்று வாழ் என்கின்றார்கள்; இதுவும் பொய். இந்தப் பொய்யுரைகளை நிலைக்கவைக்கவேண்டும் என்று சிலர் கருதுகின்றார்கள்.

ஏழை நாடு என்றால், ஏழை நாட்டிலே வைர நாமங்கள் படைத்த ஸ்ரீரங்க வரதனோ, வைரக் கிரீடம் தரித்த வேங்கடாசலபதியோ, எந்த மார்வாடியாலும் அளவிட்டு மதிப்பிட முடியாத மதிப்புப்பெறும் மூக்குத்தியுடைய மதுரை மீனாட்சியோ இருக்க முடியாது.

நம் நாட்டிலே, 100-க்கு 88 பேருக்குப் படிப்பில்லை. வாழ்விலே சுகமில்லை; வசதியும் இல்லை. தொழிலாளர் நிலைமையோ சொல்லொணாத் துயரம். நகரத்திலே வேலை செய்யும் தொழிலாளி—அவனுடைய வேலை நிறுத்தம்—அவனுடைய புரட்சிக் குரல்கள்—அவனுடைய வீடு—வீட்டிற்குள் நுழைய வேண்டுமென்றால் அவன் குனிந்து தான் செல்ல வேண்டும்—வீட்டினுள் நுழைந்தாலோ சுருண்டு படுத்துக் கொண்டிருக்கும் அவன் மனைவி காட்சியளிப்பாள்.

இன்னும் இதைவிட மோசமான நிலைமையிலிருக்கிறான் நாட்டுப்புறத்துத் தொழிலாளி. வரப்பு ஓரம் தான் அவனுக்கு "டின்னர் டேபிள்" நண்டுவலை வயல்கள் தான் அவன் குழந்தைகள் விளையாடும் விளையாட்டு மைதானம்; எருமைகள் தான் அவனுக்கு ஓடும் குதிரைகள்; இருசு ஒடிந்த இரட்டை மாட்டுவண்டிதான் அவனுக்கு 'ரோல்ஸ்ராய்ஸ் கார்'. காளி கோயில் விளக்குதான் அவனுக்கு இரவிலே வெளிச்சம். நல்லதங்காள் கதைதான் அவனுக்குச் சிறந்த இலக்கியம். அவனை முன்னேற்ற வொட்டாமல் தடுப்பதெல்லாம் தத்துவமும் ஆத்மார்த்தமும் தான். அவன் செய்யும் போரிடை அதுதான்

தடையாக நிற்கின்றது—தத்துவம் பேசும் ஆத்மார்த்த ஜார் ஒரு புறத்தில்-கூலி போதவில்லை என்று கூக்குரலிடும் தொழிலாளி மற்றோர் புறத்தில்—இருவர்க்கும் இடையே ரஸ்புட்டீன்.

வேகமாக வருகின்ற பாட்டாளி முன்னால் நிறுத்தப்பட்டுள்ள தடையைப் பார்த்துப் பின்னால் போகின்றான். குறிப்பாக நம் நாட்டில் வேதாந்தம் சொல்வதெல்லாம் ஏழைகளிடத்தில் தான். "பொருள் மேல் ஆசை வைக்காதே; பொருள் மாயை, அழிந்துவிடக்கூடியது; அநித்யம்; பொருள்மாத்திரம் என்ன? நீ கூடத்தான் அழியக்கூடியவன்—நீ மாத்திரம் என்ன? உன்னைப் படைத்த இவ்வுலகம்" என்று இவ்வளவும் பேசிவிட்டு, ரிசர்வ்பாங்க், 'காத்ரஜ் சேப்' 'நேஷனல் பாண்டு' களாக வாங்கிப் பணம் சேமித்தல் முதலியவற்றில் 100-க்கு 20 பேர் ஈடுபடுகின்றனர். 100-க்கு 80 பேர் ஏழைகளாக்கப் படுகின்றனர்.

**உடைத்தெறியுங்கள்**

கல்லூரியில் பயிலும் மாணவர்களாகிய நீங்கள் இடையிலே உள்ள தடையை உடைத்தெறியவேண்டும். அவர்கள் வாழ்வதுபோல், வாழ்வு இவர்களுக்கும் தேவை. அவர்களுக்கும் பொருள் இருப்பது போல் இவர்களுக்கும் பொருள் தேவை. அதற்கான பணியை ஆற்ற நீங்கள்தான் முன் வரல் வேண்டும். இடையே நிற்கும் தடை எதுவானாலும் உடைத்தெறிய வேண்டும்—ஆம்; ஜெபமாலை—பர்ணசாலை—வேதாந்தம்—தத்துவம் — யாகயோகம் — இவைகள் தான் அந்தத் தடைகள். அந்தத் தடைகளை உடைத்தெறிய முற்படுகையில் அதிருப்தி ஏற்படும். ஆசையை அவர்களுக்குக் கிளறிவிட்டுப் போய்விடக்கூடாது. 100-க்கு 20 பேரிடத்திலிருந்து பறித்துக்கொண்டு வா என்றும் சொல்லக்கூடாது.

ஆனால் இவற்றைப் பெறுவதற்குரிய மார்க்கம் என்ன? தொழிலாளர் தொகை அதிகம்; முதலாளிகள் தொகை குறைவு என்று காட்டினால் போதுமா? முதாளிகள் 100-க்கு 20 பேர்; நாமோ 100-க்கு 80 பேர் என்று காட்டினால் போதுமா? "We are many they are few" என்று காட்டினால் போதுமா! ராஜாஸர் அண்ணாமலைச் செட்டியாரிடத்திலுள்ள பணத்தைப் பங்குபோட்டால், நம் நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அணகூட வராது. பிர்லா-டாட்டா இவர்களுடைய பணத்தைப் பங்கு போட்டால், ஆளுக்கு 4 அணவாவது கிடைக்கும். எல்லா மக்களுக்கான பொருள்—எல்லார்க்கும் எல்லாம்—என்றிருத்தல் வேண்டும். இயந்திர சாதனங்கள் எல்லார்க்கும் ஏற்படல் வேண்டும். தொழிற் சாலைகள்—இயந்திரங்கள் எல்லாரிடத்தும் இருக்கவேண்டும். எல்லோரிடத்தும் என்றால், தொழிற்சாலைகள், இயந்திர சாலைகள் இவைகளனைத்தையும் சர்க்கார் ஏற்று நடத்தினால் எல்லாரிடத்தும் இருக்கும் பங்கீட்டு முறையினாலே.

**நேருவின் மக்கள் பணி!**

இந்தியா பார்லிமெண்டிலே நண்பர் ஒருவரால் "விவசாய நிலங்களையெல்லாம் கூட்டுப்பண்ணையாக அமைக்க வேண்டும்; தொழில் வகைகளை சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும்" என்று சமதர்ம முறைப்படி ஒரு திட்டம் கொடுக்கப்பட்டது. இந்த முறை எல்லார்க்கும் எல்லாம் என்ற நிலையை ஏற்படுத்தும்; ஆனால் இது நிறைவேறிற்றா? அதுதான் இல்லை. பண்டித நேரு அவர்களே இதை மறுத்துவிட்டார். பண்டித நேரு இதை மறுத்தாரா என்று சந்தேகம் எழலாம் பலருக்கு—ஏன்! எனக்கே அப்படிப்பட்ட சந்தேகம் தான் ஏற்பட்டது. எப்படிப்பட்ட நேரு? "மாஸ்கோவை இந்தியா

விற்கு அழைத்துவந்து உங்கள் கண்முன் காட்டுவேன்'' என்று கூறிய நேருவா, இங்ஙனம் நேர் மாருகப் பேச நேரிட்டது? ஏன் அப்படிப் பேச நேரிட்டது? அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, ''புதிய தொழில்களை சர்க்காரே ஆரம்பிக்கும்; தொழில் முறைகள் அனைத்தையும் சர்க்காரே நடத்துமே தவிர, தனிப்பட்டவர்கள் கையில் தொழில்முறைகளைக் கொடுக்காது'' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இந்தத் தீர்மானம் முதலாளிகளை மிகவும் பாதித்தது. எனவே ஜனவரி 30ந் தேதி பல முதலாளிகள் ஒன்ருகக் கூடினுர்கள். மோடி, பிர்லா, ஷராப் இவர்களனைவரும் ஒன்ருகக் கூடிப் பண்டித நேருவை பிப்ரவரி 4ந் தேதி சந்தித்தார்கள். எப்படிப்பட்ட சமயம் அது? இழந்த உத்தமர் காந்தியடிகளைப்பற்றி உலகமே வருந்திச் சோகத்தில் ஆழ்ந்திருந்த நேரம்! எப்படிப்பட்ட பேட்டி! கமிட்டித் தீர்மானத்தைக் கண்டிப்பதாக அந்தப் பேட்டியில் நேருவிடம் முதலாளிகள் கூறினுர்கள். ''அத்தீர்மானம் எங்கள் மனத்திலே பயத்தை உண்டாக்கி யிருக்கிறது; அதோடு மட்டுமல்லாமல், இந்த நாட்டுப் பொருளபிவிருத்தியையே பாதிக்கும்—மூலதனத்தையே பாதிக்கும்'' என்று அவர்கள் கூறினுர்கள். அதற்கு நேரு, ''நான் யோசனை செய்து பிறகு கூறுகிறேன்'' என்று சொல்லிவிட்டார். அந்த நேரத்தில் மாத்திரம் நான் நேரு அவர்களுக்கு அந்தரங்க காரியதரிசியாக இருந்திருந்தால், அந்த ஐந்து பேர்களையும் படம் பிடித்து 'கோட்ஸே' படத்தின் பக்கத்தில் பிரசுரித்திருப்பேன். பேட்டி கண்ட முதலாளிகள் அத்தனை பேரும் என்னைப்போல் ஆண்டவன்மீது சம்சயப்பட்டவர்களா? புராணத்தை நம்பாதவர்களா? அவர்கள் கடவுளை நம்பினவர்கள்; புராணத்தை நம்புவர்கள்; கீதையே அவர்கள் பாராயணம்;

ராமபஜனையே அவர்களுக்கு வழிபாடு; காந்தியார் மீது அன்பும் உண்டு; அப்படிப்பட்ட அவர்கள் தான், உலக உத்தமர் காந்தியார் இறந்து 15 நாட்கள் ஆவதற்குள் "வரும் லாபம் போய்விட்டால் என்ன செய்வது?" என்று ஏங்கியவர்கள்—

**குதிரைப் பந்தய புத்தி**

"இப்போது எந்தத் தொழிலையும் சர்க்கார் ஏற்று நடத்தப்போவதில்லை!" என்று டொமினியன் பார்லிமெண்டில் நேரு கூறினார். இதனால் எச். எம். மோடி பண்டித நேருவைப் புகழ்ந்திருக்கிறார். ஏன் புகழமாட்டார்! பேசுவது ஒன்று! செய்வது மற்றொன்று. இப்படி நேரு சொல்லியிருக்கலாமா? ஸர். உஸ்மான் சொல்லவேண்டும், ஸர். ஏ. இராமசாமி முதலியார் சொன்னால் பாதகமில்லை—ஆர். கே. சண்முகம் செட்டியார் சொல்லலாம்; அப்படிச் சொல்லியும் இருக்கிறார் ஒரு காலத்திலே. ஆனால் கோடிக்கணக்கான மக்களின் இலட்சியவாதியான நேரு இப்படிச் சொல்லலாமா? சொல்லும்படியான நிலைமை ஏற்பட்ட காரணம் என்ன? ஏன் என்றால் பண மதிப்பு அதிகம். "இப்பொழுது எந்தத் தொழிற்சாலைகளையும் சர்க்கார் கைப்பற்றி நடத்தப்போவதில்லை" என்று ஆங்கிலேயர்கள் கூறி, மக்களை ஏழ்மை நிலையில் வைத்திருந்தார்கள்—இப்போதுள்ள ஜனநாயக சர்க்கார், தொழிற்சாலைகளைக் கைப்பற்றி நடத்துமானால் மக்களுடைய வருவாய் உயரும்; வருவாய் உயர வாழ்வு உயரும்; வாழ்வு உயருமானால், வாங்கும் சக்தி உயரும் என்று நம்பினோம். "இனிப் புதிதாக துவக்கப்படும் தொழில்களை சர்க்காருடையதாக்குவதே உசிதம். கையிலிருக்கும் பணத்தை வீண் விரயம் செய்ய மாட்டோம். சோஷியலிஸம், கம்யூனிஸம் பேசுகிறோம்; 15 ஆண்டுகளுக்குப் பிறகு, விஞ்ஞானம் உயரும், அது புதிய புதிய சக்திகளைத் தரும்" என்று பண்டித நேரு கருதுவாரா

ஞல். அது கிண்டி குதிரைப் பந்தயம் கைக்கொடுக்காதா என்று எனது நண்பர் ஒருவர் கருதி, என்றைக்காவது ஒரு நாளில், தாம் இழந்த 30,000 ரூபாயையும் எடுத்து வந்து காண்பிக்கிறேன் என்று கூறுவது போலாகும். இந்த எண்ணம் இருவருக்கும் ஒன்றுதான், ஆஞல், இடையே இருக்கும் இடம் வேறு.

**கடவுள் அவதாரத்திற்குக் குறைவில்லை; ஆஞல் குறைகள் தீர்ந்தபாடில்லை.**

நம் நாட்டிலே வந்த அவதார புருஷர்களுக்குக் குறைவே இல்லை. மற்ற நாட்டைவிட நம்முடைய நாட்டில்தான் கடவுள்கள் அவதாரம் எடுத்த வண்ணமாகவே இருந்தனர்-பகவான் பத்து அவதாரம் எடுத்தார் என்று வேதம், புராணம், ஸ்மிருதிகள் கூறுகின்றன-பாவத்தைப் போக்குவதற்காகக் கடவுள் அடிக்கடி அவதரித்தார் என்று கூறப்படுகிறது. நம்முடைய வீட்டிற்கு டாக்டர் அடிக்கடி வந்து சென்ருல் என்ன நினைக்க முடியும்! நோயாளிகள் அதிகம்—நோய் பரவுகிறது என்றுதான் நினைக்க முடியும்—அதைப் போல் கடவுள் பத்து அவதாரங்கள் எடுத்தார் என்று கூறிஞல் என்ன நினைப்பது!... அப்படியும் நம் குறைகள் தீர்ந்தபாடில்லை—

முன்னேற்றப் பாதையிலே செல்லும் மாணவர்களாகிய நீங்கள் முதன் முதலாகச் செய்யவேண்டிய கடமை, மனிதத் தன்மைக்கு மாருன கருத்துக்கள் நாட்டிலே பரவவொட்டாமல் தடுக்கவேண்டும். மனிதத் தன்மைக்கு மாருன கருத்துக்கள் இசையிலே புகுந்துள்ளன; நாடகக் கலையிலே புகுந்துள்ளன; இதிகாசங்களிலே புகுத்தப்பட்டிருக்கின்றன; புராணங்களாகப் புனையப்பட்டிருக்கின்றன; காவியங்களிலே நுழைக்கப்பட்டுள்ளன; ஓவியங்களிலே காணப்படுகின்றன. மனிதத் தன்மைக்கு மாருன கருத்துக்கள், கலையிலே புகுத்தப்பட்டால் கலைக்கே களங்கம் விளைவிப்பதாகும்.

**இரட்டை மனப்பான்மை**

மேனாட்டுச் சாமான்கள் நமக்குக் கூடாது என்று சொல்வதில் அர்த்தமில்லை. ரயில்வண்டி நின்றுவிட்டால் எவ்வளவு தவிதவிப்பு! சினிமாவில் படம் திடீரென்று நின்றுவிட்டால் எவ்வளவு சீட்டை! ரேடியோவிலே திருப்பின ஊர் வரா விட்டால் எவ்வளவு கோபம் பிறக்கிறது! இவைகளிலே ஒன்றுகூட நாம் கண்டுபிடிக்காதது. உதாரணமாக, நாமும் கிராமபோன் ஒன்றைக் கண்டுபிடித்ததாக வைத்துக்கொள்வோம். நம்முடைய கிராமபோனை வைத்துக்கொண்டு ஒரு ஜெர்மன்காரர் ரேடியோ கண்டு பிடிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது நாம் கூறலாம். இதிலென்ன அதிசயம் நம்முடைய கிராமபோனை வைத்துக்கொண்டேதான் அவன் ரேடியோ கண்டுபிடித்தான். ஆகவே அது நமக்குத் தேவையில்லை. அதை நாமே கண்டுபிடித்துக்கொள்வோம் என்று கூறுவதிலே அர்த்தம் உண்டு. ஆனால் நாமோ ஒன்றுகூடக் கண்டுபிடிக்கவில்லை. அதுமாத்திரமல்ல அதிசயம், மேனாட்டு பொருளே தேவையில்லை என்று கூறி, தினசரி வாழ்க்கையிலே அவைகளையே உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். நம்மவர்களுக்குள்ள இந்த இரட்டை மனப்பான்மை போக வேண்டும்.

மேனாட்டுச் சாமான்கள் தேவையில்லை என்று கூறினால் சரி; அப்படியானால் மின்சார விளக்குகள் இருக்கக்கூடாது; பழைய குத்துவிளக்குத்தான் இருக்கவேண்டும் விமானம் பறக்கக்கூடாது; அதற்குப் பதிலாகக் கருடன்தான் பறக்க வேண்டும். "பறக்கும் கோட்டை" விமானங்கள் பறக்கவே கூடாது; சாரங்கதரன் விட்ட புறுதான் பறக்கவேண்டும்; ரயில் வேண்டாம்-காசி ராமேஸ்வரம் போகக் கால் நடையே போகும். மாளிகைகள் வேண்டாம்-பர்ணசாலைகளே போதும்.

புத்தகங்களா? தேவையில்லை. பழைய செல்லரித்த சுவடிகளே போதும்—துப்பாக்கியா? வேண்டாம்; எங்கள் இராமன் கையிலுள்ள கோதண்டமே போதும். எழுத்தாளர்களா தேவையில்லை; நம்முடைய அ. கி. பரந்தாமனுர் அவர்கள் காளி கோயிலுக்குப் போக, காளி உடனே பிரசன்னமாக, இவர் நாக்கை நீட்ட, அம்மை தம் சூலத்தால் 'ஓம்' என்று எழுத, இவர் வெண்பா பாடினுல், மேனுட்டுச் சாமான்கள் நமக்குத் தேவையேயில்லை—

**நன்றி கெட்ட செயல்**

இரயிலிலே ஒருவன் சென்று கொண்டிருப்பான், சன்னல் வழியாக ஒரு மலை அவன் கண்ணுக்குத் தென்படும்: அந்த மலைமீது ஒரு கோபுரம் தெரியும்—உடனே அவன் பக்கத்திலுள்ளவனைப் பார்த்து அந்தக் கோயிலைக் கட்டியது யார் என்று கேட்பான். அதற்கு அவனும் பதில் சொல்லாமலிருக்க மாட்டான். ஆனுல் அவர்களிருவருக்கும், அவர்கள் செல்லுகின்ற இரயிலைக் கண்டுபிடித்தது யார் என்று தெரியாது. ஆனுல் யாரோ கண்டுபிடித்த இரயிலில் பிரயாணம் செய்யலாம். எவ்வளவு நன்றி கெட்டத்தனம் பாருங்கள்! கண்டுபிடித்தவனுக்கு நன்றிசெலுத்தினுேமா? காளிதாசன் கவிகள் இயற்றினுன். மிகவும் கடினமான செயல் என்று கூறலாம். காளியின் வரப்பிரசாதம்கூட இருந்தது — ஆனுல் மின்சாரத்தைக் கண்டு பிடித்தவனுே, இரயிலைக் கண்டு பிடித்தவனுே, எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள் தங்கள் வாழ்நாளில் —இராப்பகலாகச் சிந்தித்துச் சிந்தித்து நித்திரையும் இல்லாமல், மக்களினுடைய தேவைக்காகப் பல பொருள்களை அவர்கள் உண்டாக்கினுர்கள்—அவர்களை நாம் மறந்தோம்—ஆனுல் நம் நாட்டில் எவருக்கும் அத்தகைய வரப்பிரசாதம் அளிக்காத ஆண்டவனை மாத்திரம் மறக்கவில்லை—

**இராமனுக்குக் கிடைக்காத வசதி நமக்குண்டு**

அன்று உத்தமர்கள் இருந்திருக்கலாம்—இன்றுள்ள பர்கள் உலுத்தர்கள் என்று உதாசீனம் செய்யப்படலாம். ஆனால், அந்த உத்தமர்கள் காலத்திலேயும் 'அவதார புருஷன்' இராமன் காலத்திலேயும், நளன் காலத்திலேயும், அரிச்சந்திரன் காலத்திலேயும் தண்டவாளம் இல்லை — இரயில் ஓடியதாகக் காணோம் — ஆனால், உலுத்தர்கள் என்று கூறப்படுகின்ற நம்முடைய நாசகாரக் காலத்திலே இரயில் ஓடுகின்றது. அந்த உத்தமர்கள்— அவதார புருஷர்கள் காலத்திலே சீதை காணமற்போனவுடன் இராமன், ஏ மரமே, கொடியே, மலரே, வண்டே, பறவையே, புள்ளினமே, முகிலே, முகிலூரும் வானே, நிலனே, என் சீதையைக் கண்டீரா என்று கேட்டானே தவிர, டெலிபோனை எடுத்து அயோத்தியை அழைத்து "சீதை அவ்விடம் வந்தாளா?" என்று கேட்டு, "இல்லை" என்றறிந்ததும். ஜனகருக்குத் தந்தியடித்துக் கேட்டு இல்லையென அறிந்ததும், டிரங்க்காலில் "என் சீதையைக் கண்டீரா?" என்று இராவணனைக் கேட்டாரா?" வேண்டுமானல் இராமன் அவதார புருஷனாக இருக்கலாம்; ஆனால், அவன் காலத்தில் வயர்லஸ் கிடையாது. இராமனுக்குத் தெரிந்ததெல்லாம், அயோத்தி, கிஷ்கிந்தா, தண்டகாரண்யம், ராமேஸ்வரம், சேது, இலங்கை இவ்வளவுதான். ஆனால் நமக்கோ, நம்முடைய காலத்திலே, உலகத்தையே ரேடியோ மூலம் அறைக்குள் அழைக்கின்றோம். லண்டன் வைத்தால் லண்டன்; வியன்னா வைத்தால் வியன்னா; பாரிஸ் வைத்தால் பாரிஸ். உலகத்தில் எந்த பாகத்தில் வைத்தாலும் சரி, உலகமே நம்முடைய அறைக்குள் வருகிறது. தேவலோகத்திலே நாரதருக்குத்தான் முழு வேலை. ஈரேழு பதினலு

லோகமும் சுற்றிக்கொண்டே இருப்பார். ஆனால் நம்முடைய காலத்தில், ரேடியோவைத் திருப்பிவிட்டால் உலகம் முழுவதும் நம் கண்முன் வருகிறது. வியாசர் கூப்பிட்டபோது உலகம் வரவில்லை — வசிட்டர் கூப்பிட்டபோது உலகம் வரவில்லை-நாம் கூப்பிட்டபோது உலகம் நம் முன் இருக்கிறது. நம் நாட்டில் எத்தனை பேருக்கு விஞ்ஞானியாகிய ஸர். சி. வி. ராமனைத் தெரியும்? ஒரு போலிப் பகல்வேஷச் சாமியாரைப்பற்றி தெரிந்த அளவிற்குக்கூட ஸர். சி. வி இராமனைப் பற்றித் தெரியாதே!

யாரோ ஒரு சாது வந்தார். பூமிக்கு உள்ளே போனார், 4 அடிப் பள்ளத்தில் 12 மணிநேரம் இருந்தார்; வெளியே வந்தார். இதை நம் மாகாண முதன் மந்திரியார் முன் நடத்திக் காண்பித்தாராம். இதை ஓர் அதிசயம் என்று-அற்புதம் என்று-மாகாணப்பிரதமர்வரை போய்ப்பார்த்திருக்கின்றனர். தெருக் கோடியில் ஜால வித்தைக்காரன் இதைவிட அதிசயமான அற்புதங்களைக் காண்பிக்கவில்லையா? பெட்டிக்குள் பல மணிநேரம் படுத்திருந்து வெளியே வருகின்றாளே ஜால வித்தைக்காரி! சாமியார் செய்து காட்டியது என்ன அதிசயம்? இது மாத்திரம் என்ன? முத்தை எடுப்பதற்குப் பல மணி நேரம் மூர்ச்சையடக்கி நீருக்குள் மனிதன் மூழ்கவில்லையா? கடலின் அடி ஆழத்தில் சப்மரைன்கள் செல்கின்றனவே? கேவலம் ஒரு சாமியார் செய்ததைப் பார்த்து அற்புதம் என்று கூறுகின்றார்கள்; மாகாணப் பிரதமரும் போய்ப் பார்த்தார்; போதும் இந்த அற்புதம் செய்ததெல்லாம்; இனித் தேவையில்லை இந்த அற்புதங்கள்.

ஞான சம்பந்தர் அளித்த விபூதியினால் எலும்பைப் பெண்ணாக்கியதாகக் கூறட்டும். நாம் இன்ன இஞ்செக்ஷன் கொடுத்தாலும் எலும்புருக்கி நோய் தீர்ந்து எலும்பு பெண்

ணுள் என்று கூறுவோம். எங்கள் விரிசடைக் கடவுள் முக்கண் விரித்தார்—திரிபுர மெரிந்தது என்று அவர்கள் கூறட்டும். இதைக் கேட்டவுடன் இது நம்மால் முடியாது—ஆனால், ஒரு மூலையில் ஒரு சுவிட்சை அழுத்தினால் ஊரெங்கும் ஒலி வீசச்செய்ய முடியும் என்று நாம் கூறுவோம். ரேடியோ கண்டுபிடித்தவர் அதுபற்றி நூல் எழுதி, உள்ளே இன்னின்ன சாமான்கள் இருக்கின்றன—இது என் சொத்தன்று; எல்லாருடைய சொத்து என்று எழுதி நூலை வெளியிட்டு விடுவார். ஆனால் நம் கிராமத்தில் ஒருவனுக்குத் தேள் கொட்டிவிட்டால், சில பச்சிலைகளை எடுத்து வந்து போடுவார்கள். இது என்ன இலை என்று கேட்டால், "அதைச் சொல்லக்கூடாது; சொன்னால் பலிக்காது" என்பார்கள். அயல்நாட்டு டாக்டர் மருந்து கொடுக்கும்போது, இன்னின்ன மருந்து இன்னின்ன சதவிகிதம் என்று எழுதிப் புட்டியின் மேலேயே ஒட்டிக்கொடுப்பார்.

நம்மிடம் லிங்கக்கட்டு இருந்தால் இதைச் செய்யும் விதத்தை மகன் இல்லாதவர்களுக்குச் சொல்லக்கூடாதென்பர். அவர்களோ எல்லாவற்றையும் எல்லாருக்கும் சொல்லி கலையைப் பரப்புகின்றனர். ஆகையால் இவற்றையெல்லாம் நீங்கள் நன்கு உணர்ந்து, உண்மையான பொருள்களைக் கிராம மக்களுக்கு உங்கள் கல்லூரி கழகத்தின் வாயிலாக—எடுத்துச் சொல்லவேண்டும் என்று உங்களனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முற்றிற்று.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS

---

லோகமான்யா பிரஸ், மதுரை